அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27 °C 26 °C

பக்கம் 56 | சுடர்: 28 | கதிர்: 334 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 10, சனி 27.10.2013


# வடக்கு முதல்வர் கேட்பது போன்று தனிப் பொலிஸ் அமைக்க முடியாது

## பொலிஸ்மா அதிபர் திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 27
முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேட்பது போன்று வடக்குக்கெனத் தனியான பொலிஸ் படையை அமைக்க முடியாது. நாட்டில் சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு பொலிஸ் துறையே காணப்பட முடியும் என்று பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.
"வடக்கில் சட்டத்தின் ஆட்சி நிறுவப்பட வேண்டும். இதற்கு எங்கள் மக்களின் மொழி, கலை, கலாசாரம், வாழ்க்கை முறையைப் புரியாத பொலிஸ் படை இருப்பது தொடர்ந்து தடையாக இருக்கின்றது. எனவே உள்ளூரிலிருந்து தமிழ் பேசும் பொலிஸார் தெரிவு செய்யப்பட

21

# கூட்டமைப்பு நாளை அமெரிக்கா பயணம்


## அனந்தி சசிதரனும் செல்கிறார்

யாழ்ப்பாணம், ஒக். 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், மாகாண சபை உறுப்பினர் ஒருவர் என மூன்று பேர் நாளை திங்கட்கிழமை அமெரிக்கா பயணமாகின்றனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினரான அனந்தி சசிதரன் ஆகியோரே அமெரிக்கா பயணமாகவுள்ளனர்.
புலம்பெயர் தமிழர்களால் அமெரிக்காவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிகழ்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காகவே இவர்கள் நாளை

21

# பொதுநலவாய தலைவர்களுக்கு போர்க்குற்றம் குறித்த ஆவணம்

## நேரில் கையளிக்கிறது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 27
கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாதபோதும், இந்த மாநாட்டில் பங்குகொள்ள வருகை தரும் வெளிநாட்டுத் தலைவர்களை அது பிரத்தியேகமாகச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளது.
இந்தப் பேச்சின்போது இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள், இறுதிப்போர்க் குற்றங்கள் ஆகியன தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதுடன், இவை தொடர்பில் ஆவணம் ஒன்றையும் கூட்டமைப்பு அந்தத் தலைவர்களிடம் கையளிக்கவுள்ளது என்று அதன் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது.
இதன்போது அடுத்த மாதம் கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
"நாங்கள் இலங்கையில் நடக்கின்ற பொதுநலவாய மாநாட்டைத்தான் புறக்கணிக்கின்றோமே தவிர பொது நலவாய அமைப்பை நாம் புறக்கணிக்கவில்லை" என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.
"பொதுநலவாய மாநாட்டில் கூட்டமைப்பு கலந்துகொள்ளாத போதும், மாநாட்டுக்கு வருகை தரும் நாடுகளின் தலைவர்களை மாநாட்டுக்கு வெளியில் பிரத்தியேகமாகச் சந்தித்து இலங்கையில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கையைக் கையளித்துச் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம். அத்துடன் மாநாட்டில் பங்கு பற்றாத தலைவர்களுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைப்போம்" என்று மாவை சேனாதிராசா மேலும் கூறினார்.
(த-5)

# கிளிநொச்சியில் கைக்குண்டு மீட்பு

கிளிநொச்சி, ஒக்.27
கிளிநொச்சி ஏ-9 வீதிக்கு அருகில் பரந்தன் பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. குடி தண்ணீர் விநியோக நடவடிக்கைகளுக்காகக் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் குழாய்களைச் சீர் செய்து கொண்டிருந்த வேளை, கைக்குண்டு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
உடனடியாகத் தகவல் இராணுவத்தினருக்கும் கிளிநொச்சிப் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டது.

21

# 'பேஸ்புக்' தடையில்லை

கொழும்பு, ஒக்.27
எதிர்வரும் காலங்களில் 'பேஸ்புக்' (முகநூல்) தடை செய்யப்படும் என்ற கருத்துடன் வெளியாகிய செய்திகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் கூறுகையில்,
"தற்காலத்தில் தகவல் தொழில்நுட்பம் அவசியமானதொன்று. அவற்றுக்கு நாம் முன்னுரிமை வழங்கியுள்ளோம். இருப்பினும் தகவல் தொழில்நுட்பத்தால் மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாது. அதை நாம் விரும்பவில்லை" என்றார்.
(த-10)

# வெளிநாடுகளின் தூதுவர்கள் வடக்கு முதல்வருடன் சந்திப்பு

## அடுத்த வார நடுப்பகுதியில் நடக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 27
வடக்குக்கு வருகை தரவுள்ள அமெரிக்கத் தூதுவர், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர், கொரியத் தூதுவர் ஆகியோர் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேசவுள்ளனர் எனத் தெரிய வருகிறது.
அடுத்த வாரம் நடுப் பகுதியிலேயே இந்தச் சந்திப்புகள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தில் முதல் முறையாகத் தமிழர் அரசு நிறுவப்பட்டுள்ளது. தமிழர் ஆரசின் முதலமைச்சராக க.வி. விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.
இந்த நிலையில் வடக்குக்கு வருகை தரும் சர்வதேச இராஜதந்திரிகள் வடக்கு மாகாண முதலமைச்சரையும் சந்திக்கவுள்ளனர்.
இலங்கைக்கான

21

# தமிழரின் நினைவிடங்களை அழிப்பதை அனுமதியோம்

## மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 27
எமது நல்லெண்ண நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், எமது நினைவிடங்களை அழிப்பதையும் அவற்றைக் கையகப்படுத்தி இராணுவ முகாம் அமைப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.
நல்லூரில் அமைந்துள்ள கிட்டுப் பூங்காவை இராணுவத்தினர் கையகப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஜனநாயக நாட்டில் மரணித்த வீரமறவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதும் அவர்களுக்கு நினைவாலயம் அமைப்பதும் ஜனநாயக உரிமை. தாய் மண்ணுக்காக மரணித்தவர்கள் அனைவருமே புனிதர்கள். அதைத் தடுக்

21

# மாநாட்டுக்கு செல்லாதீர்கள்

## மன்மோகனுக்கு மனு

கொழும்பு, ஒக்.27
இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என வலியுறுத்தியும் ஒரு இலட்சம் கையெழுத்துகள் அடங்கிய மனுவை தமிழக அரசியல்வாதிகள், இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் நேற்று அனுப்பிவைத்துள்ளனர்.
பொதுமக்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட இந்த ஒரு இலட்சம் கையெழுத்துக்கள் அடங்கிய மனுவை நேற்று பதிவுத் தபால் மூலம் இந்திய பிரதமர், இந்திய உள்

21

# தெற்குக்கு கிடைப்பவை வடக்குக்கும் வேண்டும்

## மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 27
தென்பகுதி மக்கள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளை, எமது தமிழ் - முஸ்லிம் மக்களும் அனுபவிக்க வேண்டும். அதற்கான நகர்வுகளை எமது கட்சி முன்னெடுக்கும் என்று மாகாண கடற்தொழில், போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பாலசுப்பிரமணியம் டெனீஸ் வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமோக வெற்றிக்கு முக்கிய காரணம் தமிழ் மக்களின் ஒன்றுமையே. அந்த வகையில் தமிழ்த் தேசியத்துக்கு வாக்களித்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.
சமயங்களின் ஊடா

21

# வலி.வடக்கில் மீண்டும் வீடுகள் இடித்து அழிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27
வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலய வேலிக்குள் அடங்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள பொது மக்களின் வீடுகளை இடித்தழிக்கும் நடவடிக்கைகள் மீண்டும் இராணுவத்தினரால் கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்தப் பகுதிக்கு அருகில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
வலி.வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிக்குள் உள்ளடங்கும் வீடுகள் இந்த வருட ஆரம்பத்தில் இடித்தழிக்கப்பட்டன.
அதை அடுத்து மக்கள் போராட்டம் வெடித்தது அதன் பின்னர் இடித்தழிக்கும் நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிட்டிருந்தது.
இந்த நிலையில், கடந்த இரு தினங்களாகக் கட்டுவன் கெற்றப்போல் சந்தியடிக்கு அண்மையாகவுள்ள வீடுகள் இடித்தழிக்கப்படுகின்றன.
இந்தப் பகுதியிலுள்ள பற்றைகளை வெட்டி

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துயிலும் இல்லங்களை மீண்டும் அமைக்க வடக்கு மாகாண சபை உதவ வேண்டும்

## கன்னி அமர்வில் உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.27

எமது நினைவுகளிலிருந்து நீங்காத காவிய நாயகர்கள் உறங்குவதற்கு துயிலும் இல்லங்களைமீள அமைப்பது எப்போது? சத்திய வேள்வியில் தம்மை அர்ப்பணித்து சரித்திரமாகி விட்ட மறவர்களைப் பூசிப்பது எப்போது? அவர்களுக்கான கோயில்களை மீள எழுப்புகின்ற பணியை எங்கிருந்து ஆரம்பிக்கப் போகின்றோம்.

தமிழினத்தின் தேசிய அடையாளமாக இருக்கின்ற முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒரு நினைவுச் சின்னத்தை நாம் அமைக்க வேண்டாமா என்று வடக்கு மாகாண சபையின் கன்னியுரையில் கேள்விக்கணை கொடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் துரைராசா ரவிகரன்.

வடக்கு மாகாண சபையின் கன்னியமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:

அழிவைச் சந்தித்த தமிழினம், தன் கண்ணீர்த் துளிகளை வாக்குகளாக மாற்றிப் பெற்றுக் கொடுத்த வெற்றியின் குரல்கள் ஒன்றாகப் பதிவு செய்யப்படும் முதல் நாள் இன்று.

வடக்கையும், கிழக்கையும் இணைக்கின்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் நில அபகரிப்பும், வள அபகரிப்பும் முன்னெடுக்கப்படுகின்றது. எம் மக்களில் பலர் இன்றும் கூட உடம்பில் குண்டுச் சிதறல்களுடன் தான் நடமாடுகின்றார்கள்.

இனத்தின் எதிர்கால இருப்பிற்காக தேசியத்தைப் பலப்படுத்த முன்வந்தவர்கள், இன்று தமது வாழ்வியல் இருப்பை கேள்விக்குறியுடன் முன் நகர்த்துகின்ற நிலையில் உள்ளனர்.

> அவர்களின் மூச்சுக் காற்று இன்னமும் எம்முடன் கலந்தே இருக்கின்றது. அந்தக் காற்றைத் தான் எம் மக்கள் சுவாசிக்கிறார்கள். மறவர்கள் சிந்திய இரத்தம் எங்கள் கடல் நீரிலே கலந்து இருக்கின்றது.

முல்லைத்தீவு கல்வி வலயத்துடன் இரு சிங்களப் பாடசாலைகள் இணைக்கப்பட்டு, தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிப்பதற்கான அனுமதியும் வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்டிருக்கின்றது.

சம்பத்நுவர் என்ற பகுதியில் சிங்களப் பாடசாலையில் கற்கும் 460 மாணவர்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம், எம் மண்ணில் மைந்தர்களான தமிழ் மாணவர்கள் 17 ஆயிரத்து 739 பேருக்கு ஏன் வழங்கப்படவில்லை.

தொடரும் அழிப்புகள்

எமது மண்ணில் தேசிய அடையாளங்கள்என்றுமில்லாதவகையில் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த மண்ணில் பிறந்த பிள்ளைகள், இந்த மண்ணுக்காக உயிர் நீத்த பிள்ளைகள், எமது தேசிய இனத்தின் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த எங்கள் பிள்ளைகளான மாவீரர்களின் நினைவிடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன.

இரண்டறக் கலந்த மாவீரர்கள் இவை ஏன் அழிக்கப்படுகின்றன. எம்மிடமிருந்தும் எம் நினைவுகளிலிருந்தும் அவர்களைப் பிரிப்பதற்கா? அது ஒரு போதும் நடைபெறாது.

அவர்களின் மூச்சுக் காற்று இன்னமும் எம் முடன் கலந்தே இருக்கின்றது. அந்தக் காற்றைத் தான் எம் மக்கள் சுவாசிக்கிறார்கள். மறவர்கள் சிந்திய இரத் தம் எங்கள் கடல் நீரிலே கலந்து இருக்கின்றது. அந்த நீரைப் பருகுகிற மீன்களைத் தான் எம் மக்கள் உண்கிறார்கள்.

அவர்களின் உடல்கள் எம் மண்ணுடன் கலந்து விதையாயிருக்கின்றன. அவர்களின் எண்ண அலைகள் இன்னும் எம் பிரபஞ்சத்தில் நிறைந்தே இருக்கின்றன. இதை எவராலும் அழிக்கவோ, பிரிக்கவோ முடியாது.

நான் இங்கே கோரி நிற்பது எமது இனத்தின் விடுதலையையே களம், புலம், தமிழகமென நாம் அனைவரும் ஒற்றுமை யுடன் சேர்ந்து, எம் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்பதாலேயே - என்றார்.

(ஐ-5)

# மின்சாரம் தாக்கியதில் வதிரியில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக்.27

கார் பற்றிக்கு மின்னேற்றம் 'சார்ஜ்' செய்ய முற்பட்ட ஒருவர் மின்சாரம் தாக்கி சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வதிரியிலுள்ள இரும்பு மதவடியில் இடம்பெற்றது.

இதன்போது இரும்பு மதவடியைச் சேர்ந்த இராமலிங்கம் - சிவசுப்பிரமணியம் (வயது 66) என்பவரே சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:

வீட்டில் வைத்து கார் பற்றிக்கு மின்னேற்றம் 'சார்ஜ்' செய்ய முற்பட்டுள்ளார். இதன்போது அவரை மின்சாரம் தாக்கியுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான அவரை உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போதும் இடையில் அவர் உயிரிழந்துவிட்டார்.

நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு பிரதே பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஐ-422)

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

# பணியாளர் நேர்முகத் தேர்வுக்கு நேற்று சிலருக்கு விசேட அழைப்பு

## அரசியல் உள்நோக்கமா எனக் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக்.27

அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் நியமனம் பெற்றுக் கொடுப்பதற்கான நேர்முகத் தேர்வு முறைகேடான வகையில் நேற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் நடைபெற்றுள்ளதாக ஏற்கனவே பணியாற்றிகொண்டிருக்கும் தொண்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு உரிய கல்வித் தரத்துடன் தொண்டர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட 250 இற்கும் மேற்பட்டவர்கள் சுகாதாரப் பணியாளர்களாக வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றனர்.

இந்த நேர்முகத் தேர்வுக்கு கடமையில் உள்ள சுகாதாரப் பணியாளர்கள் அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு மேலதிகமாக அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் முன்னர் பணிபுரியாத 50 இற்கும் மேற்பட்டவர்களும் தீவுப் பகுதிகளில் இருந்து தொலைபேசி மூலம் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஏற்கனவே வைத்திய சாலைகளில் 3 வருடங்களாகத் தொண்டர்களாகப் பணிபுரியும் எம்மைப் புறக்கணித்து அரசியல் ஆதரவுடன் அழைக்கப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்க வாய்ப்பு இருப்பதாகவும் தாம் புறக்கணிக்கப்படக்கூடும் எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று தீவகப் பகுதிகளில் இருந்து நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் பலர் சரியான கல்வித் தரம் கொண்டிருக்கவில்லை எனவும் பணியாளர்கள் குற்றம் சாட்டினர்.

(ஐ-10-14)

# புத்தளத்தில் கோர விபத்து

## மூவர் சாவு; ஐவர் காயம்

புத்தளத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். மேலும் ஐவர் காயமடைந்த நிலையில் புத்தளம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியில் 12 ஆம் கட்டை எனுமிடத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சீமெந்து ஏற்றப்பட்டிருந்த வாகனத்தில் வான் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

(சி)

# 'கஸினோ' குறித்து பதிலளிக்க முடியாமல் சிங்களத் தீவிரவாதிகள் சிலர் தடுமாற்றம்

## பதில் சொல்லும் நாள் விரைவில் வருமென்கிறார் மனோ

யாழ்ப்பாணம், ஒக்.27

சிங்கள - பௌத்த மக்களை உசுப்பிவிட்ட, சிங்கள தீவிரவாதிகள் 'கஸினோ' தொடர்பில் சிங்கள மக்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிக்கின்றனர். அப்பாவித் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக பாவம் செய்தவர்கள், இன்று தங்கள் சொந்த இன மக்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் விழி பிதுங்கிப் போய் நிற்கின்றார்கள். எங்களுக்கு எதிராக இவர்கள் செய்த பாவங்களுக்கு இவர்களே பதில் சொல்லும் நாள் அண்மித்துக் கொண்டிருப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பௌத்த விகாரைகளில் ஒலிக்கும் சாது சாது என்று உச்சாடனம் செய்து, பௌத்த மதத்தை முன்னிலைப் படுத்தி ஆட்சிக்கு வந்த இந்த அரசு இன்று சூது சூது என்ற சர்வதேச கஸினோ மன்னன் ஜேம்ஸ் பெக்கரின் மந்திரத்தை வேத வாக்காக ஓதுகின்றது.

கொல்லப்படுவது தமிழர்கள் தானே என்றும் அடிபடுவது முஸ்லிம் தானே என்றும் இந்த அலங்கோல அரசின் அனைத்து அட்டகாசங்களுக்கும் துணையாக சிங்கள - பௌத்த மக்களை உசுப்பிவிட்டு அழைத்துச் சென்று படு பாதக பாவச் செயல்களை, சம்பிக்க ரணவக்கவின் ஜாதிக ஹெல உறு மய, விமல் விரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, தினேஷ் குணவர்த்தனவின் மஹஜன எக்சத் பெரமுனை, குணதாச அமர சேகரவின் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், பொது பல சேனா, ராவண பலய ஆகிய அமைப்புக்களே செய்தனர்.

கஸினோ கலாசாரத்துக்கு எதிராக இன்று நாட்டில் எழுந்துவிட்ட பாரிய எதிர்ப்பை கண்டு அரசு தற்காலிகமாக பின்வாங்கிய நிலையில், மக்களை உசுப்பிவிட்ட இந்த அரசியல் வாதிகள் மக்களின் கேள்விகளுக்கு இன்று பதில் சொல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

மேலும் நாட்டை விற்று வயிறு கழுவ வேண்டிய அளவுக்கு நாட்டின் நிதி நிலைமை பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(ஐ-5)

# முஸ்லிம்களுக்கு எதிராக வெளிநாட்டுச் சக்திகள்

## நீதி அமைச்சர் குற்றச்சாட்டு

கண்டி, ஒக்.27

முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளுக்கு பின்னணியில் சர்வதேச இயக்கங்கள் சில இருப்பதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை கண்டியில் மத்திய மாகாண அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்த தாவது:

இலங்கையின் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் முஸ்லிம் மக்கள் மீது திட்டமிட்ட வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

> 'கலால்' எதிர்ப்பு என்று கூறிக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதி ராக செயற்படுகின்றனர்.

நாட்டின் அமைதியை விரும்பாத சிலரே இவ்வாறு செயற்படுகின்றனர்.

'கலால்' எதிர்ப்பு என்று கூறிக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுகின்றனர். பிரச்சினைகளை பேசித் தீர்க்க வேண்டுமே தவிர அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

ஜனாதிபதி இந்த செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஐ-10)




தீபாவளியை முன்னிட்டு
விசேட விலைக்கழிவுகள்
4R பிரதிகள் - 11/=
அழைப்பிதழ்கள் 4R - 10/=
உயர்தர பனர்கள் Sqf 50/=
10X15 - 80/=, 10X30- 170/=
12X30- 190/=
[நிபந்தனைகளுக்குட்பட்டது] (C/13426)
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப். யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரில் நடைபெற்ற ஜெகந்நாதர் ரத பவனி





யாழ்ப்பாணம்,ஒக்.27
கிருஷ்ணவதாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக ஸ்ரீஜெகந்நாதரின் இரத பவனி நேற்று யாழ்.நகரில் இடம்பெற்றது.

அகில இலங்கை ஸ்ரீ கிருஷ்ண பக்திக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த இரத பவனி, யாழ்.வேங்கடேசப் பெருமாள் ஆலயத்திலிருந்து யாழ்.நகரை வலம் வந்து நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தைச் சென்றடைந்தது. இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகத்தின் தலைவர் அருச்சுனன் கிருஷ்ணா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்தப் பவனியில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட பக்தர்களுக்குப் பிரசாதமும் வழங்கினார். (ஒ-14-17)

## பழுதடைந்த உணவுப் பொருள்கள் மருதனார்மடத்தில் அழிப்பு

வலி. வடக்கு, ஒக். 27
மருதனார்மடம் சந்திப் பகுதியில் உள்ள பல வர்த்தக நிலையங்களின் மீது நேற்று முன்தினம் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மற்றும் பிரதேச சபையின் ஊழியர்களும் மேற்கொண்ட பகல் திடீர்ப் பரிசோதனையின் போது காலம் கடந்த பல்வேறு பொருள்களையும் கைப்பற்றி அழித்துள்ளனர்.

மருதனார்மடம் பகுதியில் உள்ள பலவர்த்தக நிலையங்களில் காலம் கடந்த மற்றும் பழுதடைந்த பொருள்கள் தொடர்ந்து விற்பனை செய்யப் படுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் மற்றும் பிரதேச சபைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

இந்த நிலையில் திடீரென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் மற்றும் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து வர்த்தக நிலையங்களில் உள்ள பல்வேறு பொருள்களையும் பாசோதனைக்கு உள்ளாக்கினர்.

இதன்போது பாவனைக் காலம் முடிவடைந்த மற்றும் பழுதடைந்த நூடில்ஸ் பைக்கற்றுக்கள், பிஸ்கட் பைக்கற்றுக்கள், மிக்சர் பைக்கற்றுக்கள் உட்பட மற்றும் சில பொருள்களும் கைப்பற்றப் பட்டு உடனடியாக அழிக்கப் பட்டதுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (வ-86)

## தீவக வலயத்தில் நடைபெற்ற இலவச மருத்துவ சேவை



யாழ்ப்பாணம்,ஒக்.27
வடமாகாணக் கல்வி, சுகாதார அமைச்சுக்கள் தீவக கல்வி வலயத்துடன் இணைந்து நடத்திய இலவச நடமாடும் மருத்துவ சேவை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நடமாடும் மருத்துவ சேவையை யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் காரைநகர் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். கண், பல், இரத்த அழுத்தம், சாதாரண நோய்கள் தொடர்பான பரிசோனைகள், சிகிச்சைகள் இடம்பெற்றதுடன் மருந்துகளும் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஜான்சி ஆனந்தராஜாவின் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்த மருத்துவ சேவையில் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளும் பொது சுகாதார பரிசோதகர்களும் கலந்துகொண்டனர். (வ-7)

## பாவனைக்கு உதவாத வெங்காயம், இறைச்சி அழிப்பு

தென்மராட்சி, ஒக்.27
உணவுப் பாதுகாப்பு வாரத்தையொட்டி கொடிகாமம் நகர்ப் பகுதி உணவு விடுதிகள் மீது சுகாதாரத் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட திடீர்ப் பரிசோதனையில் பழுதடைந்த வெங்காயம் மற்றும் குளிரூட்டியில் ஒன்றாக வைக்கப்பட்டிருந்த சமைத்த மற்றும் சமைக்காத இறைச்சி வகைகளும் அழிக்கப்பட்டன. கடை உரிமையாளர்களின் ஒப்புதலுடன் அவை அழிக்கப்பட்டன. (வ-9)

## திட்டமிடற் சேவை அலுவலர்கள் இருவர் பிரதேச செயலகங்களுக்கு

வலி.வடக்கு, ஒக்.27
இலங்கை திட்டமிடற் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் இருவர் வட மாகாண பிரதேச செயலகங்களுக்கு புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிப்பயிலுநர்களாக இருந்து இலங்கை திட்டமிடற் சேவையின் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச் சோந்த பூவிலிங்கம் இராஜ்வினோத், கண்டாவளை பிரதேச செயலகத்துக்கும்,

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த செல்வி வைரமுத்து தர்சினி ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கும் நியமனம் பெற்றுள்ளனர். (வ-86)

## கைதடியில் தம்பதியர் மீது வீடு புகுந்து தாக்குதல்

நாவற்குழி, ஒக்.27
நள்ளிரவு வேளையில் அத்துமீறி வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாதோர் அங்கிருந்த கணவன்-மனைவியை மோசமாகத் தாக்கி விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை கைதடி, நவபுரத்தில் இடம்பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் முகுந்தன், (வயது-30) மற்றும் அவரது மனைவி முகுந்தன் தாரணி (வயது-27) ஆகியோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்கப்பட்டதன் காரணம் உடனடியாகத் தெரியவில்லை. திருட்டு நோக்கத்துடன் வந்தவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (வ-9)

## சாரணருக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

தென்மராட்சி, ஒக்.27
மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வித்தியாலய மகாலிங்கம் திறந்த வெளி அரங்கில் இடம் பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும், சிறப்பு விருந்தினர்களாகக் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் சாரணிய ஆணையாளர் செ.சுப்பிரமணியம், நிகழ்ச்சித்திட்ட சாரணிய மாவட்ட உதவி ஆணையாளர் கு.சுமுகலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (வ-9)



## வீதிப் பள்ளத்தில் கழிவு ஒயில் விஷமிகள் செயலால் பயணிகள் சிரமம்

தென்மராட்சி, ஒக்.27
வெள்ளம் தேங்கி நின்ற வீதிப் பள்ளத்தில் இனந் தெரியாதோர் பெருமளவு கழிவு எண்ணெய் (கழிவு ஒயிலை) ஊற்றி விட்டிருப்பதால் அந்த வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் ஐங்கரன் வெதுப்பகத்துக்கு அருகில் நீண்ட காலமாக பெரிய குழி காணப்படுவதால் சைக்கிளில் பயணிப்போர் கூட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் பெய்த மழையின்போது மழை வெள்ளம் தேங்கி நின்றது. வீதியில் வாகனங்கள் போக்குவரத் துச் செய்ததால் வெள்ளம் சிந்தியதனால் வற்றிக் காணப்பட்டதாகவும் வியாழக்கிழமை இரவு விஷமிகளால் பெருமளவு கழிவு ஒயில் குறித்த குழியினுள் ஊற்றப்பட்டுள்ளது.

அவ்வழியே வாகனம் சென்ற போது குறித்த குழிக்குப் பக்கத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த அரச உத்தியோகத்தர் மீதும் வீதியால் பயணித்தோர் மீதும் கழிவு ஒயில் தெறித்து வெண்ணிற உடைகள் கருநிறமாக மாறின. வீதியில் தூரத்தில் வாகனம் வருவதை அவதானித்து அவ்விடத்தில் வரும் பாதசாரிகள் மிகவேகமாகச் செல்வதையும் காணமுடிகிறது. (வ-9)

## நூறுக்கும் மேற்பட்டோர் பயனடைந்த நடமாடும் சேவை

வலி. வடக்கு, ஒக். 27
வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் கொண்டாடப்பட்டு வரும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஏழாலை உப அலுவலகத்தினரால் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிபர் சனசமூக நிலையத்தில் நடமாடும் ஆயுள் வேத மருத்துவ சேவையும் நடமாடும் ஆதன பெயர்மாற்றம் தொடர்பான செயற்பாடுகளும் நடைபெற்றன.

ஆயுள் வேத மருத்துவ சேவையில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட முதியவர்கள், பெண்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

இதேவேளை- ஆதன வரி பெயர் மாற்றம் தொடர்பாக சுமார் 75இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண் டனர்.

குறிப்பாக பலருடைய முக்கிய பிரச்சினையாகக் காணப்பட்ட பெற்றோரின் பெயர்களில் இருந்த ஆதன இடாப்புக்களில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக உரிய அலுவலர்களுடன் கலந்துரையாடி விவரங்களை பெற்றுச் சென்றுள்ள னர். (வ-86)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**அறைகள் வாடகைக்கு**

வெள்ளவத்தையில் நாள் வாடகைக்கு இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் வாடகைக்கு.
நாளொன்றுக்க 500/= மட்டுமே
தொடர்பு:- 072-2552222

## மரண அறிவித்தல்

### சதாசிவம் கந்தையா துரைராசா



இணுவில் மேற்கு கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு வேம் போலையை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கந்தையா துரைராசா நேற்று (26.10.2013) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், நிர்மலா, கலைச்செல்வம், செல்லக்கிளி, கலையரசி (சுவிஸ்), தேன்மொழி, சிவலோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடராசா மற்றும் முத்துப்பிள்ளை, இராசா, காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, ஞானம்மா மற்றும் சதாசிவம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிற்சபேசன், சண்முகநாதன் மற்றும் கனகநாயகம், காலஞ்சென்ற திருவிளங்கம் மற்றும் மீனாட்சி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நாகநாதன் மற்றும் அருந்தவமலர், விமலநாயகி, விநாயகமூர்த்தி (சுவிஸ்), ஸ்ரீபாஸ்கரன், பிருந்தா ஆகியோரின் பாசமிகு மாமனும், நித்தியா, நிருசன், துரேசன், சிவபாலன், சேந்தன், சிவமயூரன், தேசிகன், சபீனா, துவாரகன், விதுர்சன், தமிழினி, கிசோர், டிலோஜன், துனஷந்தன், துனஷந்தினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்கள் இன்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கலைச்செல்வம் (மகன்)

வேம்போலை, இணுவில் கிழக்கு.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் செல்லக்குட்டி தவேந்திரநாதன்
**(கணபதி வெதுப்பக உரிமையாளர்)**

பிறப்பு:- 26/8/1967 இறப்பு:- 27/9/2013

கடந்த 13.09.2013 அன்று முருகனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நேரிலே வந்து துயர்பகிர்ந்த அஞ்சல் சமூகத்தினருக்கும் கோப்பாய் பிரதேச செயலகத்தினருக்கும், கோப்பாய் பிரதேச சபையினருக்கும், வெதுப்பக உரிமையாளர் சங்கத்தினருக்கும், கோப்பாய் பொதுச் சுகாதார பகுதியினருக்கும் எமது குடும்பத்தினருக்கு குருவாய் இருந்து பல வழிகளிலும் துயர் பகிர்ந்ததுடன் அன்னாரை ஆன்மீக வழியில் மிளிர வைத்த சன்னதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமி அவர்கட்கும் ஞானச் சுடர் புரட்டாதி மாத மலரிலே " என்றும் மறவா" எனும் தலைப்பில் அன்னாரின் ஆன்மீகப் பணி பற்றி குறிப்பிட்டிருந்த மலர் சார் சமூகத்தினருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவிப்பதுடன்.

இன்று (27.10.2013) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(39518)(14)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி நன்னித்தம்பி



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி நன்னித்தம்பி நேற்று (26.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், புவனேஸ்வரி , பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நன்னித்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வரதன் மற்றும் வரதரூபன், ஜெயந்தி, வரோபன், வல்லபன் ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தி, தங்கேஸ்வரி, ஸ்ரீக்குமாரன், தமிழினி, கல்யாணி ஆகியோரின் மாமியும் சங்கீத்தா, நிரூசிகா, மகிழன், மகிழினி, லக்சிகா, யாலிசா, மதுர்ஷா, யாதவன், சோபிதன், கோபினா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்கள் இன்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.(ந.வல்லபன்).

இராவத்தை, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

### தனாக தீப்பற்றியது பஸ்

யாழ்ப்பாணம்.ஒக்.27

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று தீப்பற்றிக் கொண்டது. எனினும் பயணிகள் சுதாகரித்துக் கொண்டதால் விபத்து எதுவும் இடம்பெறவில்லை. இந்தச் சம்பவம் நேற்றிரவு 11.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த பஸ்ஸில் 40 வரையான பயணிகள் இருந்துள்ளனர். பஸ்ஸின் ரயர் எரிந்து தீப்பற்றிக் கொண்டதாக பயணிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதோடு தீயணைப்பு பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் பஸ் தீப்பற்றி முழுவதுமாக எரிந்து போனதாக சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர். குறித்த பஸ்ஸில் பயணித்த பயணிகள் வேறு பஸ்களில் ஏற்றி கொழும்புக்கு அனுப்பப்பட்டதாக தெரிய வருகிறது.

(ஐ)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

**மிருசுவில் பழைய வாய்க்கால் தூய வேளாங்கன்னி ஆலய கட்டடப் புனரமைப்பு நிதிக்காக 2013.10.26 ஆம் திகதி நடைபெற்ற அதிஸ்டலாப சிட்டிலுப்பு இறுதி முடிவுகள்**

1ஆம் பரிசு 0020 , 2ஆம் பரிசு 1796, 3ஆம் பரிசு 2561

ஆறுதல் பரிசு

| | | |
|---|---|---|
| (1). 1900, | (4). 2183 | (7). 0577 |
| (2). 2019 | (5). 1807 | (8). 0924 |
| (3). 1178 | (6). 1325 | (9). 0680 |
| | | (10). 2555 |

பரிசுப்பொருள்கள் பெற்றுக்கொள்ளாதவர்கள் மிருசுவிலில் புனித நீக்கிலோர் பங்குப்பணிமனையில் பங்குத் தந்தையிடம் பெற்றுக்கொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலிங்கம் இராசமணி



பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிட மாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் இராசமணி நேற்று (26.10.52013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், கதிர்காமு மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், இராவீந்திரன் (ரவி லண்டன்), ரஜனி (ரதி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகைள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
24 . 09 . 1947



நோயின் பிடியில்
07 . 11 . 2012

### பொன்னையா திருச்செல்வம்
**(ஓய்வுபெற்ற தபால் அதிபர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்)**

ஆண்டொன்று ஆகியதோ
ஆதாரமே உம்மைப் பிரிந்து
பார்க்கும் இடமெங்கும் உம்
விம்பந்தானே தெரிகிறது
நீர் வாழ்ந்த வீடின்று
கலகலப்பை இழந்த வெறுமையில்
கனவினில் அடிக்கடி வரும் உம் முகம்
இப்போதும் நம்ப முடியவில்லை
உற்ற உம் மனையாளோடும்
பெற்ற பிள்ளைகளாய்
பேரப்பிள்ளைகளாய்
மற்றை உறவுகளுடனும்
கலங்கித் தவிக்கின்றோம் .
உம் ஆத்ம சாந்திக்காய்
என்றும் அஞ்சலிக்கிறோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

உங்கள் ஆறாத பிரிவுத் துயருடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவரான சு. மயில்வாகனம்

அவர்களின் அன்புச் சகோதரன்

### சுப்பையா விநாயகம்

அவர்களின் மறைவுச் செய்திஅறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும்

## மரண அறிவித்தல்

### புனிதவதனி இராஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிட மாகவும் கொண்ட புனிதவதனி இராசேந்திர குமார் நேற்று (26.10.2013) சனிகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராஜா அருளானந்தம்- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மக ளும், காலஞ்சென்ற பாலசிங்கம் தவமணி தம் பதியரின் அன்பு மருமகளும், ஜெயராஜா, அன் ரன்யோகராசா, காலஞ்சென்ற எட்வேட் தர்மராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பால சிங்கம் இராஜேந்திரகுமாரின் (செயலாளர் YMCA பண்டத்தரிப்பு) அன்பு மனைவியும், டினேஸ்குமார், நொய்லின், சந்திரிக்கா (லண் டன்) ஆகியோரின் அன்புத் தாயும், டிலோன் (லண்டன்), ராதா ஆகியோரின் அன்பு மாமியும், ஜெஷ்லினின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 27/10/2013 

## வாசிப்பு மாத போட்டிகள்

வடமராட்சி, ஒக்.27
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச சபை பொது நூலகம் மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நாளை திங்கட்கிழமை போட்டிகளை நடத்தவுள்ளது. இந்த வரிசையில் மாணவர்களுக்கு கட்டுரை, சித்திரப் போட்டிகளும் வாசகர்களிடையே பொது அறிவுப் போட்டியும் இடம்பெறும்.

வாசிப்பு மாதத்தை ஒட்டி ஏற்கெனவே புலோலி மெ.மி.த.க.பாடசாலை மாணவர்களுக்கென பொதுநூலகத்தில் வாசிப்புத் தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கை யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.யோகராஜா நடத்தினார். (ந-8)

## மாணவன் கௌரவிப்பு



வலி.வடக்கு, ஒக்.27
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலம் தோற்றிய மாணவர்களில் முதலாம் இடத்தையும், யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவன் பாக்கியராஜ் தனுராஜுக்கு சுன்னாகம் மக்கள் வங்கியினால் அவருடைய திறமையைப் பாராட்டி புதன்கிழமை இருபத்தையாயிரம் ரூபா பணம் பாடசாலையில் வைத்து அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுன்னாகம் மக்கள் வங்கியின் முகாமையாளர் பார்த்தீபன், அதிபர் ந.பிரதா மற்றும் வகுப்பாசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-86)

## சமயத்தில் நாட்டம் உள்ளவராக பிள்ளைகளை வளருங்கள்

சங்கானை, ஒக்.27
அன்பு, பண்பு, பாசம், பண்பாடு, பெரியோரைப் பேணல் என்பன போன்ற நற்செயல்கள் யாவும் இன்றைய இளம்தலைமுறையினரிடம் அரிதாகவே காணப்படுகின்றன. இவர்களை நல்வழிப்படுத்தும் பெற்றோரும் தமது பிள்ளைகள் எவ்வாறு வளர்க்கப்பட வேண்டும் என்பதை மறந்து விட்டார்கள் என மாவடி வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்குப் பிரதேச இந்து கலாசார அலுவலர் ச.கிருபா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாரத்தில் ஒரு வெள்ளிக்கிழமையாவது பிள்ளைகளை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். ஆலயத்தில் நடப்பதை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள். ஆலயத்துக்கு எப்படி வருவது, உடைகள் எப்படி அணிந்து வர வேண்டும். எந்தத் தெய்வத்தை முதலில் வணங்க வேண்டும். அதன் பின்னர் எப்படி ஏனைய தெய்வங்களையும் முறைப்படி வணங்க வேண்டும். கோயில் சுற்றாடலில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பனவற்றைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும். எம் முன்னோர் ஆன்மிக, சமய பண்பாடுகளை எமக்குக் கற்றுத் தந்தார்கள். அதுபோல பெற்றோராகிய அனைவரும் தத்தம் பிள்ளைகளுக்கு சமய, ஆன்மிக பண்பாடுகளை புகட்டி கல்வி என்ற அழியாச் செல்வத்தை ஊட்டி நற்பிரசைகளாக உருவாக்க முயற்சி செய்யவேண்டுமென அவர் தெரிவித்தார். (ந-29).



அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட முதியோர் தின நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் முதியவர் ஒருவருக்கு அன்பளிப்பு வழங்கிக் கௌரவிக்கிறார்.

## நண்பராய் நடித்து நகை கொள்ளை

வடமராட்சி, ஒக்.27
பளை புதுக்காட்டுச் சந்தி பஸ் தரிப்பிடத்தில் சிகரெட் புகை மூலம் குடும்பப் பெண் ஒருவரை மயங்க வைத்து அவர் அணிந்திருந்த சுமார் பத்துப் பவுண் பெறுமதியான தாலிக்கொடி, தங்கச் சங்கிலி என்பனவற்றை இளைஞர் ஒருவர் அபகரித்துச் சென்றுள்ளார்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டைச் சேர்ந்த குடும்பப் பெண்ணே இவ்வாறு தங்க நகைகளைப் பறி கொடுத்தவராவார்.

சொந்த அலுவல்களுக்காக யாழ்ப்பாணம் வந்த இந்தப் பெண் வீடு திரும்ப நேரடி பஸ் கிடைக்காமையினால் ஏ-9 வீதியில் பயணித்த பஸ் வண்டியில் புதுக்காட்டுச் சந்திக்கு பயணத்தை மேற்கொண்டார். அந்த வேளை அதே பஸ் வண்டியில் பயணித்த இளைஞர் ஒருவர் அவருடன் கதைத்து நட்பை ஏற்படுத்தி அந்தப் பெண்ணுடன் புதுக்காட்டுச் சந்தியில் இறங்கினார். இருவரும் கட்டைக்காடு செல்வதற்காக மற்றைய பஸ்வண்டியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அந்த நேரம் தங்க நகைகளை கழுத்தில் போடக் கூடாது. யாராவது அறுத்துக் கொண்டு போய் விடுவார்கள். அதனால் அவற்றைக் கழற்றி கைப்பையில் வையுங்கள் என இளைஞன் பெண்ணுக்குப் புத்திமதி கூறவே பெண்ணும் நகைகளைக் கழற்றிப் பைக்குள் வைத்துள்ளார்.

அதேவேளை இளைஞர் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து பெருமளவு புகையினைப் பெண்ணுக்கு அருகில் நின்றவாற வெளி விட்ட போது அதனைச் சுவாசித்த அப் பெண் மயங்கி விட்டார். பெண் மயங்கிய நிலையைப் பயன்படுத்தி நகைகள் அடங்கிய கைப்பையை இளைஞர் தூக்கிக் கொண்டு தலை மறைவாகி விட்டார்.

குறித்த பெண் மயக்கம் தெளிந்து பார்த்த போது நகையையும் கைப்பையையும் இளைஞனையும் காணவில்லை. ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் அதிர்ச்சி பதற்றத்துடன் பெண் அடுத்த பஸ் வண்டியில் ஊர் போய்ச் சேர்ந்தார். (ந-8)

## தனியார் கல்வி நிறுவன கொட்டகை எரிந்து நாசம்

பருத்தித்துறை, ஒக்.27
நெல்லியடி எரிபொருள் நிலையத்தின் முன்பாக விக்னேஸ்வராக் கல்லூரி வீதியிலுள்ள தனியார் கல்வி நிலையத்தின் வகுப்பு கொட்டகை இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொட்டகை எரிவதைக் கண்ட அருகில் உள்ளவர்கள் தனியார் கல்வி நிலையத்தின் உரிமையாளர்களுக்கு தொலைபேசி மூலம் அறிவித்து விட்டு அதனை அணைப்பதற்கு முயற்சியும் எடுத்துள்ளனர்.

இருந்த போதும் கொட்டகையின் ஒரு பகுதி முழுமையாக எரிந்து நாசமாகியது. நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-422)

### வலி.மேற்கு பிரதேச சபையில் மூன்று நாள் நிகழ்வு

## கண்காட்சியும் கருத்தரங்கும்

வலி.வடக்கு, ஒக்.27
வலி.மேற்கு பிரதேச சபையில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வையொட்டி மூன்று நாள்கள் மாபெரும் கண்காட்சி கருத்தரங்கு, விழிப்புணர்வு - பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வலி.மேற்கு பிரதேச சபை சிரேஷ்ட நூலகர் பா.விஜயகுமார் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் 28,29,மற்றும் 30 ஆகிய திகதிகளில் முழு நேரமாக வலி.மேற்கு புதிய பிரதேச சபையின் கலாசார மண்டபத் தில் இடம்பெறும்.

நிகழ்வுகளுக்கு வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நீாகரஞ்சினி ஐங்கரன் தலைமை தாங்குவார்.

புத்தகக் கண்காட்சி இடம்பெறும் அதேவேளை, நூல்களை கழிவு விலைகளில் விற்பதற்கும் மாணவர்களை வாசிப்பில் ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறுதி நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி வலி. மேற்கு பாடசாலை மட்டத்தில் உயர்தர வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்ளும் வாசிப்பின் மகிமை பற்றிய பட்டிமன்றம் இடம்பெறும்.

இதேவேளை முப்பரிமாணம் தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கை வலி.மேற்கு பிரதேச நூலகர் பா.விஜயகுமார் வழங்குவார்.

மேற்படி கண்காட்சி மற்றும் நிகழ்வுகளில் யாழ். மாவட்ட பாடசாலைகள் கலந்து கொண்டு பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-50)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் மேற்கொண்ட திருட்டு முயற்சி வீட்டுக்காரர் திடீரென விழித்து கூக்குரலிட்டதைத் தொடர்ந்து முறியடிக்கப்பட்டதுடன் திருடர்களும் தப்பி ஓடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் சாவகச்சேரி பெரிய மாவடியில் இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் அருகருகே உள்ள வீடுகளில் மேற்கொள்ளப்படவிருந்த திருட்டு முயற்சியே முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதி விளக்குகளை அணைத்து விட்டு ஒரு வீட்டின் யன்னல் கம்பியை அகற்ற முற்றபட்ட வேளையில் வீட்டுக்காரர் விழித்துக் கொண்டதாலும் மற்றைய வீட்டின் விறாந்தைக்கு வந்த திருடர்கள் கதவை திறக்க முயன்ற வேளையில் வீட்டுக்காரர் விழித்துக் கொண்டதாலும் அவர்கள் கூக்குரலிடவே திருடர்கள் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிஸார் சம்பவ இடங்களைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

அண்மையில் வெளியாகிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விவரம் வருமாறு:-

**வவுனியா இந்துக் கல்லூரி**
வ.தயரதன்-191 (மாவட்ட நிலை 2) ரொ.தர்ணிகன்-177, ஜீ.டென்சிகா-176, வி.ஸோபனா-168, நா.சன்சிகா-165, கி.தர்சனா-163, கோ.கோபிகா- 163, க.சாரணி-161, ஜெ.தனுஷ்- 157.

**புற்றளை மகா வித்தியாலயம்**
வே.கோகுலநாத்-171, தி.ஜனகன்-170, இ.மெலிஷா-169, வி.தருண்-167, பா.றஜிகரன்-157, சா.அனுசன்-155, ப.விபுசா-155. (ந-421)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முன்பள்ளி மாணவர்களின் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.27
நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவை பின்வருமாறு:-

**மாறுவேடப் போட்டி**
1 ஆம் இடம்- அ.சஞ்சைவர்மன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 2 ஆம் இடம்- ஆ.கௌதமன் ( சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 2 ஆம் இடம்- க.கோபினா (சிறுவர் உலகம் முன்பள்ளி கோண்டாவில்), 3 ஆம் இடம்-வி.கிருத்திகா (ஸ்ரீ வாகீஸ்வரி கோண்டாவில்), 3 ஆம் இடம்- செ.கேதுஸா (ஸ்ரீ வாகீஸ்வரி கோண்டாவில் ).

**வாசிப்பு போட்டி (தமிழ்)**
1 ஆம் இடம்-சு. சஜீவ் (கம்பன் முன்பள்ளி திருநெல்வேலி), 2 ஆம் இடம்-வி.கிருத்திகா (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 3 ஆம் இடம்-சு.திகழவன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்)

**வாசிப்பு போட்டி (ஆங்கிலம்)**
1 ஆம் இடம்-ஆ.கௌதமன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 2 ஆம் இடம்-சு.சஜீவ் (கம்பன் முன்பள்ளி திருநெல்வேலி), 3 ஆம் இடம்-சு.திகழவன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 3 ஆம் இடம் -ஸ்.சங்கவை (கம்பன் முன்பள்ளி திருநெல்வேலி)

**பேச்சு போட்டி (தமிழ்)**
1 ஆம் இடம்-ஆ.கௌதமன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 2 ஆம் இடம்-அ.சஞ்சைவர்மன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 3 ஆம் இடம்-நே.பர்வதன் (அற்புதக்குட்டிகள் முன்பள்ளி கோண்டாவில்)

**தனி அபிநயப் போட்டி**
1 ஆம் இடம்-பிரிந்தினி குணரட்ணம் (ஸ்ரீ வாகிஸ்வரி கோண்டாவில்), 1 ஆம் இடம்- வினுஸா சிவகுமார் (ஸ்ரீ வாகீஸ்வரி கோண்டாவில்), 2 ஆம் இடம்-நே.பர்வதன் (அற்புதக்குட்டிகள் முன்பள்ளி கோண்டாவில்), 3 ஆம் இடம்- அ.அகல்நிலா( ஸ்ரீ வாகீஸ்வரி கோண்டாவில்)

**தனி ஆங்கிலப் பாடல் போட்டி**
1 ஆம் இடம்-நே.பர்வதன் (அற்புதக்குட்டிகள் முன்பள்ளி கோண்டாவில்), 2 ஆம் இடம்- ஆ.கௌதமன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 3 ஆம் இடம்- பிரிந்தினி குணரட்ணம் (ஸ்ரீ வாகீஸ்வரி கோண்டாவில்)

**தனித் தமிழ் பாடல் போட்டி**
1 ஆம் இடம்- அ.சஞ்சைவர்மன் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 2 ஆம் இடம்- சு.வைஸ்ணவி (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்), 3 ஆம் இடம்- து.துஸாந் (சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்). (ந-14)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



பெரியவிளானில் வசிக்கும் செபமாலை பீற்றர் பியன்வெனு கடந்த 21 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆசிரியரான இவர், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும், இளவாலை திருமறைக்கலாமன்ற இணைப்பாளராகவும் பல்வேறு கிராமிய சமூக அமைப்புக்களின் உறுப்பினராகவும் இருந்து வருகின்றார். (ந)

## பாறை பெயர்ந்து வீழ்ந்து பெண் சாவு

புசல்லாவை, ஒக்.27
மலைச்சாரல் பகுதியிலிருந்து திடீரென பெயர்ந்து மலையடிவாரத்தில் இருந்த வீடொன்றின் மீது கருங்கல் பாறையொன்று வீழ்ந்ததால், வீட்டின் சமையலறையில் உணவு தயாரித்துக் கொண்டிருந்த பெண்ணொருவர் உயிரிழந்தார். அப்பெண்ணின் மகளும் இரு குழந்தைகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிப் பிழைத்தனர்.

புசல்லாவை, சொகமாவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 67 வயதான மூனம்மா அர்ஜன் என்ற பெண் மேலிருந்து வீழ்ந்த பாறைக்கிடையில் அகப்பட்டு நசி யுண்டு உயிரிழந்தார்.

கடும் மழை காரணமாக மண்சரிவு அபாயம் நிலவியதால் குறிப்பிட்ட பகுதியில் வசித்த பொது மக்கள் தோட்ட நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டு வேறு தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் வீட்டை விட்டு வெளியேறாது தங்கியிருந்ததாலேயே விபத்தைச் சந்திக்க நேர்ந்ததாக புசல்லாவை பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-ஞ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

யாழ் நகர் மத்தியில் போதனாவைத்தியசாலைக்கு அருகில் இரண்டு பரப்புக்கள் கொண்ட இரு காணிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**தொடர்பு:077 146 7050** (சி/13409)(12.6.3)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, மூளாய் வீதி உடக்கிய வளைப் பிள்ளையார் சிலைக்கு அண்மையில் உள்ள சட்டத்தரணிக்குச் சொந்தமான 6 பரப்புக் காணியில் புனரமைக்கப்பட்ட 2 மாடி வீடு உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: (சி/13348) (7.6.3)

**077 453 5392, 077 757 0599**

## விற்பனை உதவியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் வெகு விரைவில் திறக்கப்படும் எமது (Signature) சிக்நேசர் ஆடவர் உடை காட்சியறைக்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை. G.C.E(O/L) சித்தியுடன் ஆங்கிலம் ஓரளவு பேசக் கூடியவர்களாக இருக்க வேண்டும். உங்களது விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலமாக அனுப்பவும்.

(சி/13349) (7.6.3)

**Careers@hameedia.lk**

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

### SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

## Career Guidance Officer – Vocational Training

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors. The Vocational Training Institute in the North (VTN) of Sri Lanka is a project jointly implemented by the Ministry of Youth Affairs and Skills Development (MYASD), Sri Lanka, and works in collaboration with the National Apprentice and Industrial Training Authority (NAITA). The Project will set up a new Vocational Training Institute in Killinochchi, which provides vocational education and training to meet the needs of the market. The program will be aligned to the National Vocational Qualification System (NVQ).

GIZ-VTN project invites applications from highly motivated and committed professionals with a background in vocational training, including an in depth knowledge about the Technical Education, Vocational Training and NVQ systems in Sri Lanka. The candidate must be in good physical condition as the position requires a substantial amount of time spent travelling on the career guidance bus that will tour various districts of Sri Lanka. When not travelling, Incumbent will be working at the project office in Killinochchi.

The **Career Guidance Officer** will promote the vocational training sector all over Sri Lanka. He will support and guide the youth to develop their career paths showing them the many options available in this sector.

1. **Vocational guidance**
   - Provide advice and information about the choice of a career, specifics on individual careers and career requirements – comprehensive information on vocational training, responsibilities, requirements and prospects associated with various professions, ways of funding vocational education and training, important trends in the world of work, information on the situation and development of the labor market, and advice on how to find employment or a training place. Identifying people's individual interests, skills, competencies and talents to assist in making a reliable career choice.
2. **Labor market advice**
   - Provide advice and information particularly with regard to the current situation and trends in professions and the labor market, job structures and working conditions.
3. **Career counseling**
   - Systematic counseling to have a positive influence on the choice of career.
4. **Increase image of vocational training**
   - Use systematic approaches to increase the popularity of the vocational training sector among the youth and young adults.

**Required qualifications, competencies / skills and experience**

- Bachelors degree in Vocational Training or social sciences.
- Must be a qualified career guidance counselor with at least 3+ years of proven ability and experience in career guidance.
- Possess an in depth knowledge about the Technical Education and Vocational Training system and the NVQ system of Sri Lanka. in depth knowledge of the different occupations, career advancement opportunities and remuneration structure for wage / self / foreign employment.
- Knowledge of assessment techniques such as computer based job preference testing.
- Knowledge of available opportunities for training, higher / further education & training and employment at both local and national level through Government, Private and NGO VT providers.
- As a Guidence Counselor, you must enjoy working with people, helping them to make important decisions about their personal, education, training and employment options. Must possess ability to set people at ease and give information clearly.
- Publicity skills to provide increased awareness to the local communities of the CG services and activities through organizing events such as competitions, street drama, debates, sports activities and banners / posters.
- Excellent command of Sinhala and Tamil and ability to communicate in English.
- Computer related knowledge.
- Willingness to travel to all parts of Sri Lanka.

Qualified applicants must submit an updated CV and cover letter including email & telephone contacts of two professional referees to giz-hrsrilanka@giz.de or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No.6, Jawatte Avenue, Colombo 5, **on or before cob 6 November 2013.**

The selected candidate must be prepared to commence work by 1 December 2013.

We thank all applicants but only the short listed candidates will be contacted. (சி/13353)

## வைத்தியம்

சுவாமி ஆயுர்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வயிறு சம்பந்தமான, ஆண்களுக்கான பிரச்சினை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஓயில் மசாஜ் இந்தியா சிகிச்சை ஸ்பா ஆயுர்வேத மசாஜ் & ஸ்டீம் பாத் அர்சஸ் வியாதிகளுக்கும் இ மேனன்ட் லெவனியா.

(சி/13362) **பிரியா**

**0728 138 773**
**0777 204 921**

## வேப்பமரம் விற்பனைக்கு

தோப்பு, அச்சுவேலியில் இராச வீதியில் பெரிய வேப்பமரம் விற்பனைக்குண்டு. தறிப்பதற்கான அனுமதியுண்டு. சுற்றளவு 4½ முழம். (சி/13370) (7.6.3)

தொடர்பு: 071 836 1706

## விற்பனைக்கு

ஊர்க்கோழி, பென்டம், வான்கோழி, கினிக் கோழி, மணித்தாரா, தாரா, புறாக்கள், முயல், ஆண் பெண் பொமனேரி யன், அல்சேசன் நாய்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: மாறன் பண்ணை, (29530) (7.6.3)
நடுபரன் வீதி, முழங்காவில். 077 789 4956

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய பொமேரியன் ஆண், பெண் குட்டிகள், 8 மாதம் நிரம்பிய அல்சேசன், ஒருவயது நிரம்பிய பொமேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு, ஓடர்ஸ் பெற்றுக் கொடுக்கப்படும். (33335) (45.6.3)

**தொடர்பு: 077 101 6407**

## குறுகிய கால வாடகைக்கு

வெள்ளவத்தை 45, நெல்சன் வீதியில் வெளி நாட்டிலிருந்து வருபவர்களுக்கும் வெளி மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வருபவர்களுக்கும், திருமண வைபவங்களுக்கும் சகல தளபாடங்களுடனும் அறைகளாகவும், 2,3 அறைகள் கொண்ட வீடுகளாகவும் வசதிக்கேற்ப மாத, கிழமை, நாள் வாடகைக்குண்டு. குடும்பமாக வந்து தங்குவதற்கும் பொருத்தமானது. (A/C, Hot Water உட்பட)

**011 250 2412 / 011 236 0544**
**Hot : 077 303 8063 / 071 805 4332**

வாகனத் தரிப்பிட வசதி உண்டு. (சி/12750) (45.6.3)

## T.V, AMP கள் விற்பனைக்கு

**Sony, Panasonic** } **T.V** (21",25". 29")
**Hifi Stereo,**
**Pioneer Amplifire,**
**Pioneer, Kenwood, JBL** } **Speaker,**
**Tuner Amplifire**

என்பன மிகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு (33334)(18.6.3)

**தொடர்பு:**
**WISDOM LANKA TRADING**
**262, ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P: 077 254 9969, 077 601 3362**

## வீடு வாடகைக்கு

ஊரெழு, பலாலி வீதியில் நான்கு அறைகள் இரண்டு வரவேற்பறையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 993 7402 (33328) (7.6.3)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு முன் வீதியில் பனைகள் நிரம்பிய 12 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
பகுதியாகவும் கொடுக்கப்படும்.

**தொடர்பு: 077 910 3318**

## காணி விற்பனைக்கு

ஆறுகால்மடம் பேக்கரி ஒழுங்கையில், குடி மனைப் பகுதியில் பத்து (10) நெற்பரப்பு வயற்காணி விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை.

(33326) (45.3.6) தொடர்பு: 077 458 6445

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதி ஐந்து சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு. அலுவலகங்கள், NGOகளுக்கு ஏற்றது. (தற்போது கூட்டுறவு சபையின் அச்சகம் இயங்கிக் கொண்டிருக்கிறது)

தொடர்பு: 077 336 6988, 077 512 7811 (சி/13355)(7.6.3)

## காணிகள் கொள்வனவு விற்பனை

கட்டடம் கட்டிக் கொடுத்தல், பழைய வீடுகளை நவீன முறையில் வடிவமைத்தல், நவீன முறையில் பான்றி, மரம் சம்பந்தமான அனைத்து வேலைகளும் Arul life Style (Pvt) Ltd. 077 452 5932, 077 507 5415 இலங்கையின் எந்தப் பாகத்திலும். (சி/13356)(7.6.3)

## யாழ் நகரில் வீடு விற்பனைக்கு

யாழ் நகர் கடைத் தெருவிற்கு அண்மித்ததாகவும் சுமார் மூன்று பரப்பில் அமைந்ததும் ஆகிய மாடிவீடு விற்பனைக்கு உண்டு (சி/13383)

தொடர்பு
**0772 279 219**

## ஐக்கிய அமெரிக்காவில் படிக்க மாதம் 3½ இலட்சம் உழைக்க அரிய வாய்ப்பு

விரைவான விரிவான சட்ட ஆலோசனைக்கு (33299)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**021 221 9016, 021 568 9090**



## உங்களுக்கு அவசரபணத்தேவை உள்ளதா?

**SINGER FINANCE**
நாடுங்கள்

உங்கள் வாகன புத்தகத்தை கொடுத்து உங்கள் பணத்தைப்பெற்றுக்கொள்ளுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

| | | |
|---|---|---|
| தொடர்புக்கு | தனு | 077 9 357 124 |
| | பிருந்தன் | 078 5 000 917 |

(சி/13347)

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

## Walking Interview
## நேர்முகத் தேர்வு

நஷனல் அசட் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது துடிப்பான பேச்சாற்றல் மிகுந்தவர்களை சந்தைப்படுத்தல் திறமைக்கு ஏற்ப தேர்வு செய்ய உள்ளது

எமது நிறுவனமானது யூனியன் வங்கியின் உப நிறுவனமும் DFCC வங்கி மற்றும் Ennid Capital (Pvt) Limited ஆகிய நிறுவனங்களின் துணை நிறுவனமும் ஆகும்.

| | | |
|---|---|---|
| வேலை விவரம் | : | முதலீட்டுத்திட்ட ஆலோசகர் |
| தகைமைகள் | : | G.C.E. O/L & G.C.E.A/L சிறந்த தொடர்பாடல் நிறைமையுடன் இருப்பது விரும்பத்தக்கது. |
| நேர்முகப் பரீட்சை | : | காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும். (சுயவிவரக் கோவையுடன் சமுகமளிக்கவும். |
| திகதி | : | 04, 05. நவம்பர் 2013 |

**ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்**

**முகவரி:** நஷனல் அசட் மனேஜ்மன்ட் லிமிட்டெட்
கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம்,
யாழ்ப்பாணக் கிளை, 2ஆம் மாடி,
147, 2/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (33313) (45.3.6)

namal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவு தின விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக்.27
வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும், கௌரவிப்பு நிகழ்வும் நாளை 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பனை. தென்னை வ.அ.கூ.ச. சமாசத்தின் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினமும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் செயலாளர் க.பிரபா, யாழ்ப் பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் 2012 ஆம் ஆண்டின் சிறந்த அங்கத்தவர், பணியாளர்கள் கௌரவிப்பு, 2012 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு, 2012 ஆம் ஆண்டில் உயர் கல்வி வாய்ப்பு மாணவர்கள் கௌரவிப்பு, 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் இடம் பெறும். (ந-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்களான துவாரகேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரது தந்தை

**சுப்பிரமணியம் தியாகராஜா**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(சி/13422)
(7.6.3)
இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ் வணிகர் கழகம்.

ஓம் விராட்விஸ்வப்பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 16 . 12 . 1928
விண்ணுலகில் 07 . 11 . 1912

அமரர்
**திருமதி குணலட்சுமி தர்மலிங்கம்**
(திதி: 27.10.2013)

மண்ணுலகில் எம் குலவிளக்காய் வாழ்ந்து
எம்மை வழிநடத்திய அன்னையே!
தன்னலமற்று எமைத் தாங்கிய சுமைதாங்கியே!
தங்கள் புன்னகைத்த திருவதனமும்
தன்னிகரில்லா கருணை நிறைந்த குணமும்
அன்பு கலந்த அறிவுரைகளும்
பரிவும் பாசமும் நிறைந்த பேச்சும்
ஆண்டொன்று ஆனாலும் அழியவில்லை
எம் இதயங்களிலிருந்து
காலங்கள் பல கடந்தாலும் என்றும்
கலையாது உங்கள் நினைவுகள்
ஆண்டவன் திருவடியை அடைந்த உங்கள்
ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்

குணவாசா,
இராஜ வீதி,
அச்சுவேலி.
என்றும் உங்கள் நினைவுகளுடன்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ 25 . 05 . 1936
மனம் நெகிழ 06 . 11 . 2012

அமரர் **சின்னத்தம்பி சண்முகநாதன்**
(ஓய்வுபெற்ற அதிபர் J.P.)
திதி : 27.10.2013

குடும்பமென்ற விருட்சத்தின் ஆணி வேராய்
என்றென்றும் எம் இதயத்தின் அன்பு அப்பாவே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறாது நம் துயரம்
பரிவும் நேசமும் பொழிந்தெம்மை
வாழ்வில் உயர வைத்த அன்புத் தெய்வமே...
நற்பண்புகள் பல கற்றுத்தந்து
நற்பலன்கள் பல அளித்து
நலமோடு நாம் வாழ நல்வழிகாட்டி
நீங்கள் இறைவனுடன் இரண்டறக்கலந்து
ஆண்டு ஒன்று ஆனதுவே!
என்றும் உங்கள் நினைவலைகளை
எம்மோடு சுமந்து வாழும் நாங்கள்
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்.

119/2/1, மெனிங் பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு-6.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(33120) (7.6.3)

## மெய்வன்மைப் போட்டி

அரியாலை உதயஒளி சனசமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு விழாவின் மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உதய நிலா முன்பள்ளி மைதானத்தில் உதய ஒளி சனசமூக நிலையத்தின் தலைவர் செ.செல்வரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.வசந்தகுமார் கலந்துகொள்வார். (ந-23)

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஒக்.27
சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் பி.சின்னத்துரை தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டச் சமாசச் செயலாளர் திருமதி ச.பரமானந்தன், சாவகச் சேரி பிராந்திய வெளிக் கள அலுவலர் ந.சிவ குமாரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இதன்போது ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ந-9)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25.01.1934
மறைவு 07.11.2012

அமரர்
**சிதம்பரம் இராசலிங்கம் (J.P)**
(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர்-
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எமக்கு சிறந்த வழிகாட்டியாய் இருந்து
சமூகத்தில் நற்பிரஜைகளாக எம்மைத் திகழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே
சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றி
சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்று
சிறந்த சமூகசேவையாளன் என்னும் நாமத்துடன்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு மறையாது
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

தேவாலயவீதி,
சங்கானை.
(33142)(6.3.4)

## மரண அறிவித்தல்

### துரையப்பா சோமசுந்தரம்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், பெரிய மாவடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சோமசுந்தரம் கடந்த (24.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவனேஸ்வரி (ஜெயா), சிவநேசன் (குமார்), சிவகுமாரி (சுதா), சிவரூபன் (ரூபன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குகனேஸ்வரன் (ஈசன்), கோவிமணிசேகரன் (பாபு), ராதா, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனும், நிவேதினி, கோசி, கஜேந்தினி, சுமித்ரா, நித்தியா, சக்தி, கஜன், யதுசன், சாரு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்கல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியமாவடி,
சாவகச்சேரி.
(29680) (45.6.3)
தகவல்:
குடும்பத்தினர்.

## ஜேர்மனியில் தமிழ்ச் சிறுமி விபத்தில் சாவு

புலம்பெயர்ந்து சுவிஸில் வசித்துவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த பதினொரு வயதுச் சிறுமி வாகன விபத்தில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் ஜேர்மனியில் இடம்பெற்றது. மாதனை, பருத்தித்துறை பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட சுந்தரலிங்கம் சதுஜா (வயது-11) என்ற சிறுமியே உயிரிழந்தவர் ஆவார்.

குடும்பத்தாருடன் சுவிஸில் இருந்து ஜேர்மனிக்குக் காரில் சென்று கொண்டிருந்த போது வீதியில் வாகனத்தை விலத்த முற்பட்ட போது மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டது. இதன்போது காரில் பயணித்தவர்கள் காயமடைந்தனர். காயமுற்ற சதுஜா சிகிச்சை பயனின்றி பின்னர் உயிரிழந்தார். (ஒ-14)

## விபத்து

தென்மராட்சி, ஒக்.27
ஏ-9 வீதியில் வேகமாகச் சென்ற கார் முன்னால் சென்ற மினி பஸ் பயணிகளை இறக்குவதற்காக நிறுத்தப்பட்டபோது அதன் மீது மோதிக் கொண்டது.

இந்தச் சம்பவம் நேற்று மீசாலை புத்தூர் சந்திக்கு அருகில் இடம் பெற்றது. தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மோட்டார் போக்குவரத்துப் பொலிஸார் குறிப்பிட்ட காரை நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போதும் நிறுத்தாமல் ஓட்டிச் செல்லப்பட்ட காரே மினி பஸ் மீது மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## மரண அறிவித்தல்

### கனகசபை மகாதேவன்



[ஓய்வுபெற்ற மருந்தாளர், நயினாதீவு அரசினர் வைத்தியசாலை]

இணுவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மகாதேவன் 24.10.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கச்சியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், அனுசா (அமெரிக்கா), நிருஷா (கனடா), ரமேஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ் (அமெரிக்கா), ஸ்ரீராஜ் (கனடா), வதனநிரஞ்சனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிணி, ஆதித்தியன், அனோசன், அரவிந், அஸ்வினி, ஆரணி, ஆருஜன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும், வாமதேவன், பராசக்தி, தில்லைநாதன், சிதம்பரநாதன், கைலாயநாதன் (சுவிஸ்), பத்மநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசரஸ்வதி (ஆஸ்திரேலியா), கணேந்திரன் (கனடா), ரதிதேவி, தவராசலிங்கம் (கனடா), வினேசன், விவேகானந்தன் (ஜேர்மனி), பரமானந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு
T.P.No- 021 223 0766
(33316)(12.6.3)
தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோர் தின விழா வவுனியாவில்

வவுனியா, ஒக்.27

வவுனியா பூந்தோட்டம் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் தின விழா இன்று பூந்தோட்ட நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு வர்த்தகர் சங்கத் தலைவர் சு.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா கலந்து கொள்ளவுள்ளார். கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ஒ-402)

## நல்லூரில் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.27

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் பின்வீதியில் உள்ள வீட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்தில் இருந்த வேளை பணம் உட்பட சிலபொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

நேற்றமுன்தினம் அங்கு சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

(ஒ-4)

## மத்தியஸ்தர் சபை கூடமாட்டாது

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர மாண வர்களுக்கான தகவல் தொழிநுட்பப் பரீட்சை நடைபெறவுள்ளதால். இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த கரவெட்டி மத்தியஸ்த சபை கூட மாட்டது.

இன்றைய நாளுக்கான பிணக்குகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கர வெட்டி மத்தியஸ்த சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.

(ந-35)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, ஒக்.27

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் கே.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.அ.ஸ்ரீகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ந-8)

# மரண அறிவித்தல்



## சுப்பையா விநாயகம்

ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா விநாயகம் 25.10.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சீதாலட்சுமியின் அன்புக் கணவரும், தர்ஷினி, வர்ஷிகன், ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவகாண்டனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான லட்சுமி, கோமதி மற்றும் இராசு, மயில்வாகனம், அன்னலட்சுமி கனகரட்ணம், இலட்சுமணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (33317) (12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்

# ஓராண்டு நினைவஞ்சலி

கடமையைச் செய் பலனை எதிர்பாரதே
என்ற பெரியோர் கூற்றிற்கு இலக்கணமான

அமரர்
## அம்பலவாணர் சிற்றம்பலம்

திதி: அட்டமி

அன்னை மடியில்
09.07.1947

அன்னை தவிக்க
07.11.2012



ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
நீங்கள் மீளாத்துயில் கொண்டு
ஆண்டு ஒன்று ஆனாலும் - எங்கள்
இதயங்களை விட்டுப் பிரியவில்லைப்பா!

தன்னையேயுருக்கி எம்மை ஆளாக்கி
வையத்துள் வாழ வித்திட்ட
பாசத்தின் உறைவிடமான
எங்கள் அருமைச் சகோதரனே!

அன்புக்கினியவரே!
பாச மழை பொழியவோ
செல்ல சொற்பொழிவாற்றவோ
நிகரில்லாத எம் தாத்தாவை!



(33297) (45.3.6)

"சந்நிதி இல்லம்"
கைதடி கிழக்கு, கைதடி.

பிரிந்தும் பிரியாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கநாயகம் நாகரத்தினம்



பிரான்பற்று, பண்டத்தரிப் பைப் பிறப்பிடமாகவும் கனடாமொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி தங்கநாயகம் நாகரத்தினம்** கடந்த (20.10.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சுப்பிர மணியம்-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், பவளராசா, பரமேஸ்வரி அம்மா, தங்கராசா, செல்வராசா, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான நடராசா, ராசம்மா, துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா, குமாரசாமி, தங்கமலர், லிங்கேஸ்வரி, இந்திரமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுமார் - சிவறஞ்சனி, சுபாஸ்கரன், சசிகுமார்- கிரிஜா, ஜெயந்தி- சிறிதரன், சுகந்தி-யோகேஸ்வரன், ஸ்ரிபன்- தர்சினி, செல்வச்சந்திரன், வசந்தகலா- சதீஸ்குமார், சசிகலா, விஜயகலா, ஜெயச்சந்திரன், சுரேஸ்- வித்தியலட்சுமி, சுதா- சத்தியசீலன்,றமேஸ் - சத்தியா, அனிதா, கீதா, பவிதா, கவிநேஷ் ஆகியோ ரின் பாசமிகு பேர்த்தியும், கரன், தனுஷ், தனோஜன், தனேஸ், தனுஷா, ருஷானி, தேனுகா, சச்சின், அபி, ஆகாஷ், சந்தோஷ், சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.10.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் தங்கராசா இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **நா.தங்கராசா ( *N.T.R*)**
(அருள்முருகன் ஹாட்வெயர், முருகன் கிறேசர்,
*N.T.R* ரான்ஸ்போர்ட்).
T.P : 077 731 4820, 077 7310059
பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு. (33321) (45.3.6)

# 33ஆம் நாள் நினைவினில்...

மனம் மகிழ
26.04.1954

மனம் நெகிழ
25.09.2013



திருமதி
## பத்மினி சிவசண்முகபிள்ளை

(ஓய்வுபெற்ற அலுவலர் -
யாழ் தேசிய வீடமைப்பு அதிகார சபை)

அன்புக்கு அன்னையாய் பாசத்தின் உறைவிடமாய்
அண்டியவர்க்கு தாயாய் எல்லோர்க்கும் இனியவளாய்
பண்பிற்கு உறைவிடமாய் உறவுகளுக்கு ஆதரவாய்
இல்(லாத) வாழ்விற்கு இலக்கணமாய் வாழ்ந்தது போதுமென்று
காலன்உன்னை அழைத்து கழிந்தது ஒன்றைத் திங்கள்
என்றும் உம் வழி போற்றி – பேணி வாழ்வோம் நாம்.

மீளாத்துயில் கொண்டு இறை அடியில் அமைதி கண்டு பிறப்பின் உண்மையை அடைந்த என் மனைவியின், எம் தாயின் இறுதிச் சடங்கில் கலந்தும், துக்கங்களைப் பகிர்ந்தும் மற்றும் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (27.10.2013) ஞாயிற்றுக் கிழமை எமதில்லத்தில் இடம்பெறும் இறை வழிபாட்டிலும், மதிய உணவிலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(33306) (7.6.3)

நலம் ஓங்குக!

வத்தனைவளவு,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

கணவர், பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## பிறைசூடி பரராசசிங்கம்

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், மந்துவிலை வதிவிடமாகவும், பிரித்தானியாவைத் தற்காலிக வாழ்விடமாகவும் கொண்ட பிறைசூடி பரராசசிங்கம் 13.10.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற பரராசசிங்கம் - மகேஷ்வரி (வற்றாப்பளை) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற குலசேகரன் - ரேவதியம்மா (மந்துவில்) தம்பதிகளின் அன்புப் பெறாமகனும், நவமலர் (வற்றாப்பளை), றஜனி (கனடா) வனையா (கனடா), மனோரஞ்சிதம் (மந்துவில்), மனோகரன் (கனடா), சறோயினிதேவி (கண்டி), அப்பிகாவதனி (ராசாத்தி - அச்சுவேலி), பராசக்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.10.2013) ஞயிற்றுக்கிழமை மு.ப.9.30-12.30வரை St marylebone crematorium East End Road Finchiey N2 ORZ பார்வைக்காக வைக்கப்பட்டு, 12.30 மணிக்கு London st marylebone crematorium east end road fihcniey N20RZ தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோவில் வீதி,
பத்தமேனி அச்சுவேலி. (சி13401)(12.6.3)

தகவல்:
மனோரஞ்சிதம் (மந்துவில்) 077 357 8199
அம்பிகாவதனி (ராசாத்தி) 077 870 6793

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 139

# மாரடைப்பை தடுப்பதற்கான

## சில ஆலோசனைகள்

★ பள்ளிப் பருவத்தில் இருந்தே மாணவர்கள் உடல் உழைப்புப் பயிற்சிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ 60 வயதைத் தொட்டுவிட்ட யாவரும் மாரடைப்புக்கான எந்த அறிகுறியும் இல்லாவிட்டாலும் வருடத்துக்கு ஒரு முறையாகிலும், குருதியில் கொழுப்பின் அளவு, வெல்லத்தின் அளவு, ECG போன்ற இருதயப் பாதிப்புகளைக் கண்டறியும் பரிசோதனைகளை வைத்திய ஆலோசனையுடன் செய்து உங்கள் ஆரோக்கியத்தை உறுதி செய்யுங்கள்.


★ குடும்பத்தில் இளவயது மாரடைப்புப் பாதிப்புகள் இருப்பின் 25 வயதில் இருந்தே வருடாந்த பரிசோதனைகளைச் செய்து ஆரோக்கியத்தை மேம்படுத்துங்கள், வைத்திய ஆலோசனைக்கு அமைய உணவு, உடற்பயிற்சியைப் பின்பற்றுங்கள்.

★ பெண்களுக்கு மாதவிலக்கு நின்றபின்பு கூடிய கவனம் எடுங்கள்.

★ சிக்கலான மாப்பொருள் உணவுகள் நல்லது. அதாவது நார்ப்பொருள் கூடிய மாப்பொருள் உணவுகள்.
உதாரணம்:- தீட்டாத அரிசி, சாமை, தினை போன்ற தானியங்கள், இலைக்கறிவகைகள், இனிப்புக் குறைந்த நார்ப்பொருள் கூடிய பழங்கள் (தோடம்பழம், திராட்சை, கொய்யா, நாவல், விளாம்பழம்).

★ உப்புக் குறைந்த, கொழுப்புக் குறைந்த, எண்ணெய் குறைந்த உணவுகள், பழங்கள், பச்சைக் காய்கறிகள் நிறைந்த உணவுகளை அதிகம் உண்ணுங்கள், இனிப்பான உணவுகளுக்கு பதிலாக விதைகள், பருப்புகள் உண்ணுங்கள், பேக்கரி உணவுகள், பாஸ்ட்பூட் (FAST FOOD ) உணவுகளைத் தவிருங்கள். கலோரி அதிகம் உள்ள உணவுகளையும் தவிருங்கள்.

★ சிகரெட் குடிப்பது, புகையிலை போடுவது, அளவுக்கு




அதிகமான மது அருந்துதலை தவிர்த்தல்.

★ எடை கூடுதலாக உள்ளவர்கள் அதைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். எடை கூடினால் உயர் இரத்த அழுத்தம் வருவதற்கு வாய்ப்பு உண்டு. இது இதய நோய் மாரடைப்பு வருவதற்கான முதல்படியாகும்.

★ வயிற்றுப் பகுதியில் கொழுப்புள்ளவர்கள் அதனைக் குறைப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி செய்வது அவசியம். ஆண்களுக்கு இடுப்புச் சுற்றளவு 102cm இலும் குறைவாகவும் பெண்களுக்கு 88cm இலும் குறைவாகவும் வைத்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

★ உணவில் நிரம்பிய கொழுப்பு உணவுகளைத் தவிருங்கள். (SATURATED FAT ) உதாரணம்:- பட்டர், நெய், சீஸ், விலங்கு கொழுப்பு உணவுகள், தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய், இவற்றில் பொரித்த உணவுகள் கூடியளவு நிரம்பாத கொழுப்புணவுகளைப் (UN SATURATED FAT) பாவியுங்கள். உதாரணம்:- ஒலிவ் ஒயில், சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய் போன்றன.


★ குருதியில் கொலஸ்ரோலின் அளவு 200 mg/dl க்கு குறைவாக பேண முயற்சிக்க வேண்டும். அத்துடன் HDL நல்ல கொலஸ்ரோலின் அளவு mg/dl க்கு அதிகமாகவும் LDL குறை அடர்த்திக் கொழுப்பு புரதம் 130 mg/dl க்கு குறைவாகவும், ரைகிளிசரைட்டு அளவு 150 mg/dl க்கு மேல் அதிகரிக்காமலும் இருக்க வைத்திய ஆலோசனையுடன் உணவுப்பழக்கம், மருந்துகள், உடற்பயிற்சிகள், மூலம் குருதியில் கொழுப்பின் அளவைச் சீரான அளவில் பேண முயலுங்கள்.

★ கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயும், உயர் இரத்த அழுத்தமும் இருந்தால் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. வைத்தியரின் ஆலோசனையுடன் உணவு, மருந்துகளுடன் இந்த நோய் நிலைகளைச் சீரான நிலையில் பேணுங்கள்.

எஸ்.சுதாகரன்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# சலரோக நோயாளிகளுக்கு

## உச்சியிலிருந்து, உள்ளங்கால் வரை சில ஆலோசனைகள்



தலை- ஒரு கிழமையில் இரண்டு தடவையாவது தலையைக் கழுவுங்கள். (முழுகுதல்). சொடுகு, பேன் என்பன தலையில் தொற்றாமல் பாதுகாருங்கள். தனியான சீப்பு, துவாய் என்பவற்றைப் பாவிக்கவும். தலையில் கடி ஏற்படும்போது கை நகங்களாலும் , சீப்பினாலும் சொறிவதைத் தவிர்க்கவும். இவற்றுக்கு வைத்திய ஆலோசனை பெறுவது நன்று. சூடான அரப்பு, சீயாக்காய், தேசிக்காய், சூடான வெந்நீர் என்பவற்றையும் பாவிப்பதைத் தவிர்க்கவும். Clip, Hairpin என்பவற்றைத் தலையில் காயம் ஏற்படும் வண்ணம் ஏற்றுவதைத் தவிர்க்கவும்.

கண்கள்-குளிர் நீரில் கழுவுதல் வேண்டும். துடைக்கும் போது சுத்தமான துணியால் துடைக்கவும். மயிர் கொட்டிகள் பெருகும் காலத்தில் மிகவும் கவனமெடுக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டால் உடன் வைத்திய உதவியை நாடவும்.

முகம்- காரமற்ற சவர்க்காரம் (Soap) போட்டுக் கழுவுவதுடன், முகத்தில் பருக்கள் ஏற்பட்டால் நகத்தால் கிள்ளுவதையும், துவாயால் தேய்ப்பதையும் தவிர்க்கவும். சவரத்தின்போது காயம் ஏற்படாமல் தவிர்க்கவும்.

வாய்- காலை, மாலை மெல்லிய தூரிகை கொண்டு பற்பசையால் விளக்கவும். கரி , வேப்பம் குச்சி, பற்பொடி பாவிப்பதைத் தவிர்க்கவும். உணவு உண்டபின் வாயை நீரால் நன்றாகக் கழுவவும். ஊசி , குச்சியால் ஈறுகளைக் குத்துவதைத் தவிர்க்கவும், வெற்றிலை, சுண்ணாம்பு பாவிப்பதை நிறுத்தவும். பல் அழற்சி, சூத்தை ஏற்பட்டால் உடன் வைத்திய உதவியை நாடவும். சூடான உணவு, தேநீர் என்பவற்றைத் தவிர்க்கவும்.

காது- ஆழமாகச் சுத்தப்படுத்துவதையும்.clip, ஊசி என்பன பாவித்துக் கிண்டுவதையும் தவிர்க்கவும். காதடைப்பு, காது வலி ஏற்பட்டால் உடன் வைத்தியரை நாடவும்.

மூக்கு- தினமும் சுத்தமான துணியால் சுத்திகரித்தல் வேண்டும்.

தோல் சுத்தம்- காலை, மாலை (Soap) கொண்டு குளிக்கவும்.சுத்தமான ஆடை அணியவும். குளிக்கும் போது நகம், வேறு கடினமான பொருள்களால் தேய்ப்பதைத் தவிர்க்கவும். உள்ளாடைகள் ஒவ்வொரு நாளும் தோய்த்துப் பாவிப்பதுடன் இறுக்கமான ஆடைகள் அணிவதைத் தவிர்க்கவும். வெயில் காலங்களில் மெல்லிய பருத்தி ஆடைகளும், குளிர் காலங்களில் தடித்த ஆடைகளும் அணியவும்.

பாதங்கள்- முகத்துக்குக் கொடுக்கும் முதலிடம் பாதத்துக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும். காலை, மாலை சவர்க்காரம் போட்டு கழுவவும். ஈரமற்ற நன்றாகக் காய்ந்த துவாயால் துடைத்த பின் முகப் பவுடர் போடவும். இரவில் பாதங்களுக்கு எண்ணெய் பூசவும். பித்த வெடிப்பு ஏற்படாமல் பாதுகாக்கவும், பாதத்தைக் கடினமான இடங்களில் தேய்ப்பதையும், கடிக்கும்போது ஆழமாகச் சொறிவதையும், கால் வலிக்கும்போது அதிக சுடுநீரில் காலை அமுக்குவதையும், சூடான பொருள் களால் ஒத்தடம் கொடுப்பதையும் தவிர்க்கவும். நகங் களை வட்டமாக வெட்டவும். மழை காலங்களில் சிரங்கு ஏற்படாமல் தவிர்க்க நனைந்த கால்களை சவர்க்காரம் கொண்டு கழுவுங்கள். பின் துணியால் ஈரமறத் துடைத்த பின் முகப்பவுடர் போடலாம். கால்களுக்குப் பாதணிகள் பாவிக்க வேண்டும். கால்களுக்குப் பாதணிகள் வாங்கும் போது இறுக்கமான, வெட்டக்கூடிய , தடிப்பான பாதணிகளை வாங்க வேண்டாம். புதுச் செருப்புக் கடிக்கும் என்பார்கள். ஆகையால் புதிதாக வாங்கியவற்றைக் கழுவியோ அல்லது உட்புறமாக எண்ணெய், சவர்க்காரம் என்பவற்றைப் பூசிய பின்போ பாவிக்கலாம். கால்கள் கற்கள் போன்றவற்றால் காயமடையாமல் பாதுகாக்கவும்.

கைகள்- நகங்களை ஒழுங்காக வெட்டவும். சமைக்கும் போதும் வேறு வேலை செய்யும் போதும் காயம் ஏற்படாமல் பாதுகாக்கவும். அதிக சூடான பொருள்களைப் (சுடுநீர், கஞ்சி) பாதுகாப்புடன் கையாளவும். வெளியில் சென்று வந்த பின்பும், சாப்பிட முன்பும், மலசலகூடத்தைப் பாவித்த பின்பும், சமைக்க முன்பும், குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தியாக்க முன்பும், பின்பும் கையை சவர்க்காரம் கொண்டு கழுவவும்.

முதுகு- நன்றாகச் சவர்க்காரம் கொண்டு கழுவவும். சுத்தம் செய்யும்போது மரங்களில் தேய்ப்பது, கடினமான பொருள்களால் தேய்ப்பது என்பவற்றைத் தவிர்க்கவும்.

கழிவிட அயல்பாகம்- ஒவ்வொரு முறையும் கழிவறைக்குப் போன பின்பும் சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும். தோல் வியாதி ஏற்படாமல் பாதுகாத்தல் அவசியம்.

பொதுவாக வியர்வை தங்கும் இடங்களான கால்களின் இடைப்பகுதி (அரை), கமக்கட்டு, மார்பின் கீழ்ப்பகுதி (பெண்கள்), தொப்புள் என்பன சவர்க்காரம் கொண்டு கழுவி காயம் ஏற்படாத வண்ணம் அழுக்கு நீக்கப்பட வேண்டும். பெண்கள் மாதவிடாய் காலங்களில் அடிக்கடி சுத்தமான (pad) மாற்றி நன்கு கழுவி நலம் பேண வேண்டும். கர்ப்ப காலத்தில் பெண்கள் தமது உடலில் அதிக கவனம் செலுத்துவதுடன் குழந்தைப் பராமரிப்பிலும் சுத்தம் பேண வேண்டும்.

எஸ்.பாலசுந்தரம்,
தாதிய பயிற்சி கல்லூரி
யாழ்ப்பாணம்.

# ஜம்பு மர விநியோகம்



யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும், யாழ்.பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து, IMHO அனுசரணையுடன், பொது மக்களி டையே ஜம்பு மர நடுகையை ஊக்குவிக்கும் முகமான 30.09.2013 அன்று 5.000 ஜம்பு மரக்கன்றுகளை பாடசாலை கள், வைத்தியசாலைகள் , பொது நிறுவனங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற இடங்களுக்கு இலவசமாக விநியோகித்துள்ளன.

இரண்டாம் கட்டமாக 2.500 ஜம்பு மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன. ஜம்பு மரக்கன்றுகள் தேவைப்படும் சமூக நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றவை "நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்" என்ற முகவரியிலும், 021-222-0179 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

சாவகச்சேரி, இந்து கொவாய 1978 உத்தரம் 4ஆம் பாதம் 21½ பாவம் அரச திணைக்கள Programme Assistant செவ்வாய்க் குற்றமற்ற மணமகளுக்கு அரச திணைக்கள பட்டதாரி மணமகன் தேவை.

தொடர்பு: 077 376 9284 (33287) (7.6.3)

## காணி விற்பனைக்கு

A9 வீதியில் கைதடிப் பாலத்திற்கு அப்பால் சாவகச்சேரிப் பக்கமாக வைரவர் கோயிலுக்கு அண்மையில் நல்ல தண்ணிக் கிணற்றடிக்கு எதிர்ப்பக்கமாக ஏழு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 321 2712, 077 843 3012 (33315) (7.6.3)

## காணி தேவை

மருதனார்மடம் சந்திக்கு அண்மித்ததாக K.K.S. வீதியில் அல்லது உடுவில் உரும்பிராய் வீதியில் 2 - 3 பரப்புக் காணி தேவை. விற்பவர்கள் தொடர்பு கொள்ள வும்.

தொடர்பு:077 220 8268/077 929 6979

## வீடு வாடகைக்கு

நெல்லியடியில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டின் ஒரு பகுதி (Annex) வாடகைக் குண்டு. சைவ போசனமுடைய ஒரு சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 612 2375 (29580) (7.6.3)

## கடை வாடகைக்கு

கொட்டடி சிவன்பண்ணை வீதியில் கடை வாடகைக்குண்டு.

தொடர்பு: 071 454 6814 (33314) (7.6.3)

## தேவை

சிறிய குடும்பம் ஒன்றைப் பராமரிப்பதற்குப் பணிப்பெண் தேவை. (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு:077 850 5348

## மணமகன், மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989, விசாகம், 3ஆம் பாதம் பி.ப 20 உடைய இலங்கையின் தொழிலதிபரின் மகளுக்கு டாக்டர், எஞ்சினியர், அக்கவுண்டன் போன்ற மணமகன் தேவை. ஆசிரியையான பட்டதாரி விரும்பத்தக்கது. 1979, ரேவதி இந்தோனேசியாவில் இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. இலங்கையில் சகல இடங்களில் இருப்பவர்களும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 00447965028396 - London
077 147 9416 - Sri Lanka (29825) (7.6.3)

## VAN FOR SALE

MARUTI SUZUKI - OmniE

தொடர்பு: 071 818 6363 (33295) (7.6.3)

## வீடு உடன் கூடிய காணி விற்பனைக்கு

பெரியவிளான் சந்தியில் இருந்து தெல்லிப்பழை வீதியில் 500 யார் தொலைவில் 5 பரப்புக் காணி வெட்டுக்கிணறு, மின்சார வசதியுடன் கூடிய அழகிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 011 263 6644, 072 408 8350

## வாகனம் விற்பனைக்கு

PS-XXXX தொடரிலக்கமுடைய TATA Single cup - 207 model வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 372 1515

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ் பிறஸ் வீதியில் ஆயர் இல்லத்திற்கு பின்புறமாக மூன்று அறைகளுடன் சகல வசதியும் உள்ள வீடு கார்த்திகை மாத தொடக்கத்தில் இருந்து வாடகைக்கு விடப்படும். அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 898 1296 (பிற்பகல் 2 மணிக்குப் பின்) (33231) (7.6.3)

## வீட்டின் மேல்மாடி வாடகைக்கு

யாழ் நகரில் Bankshall வீதியில் 4 அறைகள், Tiles பதிக்கப்பட்ட Hall, 2000 சதுர அடி பரப்பில் வாகனத் தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்குண்டு.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சிறிய குடும்பங்கள் விரும்பத்தக்கது. (33200) (7.6.3)

தொடர்பு: 077 066 7646

# வாகனங்கள் விற்பனைக்கு



## கார்

| | | |
|---|---|---|
| NP KI-XXXX | மெஸ்டா 323SAABS 1598.00 CC | 2003 |

## டப்புள் கப்

| | | |
|---|---|---|
| 253-XXXX | மிட்சுபிசி K34 2470.00 CC | 1993 |

## வேன்கள்

| | | |
|---|---|---|
| 56-XXXX | டொயோடா LH102 2440.00 CC | 1991 |
| 61- XXXX | டொயோடா-LH110 2440.00 CC | 1991 |
| 58-XXXX | டொயோடா LH102 2440.00 CC | 1991 |
| WP GU-XXXX | மிட்சுபிசி டெலிகா P05V 2470.00 CC | 1997 |
| NC GG-XXXX | டொயோடா ஹய்யஸ் LH103 2770.00 CC | 1995 |

## பஸ்கள்

| | | |
|---|---|---|
| 29-XXXX | இசுசு ஜணி (சீட்டர் 28) 4000.00 CC | 1976 |
| 29-XXXX | மிட்சுபிசி ரோசா (சீட்டர் 28) | 1981 |

## லொறிகள்

| | | |
|---|---|---|
| NP PR-XXXX | மைந்த்ரா மெக்சிமோ 909.00 CC | 2011 |
| 48-XXXX | L/ A லீலேண்ட் டஸ்கர் 6000.00 CC | 1995 |
| NP LH-XXXX | டாடா ஏஸ் 702.00 CC | 2010 |
| 26 SRI XXXX | இசுசு எல்ப் TFR55F | 1978 |
| SP PS-XXXX | டாடா ஏஸ் 702.00 CC | 2011 |
| NW PR-XXXX | டாடா ஏஸ் 702.00 CC | 2011 |
| NC PS-XXXX | டாடா ஏஸ் EX 702.00 CC | 2011 |
| NW PS-XXXX | மைந்த்ரா மெக்சிமோ 909.00 CC | 2011 |
| NC PP-XXXX | டாடா ஏஸ் 702.00 CC | 2010 |
| 27 SRI XXXX | இசுசு TXD50 | 1980 |
| NP GE-XXXX | இசுசு எல்ப் NPR 4330.00 CC | 1995 |
| NC PQ XXXX | மைந்த்ரா மெக்சிமோ 909.00 CC | 2011 |

## டிப்பர்கள்

| | | |
|---|---|---|
| NP LI-XXXX | L/A லீலேண்ட் 1613 | 2009 |
| NP LI-XXXX | L/A லீலேண்ட 1613 6540.00 CC | 2011 |
| NP LI-XXXX | L/ A லீலேண்ட கொமெட் 6540.00 CC | 2008 |
| NP LC-XXXX | L/ A லீலேண்ட கொமெட் 6540.00 CC | 2006 |
| NC LB-XXXX | L/ A லீலேண்ட 6540.00 CC | 2006 |
| 48-XXXX | L/ A லீலேண்ட கொமெட் 6280.00 CC | 1996 |

## முச்சக்கரவண்டிகள்

| | | |
|---|---|---|
| NP QD-XXXX | பஜாஜ் ஹொட்டோ 2S 145.45 CC | 2006 |
| NP-YA-XXXX | பஜாஜ் AR4S 173.5 CC | 2010 |
| CP QH-XXXX | பஜாஜ் ஹொட்டோ RE 2 S 145.00 CC | 2006 |
| WP YT-XXXX | பஜாஜ் ஹொட்டோ AR 4S 198.75 | 2011 |
| WP YA-XXXX | பஜாஜ் ஹொட்டோ AR 4S 173.5. CC | 2010 |
| SG QW-XXXX | பஜாஜ் ஹொட்டோ AR 4S 173.5. CC | 2010 |
| SP QP-XXXX | பஜாஜ் ஹொட்டோ AR 4S 173.5. CC | 2008 |
| NP JF-XXXX | பஜாஜ் ஹொட்டோ RE 2S 150.00 CC | 2004 |
| CP QP-XXXX | பஜாஜ் ஹொட்டோ AR 4S 173.5. CC | 2008 |
| NP YF-XXXX | பஜாஜ் AR 4 S 200.00 CC | 2010 |
| NC-YA-XXXX | பஜாஜ் AR4S 173.5 CC | 2010 |
| NC QO -XXXX | பஜாஜ் AR4S 173.5 CC | 2008 |
| NW QZ-XXXX | பஜாஜ் ஹொட்டோ RE 4 S 173.5 CC | 2010 |
| NC QF-XXXX | பஜாஜ் ஹொட்டோ RE 2 S 145.00 CC | 2006 |

## உழவு இயந்திரம்

| | | |
|---|---|---|
| NP GG-XXXX | மெஸ்ஸே பர்கசன் 135 2000.00 CC | 1995 |
| 49-XXXX | மெஸ்ஸே பர்கசன் 135 2000.00 CC | |
| 36 SRI XXXX | மெஸ்ஸே பர்கசன் 135 2000.00 CC | 1976 |
| NC RC-XXXX | டவே 45 DI 2500.00 CC | 2011 |
| NP RB XXXX | டவே 45DI 2500.00 CC | 2010 |
| NC RC-XXXX | டவே 45 DI 2500.00 CC | 2011 |
| EP RB-XXXX | டவே 45DI 2500.00 CC | 2010 |
| 270-XXXX | மெஸ்ஸே பர்கசன் 135 2000.00 CC | |
| NP RB-XXXX | மெஸ்ஸே பர்கசன் 240 2500.00 CC | 2001 |
| NP RC-XXXX | மெஸ்ஸே பர்கசன் 240 2500.00 CC | 2002 |
| EP RB-XXXX | மைந்த்ரா 575 DI 2523.00 CC | 2010 |
| EP RB-XXXX | மைந்த்ரா 575DI 2523.00 CC | 2008 |
| EP RA- XXXX | மைந்த்ரா 575DI 2523.00 CC | 2006 |
| UP RC-XXXX | பார்ம்ட்ரக்ட் FT 60 3147.00 CC | 2010 |
| NC RC-XXXX | டவே 45DI 2500.00 CC | 2011 |
| NP RB-XXXX | டவே 45DI 2500.00 CC | 2010 |
| NC RC-XXXX | டவே 45DI 2500.00 CC | 2011 |
| NC RD-XXXX | டவே 45DI 2500.00 CC | 2012 |
| 270-XXXX | மெஸ்ஸே பர்கசன் 135 2000.00 CC | 1979 |
| NP GL-XXXX | மெஸ்ஸே பர்கசன் MF240 2500.00 CC | 1989 |
| NP RC-XXXX | மைந்த்ரா 575DI 2523.00 CC | 2011 |
| NC RB-XXXX | மைந்த்ரா 575DI 2523.00 CC | 2008 |
| NC RA-XXXX | பார்ம்ட்ரக்ட் FT-60 3147.00 CC | 2007 |
| NC RD-XXXX | நிவ் ஹோலண்ட் 4710 2700.00 CC | 2011 |

## 2 சக்கர உழவு இயந்திரம்

| | | |
|---|---|---|
| NC SI-XXXX | குபெல்ட்டா RC10064 624.00 CC | 2010 |
| NP SI-XXXX | குவிக்கோ RV145 738.00 CC | 2009 |
| NC SH-XXXX | சன் பாங் GN12 815.00 CC | 2009 |
| NC SJ-XXXX | சிபாங் GN15 DI 903.00 CC | 2011 |
| NC SH-XXXX | யொங்டு GN15 DI 815.00 CC | 2008 |
| NP SI-XXXX | சிபாங் GN12 DI 815.00 CC | 2010 |
| NC SI-XXXX | சிபாங் GN12 DI 815.00 CC | 2009 |
| WP SK-XXXX | குபோடா K8 465.00 CC | 2002 |
| NC SG-XXXX | சிபாங் GN15 DI கை ட்ரக்டர் | |
| NC SI-XXXX | விகினோ RV125 624.00 CC | 2009 |
| NC SJ-XXXX | குபெல்ட்டா 624.00 CC | 2011 |
| NC SK-XXXX | நுபோடா RY125 624.00 CC | 2011 |
| NC SH-XXXX | யொங்டு GN12 DI 815.00 CC | 2008 |
| NC SK-XXXX | விகினோ RV125 624.00 CC | 2011 |

## அரிவு வெட்டும் இயந்திரம்

| | |
|---|---|
| போடன் லோவல் கம்பைன் ஹவஸ்டர் | 2011 |
| முபோடா ஜயன்ட் த்ரஸ்சர் | 2010 |
| ஆக்ரோடெக் AM15 கம்பைன் த்ரஸ்சர் | 2011 |
| ஆக்ரோடெக் CA200 ஹவஸ்டர் | 2011 |
| போடன் லோவல் கம்பைன் ஹவஸ்டர் | 2011 |
| ஆக்ரோடெக் 4LL 200 ஹவஸ்டர் | 2010 |
| ஆக்ரோடெக் 4LL 200 ஹவஸ்டர் | 2010 |
| முபோடா 4LZ 2 ஒட்டோமெடிக் கம்பைன் ஹவஸ்டர் | 2010 |
| ஆக்ரோடெக் 4LL 200 ஹவஸ்டர் | 2010 |

இந்த வாகனங்களை இல. 105, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியிலுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாண வாகனகாட்சியறையில் வாரநாட்களில் மு.ப 8.30 மணியிலிருந்து பி.ப 4.45 வரை பார்வையிடலாம்.

யாழ்ப்பாண மற்றும் அநுராதபுர கிளையில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முன் அறிவித்தலின்றி எந்த வாகனத்தையோ / வாகனங்களையோ விற்பனையிலிருந்து விலக்கி வைக்க நிறுவனத்துக்கு உரிமை உண்டு.

**2013 ஒக்டோபர் 30 ஆம் திகதி மதியம் 12.30 மணிக்கு கேள்வி கோரல் முடிவடையும்.**

கஜநீதன் : 0777-355392 பகவத் : 0777-558416

68, பௌத்தாலோக்க மாவத்தை,
பம்பலப்பிட்டிய, கொழும்பு 04.
தொ.பே. : 0114526503 / 0114526526

கொமாஷல் லீசிங் & பினான்ஸ்

## கட்டட நிர்மாணத்துறையில் வெற்றிடங்கள்

மேசன்/தச்சர்/இலற்றீசன்/பிளம்பர்/பெயின்டர் /செடலின் பாஸ்/ காப்பென்டர் (1200/= மேல்) கை உதவியாளர் (900/=, 1100/=) உணவு, தங்குமிடம் வசதியுண்டு. (கொழும்பு, மட்டக்களப்பு, யாழ், விஸ்வமடு, கம்பஹா, நுவரெலியா)

தொடர்புகளுக்கு: 077 556 1883 (29829) (7.6.3)

## நிரந்தர தொழில் வாய்ப்புக்கள்

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான புத்தகம் / ஜேம்/ தேயிலை/கோழிஇறைச்சி/சவர்க்காரம், கிறீம்/இரசாயன பொருள்கள்/ கடதாசி பை/பிளாஸ்டிக் பை/ கிளவுஸ்/பெயின்ட் போன்ற தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி உதவியாளர் பொதியிடல் / தரம்பிரித்தல் / களஞ்சிய பிரிவு போன்ற தொழில்களுக்கு கல்வியுள்ள / அற்ற 18-50 வயது ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18000/=, 25000/=, 32000/= வரை உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில்(நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) (29827)(7.6.3)

தொடர்புகளுக்கு: 077 711 7661, 077 556 1883

## நிரந்தர வேலை வாய்ப்புக்கள்

18 - 50 வயதுடையவரா நீங்கள் அப்படியாயின் உங்களுக்கு அருமையான வேலை வாய்ப்பு கப்பல் புனர் நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள்/ வெல்டர்/மெக்கானிக்/ தச்சர் விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர் /கேட்டரீஸ்/லொன்றி காகோ போன்றவற்றுக்கும் மற்றும் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தவர்களுக்கு (JSO/LSO/SSO/OTC) ஆண், பெண் இருபாலாரும் சம்பளம் தொழில் அடிப்படையில் 18000/=, 25000/=, 33000/= வரை உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 077 556 1883 (29828)(7.6.3)

## மோட்டார் சைக்கிள் விற்பனை

HONDA CD 200 84 ஸ்ரீ மொடல் மோட்டார் சைக்கிள் (புதிதாகச் செய்யப்பட்டது) விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 977 9786 (29575)(7.6.3)

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## பதவி வெற்றிடம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் 133 சர்வதேசநாடுகளில் சிறுவர்களுக்கான சேவையை வழங்கிவருவதுடன் இலங்கையில் 32 வருடங்களாக தனது சேவையை ஆற்றிவருகின்றது. இந்நிறுவனத்தின் யாழ்ப்பாணம் கிளையில் கீழ்வரும் பதவி வெற்றிடம் உள்ளது. இப்பதவி நிரந்தரமானதும் ஊழியர் சேமலாபநிதியைக் கொண்டதுமாகும்.

**முன்பள்ளி ஆசிரியை**

* முன்பள்ளிக்கற்கைநெறியில் டிப்ளோமாவுடன் குறைந்தது 02 வருடகால அனுபவம்.
* 25-30 வயதுக்குட்பட்டோர்
* ஆங்கிலமொழித் திறமை கட்டாயமானது.

நற்பழக்கவழக்கம், நல்லதேக ஆரோக்கியம், வேலைத் தளத்திற்கு அருகில் வசிப்போர் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள் யாவும் இவ்விளம்பரம் பிரசுரமாகும் நாளிலிருந்து 07 நாள்களுக்குள் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்புகளுக்கு:
எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்
இல. 219, நாயன்மார் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 1101, 077 236 6106, 077 226 4681
மின்னஞ்சல்
arjunan.swaminathan@soscvsrilanka.org
vanitha.senathirajah@soscvsrilanka.org
(சி/13185) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டயலொக் யாழ்.சேவை நிலையத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

டயலொக் யாழ். சேவை நிலையத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா ஒக்ரோபர் 21 முதல் 26 வரை யாழ். சேவை நிலையத்தில் இடம்பெறுகின்றது. இதன் பகுதியாக இன்று காலை யாழ்.சேவை நிலையத்தில் முக்கிய நிகழ்வு இடம்பெற்றது.இந்த நிகழ்வில் சமயப் பெரியார்களின் ஆசீர்வாதமும், அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்று தொடர்ந்து நீண்டநாள் வாடிக்கையாளர்கள் மற்றும் IDD Double Winners வாடிக்கையாளர்களுக்கான பரிசில்களும் விமான ரிக்கெற்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் டயலொக் யாழ். சேவை நிலையத்தின் முகாமையாளரான தி.சிவகுகன் உரையாற்றுகையில்,

யாழ்.சேவை நிலையத்தின் ஆரம்பம் முதல் இதுவரை கடந்து வந்த பாதைகளில் ஏற்பட்ட தடைகள், சவால்கள் எவ்வாறு நிறுவன முகாமையும் அதன் பணியாளர்களும் இணைந்து எதிர்கொண்டு வெற்றியுடன் கடந்து சென்று இந்த 10 ஆண்டுகளை நிறைவு செய்தனர் என்பதை எடுத்துக் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளாகப் பொருளாதார மற்றும் அரசியல் குழப்பங்கள் வடமாகாணத்தில் இருந்த போதிலும் டயலொக் நிறுவனமானது தனது தந்திரோபாய மற்றும் சூழ்நிலைக்கேற்ப துணிவான தீர்மானங்களை மேற்கொண்டு தனது சேவையை வடமாகாணத்துக்கு விஸ்தரித்து (முதல் கையடக்க தொலைபேசி நிறுவனமாக) சேவையை ஆரம்பித்ததன் மூலம் வடமாகாண மக்களின் மனங்களில் நிலையான இடத்தையும் , சந்தையில் பெரும் பங்கையும் தனதாக்கிக் கொண்டது.கடந்த காலங்களில் எவ்வாறு தனது சேவையை மேற்கொண்டதோ அதே வழியில் இன்னும் உன்னதமான சேவையை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

டயலொக் நிறுவனமானது ஆரம்பத்தில் கையடக்கத் தொலைபேசி சேவையை மட்டும் மேற்கொண்டு வந்தது. எனினும், பின்னர் டய லொக் CDMA, டயலொக் TV, Dialog Broadband, Dialog Smart phones என பல்வேறு சேவைகளை வழங்கி வரும் எமது நிறுவனமானது இனிவரும் காலங்களில் இதனைவிட இன்னும் பல சேவைகளை இணைத்து அடுத்த சந்ததிக்கு ஏற்ற சேவைகளை எமது பிராந்திய மக்களுக்கு வழங்கும் என்று தெரிவித்து, கடந்த தசாப்த கால பாதையில் தமக்கு உதவி வழங்கிய அனைவருக்கும் , வாடிக்கையாளர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.



ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (எல்.ஐ.சி) பத்தாண்டு ஆண்டு நிறைவு நிகழ்வுகள் சாவகச்சேரி கிளையில் இடம்பெற்றது. கிளை முகாமையாளர் ம.கோபிதாஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு, கிழக்குப் பிராந்திய விற்பனை முகாமையாளர் க.இராஜேஸ்வரன் கலந்துகொண்டார். நிகழ்வில் கிளையின் வாடிக்கையாளர்களுக்கு மரக் கன்றுகள் வழங்கப்பட்டன. கிளை அலுவலகத்தில் கடந்த வாரம் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-9)



ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளையின் வாடிக்கையாளரான சீவரத்தினம் தவசேகரம் மரணமானதையடுத்து அவருக்கான இழப்பீட்டுத் தொகை சாவகச்சேரி அலுவலகத்தில் வைத்து அவரது மனைவி தவசேகரம் சுபாங்கியிடம் கையளிக்கப்பட்டது. இழப்பீட்டுக் காசோலையினை கிளை முகாமையாளர் ம.கோபிதாஸன் வழங்குவதையும் அருகில் விற்பனை மேற்பார்வையாளர் ஜோன் வெஸ்டல் கென்னடி, காப்புறுதி ஆலோசகர் சீ.என்.விக்னேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (த-9)

# உயர்ரக போஷாக்குமிக்க சமநிலை உணவு வொண்டமீல்



FKC விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள வொண்டமீல் எனப்படும் உயர் ரக போஷாக்குமிக்க சமநிலை உணவு (Balanced Diet) வகையானது சுத்திகரிக்கப்பட்ட புரதத்தையும் ஏனைய இயற்கையான போஷாக்கு மூலங்களையும் இலகுவாகப் பெறுவதற்கான மிகச் சிறந்த வழியாகும்.

நாம் உண்ணும் வழமையான உணவுடன் தொடர்ச்சியாக உட்கொண்டு வருவது பலமிக்க தசைநார் வளர்ச்சியை உறுதி செய்யும். வொண்டமீலில் உள்ள உயர்தர புரதமானது திசுக்களையும், கலங்களையும் கட்டியெழுப்ப மிக அத்தியாவசிய மானவை ஆவதோடு உடற்கலங்களின் ஆரோக்கியமான இருப்புக்கும் இன்றியமையாததாகும்.

இருப்பினும், பழுதடைந்த உடற்கலங்கள் இறப்பதுவும், புதிய கலங்கள் மீளுருவாவதும் உடலின் ஒரு இயற்கையான செயன்முறையாகும். உடலின் இந்த முக்கிய உயிரியற் செயன்முறைக்கு புரதப் போஷனை அத்தியாவசியமானதாகும். உடலில் உள்ள புரதங்கள் அமினோ அமிலம் மூலம் உருவாவதால் இவையே புரதங்களின் அடிப்படையாகக் கருதப்படுகின்றது.

உட லுக்கு த் தேவைப்படும் 20 வகையான இயற்கை அமினோ அமிலங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்வதற்குரிய ஆற்றல் நம் உடலில் இல்லாமையால் சுமார் ஒன்பது வகையான அமினோ அமிலங்களை உணவு மூலமே நாம் வழங்க வேண்டியுள்ளது. அத்தியாவசிய அமினோ அமிலங்கள் எனக் கூறப்படும் இவை புரதத்தின் தரத்தை உறுதி செய்கின்றன. சோயா புரதம் மற்றும் பாலிலுள்ள வேய் (Whey) புரதம் ஆகிய சுத்திகரிக்கப்பட்ட உயர் தரமான சமனான அளவுகளில் வொண்டமீல் சேர்க்கப்பட்டுள்ள இந்தப் புரதங்கள் எல்லா வகையான அத்தியாவசிய அமினோ அமிலங்களையும் உடலுக்குக் கொடுக்க வல்லது.

இவை தவிர, வொண்டமீல் மிகச் சிறந்த உணவு குறை நிரப்பியாக போற்றப்படுவதற்கு முக்கியமான மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவது வொண்டமீலில் உள்ள புரதக் கலவையில் கொழுப்பு கிடையாது. அடுத்தது வொண்டமீல் சுத்திகரிக்கப்பட்டே இருப்பதால் அது இலகுவாக ஜீரணமாகி விடுகின்றது.

இறுதியாக , அத்தியாவசியமான சகல அமினோ அமிலங்களின் இசைவான வடிவமாக வொண்டமீல் இருக்கின்றது என்பதுமாகும். எனவே ஒரு உயர்தரமுடைய புரதக்குறை நிரப்பி என்ற வகையில் மெய் வல்லுநர்கள் , இளம் வயதினர், சைவ உணவு உண்பவர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உட்பட புரதம் அதிகம் தேவைப்படும் சகலருக்கும் வொண்டமீலை தாராளமாகச் பரிந்துரை செய்யலாம்.

வொண்டமீலில் உள்ள மற்றுமொரு பெரிய நன்மை உடல் பருமனை குறைப்பதற்கு அது துணை புரிகின்றது என்பதாகும். பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளுடன் சேர்க்கப்பட்டால் வொண்டமீல் போஷாக்குமிக்க, சுவையான ஒரு உணவாகப் பரிமாறப்படலாம். பெக்டின் எனப்படும் நீரில் கரையக்கூடிய நார்ச் சத்தை வொண்டமீல் வழங்குவதால் அது வயிற்றுக்கும் இதமளிக்கின்றது. மேலும், நாம் மூவேளை உட்கொள்ளும் ஏனைய வழமையான உணவு வகைகள் நமக்கு சராசரியாகத் தரும் 600 முதல் 1000 கலோரியில் பெரும் பகுதி கொழுப்பாக மாறி உடலில் சேகரமாவதால் அது உடல் பருமனை ஏற்படுத்தி விடுகின்றது. ஆனால் ஒரு கரண்டி (Scoop) வொண்டமீல் வெறுமனே 38 கலோரியை மட்டுமே தருவதால் இந்த மிதமிஞ்சிய சேகரம் தவிர்க்கப்படுகின்றது. இது போன்ற சிறப்புகள் காரணமாக வொண்டமீல் தற்போது மிகவும் வேகமாக பிரபல்யம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இதில் அடங்கியுள்ள நார்த்தம்பழ நாரிலுள்ள லிமோனொயிட்ஸ் கொழுப்பையும், கொலஸ்ட்ரோலையும் கட்டுப்படுத் துகின்றது. நார்த்தம்பழ நாரில் உள்ள மற்றுமொரு அம்சமான லிகோபீன் விற்றமின் Aயை அதிகமாகக் கொண்டுள்ளதால் புற்றுநோயை, குறிப்பாகப் பெருஞ்சுரப்பி புற்றுநோயை (Prostate Cancer) தடுக்கக்கூடிய என்டி ஒக்ஸிடன்டாக செயற்படுகின்றது. மேலும் , வொண்டமீலில் க்றோமியம் பிகோலினேட் எனப்படும் கனியுப்பு இருப்பதால் நீரிழிவு வகை - 2 ஐ கட்டுப்படுத்தவும் இது உதவி புரிகின்றது.

# கிளிநொச்சி 'செலான்' வங்கியின் பணப்பரிசு உதவி வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஒக். 27

செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் 'மணி கிராம்' மூலம் வெளிநாட்டில் இருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்பவர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பணப் பரிசு வழங்கும் நிகழ்வும், ஜோர்தான் நாட்டில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிக் குச் செல்லும் கிளிநொச்சி மாவட்ட மாணவனுக்கு உதவி வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் 'மணி கிராம்' மூலம் வெளிநாட்டில் இருந்து பணத்தினை பெற்றுக்கொண்டவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது.

அத்துடன் ஜோர்தான் நாட்டில் நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள கிளிநொச்சி வலைப்பாட்டைச் ... ஆனால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிதியினை வழங்கும் நிகழ்வும் நேற்றைய தினம் காலை 8 மணிக்கு செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் கிளை முகாமையாளர் இ.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி வைத்துள்ளார்.

இதில் வங்கி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (த-6)

# ஆங்கில புலமைப் பரிசில் யாழ்.மாவட்டத்திலிருந்து 200மாணவர்கள் தெரிவு

ஜோன்கீல்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பாண்மை திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழிக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் 200 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கல்வி வலயத்திலிருந்து 132 பேர் முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்றி 50 பேரும், தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து 85 பேர் முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்றி 50 பேரும், யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம் கல்வி வலயங்களிலிருந்து 152 பேர் முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்றி 100 பேருமாக மொத்தம் 200 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்கள் விரோதச் செயல்களை நறுக்க பாரபட்சமற்ற உடன் நடவடிக்கை தேவை

வன்னி மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சியின் மூன்று கிராமங்களில், தமிழ்ப் பெண்களுக்குக் கட்டாயக் கருத்தடை, திட்டமிட்ட வகையில் செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஐம்பது பெண்கள் மீது இந்த அநியாயம் புரியப்பட்டதாக நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு குற்றஞ்சாட்டி உள்ளது.

தமிழ்ப் பெண்களுக்கு எதிரான இந்த வன்முறையில் கிளிநொச்சியில் இருந்து வந்ததாகக் கூறிக்கொண்டு தாதியர்கள், குடும்பநல மாதுக்கள் மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்குச் சென்று-

இளம் தாய்மார்களையும் அவர்களின் ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு அரச மருத்து வமனைக்குச் சென்றதாகவும், அங்கு-

நீண்ட காலத்துக்கு கருத்தரிக்காது தடுப்பதற்கான கட்டுப்பாட்டு முறையை ஏற்றுக் கொள்ளுமாறு கூறி, வைத்தியர்களும் மருத்துவ மாதுக்களும் சேர்ந்து ஊசிமருந்து ஏற்றினர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த அநாகரிகமான அநியாயத்தை வத்திக்கான் இலங்கை வதிவிடப் பிரதிநிதிக்கு, நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு எழுத்து மூலம் அறிவித்துள்ளமையை, அனைத்துலக செய்திச் சேவை ஒன்று உறுதி செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது தொடர்பான முறைப்பாடு தமக்கும் கிடைத்துள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும் உறுதி செய்துள்ளார்.

வடமாகாண சபைக்கான தேர்தல் பரப்புரைகளின் பரபரப்புகளின் மத்தியில் இந்த அநியாயம் நடத்தப்பட்டுள்ளது, என்று கொள்ளலாம்.

இந்த அநியாயம், அக்கிரமம் குறித்து பாதிப்புற்றவர்கள் தமது கணவர்மாருக்குக் கூடத் தெரிவிப்பதற்கு அவகாசம் - இடைவெளி - இல்லாமல் இந்தக் கொடுமை நடந்திருப்பதால், இதனைத் தமிழ் இனத் தாய்மார்கள் மீதான வன்முறைகள் என்று கொள்வது தப்பன்று.

கருத்தடை மருந்தை ஏற்றிக் கொள்வதனை ஆட்சேபித்து, எதிர்த்த தாய்மார்கள் சம்பந்தப்பட்டோரால், சம்பந்தப்பட்ட அரச வைத்தியசாலையில் சிகிச்சைபெற முடியாது என்று எச்சரிக்கப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டனர் என்றும் தகவல்கள் கசிந்த வண்ணம் உள்ளன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எமது பிரதேசங்களில் முன்னர் இல்லாதவாறு பெருகி வரும் இவ் வேளையில், அவற்றை இல்லாது ஒழிப்பதற்கான பலன் தரக்கூடிய திட்டங்கள் தேவை.

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற தாய்மார் மீதான பலவந்தமான குடும்பக் கட்டுப்பாட்டு அக்கிரமம் ஒரு புறம் இருக்க-

பெண்கள் மீதான கொலைகள் மற்றும் நானாவித அக்கிரமங்களும் எங்கள் மாகாணத்தில் நாளாந்தம் பெருகி வருவது இங்கே மனக்கனதியுடன் பதியப்பட வேண்டியனவாகும்.

ஆகப்பிந்தி, கொலை செய்யப்பட்ட பெண்ணொருவரின் சடலம், யாழ்.நகர் நாச்சிமார் கோயிலடி தேர் முட்டியில் மீட்கப்பட்ட சம்பவம், பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் திட்டமிட்ட முறையில் எமது பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்படுகின்றனவோ என்ற சந்தேகத்தை உயர்த்தி, எழுப்பி நிற்கிறது. மாதராய்ப் பிறந்திடவே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்ற தமிழ்க் கவிஞனொருவரின் கூற்றைத் தலைகீழாக்கும் அக்கிரமங்கள் மலிந்து வருகின்றன. அவை எங்கள் சமூகத்தை, அர்க்கெடுத்துச் சீரழிக்கும் நயவஞ்சகத் திட்டத்தின் ஓர் ஆரம்பப் புள்ளி என்பதனைத் தட்டிக் கழிக்க முடியாது; பாராமுகமாக இருக்கக் கூடாது. பெண்மணியின் கொலையைக் கண்டித்து, அவரது உடல் புதைக்கப்பட்ட இடத்தில் மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள், மதகுருமார், சமூக ஆர்வலர்கள், கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியமை, இத்தகைய படுபாதகச் செயல்களுக்கு எதிரான எமது மக்களின் பிரக்ஞையின் ஆரம்பமாகக் கொள்ளத்தக்கது.

செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக, ஒகஸ்ட் மாதக் கடைசி நாளன்று வலிந்த கருத்தடை திட்டமிட்டு செய்யப்பட்டமை அரசியலோடு-அது சார்ந்து-உள்நோக்கத்துடன் நடத்தப்பட்டதா என்று எழும் சந்தேகம் புறக்கணிக்கக் கூடியதல்ல.

இத்தகைய மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்காது இருப்பது புதிய மாகாண சபையின் பொறுப்பு. மக்களைச் சீண்டுவோர் மீது உடனுக்குடன் பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அது சாத்தியம் என்பது ஊன்றிக் கவனத்திலும், கருத்திலும் கொள்ள வேண்டியவை ஆகும்.

# பாதுகாப்பற்ற சூழலில் வாழ நேர்ந்துள்ள வடக்கு, கிழக்கு பெண்களின் பரிதாபநிலை



இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டு கள் கடந்த நிலையில், தற் போது வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதுடன், இவர்கள் பாதுகாப்பற்ற சூழ் நிலையை எதிர்கொள்வதாகவும் அனைத்துலக மனித உரிமை அமைப்பு ஒன்றின் புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரின் விளைவாக தமது கணவர்மார் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களை இழந்து பல ஆயிரக்கணக்கான பெண்கள் துன்பங்களை அனுபவித்து வரும் நிலையில், இவர்கள் மீது மனித உரிமை மீறல்கள் மற்றும் பாலியல் மீறல்கள் என்பனவும், நில அபகரிப்பு போன்றனவும் தொடர்வதாக அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களில் ஒன்றான சிறுபான்மையினரின் உரிமைக்காக குரல்கொடுக்கும் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இலங்கையில் முன்னைய போர் வலயத்தில் 89,000 வரையான பெண்கள் போரில் கணவன்மாரை இழந்தவர்களாகவும், 40,000 வரையான பெண்கள் தமது குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்களாகவும் உள்ளனர்.

### துன்பங்களைத் தொடர்ந்து எதிர்கொள்ளும் பெண்கள்

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் பெண்கள், தொடர்ந்தும் இராணுவத்தினரின் பாலியல் சித்திரவதைகளுக்கு உட்படுவதாக MRG வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு கிழக்கில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளமை, இதற்கான அடிப்படைக் காரணமாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான மீறல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு மக்கள் அஞ்சுகின்றனர். பலவந்தமான முறையில் காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் மனைவிமார் மற்றும் எவ்வித விசாரணைகளுமின்றி கால வரையறையின்றி இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் மனைவிமார் பல்வேறு துன்பங்களைத் தொடர்ந்தும் எதிர்கொள்கின்றனர். இலங்கையில் முன்னைய போர் வலயத்தில் 89,000 வரையான பெண்கள் போரில் கணவன்மாரை இழந்தவர்களாகவும், 40,000 வரையான பெண்கள் தமது குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்களாகவும் உள்ளனர். இலங்கை அரசு நாட்டில் தேசிய மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதாக கூறுகின்றபோதிலும், அன்புக்குரியவர்களை இழந்து வாழும் குடும்பங்கள் அவர்களை நினைத்து அஞ்சலி செலுத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களின் இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதில், சிறுபான்மைத் தமிழ்ப் பெண்கள் பல்வேறு இடர்களைச் சந்திக்க வேண்டியுள்ளனர். இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை இலங்கை அரசு தொடர்ந்தும் குறைத்துக் கூறி வருகிறது.

இலங்கையின் வடக்கு கிழக்கில் அமைதி மற்றும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவதாக அரசு அறிவித்துள்ள போதிலும், அவ்வாறான அமைதி முயற்சியின் விளைவாக அங்கு வாழும் பெண்கள் எவ்வித நலன்களையும் பெறவில்லை என்பதையும், அந்தப் பெண்கள் நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குள் உள்வாங்கப்படாது புறக்கணிக்கப்படுவதாகவும், அவர்கள் தமது குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாழ்வாதாரங்களைப் பெற்றுக் கொள்வதற்குக்கூடப் போராட வேண்டியிருப்பதாக MRG அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் உறுதிப்படுத்துகின்றன.

### பாதுகாப்பு கேள்விக்குறியே

வடக்கு மற்றும் கிழக்கில் இலங்கை இராணுவத்தினர் [illegible] நிலை நிறுத்தப்பட்டுள்ளதன் மூலம், இலங்கை அரசு இங்கு வாழும் சிறுபான்மையினப் பெண்களின் பாதுகாப்புக்கு இடையூறு விளைவிக்கின்றது. இங்கு தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறக்கூடிய நிலையை அரசு உருவாக்கியுள்ளது என MRG அமைப்பின் தென்னாசியா வல்லுநர் பாரா மிஹ்லர் தெரிவித்துள்ளார். தமக்கு எதிராக இடம்பெறும் தாக்குதல்கள் தொடர்பாக அறிக்கை வெளியிடுவதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் அச்சம் கொள்கின்றனர்.

இதனால் இவர்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் என்பன கேள்விக்குறியாக உள்ளன எனவும் பாரா மிஹ்லர் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இலங்கையில் நவம்பரில் பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாடு நடைபெறவுள்ள நிலையில், சிறுபான்மைத் தமிழ் பேசும் பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி MRG அமைப்பால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த உச்சி மாநாட்டைத் தொடர்ந்து இலங்கை, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இரு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை அண்மையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டிருந்தார். இலங்கையில் மனித உரிமைச் சூழலானது மிகவும் மோசமாகியுள்ளதை உறுதிப்படுத்தி அனைத்துலக மற்றும் உள்நாட்டு மனித அமைப்புக்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

### மனித உரிமைகளை மீறும் அரசு

இலங்கை அரசு மனித உரிமைகள் மற்றும் அனைத்துலக மனித உரிமைச் சட்டம் போன்றவற்றை மீறிச் செயற்பட்டுள்ளதை ஆதாரப்படுத்துவதற்கான பல்வேறு சாட்சியங்களை ஐ.நா மற்றும் அனைத்துலக மனித உரிமைக் குழுக்கள் முன்வைத்துள்ளன. இவ்வாறான மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு சுயாதீன விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டும் என தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

இவ்வாறான ஒரு நிலையில், தற்போது MRG அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள இப்புதிய அறிக்கையில்,இலங்கை அரசு அனைத்துலக மனித உரிமைக் கடப்பாடுகளை மீறுவது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பெரும் குற்றச்சாட்டுக்களுக்கு உட்பட்டுள்ள இலங்கை அரசு. தனது நாட்டில் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை நடத்துவதும் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு அதன் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்படுவதும், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் ஆகியன மதிக்கப்பட வேண்டும் போன்ற பொதுநலவாய அமைப்பின் விழுமியங்களை மீறுவதாக உள்ளதாக தனது புதிய அறிக்கையில் MRG மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியுள்ளது. இந்நிலை யில் உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கையில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டைப் புறக்கணிப்பதன் மூலம் பொதுநலவாய அமைப்பின் அடிப்படை விழுமியங்களைத் தாங்கள் மதிப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என MRG அமைப்பின் மோதல் தவிர்ப்பு பிரிவின் தலைவரான கிறிஸ் சப்மன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் சிறுபான்மைப் பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்டுள்ள ஏனைய குழுக்களை மேம்படுத்துவதற்கான மிகத் தெளிவான பாதுகாப்புப் பொறி முறை ஒன்று உருவாக்கப்பட்டு, கடந்த காலத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக பொருத்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் வரை, நாட்டில் நிலையான அமைதி மற்றும் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதென்பது வெறும் மாயையாகவே இருக்கும் என இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*நன்றி: புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர்கள் கௌரவிப்பு

வவுனியா, ஒக்.27
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலாசார விழாவில் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
அண்மையில் செட்டிகுளம் பிரதேச செயலர் என்.கமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.
முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் சிறப்புரைகளைத் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.
இந்தப் பிரதேசத்தின் சிறப்பைப் பிரதிபலிக்கும் வகையில் 'அருவி ஆறு' என்னும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (க-421)

## புதையல் தோண்டியவர்கள் பொலிஸாரால் கைது

நெடுங்கேணி, ஒக்.27
நெடுங்கேணியில் புதையல் தோண்டியவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
நெடுங்கேணி மகிழமோட்டை கிராமத்தின் காட்டுப் பகுதியில் 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கட்டடம் ஒன்று உள்ளது. இங்கு வெளி மாவட்டத்திலிருந்து வந்தவர்களும், சூடுவெந்தபுலவு கிராமத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து புதையல் தோண்டினர். சுமார் ஆறு அடி ஆழத்துக்கு இவர்கள் தோண்டினர். இது தொடர்பாகத் தகவல் கிட்டியதையடுத்து நெடுங்கேணிப் பொலிஸார் அங்கு விரைந்து சென்று புதையல் தோண்டுவதில் ஈடுபட்ட நபர்கள் சிலரைக் கைது செய்தனர்.
மேலும் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.
அத்தோடு, தப்பியோடிய ஏனைய நபர்களைத் தேடும் பணிகள் இடம்பெறுவதாக நெடுங் கேணிப் பொலிஸ் பொறுப்ப திகாரி தெரிவித்தார். (க-435)

# இருதயபுரம் பகுதி மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்க

### மன்னார் நகர சபைத் தலைவரிடம் மனு கையளிப்பு

மன்னார், ஒக்.27
மன்னார் நகர சபைக்குட்பட்ட ஜிம்பிரவுண் நகர் (இருதயபுரம்) கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணுமாறு கோரும் மனுவொன்று மன்னார் நகர சபைத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.
நேற்று முன்தினம் குறித்த கிராம மக்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளர் எஸ்.சுனேஸ் சோசை குறித்த மனுவைக் கையளித்தார்.
அந்த மனுவில் பின்வரும் விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.
கடந்த 2007 ஆம் ஆண்டு முன்னாள் வவுனியா பிரதேச செயலர் இங்கு வசித்த மக்களுக்கு காணிகளை வழங்கினார். ஆனால் கடந்த 6 ஆண்டுகளாக மழை வெள்ளத்தால் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. தற்போது இங்கு சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. 150க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும், 80க்கும் மேற்பட்ட முன்பள்ளி செல்லும் சிறார்களும் உள்ளனர். இவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலை செல்கின்றனர். மழையின் போது காலில் பாதணிகளை அணியாமல் கையில் ஏந்திச் செல்லும் நிலையில் இவர்கள் உள்ளனர். அத்தகையதொரு வெள்ளப் பாதிப்பு இங்கு காணப்படுகின்றது.
சரியான வகையில் வடிகால் அமைப்புக்கள் இங்கு அமைக்கப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது.
மேலும், மின்சார வசதியில்லாமல் சுமார் 50 குடும்பங்கள் உள்ளன. அத்துடன் குடிதண்ணீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். இரண்டு உள்ளக வீதிகள் புனரமைக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன. பல குடும்பங்களுக்கு மலசல கூட வசதியில்லாத நிலை காணப்படுகின்றது.
கடந்த ஆண்டு மழை வெள்ளம் காரணமாக இந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றபோது இடர் முகாமைத்துவ அதிகாரியொருவர் இங்கு வந்து மழை நீரைச் சேமிப்பதற்கான வசதியை ஏற்படுத்துவதாகக் கூறிச் சென்றார். ஆனால் அதன்பின்னர் ஒன்றுமே நடக்கவில்லை. எம்மை அனைவரும் ஏமாற்றுவதாகவே நாம் நினைக்கின்றோம்.
எனவே இந்தக் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (க-12)



*கடந்த 6 ஆண்டுகளாக மழை வெள்ளத்தால் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. தற்போது இங்கு சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன.*

## பாடசாலை ஆசிரியர்களுக்கு இடர் முகாமைத்துவ பயிற்சிகள்

அக்கராயன், ஒக்.27
கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான இடர் முகாமைத்துவ பயிற்சி நெறியொன்று கிளிநொச்சி அரச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
கடந்த 22ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலைகளில் இடர்கள் ஏற்படும் போது மாணவர்களைப் பாதுகாத்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு விளக்கங்கள் இங்கு வழங்கப்பட்டன.
கிளிநொச்சி மாவட்டத்தில் இனிவரும் நாள்களில் மழை, வெள்ளம் போன்ற இடர்கள் ஏற்படக் கூடுமாகையால் பாடசாலைகளில் விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியமென்பது இங்கு உணர்த்தப்பட்டது. இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட 30 பாடசாலை ஆசிரியர்களும் மழை, வெள்ள அபாயம் மிகுந்த பகுதிகளிலிருந்து கிளிநொச்சி கல்வி வலயத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# அக்கராயன் ஆற்றில் துப்புரவுப் பணிகள்

### இப் பகுதி மக்கள் மீண்டும் வேண்டுகோள்

அக்கராயன், ஒக்.27
அக்கராயன் ஆற்றில் குவித்துள்ள கிரவல் மற்றும் மணல் என்பவற்றை அகற்றி வான் வெள்ளம் தடையின்றிப் பாய்ந்து செல்லக் கூடிய வசதியை உருவாக்குமாறு விவசாயிகள் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்ற போது 2011 டிசெம்பர் மாதம் வான் பகுதியில் அமைந்திருந்த நீர்த் தடுப்பணைகள் உடைப் பெடுத்தன. இதனால் அங்கு குவிக்கப்பட்டிருந்த கிரவல் மண் வான் வெள்ளத்தால் அள்ளப்பட்டு அக்கராயன் ஆற்றுப் பகுதியை மூடிக் காணப்படுகின்றது.
இந்த ஆற்றுப் பகுதியில் துப்புரவுப் பணிகள் இடம்பெறாது விட்டால் வெள்ள நீர் வயல் நிலங்களின் ஊடாகப் பாயும் அவல நிலை உருவாகும்.
எனவே, அக்கராயன் ஆற்றிலும், வீதியிலும் வெள்ளம் பாய்வதற்கு தடையாக உள்ள பொருள்களை அகற்றுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# வன்னேரிக்குளம் பகுதியை சுற்றுலா மையமாக்குங்கள்

### வடமாகாண சபையிடம் வேண்டுகோள்

அக்கராயன், ஒக்.27
கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியை சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கு வடமாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
கரைச்சி பிரதேச சபையில் வன்னேரிக்குளத்தைச் சுற்றுலா மையமாக உருவாக்குவது தொடர்பான தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப் பட்டுள்ளது. ஆனால் இது வரை வன்னேரிக்குளத்தை சுற்றுலா மையமாக உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.



1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டத்தின் உயிர் நாடியாக வன்னேரிக்குளம் விளங்குகின்றது.
கிளிநொச்சி மாவட்டத்திலேயே இயற்கை அழகு நிறைந்த இடமாக இந்தக் குளப்பகுதி விளங் குகின்றது. வன்னேரிக் குளப்பகுதியைச் சுற்றுலா மையமாக உருவாக்குவதன் மூலமாக வசதிகள் குறைந்த இந்தக் கிராமம் வளர்ச்சியடையும் வாய்ப்பு உண்டு.
மேலும், வன்னேரிக்குளம் கிராமத்தை உவராகும் ஆபத்திலிருந்து தடுக்க வேண்டுமென்றால் இங்கு அமைந்துள்ள குளத்தை முழுமையான வகையில் புனரமைப்புக்கு உட்படுத்த வேண்டும்.
இங்கு 470க்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது மீள் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பாராட்டு

அக்கராயன், ஒக்.27
கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 159 மாணவர்களுக்கான பாராட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் க.மா.பத்மநாதன் தலைமையில் கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 159 மாணவர்கள் புலமைப் பரிசிலுக்குத் தகுதி பெற்றனர்.
இந்த மாவட்டத்திலிருந்து குறித்த பரீட்சைக்குத் தோற்றிய 2,325 மாணவர்களில் 1,670 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# அல்லிப்பளை வீதி உடனடியாக திறந்து வைக்கப்பட வேண்டும்

### மாகாணசபை உறுப்பினர் அரியரட்ணம் கோரிக்கை

பளை, ஒக்.27
அல்லிப்பளை வீதி மூடப்பட்டதால் பளை நகரத்துக்குச் செல்வதில் கிளாலி மக்கள் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
எனவே அந்த வீதி உடனடியாக திறந்து வைக்கப்பட வேண்டுமென வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரட்ணம் கேட்டுக் கொண்டுள்ளார்.
கிளிநொச்சி-பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிளாலிப்பகுதி மக்கள் பளை நகரத்துக்குச் சென்றுவரும் அல் லிப்பளை வீதி இராணுவத்தினரால் மூடப்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வீதி திறக்கப்பட்டு மக்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.
மேலும், பளையில் வேம்பொடுகேணி, முகமாலை, கிளாலி மற்றும் இத்தாவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் மீள் குடியமர்வு செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ளனர். மேலும் மீள் குடியமர்ந்த மக்களுக்கும் நிரந்தர வீடுகள் அமைக்கப்படவில்லை, தற்காலிக வீடுகளில் வாழ்கின்றனர். மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை இவையெல்லாவற்றுக்கும் மேலாக கிளாலியிலிருந்து அல்லிப்பளை வழியாக 3கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து பளை நகரத்தை அடையகூடிய வீதி மூடப்பட்டுள்ளமையால் 10கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்யவேண்டிய நிலைக்குக் கிளாலி மக்கள் தள்ளப் பட்டுள்ளனர்



என்று மேலும் அவர் தெரிவித்தார். (க-18)

# மல்லாவி கடைத் தெருவுக்கு செல்வதில் மக்களுக்கு இடர்கள்

துணுக்காய், ஒக்.27
கடந்த வாரம் பெய்த மழையைத் தொடர்ந்து மல்லாவி நகரப்பகுதியில் அமைந்துள்ள கடைத் தெருவுக்குச் செல்வதில் மக்கள் இடர்களை எதிர்கொண்டனர்.
மல்லாவி நகரப் பகுதிகள் தற்போது அபிவிருத்தி செய்யப்படுகின்றன.
மேலும் மாங்குளம் தொடக்கம் மல்லாவி, துணுக்காய் வெள்ளாங்குளம் வரையுள்ள வீதிகள் காப்பெற் வீதிகளாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.
இந்த வகையில் மல்லாவி நகரப் பகுதியில் நடைபாதை ஒன்றை அமைப்பதற்கு பிரதான கடைத் தெருவில் ஆழமாக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றன.
கடந்த வாரம் பெய்த மழையினால் இந்தப் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நின்றதால் கடைத் தெருவுக்குச் செல்ல முடியாத நிலையில் சகதிக்குள் சிக்குண்ட பலர் இடர்களை எதிர் கொண்டனர்.
[illegible] இந்த [illegible] நகர்ப் பகுதிக் கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்து கொள்ள வாய்ப்புக் கிட்டும்.
மேலும் கடைத் தெருக்களின் ஓரங்களில் குழிகள் காணப்படுவதால் பிரதான வீதியில் இருந்து கீழே இறங்க முடியாதவாறு பலர் அவஸ்தைப்படுவதையும் காண முடிகின்றது. கடைத் தெருவில் கூட்டுறவுச் சங்கம், தேநீர்ச் சாலைகள், புகைப்பட நிலையம், தையல் கடைகள், புடைவைக் கடைகள் மற்றும் ஏனைய பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்கள் அமைந்துள்ளதால் மழை காலத்தில் மக்கள் பல இடர்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு விநியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் தேவைப்படுகின்றது.
வாகனம், களஞ்சியம், சாரதி அத்துடன் வங்கி உத்தரவாதம்.
மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்க. (33282) (7.6.3)
071 990 5823, 071 329 0676

## விற்பனைக்கு

வீடு:கொழும்பு-சிலாபம் வீதியில் கட்டுவப் பகுதியில் 3 படுக்கையறைகள், ஹோல், சமையலறை, இணைந்த குளியலறையுடன் (17.2 பேர்ச்) கூடிய வீடு.
வயற்காணி: பூநகரி வீதி, பெரிய பரந்தனில் "ஆரியன் வயல்" என்னும் பெயருடைய (104 நெற் பரப்பு) வயல்.
(சி/13143)(6.3.4)
தொடர்பு: 031 222 4234

## ஆங்கிலம்/தமிழ் மொழிபெயர்ப்புக்கள்/மொழி வகுப்புகள்

எதிர்வரும் க.பொ.த(சா/த) ஆங்கில மொழிப் பரீட்சைக்கான கடந்த கால வினா விடைகள் மற்றும் விடையளிக்கும் நுட்பங்களினைத் தமிழ் விளக்கத்துடன் கற்பதற்கும், ஆங்கில மற்றும் தமிழ் மொழி வகுப்புக்களுக்கும், மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக (கலை, வர்த்தக) மாணவர்களுக்குமான கட்டுரைகள் தமிழ்/ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கும், நிறுவனங்களின் அறிக்கை கள் மற்றும் கடிதங்கள் தமிழ்/ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கும். (33264)(7.6.3)
தொடர்பு : 077 603 3478

## விற்பனைக்கு

அம்மி, ஆட்டுக்கல், கல்லுரல், அம்மி தனிக் குழவியும் விற்கப்படும்.(ஏற்றுக்கூலி இலவசம்)
தொடர்பு: 077 693 4120 (29679) (7.6.3)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் Beauty Parlour இல் பாவித்த அனைத்து பொருள்களும் Scooty pept Streak அடங்கலாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 122 7231
(சி/13357) (5.6.3)

## தேவை

அனைத்து விதமான நோயாளி களையும் (ஆண்,பெண்) பார்த்து நன்கு அனுபவமுள்ள '28 வயது' உள்ள ஆண் ஒருவருக்கு வேலை தேவை. வயோதிபர் இல்லம் அல்லது வீட்டில். எந்த பிரதேசத்திலும் வேலை செய்ய முடியும்.
தொடர்பு: 071 510 5726 (சி/13358) (5.6.3)

## கார் விற்பனைக்கு




**HE-XXXX தொடரிலக்கமுடைய BMW.Car**
**2003 Year model - 525i 2500 CC**
**Black Colour, Auto Power Stearing**
தொடர்பு:011 243 1935/011 247 3051/011 243 3900

## விற்பனையாளர் தேவை

அனுபவமும், ஆர்வமும் நிறைந்த விற்பனையாளர் தேவை.
தொடர்பு: இராசம் அரிசி ஆலை (K.R.S)
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
T.P. : 021 491 5889 (33289) (7.6.3)

## காணி விற்பனைக்கு

கொக்குவில், குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதியில், கே.கே.எஸ் றோட்டுக்கு அண்மையில் 3 லாச்சம் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 011 250 1349 (சி/13345) (5.6.3)

## கொழும்பு

### நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கள்

- ஜேம், கோடியல், பிஸ்கட், டைல்ஸ்,டயர் உற்பத்தி நிறுவனங்களுக்கு
- வைத்தியசாலைகளில் துப்புரவு செய்தல்
- சைனா ரெஸ்டூரன்ஸ் சப்ளை செய்தல்
- பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தேவை

ஆண், பெண் தேவை
வயது எல்லை 18-55
உணவு + தங்குமிடம் செய்து தரப்படும்.

**Bimsara Job Bank.**
**No : 87,Bus Stant Complex. Kurunegala.**
கண்டி 0713 453 565
கொழும்பு 0775 029 906
0754 297 031

## வாடகைக்கு

வெள்ளவத்தை, ஸ்ரேசன் றோட், இல.08இல் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் அமைந்த அறைகளும், சாதாரண அறைகளும் நாள், கிழமை, அடிப்படையில் குறைந்த விலையில் வாடகைக்குண்டு.
தொடர்பு:011 250 4281/077 183 2404

## வீடு, வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் - சித்தன்கேணி வீதியில் 29.02 பேச்சஸ்(2.9பரப்பு) காணி 4 அறைகள் கொண்ட முற்றாகக் கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் விற்பனைக்குண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:077 646 3843
E-mail-travels-letsgo@gmail.com

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது ஜேர்மனியில் வசிக்கும் 1983இல் பிறந்த மணமகனுக்கு ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், லண்டனில் P.R.உள்ள மணமகள் தேவை.
தொடர்பு:077 028 4208

## புதிய முறையிலான கல்வி கற்கும் தொழில்நுட்பம் விரைவில் யாழ்ப்பாணத்திற்கும்! எதிர்பார்த்திருங்கள்...

**TEC Sri Lanka கற்கைநெறிகளை நடாத்துவதற்கான விண்ணப்பம் கோரல்**

கொழும்பின் மிகத் தரமான IT, Business, மற்றும் Professional கற்கை நெறிகளை மிக சிறந்த விரிவுரையாளர்களைக் கொண்டு "நேரலை கற்றல்"- Live Learning மூலம் யாழ்ப்பாணத்திலும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் TEC Sri Lanka ஊடாக கற்பிப்பதற்கு தகுதியான நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் நிறுவனங்களிடம் குறைந்தது 1000Sq.Ft இடவசதி கொண்டதாகவும், கணினி கற்கை நெறிகளை கற்பிப்பதற்கு அவசியமான இடவசதி, உபகரணங்களை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு... 0773 013 620



**TEC Sri Lanka**
Address: #66/1, Walter Gunasekara Mw, Nawala, Colombo.
Phone: 011 280 55 55
Email: info@tecsrilanka.com.lk
Web: http://www.tecsrilanka.com.lk
(C/13351)

## கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு வடக்கு மாகாணம்

### வடக்கு மாகாணக் கல்வி மேம்பாட்டுக்கான மீளாய்வு மாநாடு

வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் கருத்துக்கு அமைவாக வடக்கு மாகாணத்தின் தற்போதைய கல்வி நிலையை ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாணத்தின் கல்விமான்களை உள்ளடக்கிய பின்வரும் ஆறு பிரதான குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

01. கற்றலும் கற்பித்தலும்
02. மாணவர் - ஆசிரியர் ஒழுக்கமும் - Counseling (ஆற்றுப்படுத்துகை)
03. ஆசிரியர்கள், நிர்வாகிகள் சம்பந்தமானவை
04. நிதி தொடர்பானது - உத்தியோகத்தர் தேவைகள், மாணவர் தேவைகள்
05. கல்வி நிர்வாக அமைப்புக்களும் அதற்கான மாற்றீடுகளும்
06. திட்டமிடல் மற்றும் தரவுகள் மையமான ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

இக்குழுக்கள் வடமாகாணத்தின் கல்விசார் பிரச்சினைகளையும் அதற்குரிய தீர்வுகளையும் இனங்காணும் படிமுறைகளில் ஒன்றாக வடக்கு மாகாணத்தின் பொதுமக்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பொது அமப்புக்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து கல்விசார் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுகளுக்கான முன்மொழிதல்களையும் எதிர்பார்த்து நிற்கின்றது.

உங்களது கருத்துக்களையும் முன்மொழிதல்களையும் 11.11.2013 இக்கு முன்பாக தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அனுப்பிவைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பிரச்சினைகளையும், முன்மொழிதல்களையும் பின்வரும் இணையத்தள முகவரிக்கு சமர்ப்பிக்க முடியும். http: //tinyurl.com/npereview. இத்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களைப் பின்வரும் இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும் https: // Sites.google.com/Site/npereview. ஆங்கிலத்தில் எழுத விரும்புபவர்கள் ஆங்கிலத்தில் எழுதி அனுப்பலாம்.

முகவரி: கலாநிதி நா.எதிர்வீரசிங்கம்,
இணையக் கற்கைநெறி நிறுவனம்,
66, கட்டைப்பாலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: ethirveerasingam@gmail.com

த. குருகுலராசா,
கல்வி அமைச்சர்.
(சி/13411) (45.6.3)

## பாவிக்க முடியாத பழைய TVஇற்கு 5000/= விலைக் கழிவா ? ? ?





யாழ்ப்பாண Softlogic காட்சியறையில் தீபாவளியை முன்னிட்டு
பாவிக்க முடியாத (வேலை செய்யாத) பழைய TV ஒன்றினைக் கொடுத்து 5000/= விலைக் கழிவுடன் புதிய Panasonic 32" TV ஒன்றை 6999/= முற்பணம் செலுத்தி வட்டியில்லாத 12 மாத கால தவணைக் கொடுப்பனவு முறையில் பெற்றுக் கொள்ளுங்கள்.
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
(C/33324) (7.6.3)

**உடனே விரையுங்கள்:**
**இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 567 1108, 077 739 9929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்பட்ட நிகழ்வில் மயிலணி சைவ மகா வித்தியாலய மாணவிகளின் நாட்டிய நிகழ்வு. (ஒ-14)



யாழ்.நல்லூர் றோயல் அக்கடமியின் பரிசளிப்பு நிகழ்வில் தரம் 11- வகுப்பில் கல்வி கற்கும் மாணவர் ஒருவருக்கு அக்கடமியின் ஆசிரியர் பரிசு வழங்குவதைக் காணலாம். (ஒ-51)



மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் புதிய பொறுப்பதிகாரியாக பதவியேற்ற ஆறுமுகம் காந்தநேசனை வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் மாலை அணிவித்து வரவேற்றவேளையில்... (ஒ-100)



சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட பிராந்தியத் தலைவர் லயன் எஸ்.கே.செல்வராசா தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்துக்கு அண்மையில் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு கழகத்தின் நலத் திட்டங்களை ஆரம்பித்து வைத்து, பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவிப் பொருள்களை வழங்குவதையும் கலை நிகழ்வு ஒன்றையும் காண்கிறீர்கள். படத்தில் கழகத் தலைவர் லயன் த. இரவீந்திரனும் காணப்படுகிறார். (ஒ-9)



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த வாரம் பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ப.தயெக்குமாரக் குருக்கள் ஆசியுரையை வழங்குவதையும் தொடர்ந்து ஆசிரியர்கள் ஆசிரியர்கீதம் இசைப்பதையும் காணலாம். (ஒ-14)





கடந்த வாரம் மணியம் தோட்டம் பகுதியில் நடத்தப்பட்ட நடமாடும் நூலக வாசிப்பு முகாமில் பங்குபற்றிய மாணவர்கள் மற்றும் நூலக உதவியாளர்கள் ஆகியோரை முதல் படத்திலும், தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பொது நூலகத்தால் நடத்தப்பட்ட சிரம தான நிகழ்வுக் காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஒ-14)



கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய திருவிழாவையொட்டி நடைபெற்ற இசை நிகழ்வில் பிரபல பாடகர்களான சுகுமார், உதயகுமார் ஆகியோருக்கு யாழ் இசை முத்து பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார் எழுத்தாளர் ஜோசப்பாலா. (ஒ-135)



கச்சாய் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விழாவில் சிறுமிகள் துஷ்பிரயோகம் பற்றிய கருத்தரங்கில் மருத்துவர் திருமதி ரஜித்தா கனகசுந்தரம் உரையாற்றுவதையும், கலந்து கொண்ட சிறுமிகளையும் படங்களில் காணலாம். (ஒ-9)



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். சமுர்த்தி மகா சங்கப் பிரிவினரால் குடும்ப நல மாதுக்களுடன் இணைந்து வீடுகள் தோறும் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. ஒ-14)



கண்டி சென். அந்தனீஸ் பெண்கள் கல்லூரியின் வாணிவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கண்டி பொது வைத்தியசாலையின் மருத்துவர் வாமதேவன் பேரின்பரூபன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அங்கு இடம்பெற்ற கலை நிகழ் வையும் காணலாம். (ஒ-14)



தேசிய சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சிறுவர் தின நிகழ்வில் யாழ். சமுர்த்தி மகா சங்க சமூக அபிவிருத்தி மன்றத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாதணிகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மாணவி ஒருவருக்கு வழங்கிய போது... (ஒ-14)



கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையின் குருநகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவினரால், அப்பகுதி மக்களுக்கு சுகாதார விழிமுறைகள் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா கருத்துரை வழங்கிய போது. (ஒ-17)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்.கச்சாய் பொது நூலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மாணவி ஒருவருக்கு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் சி.கந்தையா பரிசில் வழங்கிய வேளையில்... (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

**இடபம்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் உதவுவார்கள். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**கடகம்** : குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். அடுத்தவர்களை குறை கூறுவதை நிறுத்துங்கள். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளை எதிர்த்துப் பேச வேண்டாம்.

**சிங்கம்:** மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். போராடி வெல்லும் நாள்.

**கன்னி:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**நாளை**

ஐப்பசி-11 திங்கட்கிழமை 28.10.2013
திதி: நவமி மாலை.06.34 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.இ.08.41 வரை
சுபநேரம்: 12.03 - 01.33 வரை
இராகுகாலம்: 07.33 - 09.03 வரை

**துலாம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள்.

**விருச்சிகம்:** வீண் பதற்றம் ஏற்படும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். நிறைவடையாது நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**தனுசு:** கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது கொஞ்சம் பதற்றம் அடைவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். நெருங்கியவரிடம் உங்களது மனக் குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள்.

**மகரம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலைமாறும்.

**கும்பம்:** வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மித்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மீனம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 4 | 6 |
| 3 | | | | | 6 | 7 | | |
| | | | 4 | 2 | 5 | 9 | | |
| | 3 | 1 | 8 | | 2 | 6 | 7 | |
| | 6 | 2 | 9 | | 4 | 8 | 1 | |
| | 8 | 9 | 6 | | 3 | 4 | 2 | |
| | | 3 | 5 | 6 | 9 | | | |
| | | 6 | 3 | | | | | 1 |
| 9 | 5 | | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 1 | 4 | 5 | 7 | 2 | 8 | 9 |
| 5 | 9 | 4 | 2 | 8 | 1 | 7 | 3 | 6 |
| 2 | 8 | 7 | 3 | 6 | 9 | 4 | 5 | 1 |
| 4 | 3 | 2 | 8 | 7 | 6 | 1 | 9 | 5 |
| 8 | 7 | 9 | 1 | 2 | 5 | 3 | 6 | 4 |
| 1 | 5 | 6 | 9 | 4 | 3 | 8 | 7 | 2 |
| 6 | 2 | 8 | 5 | 3 | 4 | 9 | 1 | 7 |
| 7 | 1 | 3 | 6 | 9 | 2 | 5 | 4 | 8 |
| 9 | 4 | 5 | 7 | 1 | 8 | 6 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

softlogic இன்
BEST IN THE BUSINESS
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
பண்டிகைக் காலக் குதூகலத்தில் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்
Dell Inspiron 3521 Core i3

• Intel Core i3, 3227U, 3rd Generation Processor
• 4 GB, DDR3 Memory
• 500 GB, HDD
• 15.6" HD LED Display
• Bluetooth – Wi-Fi
• McAfee Security 01 year subcription
Laptop Bag இலவசம்
Canon IP2772 பிரிண்டர் இலவசம்

15,000/= மாத்திரம் செலுத்தி Dell i3 மடிக்கணினி ஒன்றினை பெற்றுக்கொண்டு மீதிப்பணத்தை 12 மாத வட்டியில்லாமல் செலுத்தலாம்
★ நிபந்தனைகளுக்கு உட்பட்டது
(33323)(10.6.3)
தொடர்புக்கு:
இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 739 9929, 021 567 1108

**தேவை**
யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள Laptop காட்சியறைக்கு பெண் காசாளர் மற்றும் விற்பனையாளர்கள் உடன் தேவை. உங்கள் விபரங்களை (CVகளை) E-mailஇல் அனுப்பவும்.
i7c@sltnet.lk (சி/13367)
Tel: 0777 683676

**ஒத்துமாறல்**
கொழும்பில் அரச திணைக்களம் ஒன்றில் பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் III இல் கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் (வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் தவிர்ந்த பிரதேசம்) கடமையாற்றும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.
(33330)(5.6.3)
தொடர்பு: 077 516 2318, 077 669 9155


**பணிநிலை வெற்றிடம்**
பிரபல சர்வதேச விமான பற்றுச்சீட்டு நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன
1. Airticketing Reservation- IATA, Diploma
3 வருட முன் அனுபவம் இருபாலரும்
2. Accountant - 3வருட முன் அனுபவம் மும்மொழி பாண்டித்தியம்
3. Receptionist - மும்மொழி பாண்டித்தியம்
கவர்ச்சியான ஆளுமைமிக்கவர் விரும்பதக்கது இருபாலரும்
புகைப்படத்துடன் தங்களது சுயவிபரக்கோவையுடன் எதிர் வரும் 05 திகதிக்கு முன்பு கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
மே.பா.உதவன்
விளம்பர இல.4472
361 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (சி/13419)

**காணி விற்பனைக்கு**
யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட கோயில் வீதியில் (Temple Road) 111ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 359 6571 (சி/13365) (5.6.3)

GreenArchi Engineering Consultants (Pvt) Ltd.
Architects Engineers Project Managers
Nanthavil Lane, Thavady, Tel: 0212053080/0777120945, Email: greenengcon@gmail.com

பசுமைக்கட்டடம் சம்பந்தமான ஆலோசனைகள், வீட்டுவரைபடங்கள், வடிவமைப்பு, மதிப்பீடுகள், மற்றும் ஒப்பந்தங்கள் சம்பந்தமான சகல ஆலோசனைகளும் பட்டயப்பொறியியலாளர்களினால் வழங்கப்படும்.

We are Providing following services by Qualified Professionals
➢Green Architectural Plans
➢GREEN SL® Rating System
➢Green Building Advices (Energy & water saving, Landscaping, etc )
➢Civil & Structural Engineering Design
➢Preparing Estimate & Tender documents
➢Construction Supervision
➢Technical Advisory services

We are Providing following Project Management Services.
➢Bidding Documents
➢Construction Program
➢Cash Flow
➢Monthly Bill
➢Final Bill
➢Price Escalation Claims
➢Contract Administration
➢Adjudication/ Arbitration Advice
➢Technical Advisory services
➢Business and ICTAD Registration Advices

Nanthavil Lane, Thavady, Tel: 021 2053080, +94 777120945; Email: greenengcon@gmail.com (33325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

மீசாலை ஆதரவு நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வளர்ப்பு மீன்கள், வளர்ப்புக் குருவிகள், தூறல் நீர்ப்பாசனம், இந்திய முருங்கை, குறுகிய கால பப்பாசி (றெட் லேடி) உள்ளிட்ட பயன்தரு மரங்கள், தென்னம்பிள்ளைகள் இயற்கைப் பசளை சலுகை விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சி/2770) (7.6.3)

தொடர்பு: 077 735 1148

**STUDY & PART TIME WORK**
In Malaysia & Singapore

25% Scholership December / January intake only

100,000 ரூபாய்க்கு குறையாத மாதாந்த ஊதியத்துடன்

Course Offers — Spot Admission — தகைமைகள்

- Tourism & Hospitality Management
- Spa & Beautician Courses
- BBA, BA, B com, Bsc, MBA, MA, Msc
- MBBS, Nursing, Pharmacy, Counseling & Psychology, Child Psychology
- Kids Education for kids (Depending visa with parent)
- ACCA, CIMA, CIM,MIS

- IELTS/ ஆங்கிலம் அவசியமில்லை
- No Bank Blance
- O/L இல் 3 'S' மாத்திரம்
- வயது எல்லை 16 - 35

எமது சேவைகள்:
- வங்கிக் கடன் பெற்றுத் தருவதோடு 100% உத்தரவாதமும் பாதுகாப்பும் அளிக்கப்படும் நிதி சேவைகள் (Finance Sponsored)
- ஆண், பெண், Cuples, குடும்ப உறவினர்களுக்கு என தனித் தனியாக தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- பகுதி நேர வேலை வாய்ப்புகளை 100% உத்தரவாதத்துடன் பெற்றுத் தருகின்றோம்
- Airport Pickup வசதிகள்
- கட்டணங்கள் அனைத்தும் விமானத்துக்குப் பின்னரே
- எமது சேவைகள் அனைத்தும் Edu Trust இன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட Consultor இன் மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

EUROPE CHINA EDUCATION SERVICES
No 113/1/1, Old Kottawa Road, Mirihana, Nugegoda.
Tel: 0112 199 113 / 077 0490772 / 077 888 6 348
E-mail: ecescoordinater2013@gmail.com, eceducaions@gmail.com
Web: www.eceducations.com (C/13346)

**மாடி வீடு வாடகைக்கு**



இல. 39, இந்துக் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் சகல வசதியுடன் கூடிய மேல் மாடி வீடு இரு வருட வாடகைக்கு விடப்படும்.
நிறுவனத்திற்கு மட்டும்
(33332) (7.6.3)
தொடர்பு: 077 928 7846

**கட்டாரிலுள்ள அல் - மீரா சுப்பர்மார்க்கெட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

| Job Category | Qty | Salary QR | Salary RS |
|---|---|---|---|
| உதவியாளர்கள் (Helpers) | 100 | 800 | 28,800/= |

1 QR = Rs. 36.00

நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம்,போக்குவரத்து,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- உணவு கொடுப்பனவு 200 QRS
- 2 வருட ஒப்பந்த காலத்திற்கு பின்னர் விமானச்சீட்டு வழங்கப்படும்.
- வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் கிழமைக்கு 48 மணித்தியாலங்கள்.
- வயதெல்லை 20 - 27
- எனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.



நேர்முகப் பரீட்சை ஒக்டோபர் 28,29 திகதி நடைபெறும்
ஒரு கிழமையில் விசா பெற்றுக்கொடுக்கப்படும்
வீசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்
பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வரவும்
அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் 55,000.00 அறவிடப்படும்.
max adz

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06.(மயூரா அம்மன் கோயில் எதிராக)
Tel : 0112552598|0773074744|0718126094|0771798192

## பொதுக்கூட்டம்

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலைய கேட்போர் கூடத்தில் கழகத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. கழக அங்கத்தவர் கள், சனசமூக நிர்வாகிகள் ஆகியோரை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கழகச் செயலாளர் வே.சின் னத்தம்பி கேட்டுள்ளார். (ஒ-288)




வடமாகாண, மீன்பிடி, போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு அலுவலகம் யாழ். நகரில் இல.655, நாவலர் வீதியில் நேற்று முன்தினம் மதியம் அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் க.விந்தன் ஆகியோரால் நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்டது. (ஒ-5)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.27
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்படவுள்ள மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தப் பயிற்சி நெறிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை கல்வி கற்ற 16 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மாவட்ட முகாமையாளர் நைற்றா, இல.44 சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பலாம். (ந-14)

பார்மசி,ஆய்வுகூடம்,கிளினிக் ஆகியவற்றில் வேலைவாய்ப்புடன் CMA
உங்கள் வாழ்வை மேம்படுத்த
மருத்துவ உதவியாளர் பயிற்சி
After A/L - Next ?
O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள் KU Education
தொழில்வாய்ப்பு மற்றும் மேலதிக பயிற்சிகளிற்கு மலேசியா செல்லும் வாய்ப்பு ! Fly Malaysia
Knowledge Universe
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :0777302882/0213208342
www.kugroup.info (C/13425) (7.6.3)

**வயல் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நாவற்குளி கேரதீவு றோட் நெணியன் வெளியில் உள்ள 24 பரப்பு நெல் வயல் விற்பனைக்கு உண்டு. எதிர்பார்க்கும் விலை. பரப்பு 40 ஆயிரம் ரூபா.
தொடர்புகளுக்கு: (C/13344)
0716234045

**வீடு வாடகைக்குண்டு**

கோண்டாவில் ஸ்ரேசனடியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 663 4010 (33336) (7.6.3)

சுதேச மருத்துவ நடைமுறைகள்

# பாதுகாப்புச் சபை ஊடாக செயற்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.27
சுதேச மருத்துவ நடைமுறைகளை முன்னேற்றுவதற்கான செயன்முறைகளைப் பாதுகாப்புச் சபைகளின் ஊடாக செயற்படுத்துவதற்கு சுதேச மருத்துவ அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக ஆயுள்வேத வைத்தியர் பிறிற்ரோ டக்ளஸ் தெரிவித்தார்.
யாழ்.பிரதேச செயலக பிரிவின் ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வாரம் யாழ்.பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆயுள்வேத பாதுகாப்புச் சபைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாகச் சுதேச மருத்துவத்துறையை மேம்படுத்த முடியும். பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் உடைய வைத்தியர்கள் இதனூடாக தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை சுதேச மருத்துவ அமைச்சு மேற்கொண்டு வருகிறது எனவும் தெரிவித்தார். (ந-14)

## வாசகர்களுக்கான திறந்த போட்டி

தென்மராட்சி, ஒக்.27
கச்சாய் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தும் வாசகர்களுக்கான திறந்த பேச்சுப் போட்டி நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.
'மக்கள் முன்னேற்றப் பாதையில் நூலகத்தின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் இடம் பெறும் இந்தப் பேச்சுப் போட்டிக்கு தீர்ப்பாளராக ஓய்வுநிலை அதிபர் கவிஞர் மு.பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார்.
போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வாசகர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நூலகத்தில் அது பெயர்களைப் பதிவு செய்யுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (வ-9)

## கணிதத் திறன் போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக்.27
வடமாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட கணிதத்திறன் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.



வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனான கண்ணன் பவித்திரன் என்ற மாணவனே முதலாம் இடத்தைப் பெற்றவராவார்.
இந்த மாணவன் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-14)

**O+ சிறுநீரகம் தேவை**

முப்பத்தைந்து வயதுக்கு கீழ்ப்பட்ட நல்ல திடகாத்திரமான O+ சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தானம் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
குறிப்பு : (இரத்த அழுக்கம், நீரிழிவு நோய் இல்லாதவராக இருக்க வேண்டும்)
(சி/13424) (7.6.3)
தொடர்பு: 077 437 9599

**After AL? CIMA UK, BIT(University of Colombo), Computer Engineering(USA)**


3A,5B

தொடர்ச்சியாக சாதனை பெறுபேறுகளை வழங்கிவரும் MCS நிறுவனத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மேற்படி கற்கை நெறிகளிற்கு 40000 ரூபா வரையிலான புலமைப்பரிசில்கள் CIMA, ICTA நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன. நுழைவுத்தகைமை க.பொ.த சாதாரணம்.பல்கலைக்கழக மாணவர்களும் இக்கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. மேலதிக விவரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில். புலமைப்பரிசிலுக்கு type<name><course> & send sms to 0772395895 (C/13417)


3A,2B,3C

**யாழ் நகரில் நவம்பர் 1ம் திகதி முதல் JaffnaLaptop**
All kind of Laptop Solutions (மடிக்கணனி காட்சியறை)
விசேட விலைக் கழிவில்
மடிக்கணினி விற்பனை மற்றும் பழுதுபார்த்தல் நிலையம்

Accessories : Motherboard, Keyboard, RAM, DVD Writer, Harddisk, Batteries, Screen

hp DELL acer TOSHIBA lenovo SAMSUNG SONY (C/13366)

124D, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (தம்ரோ தளபாடக் காட்சியறைக்கு அருகாமையில்) 0777 683 676 021 222 49 59 www.jaffnalaptop.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சிவசுப்பிரமணியம்



வதிரி, இரும்புமதவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (25.10.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், முகுந்தன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசியகல்வியற் கல்லூரி) திருமதி லிங்கநாதன், லதா, திருமதி ராஜ்குமார் சுகதா ஆகியோரின் தந்தையும், சிவரஞ்சினி, லிங்கநாதன், ராஜ்குமார் ஆகியோரின் மாமனும், சதுசன், மேதுஷன், கிருஷ்டிகா, ஆர்த்திகா, அயன், லதீஸ், லக்ஷிகா, லதுசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (29.10.2013) செவ் வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரும்புமதவடி, வதிரி,
கரவெட்டி.

(29581)
(10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திருமதி.

### மகாலட்சுமி நாகராஜா (பட்டு)

முத்தர் வளவு குப்பிளானைப் பிறப்பிடமாகவும், நல்லூர் வடக்கு, சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கல்கிசையை வதிவிடமாகவும் கொண்டவருமாகிய திருமதி. மகாலட்சுமி நாகராஜா 25.10.2013 வெள்ளிக்கிழமையன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - கனகம்மாவின் மகளும், காலஞ்சென்ற பேரம்பலம் - தங்கச்சியம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற நாகராஜா (முன்னாள் துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்) வின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற கதிரமலை பரமேஸ்வரியின் அன்புத் தங்கையும், இராஜமனோகரி (சுவிட்சலாந்து), இராஜமனோகரன் (தலைமைப்பீட சமூக சேவை உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களம் வடமாகாணம்) இராஜகுலேந்திரன் (பிரித்தானியா), இராஜகௌரி (சுவிட்சலாந்து), இராஜரூபினி (ஆசிரியை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜசிங்கம் (சுவிட்சலாந்து), சித்ரா (ஆசிரியை இரத்மலானை இந்துக்கல்லூரி) மணிமேகலை (பிரித்தானியா), ரவிச்சந்திரா (சுவிட்சலாந்து), நிரஞ்சன் (Shanko) ஆகியோரின் அன்பு மாமியாரும், அக்ஷயா, ஆதித்யா, விகஷா, கணான், பூமிகா, மிதுஜன், பிரவீஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் இன்று (27.10.2013) ஞாயிறு காலை 8மணி தொடக்கம் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பி.ப 4.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி/13369)(10.6.3)

தகவல் : குடும்பத்தினர்

# பாடசாலை கட்டடத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும்

## நிர்வாகம் கோரிக்கை

வவுனியா, ஒக். 27

வவுனியா பூவரசங்குளம் ஆரம்பப் பிரிவு பாடசாலைக் கட்டடத்தை விட்டு இராணுவத்தி னர் வெளியேறி சிறார்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவவேண்டும் என குறித்த பாடசாலை பெற்றோர், ஆசிரியர்கள் இராணுவத்தரப்பிடம் கோரியுள்ளனர்.

வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு கட்டடத்தில் நீண்ட காலமாக இராணுவத்தினர் தங்கியுள்ளனர்.

இதன்காரணமாக மேற்பிரிவு பாடசாலை கட்டடத் தொகுதியில் தற்காலிகமாக ஆரம்ப பிரிவு இயங்கி வருகிறது. இதைவிட தற்காலிக கொட்டகைகளிலும் இயங்கி வருகின்றது. கடும் காற்று, மழை காலத்தில் தற்காலிக் கொட்டகை வகுப்பறைகளில் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு நெருக்கடிகள் குறித்து இராணுவத்தினருக்கு ஏற்கனவே பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டது. அவர்களும் பார்வையிட்டனர். எனினும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என பாடசாலை நிர்வாகத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து இராணுவத் தரப்பை கேட்டபோது.

தாம் வெளயேற தயாராக இருப்பதாகவும் தற்காலிகமாக அங்கு இருக்கும் இராணுவத்தினரை பிறிதொரு இடத்துக்கு நகர்த்தியபின் அவ்விடத்தை விட்டு வெளியேறுவோம் என்று கூறினார். (ஐ-402)

## யாழ். சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலை சுகாதாரமாகவே இயங்குகிறது

### உள்ளூர் பார்வையாளர் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலையில் காலாவதியான உணவுப் பொருள்கள் காணப்படவில்லை. அங்குள்ள குப்பைத் தொட்டியில் இருந்து பறவைகள் உணவுப் பொருள்களை வெளியே சிந்தாதவண்ணம் கம்பி வலை உடனடியாகப் போடப்பட்டுள்ளது என்று யாழ். சிறைச்சாலை உள்ளூர் பார்வையாளர் சபைத் தலைவர் க.வி.கந்தவேள் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ். சிறைச்சாலைக்கு முன்னறிவிப்பின்றிச் சென்று அங்குள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் சுற்றுப்புறச் சூழலைப் பார்வையிட்டேன். சிற்றுண்டிச்சாலையிலுள்ள சில உணவுப் பொருள்களைப் பார்வையிட்டேன். அவை காலாவதியானவையாகக் காணப்படவில்லை. அன்றாடம் தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள் ஈ மொய்க்காதவாறு சுகாதாரமாகப் பேணப்படுகின்றது.

கும்பைத் தொட்டியினுள் கழிவுகள் இல்லாது துர்நாற்றம் எதுவும் வீச வில்லை. அங்கு காணப்படும் அசைவுகளை உற்றுநோக்கும் போது சுகாதார சீர்கேடு நிலவுவதற்குச் சாத்திய மில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் வீரசிங்கம்

(சாவகச்சேரி ப.நோ.கூ.வு சங்க முன்னாள் லொறிச் சாரதி)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வீரசிங்கம் கடந்த (24.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,
T.P: 077 0761792

(33338)
(10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி வரதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/அருணோதயாக் கல்லூரி, சென்தோமஸ் கனிஷ்ட பாடசாலை கொழும்பு-03, ஆசிரியரும், வைன் கல்வி நிறுவனம், ரஸ்ற் BOOK SHOP (கன்னாகம்) முன்னாள் உரிமையாளரும்) MATHS ACADEMY - வெள்வத்தை இன் உரிமையாளரும்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி வரதன் (23.10.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி சின்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், கேதாரன், கேசினி, இமையவன், சேந்தன், சர்மினி, சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலன், அகிலேஸ் ஆகியோரின் மாமனும், சுதர்சினியின் பேரனும், பரமநாதன், மகாதேவன், பாக்கியம், காலஞ்சென்ற வாசுதேவன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் ராசாத்தி, ரத்தினாம்பாள், கனகேஸ் வரி, மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.10.2013) திங்கட்கிழமை மு.ப. 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செருக்கப்புலம், தெல்லிப்பழை.
(மகாஜனாக் கல்லூரி அருகில்)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் விக்னேஸ்வரராஜா



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய வீரசிங்கம் விக்னேஸ்வரராஜா நேற்று (26.10.2013) சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்துரை- வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், நவநீத செல்வியின் அன்புக் கணவரும் கவிமிறாஜ், புவிராஜ், உதித்தாவின் பாசமிகு தந்தையும், செல்வநாயகி, பாலசறோஜினி, பால சிங்கம், தேவராணி, இந்திராணி, சண்முகராசா, கேதீஸ்வரன் ஆகியோரின் பாச மிகு சகோதரனும், உருத்திரசீலி, நவநீதிசீலன், காலஞ்சென்ற பக்தகுணசீலன், புவிராஜசீலன், நற்குணசீலன், ஜெயசீலி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி.

(30515) (10,14)

தகவல்:
வசந்தரூபி பக்தகுணசீலன்,
(மருமகள்)
(பூங்கனிச் சோலை)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவதாசன்



கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவதாசன் 24.10.2013 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-சிவபுஸ்பம் (இலங்கை) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தியாகராஜா (Lions club insurance)-மங்கையர்க்கரசி (கனடா) தம்பதியரின் அன்பு மரு மகனும், சுதாவின் அன்புக் கணவரும், அபிநயா, சாருகா, நர்த்தகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற யமுனாவதி (ஜேர் மனி), பிரேமாவதி (ஜேர்மனி), கிருஷ்ணதாசன் (இங்கிலாந்து), மோகனதாசன் (இங்கிலாந்து), சுகுணாவதி (இங்கிலாந்து), ரேவதி (இலங்கை), தேவகி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணசீலன் (கனடா), ஞானசீலன் (கனடா), லதா (கனடா), கவிதா (கனடா), நடராஜா (ஜேர்மனி), சீராளன் (ஜேர்மனி), திலகவதி (இங்கிலாந்து), துஸ்யந்தி (இங்கி லாந்து), சர்வேஸ் (இங்கிலாந்து), சிசுபாலன் (இலங்கை), ஹர்சன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சத்தியசோதி (இலங்கை), ரவி (கனடா) ஆகியோரின் சகலனும், கிருஷிகா, தியாசன், சஜன், ஹரிஷ், ஹறுன், அவினேஸ், சர்மிகா, ஜானுயன், தக்சன் ஆகியோரின் பெரியப்பாவும், சுதானந்தன், திருக் கஜமுகன், தயாளினி, தரண்ஜா, செந்துஜா, குகாசிதன், கபிரன், கயானி, யதுர்சன், பானுசன், சகானா, பாஷனா, கிசேன், ஞானவர்மன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 30.10.2013 புதன்கிழமை காலை 9.00 - நண்பகல் 12.00 மணிக்கு St.Marylebone Cremetorium, Eost End Road, Finchey, London N20RZ இல் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(29883) (10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுகஸ்தோட்டை பள்ளிவாசல் தாக்கப்பட்டு சேதம்

கட்டுகஸ்தோட்டை உக்குரஸ பள்ளிவாசல் சனிக்கிழமை காலை இனந்தெரியாத நபர்களபல் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

" பள்ளிவாசலின் கதவும் பிரதான அறையின் கதவும் உடைக்கப்பட்டுள்ளன. பள்ளிவாசலுக்க இனந்தெரியாத நபர்கள் சிலர் செல்வதை அவதானித்தவர்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததையடுத்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்." என்று கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-10)

## தவறுக்கு வருந்துகின்றோம்


" பயன் தரும் திட்டங்களை வலி. தென்மேற்கு பிரதேச சபை தயாரிக்க வேண்டும்"- என்ற தலைப்புடன் நேற்றைய உதயனில் பத்தொன்பதாம் பக்கத்தில் வெளியான செய்தியில், அதனைத் தெரிவித்தவர் சபைத் தவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறாகும்.

குறிப்பிட்ட பிரதேச சபையின் தலைவர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் அந்தக் கருத்தை வெளியிடவில்லை என்பதனையும்-

சபையின் உறுப்பினர்களில் ஒருவரான சி. மகேந்திரனே அதனைத் தெரிவித்திருந்தார் என்பதனையும் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். தவறுக்கு வருந்துகின்றோம்.

- ஆசிரியர்.

## வெளியாள்களுக்கு தகவல் வழங்க வேண்டாம்



கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் தமது பரீட்சை இலக்கம் மற்றும் கடவுச் சீட்டு இலக்கம் என்பனவற்றை வெளிநபர்களுக்கு வழங்குவதை தவிர்க்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கேட்டுள்ளது.

கொரிய மொழித் தேர்ச்சிக்கு தோற்றவுள்ளவர்களிடம் இருந்து இந்த இலக்கங்களை பெற்று ஒரு சிலர் மோசடிகளில் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், இதனை தடுக்கும் வகையில் சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கல ரந்தெனிய கேட்டுள்ளார்.

(ஜ-10)

# வெள்ளைப் பிரம்பு தின விழிப்புணர்வு பேரணி




சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகம் லயன்ஸ் கழகமும், வாழ்வகமும் இணைந்து வெள்ளைப்பிரம்பு தின விழிப்புணர்வு பேரணி கடந்த வாரம் இடம்பெற்றது.

வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் மு.உமாசங்கர், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் வாழ்வக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

இதன் போது சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் வாழ்வகத்துக்கு நன்கொடை வழங்கப்பட்டது.

(ஒ-14)

## நான் குற்றமற்றவன் அஸாத் சாலி

சிறந்த முஸ்லிம் தலைமைத்துவத்தை தடுக்கவும் பழிவாங்குவதற்காகவுமே என் மீது பொய்க் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

"எம் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் ஆதாரமற்றவை. தனிப்பட்ட விரோததங்களை அரசியலில் காட்ட முடியாது. நான் மக்கள் பலத்துடன் இருக்கின்றேன். என் மீது சுமத்தப்பட்டுள்ள நிதி மோசடிக் குற்றச்சாட்டு அபாண்டமானது. இலங்கையில் பொலிஸ் மற்றும் நீதித்துறை சுயாதீனமாக செயற்படாத வரை அப்பாவி மக்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்காது."

என் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மை எனில் சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றில் நிரூபிக்க வேண்டும்- என்றார்.

(ஜ-10)





3 மாத கால பயிற்சி நெறி **அக்ஷயா** பயிற்சிக் கட்டணம் 20000/= மட்டுமே

பேசியல், பேக்கப், கொண்டைலிஸ், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், போன்ற பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. ★ ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் சிகிச்சை, ★ உடல் எடை கூட்டும் சிகிச்சை, ★ உடல் எடை குறைக்கும் பவுடர், சிகிச்சை, கோப்பி, எண்ணெய் ★ கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடிகொட்டுதல் அனைத்துக்குமான சிகிச்சை ★ தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய், ★ முகத்தில் உள்ள கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நீண்டகால வடுக்கள், பருக்கள், காயங்கள், மஞ்சள், வெள்ளைப் புள்ளிகள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைத்திய கிறீம், விற்பனைக்கு உண்டு. மூலிகை வைத்திய பேசியல் செய்து கொள்ளலாம், மேக்கப் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ★ கழுத்து கறுப்பு அகற்றும் கிறீம் பெற்றுக் கொள்ளலாம். தலைமுடி சுருட்டுதல், அயன்பண்ணுதல், டேவிங்செய்து கொள்ளலாம்.

பதிவு இல. 16168
077 2106155

அக்ஷயா- நாவலர் வீதி, (பிறவுண் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில்) யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

தாளையடி வீதி, பளை, புதுக்காட்டுச் சந்திக்கு மிக அருகில் 50 பரப்பு தென்னம் பயிர் செய்யக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778554808, 071487 9301
edward.a.raj.@gmail.com

**தேவை**

வீட்டுப் பணிப் பெண் தேவை.
தொடர்பு:- 077 9229331

**தேவை**

பேக்கரி வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் (ஆண், பெண்)
தொடர்பு:- 077 9582670, 021 2052200

**ENGLISH CLASSES**

வெள்ளவத்தையில் Spoken English வெளிநாடு செல்வோருக்கான A1, A2, B1, B2, KET, PET, IELTS Classes. நடைபெற்று UK Qualified Certificate பெற்றுதர உத்தரவாதம். Embassy Interview க்குரிய Classes இடம்பெறும்.
Mrs.Priya - 0774725722

**வீடு வாடகைக்கு**

கச்சேரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 077 2530267

**அறைகள் வாடகைக்கு உண்டு**

யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு. (பெண்களுக்கு மட்டும்)
தொடர்பு:- 077 0517355

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழையில் 5பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (கமநல சேவை நிலையத்துக்கு அருகாமையில்)
தொடர்பு:- 077 3234757

**கார் விற்பனைக்கு**

15ஸ்ரீ தொடரிலக்கமுடைய TOYOTA CHARINA VEGAN MODEL JAPAN CAR மலிவு விலையில் உடன் விற்பனைக் குண்டு.
T.P:- 077 1818786

**ஆள்கள் தேவை**

மருந்து பல்பொருள் விற்பனையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- மயூரா மருந்தகம், இல. 22 பலாலி வீதி, திருநெல்வேலி
T.P:- 021 222 2946

**திருமண வாழ்த்துக்கள்**

கடந்த 02.09.2013 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட திரு.திருமதி மதனதீபன் (கனடா) நிரோசா (ஜேர்மனி) தம்பதிகளை வாழ்த்தி வரவேற்கும் வரவேற்பு விழா இன்று (27.10. 2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நிதா கோகுலம், நந்தாவில் அம்மன் கோயிலடி கோண்டாவிலில் நடைபெறுகின்றது. தம்பதிகளை நீடூழி காலம் சீரும் சிறப்பும் பெற வாழ்த்துகின்றோம்.



Best Wishes

நந்தாவில் அம்மன் கோயிலடி, கோண்டாவில்

வாழ்த்தி நிற்கும்
தலைவர் நிதர்சன்
(President Netharsan Hamburg Germany)
இயக்குனர் ஸ்ரீமதி நந்தராணி தேவி மற்றும் நிதா கோகுலம் நிர்வாகம்

(33246) (7.6.3)

உதயன் விளம்பரங்களுக்கு
advt@uthayan.com
0215671111

**தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

**மலேசியா**

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
பணிப் பெண்கள் தேவை (வயது 25 - 45)

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 34,000

- கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- தங்குமிட வசதி (Accommodation) - இலவசம்
- உணவு (Food) - இலவசம்

2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும். முற்றும் இலவசம்

Labour Licence No. 1785
Rizviya Travels & Tours
46/B, (1st Floor), Symonds Road, Maradana, Colombo - 10.
(C/11828) Tel : 011 3091521, Hotline : 077 3179592.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலோலியில் நடமாடும் சேவை

வடமராட்சி, ஒக். 27
உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி உப அலுவலகம் நடமாடும் சேவை ஒன்றை நாளை திங்கட்கிழமை புலோலி கிழக்கு சந்தா தோட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்தவுள்ளது.
நடமாடும் சேவையில் ஆதனவரி அறவீடு, சைக்கிள்களுக்கான இலக்கத்தகடுகள் விநியோகம், கட்டட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல், ஆதனங்களின் பெயர் மாற்றங்கள் மற்றும் வியாபார உரிமம் வழங்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என புலோலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (வ-8)





## மதகைக் கவனிப்பாரில்லை

யாழ்.முனீஸ்வரன் வீதியையும் கே.கே.எஸ்.வீதியையும் இணைக்கும் கந்தப்பசேகரம் வீதியில் உள்ள கழிவு நீர் வழிந்தோடும் கால்வாயின் மதகு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சேதமடைந்துள்ளபோதிலும் இதுவரைக்கும் சீர்செய்யப்படவில்லை. இந்த மதகின் மேல் மூடி சேதமடைந்துள்ளதாலும் மதகின் கட்டுக்கள் உடைந்து கழிவு நீர் தேங்கி நிற்பதாலும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது. துர்நாற்றமும் வீசுகிறது. இந்த மதகைப் புனரமைப்பதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கை எடுக்காதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஓ-17)

## கரணவாயில் கண் பரிசோதனை முகாம் இன்று



கைதடி.ஒக்.26
நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண் பரிசோதனையும், கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கரணவாய் மணியகாரன் தோட்ட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ளது.
அத்துடன் நீரிழிவு நோய்க்கு முகம் கொடுக்கும் வழி முறை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளதுடன், இந்நோய் தொடர்பான இலவசக் கையேடும் வழங்கப்படவுள்ளது. (ஓ-288-400)

## பூனை பிடித்த பாம்பு இரு குழந்தைகளைப் பதம் பார்த்தது

தென்மராட்சி, ஒக்.27
பூனையால் பிடித்துக் கொண்டு வரப்பட்ட பாம்பு நித்திரையில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளைக் கடித்தது. இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இரவு கச்சாய் வடக்கில் இடம்பெற்றது.
குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்த பாயில் பூனை பாம்பைக் கொண்டு வந்து வைத்திருந்தபோது இரண்டு பக்கமும் படுத்திருந்த குழந்தைக ளைப் பாம்பு கடித்துள் ளது. அதே இடத்தைச் சேர்ந்த சிவாகரன் தேனுஜா (வயது-4) மற்றும் அவரது சகோதரி ஆகியோரே பாம்பால் கடியுண்டவர்களாவர். குறித்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதே வேளை கிளாலிப் பகுதியில் வளவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிமெந்து வெற்றுப் பைகளைத் துப்புரவு செய்த பெண் அதற்குள் மறைந்திருந்த விஷப் பாம்பால் கடியுண்டார்.
நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற சம்பவத்தில் சாவகச்சேரி-கச்சாய் வீதியைச் சேர்ந்த ஜேந்திரன் ஜசிந்தா (வயது-46) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (வ-9)


## வாணி முன்பள்ளி நாவற்காட்டில் திறப்பு



தென்மராட்சி, ஒக்.27
வரணி, நாவற்காட்டில் வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட வாணி முன்பள்ளிக் கட்டடம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வேள்ட் விஷன் லங்கா நிறுவன யாழ். பிராந்திய முகாமையாளர் ஏ.ஜி.றொசைரோ, தென் மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசாவும் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-9)

## சாவகச்சேரி சந்தையில் வெளியூர் வியாபாரிகளுக்கும் அனுமதி

தென்மராட்சி, ஒக்.26
தீபாவளி வியாபாரத்துக்காக சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு வரும் வெளியூர் வியா பாரிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கென நகர சபைக்கு முன்பாக இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.
பொதுச் சந்தையில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைக் கருத்தில்கொண்டு நகர சபையால் தீர்மானிக்கப்பட்ட முடிவின் பிரகாரம் நகர சபைக்கு முன்பாக உள்ள சபைக்குச் சொந்தமான காணி வெளியூர் வியாபாரிகளின் தீபாவளி வியாபாரத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு வியாபாரிக்கும் 100 சதுர அடியில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலத்துக்கு நாளாந்த வாடகை அறவிடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.
இதேவேளை, நேற்று பெருமளவு வெளியூர் வியாபாரிகள் பொருள்களை வாகனங்களில் கொண்டு வந்து குறித்த இடத்தில் விற்பனை செய்யத் தொடங்கியுள்ளதைக் காண முடிந்தது. (வ-9)



ஒவ்வொரு வியாபாரிக்கும் 100 சதுர அடியில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலத்துக்கு நாளாந்த வாடகை அறவிடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## அம்பாள்புரம் வி.மைதானத்துக்குரிய 6 ஏக்கர் காணி படையினர் வசம்

வலி.தென்மேற்கு, ஒக்.27
வட பகுதியிலுள்ள மாவீரர்களின் துயிலும் இல்லங்களை அபகரித்து வரும் பாதுகாப்புப் படையினர், பொது அமைப்புக்களின் விளையாட்டு மைதானங்களையும் விட்டு வைக்கவில்லை.
வன்னி விளாங்குளத்திலுள்ள துயிலும் இல்லத்தை அபகரித்த பாதுகாப்புப் படையினர் அருகில் உள்ள அம்பாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்துக்கென ஒதுக்கப்பட்ட 6 ஏக்கர் காணியையும் சேர்த்து முட் கம்பி வேலி அமைத்துள்ளனர்.
இதனால் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக பொது நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிதி திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்திலுள்ள அம்பாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சி கருதி வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகிலுள்ள 6 ஏக்கர் காணி பிரதேச செயலரால் குறித்த சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

ஜி.ஐ.இசற் நிறுவனம் மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு முதற்கட்டமாக சுமார் 2 லட்சம் ரூபாவை பிரதேச செயலகத்துக்கு வழங்கியிருந்தது.

விளையாட்டு மைதானம் இல்லாத குறையைத் தீர்க்கும் வகையில் குறித்த சங்கம் இந்தக் காணியை விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்த முத்தமிழ் விளையாட்டுக் கழகத்துக்கு அனுமதி வழங்கியிருந்தது.
கிராம அபிவிருத்திச் சங்கமும் முத்தமிழ் விளையாட்டுக் கழகமும் இணைந்து எடுத்துக் கொண்ட நடவடிக்கையை அடுத்து ஜி.ஐ.இசற் நிறுவனம் மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு முதற்கட்டமாக சுமார் 2 லட்சம் ரூபாவை பிரதேச செயலகத்துக்கு வழங்கியிருந்தது.
விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான சகல ஒழுங்குகளை குறித்த சங்கமும் கழகமும் இணைந்து மேற்கொண்ட போது வன்னி விளாங்குளம் துயிலும் இல்லத்தை அபகரித்த பாதுகாப்புப் படையினர் அருகிலுள்ள பொது அமைப்புக்குச் சொந்தமான 6 ஏக்கர் காணியையும் சேர்த்து முட்கம்பி வேலி அமைத்துள்ளனர்.
இது குறித்து பொது அமைப்புக்கள் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளனர்.
இதேவேளை குறித்த காணி விளையாட்டுக் கழகத்துக்குச் சொந்தமானது என சம்பந்தப்பட்டவர்களால் படையினருக்குத் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் புலிகளின் சொத்து இராணுவத்துக்குரியது என்று படையினர் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (வ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையை உடன் கலைக்க வேண்டும்

## எல்லை மீறிச் செயற்படின் வேறு வழியில்லை என்கிறார் குணதாஸ

கொழும்பு, ஒக்.27
"வடமாகாண சபை தனது வேலை யைக்காட்ட ஆரம்பித் துள்ளது. எனவே, அது எல்லை மீறி செயற்படுமானால் ஜனாதி பதி உடன் மாகாண சபையை கலைக்க வேண்டும்."
இவ்வாறு நேற்று வலியுறுத் தியுள்ளது சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம்.
இதற்கான அதிகாரம் ஜனாதி பதிக்கு இருக்கின்றது என்றும் அவ்வொன் றியம் சுட்டிக் காட்டியுள்ளது.
வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வில் முதல்வர் விக்னேஸ்வரன், இராணுவம் மற்றும் வடக்கு ஆளுநர் தொடர் பில் வெளியிட்டுள்ள கருத்துக ளையும் குறித்த சிங்கள அமைப்பு வன்மையாகக் கண் டித்துள்ளது.
இதுதொடர்பாக கருத்து வெளி யிட்ட சிங்கள தேசிய அமைப் புக்கள் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர, மேலும் கூறி யவை வருமாறு:
"வடக்கிலிருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும். ஆளு நரை மாற்ற வேண்டும் என் றெல்லாம் வடக்கு முதல்வர் பேசுகின்றார். விக்னேஸ்வர னின் கனவு ஒருபோதும் நிறை வேறாது என்பதை உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகின் றேன்.
வடக்கு மாகாணம் எல்லை மீறி செயற்படுமானால் அதை கலைப்பதற் குரிய அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இவ்வாறான விடயங்களின் போது வடக்கு மாகாணமும் மத்திய அரசும் முரண்பட்டால் மீண்டும் பயங்கரமான நிலையே உருவாகும்."
- இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# 10 லட்சம் விலைமாதர்களை உருவாக்க அரசு முயற்சி

## சபையில் ஐ.தே.க. காட்டம்

கொழும்பு, ஒக்.27
பௌத்த நாடான தாய்லாந்தில் கஸினோவுக்கு அனுமதியளித் ததால் 10 இலட்சம் விலைமாதுகள் உருவாகியுள்ளனர். இது போன்ற நிலையை உருவாக்கி எமது நாட்டை நாசமாக்கவா அரசு முயற்சிக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா நேற்றுமுன்தினம் சபையில் கேள்வி எழுப்பினார்.
அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சர்வமதத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என அழைப்பு விடுத்த அவர், அதற்குத் தமது கட்சி முழு ஆதரவை வழங்கும் என்றும் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பௌத்த அறநெறி நிலையங்கள் தொடர்பான திருத்தச்சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (த-சி)

# வேண்டுமென்றே மகாராணி புறக்கணித்தார் மாநாட்டை

## இளவரசர் அவரின் பிரதிநிதியாக வரவில்லை

கொழும்பு, ஒக்.27
"இலங்கையில் நடைபெற விருக் கும் பொதுநலவாய மாநாட்டை, அவ்வ மைப்பின் தலைவி யான பிரிட்டிஷ் மகாராணி வேண்டுமென்றே புறக்கணித் துள்ளார். அதற்கு இங்கு நில வும் மனித உரிமை நிலவரங் களே காரணம்" என அதிகாரத் தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கி யப்படுத்துவோம் அமைப்பி லுள்ள அங்கத்துவக் கட்சிகள் தெரிவித்தன.
மாநாட்டில் பிரிட்டிஷ் இளவரச ரும், பிரதமரும் அந்நாட்டின் பிரதி நிதிகளாக கலந்து கொள்கிறார்களே தவிர மகாராணியின் பிரதி நிதி களாக அல்ல. ஆகவே, அரசு இந்த விடயத்தில் தோல் விய டைந்தே உள்ளது" எனவும் அக் கட்சிகள் நேற்றுமுன்தினம் சுட் டிக் காட்டின.
இதுதொடர்பாக 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்ப டுத்துவோம்' அமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான ஐக் கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய மற்றும் ஜனநாயக மக்கள் முன் னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் தெரி வித்த கருத்துகள் வருமாறு -

**சிறிதுங்க ஜயசூரிய**

"அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநல வாய மாநாட்டிற்கு சர்வதேசத் தலைவர்கள் அனைவரும், தங்கள் நாட்டு மக்களின் அபிமா னங்களை மீறியே கலந்து கொள்ளவுள்ளார்கள். அவர்கள் இலங்கைக்கு வரவிருக்கின்ற மையை அந்நாட்டு மக்கள் விரும்பாத காரணத்தினால், ஏதாவது ஒரு காரணத்தை கூறியாவது இதில் சம்பிரதாய பூர்வமாகப் பங்குபற்ற வேண் டும் என்றே தலைவர்கள் இங்கு வரவுள்ளார்கள்.
இந்தக் காரணத்தையே தற் போது பிரிட்டனும் கையாண் டுள்ளது. அங்கு தொழிலாளர் வர்க்கத்தினர் இலங்கை மாநாட் டிற்கு பிரிட்டன் சார்பாக எந்த வொரு பிரதிநிதியும் கலந்து கொள்ளக் கூடாது என எதிர்ப் புத் தெரிவித்தனர்.
இதனால், பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் மற்றும் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோர், இங்கு வருகை தந்து அர சுக்கு அழுத்தம் கொடுக்கப் போவ தாகவும் வடக்கு மக்க ளின் நிலை மைகள் தொடர் பில் ஆராயப் போவதாகவும் கூறியே மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.
இவர்கள் வடக்கு மற்றும் மலை யகப் பகுதிகளை பார்வையிடு வதன் மூலம் ஒருபோதும் இங்கு வாழுகின்ற தமிழர்க ளுக்குத் தீர்வுக் கிடைக்கப் போவது இல்லை. இலங்கை அரசை தமது வலைக்குள் வீழ்த்திவிட வேண்டும் என்ற காரணத்தினாலேயே பிரிட் டன் மாநாட்டுக்கு வருகின்றது. பிரிட்டன் மாகாராணி இம் மாநாட்டை வேண்டுமென்றே புறக்கணித்துள்ளார். இங்கு காணப்படும் மனித உரிமை கள் விவகாரங்களைக் கருத் திற்கொண்டே அவர் இங்கு வருகை தர மறுத்துள்ளார்" என்றார்.

**மனோ கணேசன்**

"பொதுநலவாய மாநாடு சம்பந் தமாக அரசு தோல்வியடைந்து விட்டமையை உணர்த்துவ தற்கு அவ்வமைப்பின் தலை வியான பிரிட்டன் மகாராணி இங்கு வருகை தராத காரணி ஒன்றே போதுமாகும்.
பிரிட்டன் இளவரசரும், பிரத மரும் வரவிருக்கிறார்கள் தான். ஆனால், அவர்கள் பிரிட்டனின் பிரதிநிதிகளாகவே மாநாட்டில் கலந்துகொள்ள வுள்ளார்கள். மாறாக தலைவி யான மகா ராணியின் பிரதிநிதி களாகவல்ல. இதை அரசு ஒருபோதும் ஆறுதலாக எடுத் துக் கொள்ளவே முடியாது. என்றார். (த-சி)

# கொழும்பு மாநாடு விடயத்தில் மதில் மேல் பூனையாக டில்லி

## மன்மோகன் வரமாட்டார்.. ஆனால் வருவார் பாணியில்

கொழும்பு, ஒக்.27
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா முழுமையாகப் புறக்க ணிக்க வேண்டும் என ஒட்டு மொத்த தமிழகமும் கிளர்ந் தெழுந்துள்ள நிலையில், இது தொடர்பில் தமது நிலைப் பாட்டை இன்னும் உத்தியோக பூர்வ மாக அறிவிக்காது 'மதில் மேல் பூனை' போல் இருந்து வருகிறது டில்லி அரசு.
இதனால் டில்லியின் நிலைப் பாடு என்ன வென்று தமிழ கம் மற்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப் பாகப் பேசப்படுகின்றது.
ஒரு புறம் தமிழக நெருக்கடி மறுபுறம் மாநாட்டைப் புறக்க ணித்தால் சர்வதேச இராஜதந் திர உறவுகளில் ஏற்படும் விரி சல் என இருமுனைகளிலும் டில்லிக்கு கடும் சவால் ஏற் பட்டுள்ளது. எனவே, இது விட யத்தில் இரு தரப்புகளையும் பகைத்துக் கொள்ளாத வகை யில் 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' போல் இராஜதந்திர காய்நகர்த்தல்களை வகுப் பது சம்பந்தமாக காங்கிரஸ் அரசு கவனம் செலுத்தியுள்ளது.
இதன்படி, நவம்பர் 15 இல் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வை புறக்க ணித்து விட்டு, அரச தலைவர் களின் தனிப்பட்ட சந்திப்பில் (Retreat) இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் பங் கேற்க வாய்ப்புள்ளது என தகவல்கள் வெளியாகியுள் ளன.
ஆரம்ப நிகழ்வை புறக்கணிப்ப தன் மூலம் தமிழகத்தையும், தலைவர்களின் சந்திப்பின் பங்கேற்று கொழும்பை திருப்திப்படுத்துவதே டில்லியின் வியூகம் என்றும் தகவல்கள் வெளியாகியுள் ளன. இது தொடர்பில் உத்தி யோகபூர்வத் தகவல்கள் இன் னும் வெளியாகவில்லை.
எனினும், இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை அடுத்த மாதம் 13 ஆம் திகதி இந்திய அரசு வெளியிடும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது என சிங்கள வார இத ழொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.
" தெற்காசியப் பிராந்திய பலம் மிக்க நாடான இந்தியா, இலங் கையில் இடம்பெறும் பொது நலவாய மாநாட்டில் பங்கேற் பதைத் தவிர்ப்பதால் ஏற்படும் இராஜதந்திர நெருக்கடிகளைக் குறைத்துக்கொள்ளும் நோக் கில் அரச தலைவர்களின் தனிப்பட்ட சந்திப்பில் பங்கேற் பது சிறந்தது" எனப் பிரதமர் மன்மோகனின் ஆலோசகர் கள் அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம், அடுத்த மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் பத்தரமுல்லையிலுள்ள 'வோட்டர்ஸ் ஏஜ்' ஹோட்டலில் இடம்பெறும் அரச தலைவர் களின் தனிப்பட்ட சந்திப்பின் போது ஒரு தினத்தில் மட்டும் பிரதமர் மன்மோகன் பங் கேற்க இடமுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
தற்போது கொழும்பு வந்துள்ள இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள், பிரதமரின் பாது காப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன், பிரதமர் தங்குவதற்கான ஏற் பாடுகளை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் செய்துள் ளனர் என்றும் அறியமு டிகின்றது. (த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாநாட்டுக்கு

ஐ.நா. சபை, ஐ.நா. மனித உரிமை ஆணையார் அலுவ லகம், நாடுகடந்த தமிழீழ அர சின் பிரதமர் உருத்ரகுமாரன் ஆகியோருக்குத் தமிழக அரசி யல்வாதிகள் அனுப்பி வைத் துள்ளனர்.
பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடா தென வலியுறுத்தித் திராவிடர் விடுதலைக் கழகம், மன்னை ஒன்றிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தமிழன் சேவை மையம் என்பன தமிழகத்தின் பல பகுதிகளி முள்ள மக்களிடமிருந்து ஒரு இலட்சம் கையெழுத்துகளைப் பெற்றுள்ளன.
தமிழர்களை இனப்படு கொலை செய்த இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை எதிர்த்தும், இந்திய அரசு அந்த மாநாட்டில் பங் கேற்கக் கூடாது என்பதை வலி யுறுத்தியும், பொதுநலவாய நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்குமாறும் அந்த மனுவில் கோரப்பட் டுள்ளது.
அதேவேளை, தமிழீழம் அமை வதற்கு பொது வாக்கெடுப்பு நடத்த ஆதரவு தரக்கோரியும், போர்க் குற்றவாளி இலங்கை ஜனாதிபதியைச் சர்வதேச குற் றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுத்தர முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதில் வலி யுறுத்தப்பட்டுள்ளது.
மேற்படி கோரிக்கைக்களை முன்வைத்து திராவிடர் விடுத லைக் கழகம், மன்னை ஒன் றிய ம.தி.மு.க., தமிழன் சேவை மையம் ஆகிய அமைப் புகள் கடந்த 2ஆம் திகதி முதல் இந்த ஒரு இலட்சம் கையெழுத்து பெறும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளன. (த-சி)

### கூட்டமைப்பு

அங்கு பயணமாகவுள்ளனர்.
அடுத்த மாதம் முதல் வாரத்தில் இவர்கள் இந்தியாவுக்கும் செல்ல வுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (த-5)

### வலி.வடக்கில்

அழித்துள்ள படையினர் தற் போது வீடுகளை 'புல்டோசர்' கொண்டு இடிக்கும் நடவடிக் கைகளையும் முன்னெடுத்துள் ளனர் என மக்கள் குற்றம் சாட் டியுள்ளனர்.
அத்துடன் அந்தப் பகுதியில் கிளீசீரிடியா(சீமைக்கிழுவை) தாவரத்தையும் நடவுள்ளதாக வீடுகளை இடித்தழிக்கும் நடவ டிக்கையில் ஈடுபட்டுள்ள இரா ணுவத்தினர் தெரிவித்துள்ள னர்.
வீடுகள் இடித்தழிக்கப்படும் பகுதிக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன், உறுப் பினர் , ஹரிகரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட் டுள்ளனர். (த-5)

### தெற்குக்கு

கவே மக் களைநல்வழிப் படுத்த முடியும். அந்த வகையில் அனைத்து மதத் தலைவர்க ளும் எமது மக்களை நல் வழிப்படுத்தி ஒற்றுமையில் நிலைத்திருக்க உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
ஆறாத ஆழமான வடுக்க ளோடு இருக்கும் எமது மக்க ளுக்கு அபிவிருத்தி என்பது மிகவும் முக்கியமான தொன்று. இதனை முன்னெடுப்பதற்கு நாம் முழு மூச்சாகச் செயல் படுவோம்.
தென்பகுதி மக்கள் அனுபவிக் கும் அடிப்படை உரிமைகளை எமது தமிழ் - முஸ்லிம் மக்க ளும் அனுபவிக்க வேண்டும். அதற்கான அனைத்து நகர்வுக ளையும் எமது தேர்தல் விஞ் ஞாபனத்துக்கு அமைவாக முன்நகர்த்துவோம்.
[illegible] கொண்டு செல்வதற்குத் தகுதி வாய்ந்த முதலமைச்சர் எமக்கு கிடைத்திருக்கிறார். அவருக்குப் பக்க பலமாகச் செயற்படவேண் டுகின்றேன் - என்றார். (த-5)

### வெளிநாடுகளின்

அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே. சிசன் கிளிநொச்சி, யாழ்ப் பாணம் ஆகிய மாவட்டங் களுக்கு இந்த மாதம் 30 ஆம் திகதி பயணம் மேற்கொள்ள வுள்ளார். இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சரையும் அவர் சந்திக்கவுள்ளார்
அதேபோன்று கொரியத் தூது வரும் வடக்கு முதலமைச்சரை அன்றையதினமே சந்திக்க வுள்ளார்.
இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான ஐரோப் பிய ஒன்றியத் தூதுவர் டேவிட் டாலீயும் வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
எதிர்வரும் நவம்பர் மாதம் முத லாம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சரை அவர் சந்திக் கவுள்ளார். (த-5)

### வடக்கு

வேண்டும். 13 ஆவது திருத்தத் தில் சொல்லப்பட்ட பொலிஸ் அதி காரங்கள் முழுமையாக நடை முறைப்படுத்தப்படவேண்டும்" என்று வடக்கு முதலமைச்சர் தனது கன்னி உரையில் தெரி வித்திருந்தார்.
இது குறித்துக் கொழும்பு ஊட கம் ஒன்றுக்குக் கருத்து வெளி யிடுகையிலேயே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு கூறி யுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:
ஒவ்வொரு இனங்களின் அவ சியத்துக்கும் ஏற்றால் போல் இலங்கைக்குள் பொலிஸாரை நியமிக்க முடியாது.
இந்த நாட்டின் சகல மக்க ளையும் பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில் ஒரு பொலிஸ் துறையின் கீழ் அனைத்துப் பொலிஸாரும் செயற்படுகின் றனர்.
யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் அவசியமான தமிழ்ப் பொலி ஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு பொலிஸ் நிலையத்தில் மூன்று, நான்கு தமிழ்ப் பொலி ஸார் சேவையில் உள்ளனர்.
2 ஆயிரம் தமிழ் தெரிந்த பொலிஸார் நியமிக்கப்பட்டுள் ளனர் என்றார். (த-5)

### தமிழரின்

கும் கிடையாது.
கிட்டுப் பூங்கா எமது பிரதேசத் தின் - யாழ். நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளமை யால், அது சுற்றுலாமையமா கக் காணப்படுகின்றது. நாம் அதனைப் புனரமைக்கவுள் ளோம். எமது வளங்கள் அபக ரிக்கப்படுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. தமிழர்களின் வரலாற்றுத் தடங் களை இராணுவம் அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்த முயல் கின்றது. இதற்கு மக்கள் பிரதி நிதிகளாகிய நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.
இங்கு இராணுவம் இன அழிப்பை மேற்கொள்வதுடன் தமிழர் இருப்பையும் வரலாற் றையும் இல்லாதொழிக்கின்ற நடவடிக்கையே இது என்று எம்மால் எண்ணத் தோன்று கின்றது.
இவ்வாறான இராணுவத் தலையீடுகள், நில அபகரிப்புகள் எமது நல்லெண்ண விடயங் களைப் பாதிக்கின்றவையாக உள்ளன - என்று தெரிவித்துள் ளார். (த-5)

### கிளிநொச்சியில்

அங்கு வந்த இராணுவத்தின ரும் பொலிஸாரும் குண்டு செய லிழக்க வைக்கும் பிரிவுக்கு தகவல் கொடுத்ததை அடுத்து கைக்குண்டு மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பரந்தன் விவசாய விதை உற் பத்திப் பண்ணைக்கு அருகில், பனை அடி ஒன்றின் கீழ் இந்த கைக்குண்டு காணப்பட்டதாக நீர்ப்பாசன அதிகாரிகள் தெரி வித்தனர். (ஐ-226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின் வலைப்பந்தாட்டப் போட்டியில் குளறுபடி

## யாழ்.மாவட்ட அணிக்குப் பெரும் ஏமாற்றம்

வலி. வடக்கு, ஒக். 27

இலங்கை அரச ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் மாவட்ட மட்டத்தில் அரச திணைக்களங்களுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட அணி தெரிவித்துள்ளது.

கொழும்பு றொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்ட அணி மைதானதுக்குச் சென்றுள்ளது.

இந்த வேளையில் போட்டி ஏற்பாட்டாளர்கள் யாழ். மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாகவும் விளையாட்டு அமைச்சின் அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதனைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த யாழ். மாவட்ட அணியினர் ஏற்பாட்டாளர்களை அணுகிய போது ஏற்கெனவே நடை பெற்ற லீக் முறையிலான போட்டிகளின் அடிப்படையில் வெற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே போட்டிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்ட சுற்று அறிக்கையில், குறிப்பிட்ட போட்டிகள் முதல் கட்டமாக லீக் முறையில் நடத்தப்படும் எனவும் லீக் முறையில் வெற்றி பெறும் அணிகள் இரண்டாம் சுற்றில் மோதும் எனவும் அதில் வெற்றி பெறும் அணியே சம்பியனாக தெரிவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்ட போதிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.

இது தொடர்பாக யாழ் மாவட்ட அணியின் பொது முகாமையாளரும் வலைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவியுமானதிருமதிஜே.எப்.எ.ரூபசிங்கத்தினால் கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எழுத்து மூல மும் ஏற்பாட்டாளர்களுக்கு முறையிடப்பட்டுள்ளது. (த-86)

# விண்மீன் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.27

மாலுசந்தி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இதில் டயமன்ஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் விண்மீன் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# 'பி' அணிகளின் ஆட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும் வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

எல்லாளன் விளையாட்டுக் கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் எல்லாளன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.27

மாலுசந்தி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பிற்பகல் 3.30 மணி**
வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம்.

**மாலை 4.30 மணி**
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம். (த-23)

# அராலி நிலாவொளியின் விளையாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.27

அராலி மத்தி நிலாவொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு தலைவர் சி.பிரதாபன் தலைமையில் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரனும், சிறப்பு விருந்தினர்களாக அராலி மத்தி கிராம அலுவலர் ஜெ.கதிர்காமநாதன், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரி எஸ்.ஏ. எஸ்.சி.சரத்சிங்க, சங் கானை இளைஞர் கழக உத்தியோகத்தர் ப.மதன்ராஜ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர்களான வி.சிவஞான போதன், ச.சந்திரசேகரம், முன்னாள் கிராம உத்தியோகத்தர் ந.சந்திரசேகரம்பிள்ளை, வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் கழகப் பேஷகர் ச.மோகனதாசன், சச்சியா இரும்பக உரிமையாளர் சி.சச்சிதானந்தம், சிற்பக் கலைஞர் க.கோபாலசிங் கம் ஆகியோரும் கலந்து கொள் ளவுள்ளனர்.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான சங்கீதக் கதிரை, முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, வயோதிபர்களுக்கு இடையிலான வேக நடைப்போட்டி என்பன இடம் பெறும். தொடர்ந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இடம்பெறும். இதில் சங்கானை உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்தன்கேணி வேல்ட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

சங்கானை உதயதா ரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்தன்கேணி வேல்ட் விளை'யாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

# மின்னல் வேக கூடைப்பந்து; இன்று நடக்கும் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னல் வேக கூடைப்பந்தாட்டத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**காலை 7 மணி**
முல்லைத்தீவு விளையாட்டுக்கழகம் எதிர் கே.ஸி. ஸி.ஸி. விளையாட்டுக் கழகம்.

**காலை 7.30 மணி**
பற்றிசியன்ஸ் 'பி' அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ்

**காலை 8 மணி**
கே.ஸி.ஸி.ஸி.'பி' அணி எதிர் ஜொலிஸ்ரார் 'பி' அணி

**காலை 8.30 மணி**
ஜொலிஸ்ரார் 'ஏ' அணி எதிர் சென்றலைட்ஸ் கோல்ட்ஸ்

**காலை 9 மணி**
யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் கோப்பாய் விளையாட்டுக்கழக அணி.

**காலை 9.30 மணி**
சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி எதிர் கே.கே.எஸ். வி.க.

**முற்பகல் 10 மணி**
சென்றலைட்ஸ் புளூஸ் அணி எதிர் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி

**முற்பகல் 10.30 மணி**
பற்றீசியன்ஸ் 'ஏ' அணி எதிர் பற்றீசியன்ஸ் 'பி' அணி

**முற்பகல் 11 மணி**
ஜொனியன்ஸ் அணி எதிர் கே.ஸி.ஸி.ஸி. 'ஏ' அணி

**முற்பகல் 11.30 மணி**
ஜொலிஸ்ரார் பி அணி எதிர் ஜொலிஸ்ரார் ஏ அணி

**நண்பகல் 12 மணி**
கோப்பாய் விளை யாட்டுக் கழகம் எதிர் கே.கே.எஸ் விளையாட்டுக்கழகம்

**நண்பகல் 12 30 மணி**
ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் ஜொலிஸ்ரார் 'சி' அணி. (த-23)

## கூடைப்பந்து மத்தியஸ்தர் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் இடம் பெறவுள்ளது. (த-23)

# போட்டி முடிவுகள்



வலி.வடக்கு, ஒக்.27

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**
ஏழாலை மகா வித்தியாலயத்துக்கும் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத் துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஏழாலை மகா வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தை வெற்றி கொண்டது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் ஏழாலை சைவமகாஜன வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இதில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் சுன்னாகம் மயிலணி சைவமகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன. இதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

# தெல்லிப்பழை, பருத்தித்துறை அணிகள் அரையிறுதியாட்டத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்.மாவட்ட செயலகத்தின் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலகங்களுக்கிடையேயான "அரச அதிபர்" கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை, பருத்தித்துறை பிரதேச செயலக அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற முதல் காலிறுதியாட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதியது.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதிக்கொண்டன. இதனால் எந்த அணி வெற்றி பெறும் என்று எவராலும் ஊகித்துக் கொள்ள முடியாதிருந்தது. இரு அணியினருக்கும் கோல் போடும் வாய்ப்புக்கள் கிட்டிய போதும் அவர் கள் சந்தர்ப்பங்களை நழுவ விட்டனர்.

இதனால் இடைவேளைக்கு முன்னரும், பின்னரும் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

இறுதியில் சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3:2 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அடுத்த போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மோதியது. முற்பாதியாட்டம் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது.

இத னால் இரு அணிகளின் ஆட்டங்களில் வேகம் காணப்பட்டது. இருந்த போதும் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வீரர் கிருபா 7 ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி கோல் ஒன்றைப் போட்டார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 1:0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி முன்னிலை வகித்தது.



இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது பருத்தித்துறை பிரதேச செயலக அணி வீரர்கள் பல வியூகங்களை அமைத்துக் களம் இறங்கினர். இதனால் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியால் பருத்தித்துறை பிரதேச செயலக அணியின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பருத்தித்துறை பிரதேச செயலக அணி வீரர்களான புவிராஜ் 4 ஆவது நிமிடத்திலும் மிதுரன் 9 ஆவது நிமிடத்திலும், கிருபா 13 ஆவது நிமிடத்திலும், மீண்டும் மிதுரன் 18 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து 4 கோல்களைப் போட யாழ்ப்பாண பிரதேச செயலக அணி நிலை குலைந்து போனது.

அதன் பின்னர் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி வீரர்கள் பலமுறை முயற்சி செய்த போதும் பருத்தித்துறை பிரதேச செயலக அணியின் பின்கள வீரர்கள், கோல்காப்பாளரினால் அவை தடுக்கப்பட்டன.

இறுதியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 5:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பந்தைச் சேதப்படுத்திய தென்னாபிரிக்க வீரர்கள்



ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்கு இடையிலான 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் கள் பந்தைச் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் 3ஆவது நாளான நேற்று முன் தினம் இடம்பெற்றது. இப்போட்டி முழுவதும் தென்னாபிரிக்க அணி முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்தி வரும் நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது 30ஆவது ஓவரின் நிறைவில் தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிறேம் ஸ்மித்தை அழைத்த நடுவர்கள் பந்தின் நிலை குறித்துத் தங்களுக்குத் திருப்தியில்லை என்பதை அறிவித்ததோடு, வேறு பந்தொன்றைப் பந்து வீசுவதற்காக வழங்கினர். அத்தோடு, பந்தைச் சேதப்படுத்தியமைக்கான அபராதமாக எதிரணியான பாகிஸ்தான் அணிக்கு 5 ஓட்டங்களும் வழங்கப்பட்டன. தொலைக்காட்சி மீள் ஒளிபரப்புகளில் தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரரான பப் டு பிளெஸிஸ் பந்தை தனது நீளக் காற்சட்டையின் 'சிப்' பகுதியுடன் தேய்ப்பது காட்டப்பட்டிருந்தது. அத்தோடு வேகப்பந்து வீச்சாளரான வேர்ணன் பிலாந்தர் நகத்தின் உதவியுடன் பந்தைச் சேதப்படுத்துவதும் காண்பிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை போட்டியின் முடிவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு ஊதியத்தின் 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்படும் என்பதோடு, அதனோடு சேர்த்து அல்லது அதற்குப் பதிலாக ஒரு டெஸ்ட் அல்லது 2 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் அல்லது இரண்டு 20/20 சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## வடக்கு-கிழக்கு வீரர்கள் ஐவர் இலங்கை கிரிக்கெட் அணியில்

### பெயர் விபரம் வெளியாகவில்லை

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 23 வயதிற்குட்பட்ட 5 வீரர்களை இலங்கைத் தேசிய ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது.

ஆயினும் அவர்களின் பெயர் விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கான குறும்பட்டியலில் 5 பயிற்றுவிப்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் அது அறிவித்துள்ளது. நேற்று முன் தினம் இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் சபை செயற்குழுவில் இது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான கிரஹம் போர்ட் எதிர்வரும் ஜனவரியுடன் தனது பதவியிலிருந்து விலகவுள்ள நிலையில், புதிய விண்ணப்பங்களை இலங்கை கிரிக்கெட் சபை கோரியிருந்தது. இதன்போது 11 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இந்நிலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் சபை செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, 2 வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்களும், 3 உள்ளூர் பயிற்றுவிப்பாளர்களும் இறுதிக்கட்ட நேர்முகத் தேர்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஏனைய முடிவுகள்:

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர்கள் அனைவருக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் ஏ.ஆர்.எம்.ஆரூஸ் மீதான ஒழுக்கவியல் குற்றச்சாட்டுக்களையடுத்து அவருக்கு 5 வருடகாலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.(கு)



AFP

## இந்திய டெஸ்ட் அணியில் சகீர்கான், சேவாக் வேண்டும்

இந்திய டெஸ்ட் அணியில் விரேந்தர் செவாக், சகீர்கான் இருவரும் உடனடியாகச் சேர்க்கப்பட வேண்டுமென இந்திய அணியின் முன்னாள் தலைவரும், நேர்முக வர்ணனையாளருமான சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். இந்திய அணியின் அடுத்த டெஸ்ட் போட்டிகள் வெளிநாடுகளில் இடம்பெறவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அணியின் சிரேஷ்ட வீரர்களாக விரேந்தர் செவாக், சகீர் கான் இருவரும் அண்மைக் காலத்தில் பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்காத நிலையில், அண்மைக்கால டெஸ்ட் போட்டிகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.


எனினும், இந்திய அணி தொடர்ந்து 13 டெஸ்ட் போட்டிகளை வெளிநாடுகளில் விளையாடவுள்ள நிலையில், அனுபவமும், வெளிநாட்டு ஆடுகளங்கள் குறித்த அறிவும் கொண்ட வீரர்கள் இந்திய அணியில் தேவைப்படுவதாகக் குறிப்பிட்ட சௌரவ் கங்குலி, அதன் காரணமாக சகீர் கானும், விரேந்தர் செவாக்கும் உடனடியாக இந்திய டெஸ்ட் அணிக்குச் சேர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் காணப்படுகின்ற மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளராக சகீர் கானே தற்போதும் காணப்படுவதாகக் குறிப்பிட்ட சௌரவ் கங்குலி, அவரால் பந்துவீச்சில் ஏராளமான விடயங்களைச் செய்ய முடியும் எனக் குறிப்பிட்டார்.

சகீர்கான், விரேந்தர் செவாக் தவிர, றோகித் சர்மாவிற்கும், சுரேஷ் ரெய்னாவுக்கும், மொஹமட் ஷமிக்கும் டெஸ்ட் வாய்ப்பு வழங்கப்பட மேவண்டும் எனவும் கங்குலி இங்கு குறிப்பிட்டார். 4ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரராக றோகித் சர்மாவும், 6ஆம் இலக்கத்தில் சுரேஷ் ரெய்னாவும், வேகப்பந்து வீச்சாளராக மொஹமட் ஷமியும் சேர்க்கப்பட வேண்டும் என கங்குலி இங்கு தெரிவித்தார்.

இந்தியாவில் இடம்பெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரில் சச்சின் டெண்டுல்கர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## நகைப்புக்கிடமானது புதிய பந்துகள் விதி



25 பந்துப்பரிமாற்றங்களே வீசப்பட்டிருக்கும். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், இந்த விதி நகைப்புக்கிடமானது எனவும், றிவேர்ஸ் ஸ்விங் நுட்பத்தை கிரிக்கெட்டிலிருந்து இது அகற்றுகிறது எனவும் குறிப்பிட்டார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஒவ்வோர் இனிங்ஸிலும் தலா 2 புதிய பந்துகளைப் பயன்படுத்தும் புதிய விதி நகைப்புக்கிடமானது என ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷோன் ரெய்ற் தெரிவித்துள்ளார்.

அதிக ஓட்டங்கள் குவிக்கப்படுவதற்கு இந்த விதியும் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விதியின் படி, இரு முனைகளிலிருந்தும் புதிய பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக 50 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் இரு பந்துகளும் தலா 25 பந்துப்பரிமாற்றங்களே வீசப்பட்டிருக்கும்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், இந்த விதி நகைப்புக்கிடமானது எனவும், றிவேர்ஸ் ஸ்விங் நுட்பத்தை கிரிக்கெட்டிலிருந்து இது அகற்றுகிறது எனவும் குறிப்பிட்டார்.

முன்னைய காலங்களில் இறுதி நேரங்களில் பந்து மென்மையாகக் காணப்படுமெனக் குறிப்பிட்ட ஷோன் ரெய்ற், அதன் காரணமாக பந்தை மைதானத்தை விட்டு அடித்து வெளியேற்றுவது கடினமாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

கிரிக்கெட் எப்போதுமே ஒரு பந்தைப் பயன்படுத்தும் விளையாட்டாகவே இருந்து வந்தது எனக் குறிப்பிட்டஅவர், புதிதாக எதற்காக இரண்டு பந்துகள் விதி பயன்படுத்தப்பட வேண்டும் எனக் கேள்வியெழுப்பினார்.

அதிக ஓட்டங்கள் குவிக்கப்படுவதற்கு இந்த விதியும் ஒரு காரணம் எனவும் ஷோன் ரெய்ற் குறிப்பிட்டார்.

இந்த விதி மாற்றப்பட வேண்டுமென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அண்மைக்காலமாகத் தெரிவித்து வருவததாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அவ்வாறு இந்தியா இதற்காக எதிர்ப்புத் தெரிவிக்குமாயின் அது சிறப்பானது என ஷோன் ரெய்ற் இங்கு மேலும் குறிப்பிட்டார்.(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## French Classes பிரெஞ் வகுப்புகள்



af

French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் **Alliance Française de Jaffna** (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள்; விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே (தொ.பேசி மூலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும்

61, Kachcheri-Nallur Road, Jaffna

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

## வேலை வாய்ப்பு

சங்கென் வடமாகாண கிளைக்கு வீட்டுத் தொகுதி/ தொடர்மாடிக் கட்டடத் தொகுதிகளுக்கான மின் இணைப்புக் களில் முன் அனுபவமுள்ள

* மேற்பார்வையாளர்கள் (Supervisers) with N.C.T Qualifications
* மின் இணைப்பாளர்கள்

சுயவிவரக் கோவையை அனுப்ப வேண்டிய முகவரி (தபாலில் மட்டும்)

மின்சார பொறியியலாளர்
சங்கென் கொன்ஸ்ரக்ஸன் (பிரிட்) லிமிட்
31, வைமன் றோட்
நல்லூர், யாழ்ப்பாணம்

## பணிநிலை வேண்டுகை

கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வடமாகாணம் மற்றும் கொழும்பிலும் பணியாற்றுவதற்குப் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

* முகாமையாளர்: [2 - ஆண்]
  விற்பனை மற்றும் முகாமைத்துவத் துறையில் அனுபவம் மிக்கவர் விரும்பத்தக்கது. வாகன சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்
  (வயதெல்லை 30-45)
* விற்பனைப் பிரதிநிதிகள் :[5 - ஆண்]
  க.பொ.த உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
  (வயதெல்லை 20-35)
* கணக்காளர்: [2 - ஆண்/பெண்]
  கணக்கியலில் Diploma பூர்த்தி செய்தவர்கள் விரும்பத் தக்கது. கணக்கீட்டு மென்பொருள்களை கையாளக்கூடிய வராக இருத்தல் வேண்டும்.
  (வயதெல்லை 25-35)

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்படும்.
ஆர்வமுடையோர் தங்களது சுயவிவரக் கோவையை பின்வரும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (33301)(12.8.3)

newsunlanka@hotmail.com
mobile- 077 013 1313/011 233 3313

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL — Duration: 48 hrs Week/ Week ends
* ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
* முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
* IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
* இலவச Tutorial Facilities

**City & Guilds** A1 A2 B1 B2 — Duration: 48 hrs Week/ Week ends
* UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
* இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
* காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
* ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

**Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR** (Quick learning programme) — Duration: 60 hrs Week/ Week ends
* ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
* ஆங்கில உரையாடல்புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH** — Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
* தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்துகொள்வதற்கான கற்கைநெறி.
* Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறைமூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
* மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
* O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படும்.

ஒவ்வொரு வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## வர்த்தக நிலையங்களுக்கான Software

எமது AOS கணனி மென்பொருளானது (Software) உங்களது நிறுவனத்தின் **விற்பனையை இலகுவாக்குவதுடன்** சரியான முறையில் கணக்கை கண்காணிக்கவும், ஒவ்வொரு நாளும் உங்கள் காசேட்டையும் மற்றும் மாத முடிவில் **இலாப நட்டக்கணக்கு, ஐந்தொகை** போன்றவற்றை தருகின்றது.

One Month FREE Trial

கணனி அறிவு பற்றிய பயம் தேவையில்லை

உங்கள் ஊழியர்களை பயிற்றுவிக்கின்றோம்
அல்லது
பயிற்றுவித்த ஊழியர்களை பரிந்துரை செய்கின்றோம்.

AgoySoft
AgoySoft (Pvt) Ltd.
இல 5, அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
011 328 8569 , 021 205 2393

## IDM Nations Campus

Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd
#216, Navalar Road, Jaffna

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

Weekday batch : Monday (28th October) 9.30 am
Weekend batch : Sunday (03rd Novem.) 9.30 am

**Advanced Diploma in AutoCAD 2D and 3D**
By Industrial Expert

**O/L ICT Paper classes for 2013 students**

Tel : 021 222 9901
Mobile : 0775632056

## யாழ் ESOFT இன் 4 ஆவது வருட சேவைப் பூர்த்தியை முன்னிட்டு

மாபெரும் விசேட சலுகை!

The programmes are now Edexcel Assured — Assured by edexcel

DISCOUNT 50%
offer Valid till 10th November

DiCA — Diploma in Computerized Accounting
Duration : 4 Months
*MYOB *Quick Books *ACCPAC
*SAGE *Peachtree *Tally

SMS Your Name & Address to 077 990 5611

ESOFT METRO CAMPUS - JAFFNA
No. 137, K.K.S Road, Jaffna | Tel : 021 222 4142

## பணி வேண்டுகை

காவலாளி

யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் கம்பனி தொழிற்சாலைக்கு இரவு பகல் கடமை புரியும் காவலாளிகள் தேவை.

**தகுதி:** 1. க.பொ.த. சாதாரணம் சித்தி விரும்பத்தக்கது.
2. திடமான தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல்
3. பிற மொழி தொடர்பாடல் விரும்பத்தக்கது
ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

காலம்- 30.10.2013 புதன்கிழமை காலை - 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை.
நேர்முகத் தேர்வுக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

முகவரி:- SARAH INDUSTRIES (PVT) LTD. இல. 29,30, சி. பொன்னம்பலம் வீதி (மின்சார நிலைய வீதி) , 3ஆம் ஒழுங்கை (ராசி சில்க் அருகில்) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0212217272

## வீடு காணி விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும், அதிலமைந்துள்ள வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 588 7170
romseyclose@hotmail.com
00447875208732 (29567)(7.6.3)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு

(தச்சு வேலை சம்பந்தப்பட்ட இயந்திரங்கள்)
1. வேலைப்பாடு சீவுதல் (U.K)
2. கனம் கட்டுதல் (USA)
3. வட்டவாள் (மேசைப்பட்டறை) (USA)
தொடர்புகளுக்கு:- 0776701699

## மாபிள் பதித்தல்

அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவரால் குறுகிய காலத்தில் உங்கள் விருப்பத்துக்கேற்ற வகைகளில் அழகாகவும், உறுதியாகவும் மாபிள் பதித்துத் தரப்படும்.

தொடர்பு:- 0773824871
(பாபு, டோக அரசாங்கத்தினால் பாராட்டு பெற்றவர்)

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திற்கு முன்பாக 11 அடி அகலமும் 185 அடி நீளமும் உடைய கடை வாடகைக் குண்டு. எந்தவித வியாபாரத்திற்கும் ஏற்றது. தொடர்பு: 077 467 0284 (33337)(7.6.3)

## IELTS

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

* Latest training materials.
* Skills development in all four categories.
* Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

(ESOL) Diploma A1 B1

இலவச ஆலோசனைகளுக்கு 0777240707

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 0212224403 | நெல்லியடி 0212262470 | சாவகச்சேரி 0212270775 | சுன்னாகம் 0212241970

## ஓடுகள் விற்பனைக்கு

தரமான ஓடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (சி/13410)(7.6.3)
077 703 7046, 072 230 0555

## வீடு வாடகைக்கு

இல.25, பொன்னப்பாலேன், வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தில் (கே.கே.எஸ் வீதிக்கும் மானிப்பாய் றோட்டுக்கும் இடையில்) 5 அறைகள் மற்றும் சகல வசதிகளும் உடைய சுற்றுமதில் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (33119)(6.3.4)
தொடர்பு: 071 824 6941, 071 521 3888, 011 220 5223

## தேவை

அலுவலக உதவியாளர் (பியோன்) யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்த தரம் 10 தகைமையுடைய 40 வயதிற்குட்பட்ட ஆண், பெண் தொடர்பு கொள்ளவும்.
எழுதுவினைஞர் (Clerk பெண்கள்) A/L 3 பாடங்கள் சித்தி, கணினி அறிவு முக்கியம்.
ஆங்கில அறிவும் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு:
021 790 4941 (33304)(7.6.3)

## நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவிற்கு. PAVING STONES.

உங்கள் இல்லங்கள் நிறுவனங்களை அழகுபடுத்துவதற்கு தேவையான பல்வேறுவடிவமைப்புக்களை கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வவுனியா, முள்ளியவளை, திருமலை, கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள எமது காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.



பிரணவன் என்ரபிறைசஸ். பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (சங்கிலியன் சிலைக்கு முன்பாக) தொடர்பு : 0773818799.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்

27.10.2013 ஞாயிறு சிறப்பம்சம்


25 ஆண்டுகளுக்குப் பின்னர் வடக்கு மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழர் அரசு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தனது கன்னி அமர்வுடன் நடைபயில ஆரம்பித்துள்ளது. மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் மூலம் கிடைத்த வரலாற்று வெற்றிக்கு இப்போது செயல் வடிவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையின் 30 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் வடக்கில் முதலாவது அரசை நிறுவியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின்னர், வடக்கு தனி மாகாண சபையாகப் பிரகடனப்படுத்த பின்னர் பதவியேற்றுள்ள முதலாவது மாகாண சபை இது. அதிக எதிர்பார்ப்புடன் அதன் செயற்பாடுகள் எதிர்காலத்தில் நோக்கப்படவுள்ளன. இலங்கையின் சட்டத்துறையில் நன்கு அனுபவம் கொண்ட வடமாகாண முதலமைச்சர் எதிர்காலத்தில் வடமாகாண சபையின் நடவழக்கைகளை சட்டரீதியாக அணுகி வெற்றிபெறுவார் என்ற எதிர்ப்பார்ப்பு எழுந்துள்ளது.


பக்கம் 03





# வடக்கில் தமிழர் அரசு


பக்கம் 22




பார்க்க வேண்டிய படம்


பக்கம் 30




வந்தார்கள் கொன்றார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை

# பாதுகாப்புச் செயலரின் புதிய பாடம்

சந்திரசேகர ஆசாத்

ஒரு ஜனநாயக நாட்டில் அரச அதிகாரிகளோ, படைத்தரப்பினரோ அரசியல் விடயங்களில் தலையிடுவதில்லை. அவர்கள் அரசிடம் சம்பளம் பெற்று அரசின் கடமைகளை நிறைவேற்றும் கடப்பாடு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதே ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபு.

ஆனால் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவோ வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியோ, யாழ். கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவோ இந்த மரபைபற்றி எக்காலத்திலும் பொருட்படுத்துவதில்லை. அரசியல் விவகாரங்களில் தலையிடுவதும் கட்சி சார்பு அரசியலில் பகிரங்கமாக அரச அதிகாரிக்குரிய அரிகாரங்களைப் பயன்படுத்துவதில் இந்த மூவரும் என்றுமே தயக்கம் காட்டியதில்லை.

அண்மையில் கொழும்பில் பாதுகாப்புச் செயலர் நடத்திய தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கான ஊடகவியலாளர் சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலர் வெளியிட்ட கருத்துக்கள் ஒரு பெரும் அத்துமீறிய அரசியல் தலையீடென்றே நோக்கப்படுகிறது.

அவர் அங்கு "சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பொறுப்பு முதலமைச்சருகே உண்டு. எனவும் விழிப்புக் குழுக்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்கள் என்பவற்றை அமைத்து பொலிஸாருக்கு உதவி வருவதன் மூலமாக வடக்கில் இடம் பெறும் கொலைகள், கொள்ளைகளை தடுத்து நிறுத்த முடியும் என்றும் இப்போதுள்ள நிலை தொடர்ந்தால் பாதாள உலகக் குழுக்களும் வடக்கில் ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டு விடும்" எனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது மத்திய அரசின் கீழ் இயங்கும் பொலிஸாருக்கு உதவி செய்வதே - அதாவது துணைப் பொலிஸ் குழுக்களை உருவாக்கல், பொலிஸாரின் கட்டளைகளை நிறைவேற்றச் செய்வதே முதலமைச்சருக்கு உள்ள சட்டம் ஒழுங்கு பற்றி அதிகாரம் என்பதையே- அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது முதலமைச்சர் என்பவர் பொலிஸ் மா அதிபரின் கட்டளை களை நிறைவேற்றும் ஒரு முகவராகச் செயற்படுவார் என்பதே அதன் அர்த்தமாகும்.

13 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் படி பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாண சபைக்கே உரியவையாகும். இந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 13 ஆவது திருத்தத்தின் படி முதலமைச்சர் மாகாணப் பொலிஸ் மா அதிபருக்குக் கட்டளைகளை வழங்க முடியும். என்றாலும் கூட பொலிஸ் அதிகாரம் மாகாண முதலமைச்சருகே உண்டு. அப்படியான நிலையில் விழிப்புக் குழுக்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்களை முதலமைச்சர் அமைத்து நேரடியாகப் பொலிஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டில் உள்ள பொலிஸாருக்கு வழங்க வேண்டும் என்பது மாகாணத்திற்கான பொலிஸ் அதிகாரத்தை முற்றாக மறுதலிப் பதாகும்.

13 ஆவது திருத்தத்திலுள்ள காணி, பொலிஸ் உட்பட சில அதிகாரங்களைக் குறைக்கவென அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, இந்தியாவின் அழுத்தம் காரணமாகத் தொடர்ந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டமையை நாம் மறந்து விட முடியாது.

அதாவது மாகாண சபைக்கான பொலிஸ் அதிகாரம் என்பதை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரை இன்றியே சிவில் பாதுகாப்புக் குழுக்கள், விழிப்புக் குழுக்கள் என்பன மூலம் போக நீர்த்துப் போக வைக்கும் ஒரு சூழ்ச்சிகரமான தந்திரமே இது.

இப்படியான குழுக்களை அமைத்து முதலமைச்சர் ஒத்துழைக்கத் தவறினால் கிரிமினல்களும் பாதாள உலகக் குழுக்களும் உருவாகி விடலாம் எனவும் அவர் மிரட்டியுள்ளனர். கொலை, கொள்ளை, கப்பம் கோரி ஆள்களைக் கடத்திக் கொலை செய்தல், கழிவு ஒயில் வீசுதல், மக்களின் ஜனநாயக போராட்டங்கள் மீதான வன்முறைப்பிரயோகம் என வடக்கில் தொடர்ந்து பல சட்டமீறல்கள் இடம் பெற்று வருகின்றன. பெரும்பாலான சம்பவங்களில் எவரும் கைது செய்யப்படுவதில்லை. அப்படித் தவிர்க்க முடியாமல் எவராவது கைது செய்யப்பட்டால் சில நாள்களில் அவர் பொலிஸாரின் சம்மதத்துடன் பிணையில் விடப்பட்டுவிடுவார். அவர்கள் தலைமறைவாகி வெளிநாடுகளுக்கு ஓடிவிட வழக்குகளும் கிடப்பில் போடப்பட்டு விடும். உதயன் பத்திரிகை மீதும் ஊடகவியலாளர் மீதும் கொலைகள், தாக்குதல்கள், எரியூட்டல்கள் என்பன தொடர்கதையாகவே நிலை பெற்று விட்டது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்பட வில்லை.

இப்படியான வன்முறைகள் தொடர்பாக அரச சார்புத் துணை இராணுவக் குழுக்களின் மீதும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மீதுமே மக்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். இந்தக் குழுக்களின் வன்முறை நடவடிக்கைகள் தொடர்பாகப் பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. அரசியல் பின்னணி கொண்ட வன்முறைகள் அரச சார்பு தந்திரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இப்படியான நிலையில் சட்டம் ஒழுங்கு சுதந்திரமாகப் பேணப்படுகின்றன என்று சொல்லி விட முடியுமா?

இப்படியான பக்கச் சார்பான, சட்டம் ஒழுங்கைப் பகிரங்கமாக அலட்சியப்படுத்தும் ஒரு சூழ்நிலையில் விழிப்புக் குழுக்களோ சிவில் பாதுகாப்புக் குழுக்களோ என்ன செய்ய முடியும்?

வடக்கில் கிறீஸ் ம்னிதர்கள் பிரச்சினை மேலோங்கியிருந்த போது மக்கள் தங்களைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ள முயன்றபோது அவர்கள் படையினரால் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டது மட்டுமில்லாமல் அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டதை மறந்து விட முடியுமா?

எனவே தான் வட மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் மட்டுமே முதலமைச்சாரால் வடக்கில் சட்டம் ஒழுங்கைப் பாராமரிக்க முடியும். அதனால்தான் மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அது தான் ஒரே வழி.

இப்படியான நிலையில் தான் பாதுகாப்புச் செயலர், சட்டம் ஒழுங்கை முதலமைச்சர் கையாள்வது என்பதை விழிப்புக் குழுக்கள் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் என்ற சொன்னதைச் செய்யும் 'பெடியள் கூட்டமாக' மட்டுப்படுத்தி விட முனைகிறார். தமிழ் மக்கள் இப்படி எத்தனையோ மாயமான்களை இவர்கள் ஓட விட்டும் பின்னால் போகாதவர்கள் என்பதை மறந்து விடுகின்றனர்.

மேற்படி சந்திப்பின் போது அவர் குறிப்பிட்ட ஒரு விடயத்தை நம் கவனத்திலா எடுக்காமல் விடமுடியாது. பாதுகாப்புச் செயலர், "தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இந்தியாவில் போய் தேவையற்ற கதைகள் கதைப்பதாகவும் இலங்கைக் கடலில் இந்திய மீனவர்கள் ஊடுருவுவது பற்றி எதுவும் பேசவில்லை" எனவும் கவலைப்பட்டுக் கொண்டார்.

இரா. சம்பந்தன் இந்தியாவில் பேசுகிற போது எல்லாகட்சிகளும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஒரே நிரலில் வலியுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இலங்கையிலும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 ஆவது திருத்தத்தையும் அதற்கு மேலதிகமாகவும் நடைமுறைப் படுத்த வேண்டும் எனக் கோரி வருகிறது. 13 ஆவது திருத்தம் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்பதால் அதை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டு. இந்த உரிமைகளைப் பயன்படுத்தும் படியே இரா.சம்பந்தன்; கேட்டது பாதுகாப்புச் செயலருக்கு தேவையற்ற கதையாகப் படுகிறது. ஆனால் அவை மக்களுக்கு மிகமிகத் தேவையான ஒன்று. தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் அக் கோரிக்கையை வலியுறுத்தத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு முழு உரிமையும் உண்டு. இலங்கையின் வட கடலில் இந்திய மீனவர்கள் ஊடுருவல் செய்வது தொடர்பாக சம்பந்தன் எதுவுமே பேசவில்லை என்று கூறி கண்ணீர் விட்டுள்ளார். கோத்தபாய ராஜபக்ஷ அது மட்டுமின்றி வடபகுதி மீனவர்களுக்கு பாஸ் நடைமுறை இல்லை எனவும் எவரும் சென்று மீன் பிடிக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் சில நாள்களாக மன்னாரில் கடற்படையினர் பாஸ் நடைமுறையைக் கொண்டு வந்து விட்டனர் என்பதையே அவர் அறியாமல் இருப்பது வியப்புத்தான். இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையே உள்ள வாழ்வாதாரப் பிரச்சினை இது. மாறாக ஒரு பகைமை கொண்ட முரண்பாடல்ல. சகோதர அடிப்படையிலான முரண்பாடு. இதுபற்றி இரு பகுதி மீனவர்களும் இணக்கமான முறையில் பேச்சுக்களை நடத்தி ஒரு தீர்வுக்கு வர வேண்டும். அடிப்படையில் இரு நாட்டு அரசுகளும் ஒரு திட்ட வட்டமான கொள்கையை வகுத்துச் செயற்பட வேண்டும்.

ஆனால் பாதுகாப்புச் செயலர், மீன்பிடி அமைச்சர் ஆகியோர் வடபகுதி மீனவர்களுக்காக உருகுவதாகக் காட்டி இரு பகுதி மக்களுக்குமிடையே ஒரு பகை முரண்பாட்டை உருவாக்க முனைகின்றனர். அதன் மூலம் எமது உரிமைக் போராட்டத்துக்கு தமிழக மக்கள் வழங்கும் பேராதரவை பலவீனப்படுத்தும் நோக்கத்துடனேயே செயற்படுகின்றனர்.

உண்மையில் இவர்களுக்கு தமிழ் மீனவர்கள் மீது அக்கறை இருக்குமானால் வடபகுதி கடலில் சிங்கள மீனவர்கள் ஊடுருவி தடை செய்யப்பட்ட முறைகளைப் பாவித்து மீன் பிடிப்பதைத் தடை செய்ய வேண்டும். மீன் பிடிக்க கப்பல்கள் வட கடலில் ஊடுருவதைத் தடை செய்ய வேண்டும். மன்னார் கடலில் அட்டை பிடிப்பதற்கு சிங்கள் மீனவர்களுக்கு இயந்திரமும் தமிழ் மீனவர்களுக்கு பாஸ் நடைமுறையையும் நிறுத்த வேண்டும்.

எப்படியிருந்த போதிலும் பாதுகாப்புச் செயலாளரின் கருத்து நிச்சயமாக தமிழ்நாட்டு மக்கள் இலங்கைத் தமிழர்களின் போராட்டத்துக்கு வழங்கும் ஆதரவை மழுங்கடிக்கும் நோக்கம் கொண்டதாகும். இதில் எவ்வித சந்தேகமில்லை.

எல்லாவற்றையும் விட அவர் மாகாண சபை உறுப்பினர்களுக்கே ஒரு அருமையான ஆலோசனையை வழங்கியுள்ளார். அதாவது பழைய விடயங்களைப் பேசிக் கொண்டிருப்பதை விட்டு மக்களுக்குக் சேவை செய்வதில் கவனம் செலுத்தும் படி கேட்டுக் கொண்டுள்ளார்.

மாகாண சபை அமைச்சர்களும் உறுப்பினர்களும் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைத் கொண்டு சேவை செய்வார்கள். அதை எவரும் சொல்ல வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் அவர்கள் எமது மக்களால் எமது மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள்.

ஆனால் அதற்காக எமது உரிமைக் கோரிக்கைகளை விட்டு விட முடியாது. எமது உரிமைகள் எமக்குக் கிட்டும் போது எமது தேசத்தின் கனவை மேலும் சிறப்பாக நிறைவேற்ற முடியும். ஒடுக்கு முறை நடவடிக்கைகள் மேலும் மேலும் விரிவாக்கப்படும் போது பழையவற்றை மேலும் மேலும் ஆழமாகப் பேச வேண்டியும் வரும். மாகாணசபையை ஒரு ஆயுதமாகப் பாவித்துப் போராட வேண்டியும் வரும்.

இவ்வாறே இராணுவத்தை வெளியேற்றுவது காணிப்பிரச்சினை சிங்களக் குடியேற்றம் என எல்லா ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் பாதுகாப்புச் செயலர் புதிய வார்த்தைகளால் அழகு படுத்தி மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க முயல்கிறார் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. எப்படியிருப்பினும் மாகாண சபை அரசின் ஒரு பிராந்திய முகாமையாளராக மாற்றி தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்க எடுக்கும் முயற்சி அவரின் செவ்வி முழுவதும் இழையோடுகிறது. இந்த நோக்கம் ஈடேற்றப்பட முடியாதது என்பதை அவர்கள் அறிந்த போதும் மீண்டும் மீண்டும் பல்வேறு முனைகளில் முயன்று கொண்டேயிருப்பார்கள் என்பது மட்டும் அசைக்க முடியாத உண்மையாகும்.



> வட மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் மட்டுமே முதலமைச்சாரால் வடக்கில் சட்டம் ஒழுங்கைப் பாராமரிக்க முடியும். அத னால்தான் மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என் பதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அது தான் ஒரே வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தமிழர் அரசு



அதிரன்

25 ஆண்டுகளுக்குப் பிறகு வடக்கு மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழர் அரசு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது கன்னி அமர்வுடன் நடைபயில ஆரம்பித்திருக்கிறது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் மூலம் கிடைத்த வரலாற்று வெற்றி இப்போது செயல் வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு வடக்கு தனி மாகாண சபையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் பதவியேற்றுள்ள முதலாவது மாகாண சபை இது என்பதால் அதிக எதிர்பார்ப்புடன் அதன் எதிர்காலச் செயற்பாடுகள் நோக்கப்பட இருக்கின்றன. வடக்குத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையில் 30 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதன் மூலம் வடக்கில் முதலாவது தமிழர் அரசை நிறுவியுள்ளது. இந்தத் தமிழர் அரசின் கன்னி அமர்வு நேற்று முன்தினம் கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் பேரவை செயலகத்தில் ஆரம்பமானது.

கன்னி அமர்விலேயே தமிழர் அரசின் நோக்கங்கள், எதிர்காலத் திட்டங்கள், அரசியல் தீர்வு, தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்பவற்றை தனது கன்னி உரையின் மூலம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன். இலங்கையின் சட்டத்துறையில் மூத்த - பழுத்த அனுபவத்தை கொண்டிருக்கும் அவர் வடக்கு மாகாண சபையை வழி நடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். உயர் நீதிமன்ற நீதியரசர் குழுவில் நீதியரசராக திறம்படப் பணியாற்றிய அவர் இலங்கையின் சட்டத்துறையை நீண்ட காலம் நன்கு அறிந்து தெளிந்தவர் என்பது உண்மை. அதனால் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளையும் அவர் சட்ட ரீதியாகவே இனி வரும் காலங்களில் அணுகுவார் என்ற எதிர்பார்ப்பு அனைத்து மட்டங்களிலும் எழுந்திருக்கிறது. தனது கன்னி உரையில் அவர் சுட்டிக்காட்டிய விடயங்கள் யதார்த்தபூர்வமானதாக இருக்கும் அதேவேளை, இலங்கையின் மத்திய அரசுக்கு தமிழ் மக்கள் வழங்குகின்ற அறுதியும் இறுதியுமான சந்தர்ப்பமாக அமையும் என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. தனது கன்னி உரையிலேயே மிக நிதானத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு தமிழரின் நிலைப்பாடு பற்றி தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார் அவர்.

மாகாண சபையின் கன்னி அமர்வு நடந்த முதல் நாளிலேயே அரசுக்கு அவர் விடுத்த அழைப்பை உள்ளூர் ஊடகங்களால் மட்டுமல்ல சர்வதேச ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

"தமிழ் மக்களின் அவலங்களைப் போக்க மத்திய அரசுக்கு ஒத்துழைப்புக் கரத்தை - நேசக்கரத்தை நீட்ட நாம் தயாராகவே இருக்கிறோம். அரசுக்கும் வடக்கு மாகாண சபைக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியுமானால் ஜனநாயகத்தை எமது வடக்கு மண்ணில் நிலைபெறச் செய்யலாம். மக்களின் அவலங்களைப் போக்க ஒன்றாகச் செயலாற்றலாம். நாங்கள் ஒத்துழைப்புக் கரத்தை நீட்டத் தயாராகவே உள்ளோம். உயரிய ராஜதந்திரத்தைக் காட்ட அரசுக்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. அவர்களும் நேசக்கரம் நீட்டுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்" என்று தனது கன்னியுரையில் தமிழர் தரப்பின் நல்லெண்ண சமிக்ஞையை மிகவும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துரைத்திருக்கிறார் வடக்கு முதல்வர். தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு ஏவிவிட்டிருக்கும் அடக்குமுறைகளையும் அவர் தனது உரையில் கண்டிக்கத் தவறவில்லை. இராணுவ அதிகாரியாக இருக்கும் ஒருவர் வடக்கு மாகாண ஆளுநராக இருக்கும் போது சிவில் நிர்வாகம் நடத்த முடியாது. எனவே ஜனாதிபதி உண்மையிலேயே விரும்பினால் எமக்கு மக்களுக்குப் பொருத்தமான வரை ஆளுநராக நியமிக்க வேண்டும் எனவும் தனது உரையில் குறிப்பிட்டார். இராணுவத்தினர் வடக்கிலிருந்து வெளியேற்றப்படத்தான் வேண்டும் என்று கன்னியுரையில் வலியுறுத்திய முதலமைச்சர், தமது மக்கள் தேசிய பாதுகாப்புக்கு எந்த வேளையிலும் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைககளில் ஈடுபடமாட்டார்கள் என்றும் உறுதிபடக் கூறினார்.

> **தமிழ் மக்களின் அவலங்களைப் போக்க மத்திய அரசுக்கு ஒத்துழைப்புக் கரத்தை – நேசக் கரத்தை நீட்ட நாம் தயாராகவே இருக்கிறோம். அரசுக்கும் வடக்கு மாகாண சபைக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியுமானால் ஜனநாயகத்தை எமது வடக்கு மண்ணில் நிலைபெற செய்யலாம்.**

அத்துடன் தேர்தல் பிரசார காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி தான் கூறிய கருத்தை கன்னி அமர் விலும் அவர் நியாயப்படுத்தினார்.

இதன் மூலம் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்காக தம்மை அர்ப்பணித்த தமிழீழ விடுதலைப் புலிகளையும் கன்னி அமர்விலேயே நினைவுபடுத்தியதன் மூலம் அவர்கள் விட்டுச் சென்ற விடுதலை வேட்கையை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்பதை ஞாபகமூட்டியுள்ளார். அவரது உரை முழுக்க முழுக்கத் தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பையும் நல்லெண்ணத்தையும் மிகத் தெளிவான முறையில் வெளிக்காட்டியது. மத்திய அரசுடன் முரண்டுபிடிக்காமல் எமக்குச் சாத்தியமான வழிமுறைகளில் எமது உரிமைகளை நாம் அடைந்து கொள்ள வேண்டும் என்பதையும் முதல்வர் குறிப்பிடத் தவறவில்லை. முதல்வரின் கன்னி உரையுடன் ஆரம்பமாகியுள்ள வடக்கு மாகாண சபையின் எதிர்காலச் செயற்பாடுகள் எப்படி அமையப் போகின்றன என்பதையே இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் பலரும் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். நேற்று முன்தினம் நடந்த கன்னி அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் பங்கேற்றுக் கொண்டனர். முன்னர் மாகாண சபை உறுப்பினர்களாக பதவியேற்பதில் முரண்பட்டுக் கொண்டு சிலர் பிரிந்து பிரிந்து தாம் விரும்பியவாறு பதவியேற்றனர். ஆயினும் கன்னி அமர்வில் அனைவரும் ஒற்றுமையுடன் கூட்டாகக் கலந்துகொண்டனர்.

இந்த ஒற்றுமையைக் கட்டிக் காத்து 30 உறுப்பினர்களையும் சரியாக வழி நடத்தி மாகாண சபையை சிறப்பாகச் செயற்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் நீதியரசர் விக்னேஸ்வரனிடம் வழங்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்கத் தமிழர்களையே உள்ளடக்கி தமிழர்களினால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழர் அரசாக இருக்கும் வடக்கு மாகாண சபையின் பயணம் சிறப்பான ஒரு ஆரம்பமாக இருக்கிறது. கன்னி அமர்வில் கூட கட்சியின் உள்வீட்டு விடயங்களில் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தமது கன்னி உரையில் கூறியிருந்தனர். ஆயினும் அவற்றினால் பெரிதாகச் சலசலப்பு ஒன்றும் ஏற்படவில்லை. கீரைக்கடைக்கு எதிர்க்கடை வேண்டும் என்பதைப் போல ஒரே கட்சிக்குள்ளேயே வெவ்வேறு கருத்துக்களையுடைய உறுப்பினர்கள் இருப்பதை நாம் பிழை என்று சொல்லவில்லை. ஆனால் தமிழர்களின் அரசியல் உரிமையை அடைவதில் அனைவரும் ஒற்றுமையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும் என்றே தமிழர்கள் விரும்புகிறார்கள். அதற்கான ஆணையைத்தான் வடக்குத் தேர்தல் மூலம் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். புதிதாகப் பதவியேற்றுள்ள மாகாண சபை இதனை சிரமேற்கொண்டு செயற்பட்டால் இலங்கையில் உள்ள ஏனைய மாகாண சபைகளுக்கு முன்னுதாரணம் மிக்க சபையாக அது வெகு விரைவில் மாற்றம் அடையும் என்பது மறுக்க முடியாத உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனஅழிப்பா?



# கட்டாய கருத்தடை

வீகேளம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கரையோரக் கிராமங்கள் அவை. கிளிநொச்சிக்கு மேற்காக அந்த மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாக இருக்கின்றன. பெரும்பாலும் கடற்றொழிலை பிரதானமாகக் கொண்டு, மற்றைய தொழில்களையும் செய்யக் கூடிய குடும்பங்கள் இங்கு வசிக்கின்றன.

கூடுதலாக இந்தக் கிராமங்களிலுள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடல் ரீதியாக இவர்களுக்கு இருக்கும் தொழில் நெருக்கடியும், பிரதான நகரங்களுடனான தொடர்பின்மையும் இந்தக் கிராமங்களை தனிமைப்படுத்தி தொழில் ரீதியாக பின்னிலைப்படுத்தி வைத்திருக்கின்றன. ஆங்காங்கே விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டம் என்பனவற்றையும் இந்தக் கிராமத்தின் மக்கள் செய்துவருகின்றனர்.

இவ்வாறான ஒரு மக்கள் சமூகத்தைக் கொண்ட வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய கிராமங்களே இவை. அண்மையில் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் பெரும்பாலும் பேசப்பட்ட ஒரு விடயம் இந்தக் கிராமங்களிலே நடத்தப்பட்டது.

வடக்கு- கிழக்குத் தமிழ் மக்கள் அஹிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் தமக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ள முயற்சித்து தசாப்தங்கள் வீணாகிப் போக, சிங்களப் பெரும்பான்மைத் தேசிய வாதிகள் காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீதான இனஅழிப்பு உத்திகளை கையாண்டமை வரலாறாக நிகழ் காலத்திலும் தொடர்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

### வரலாற்று அழிப்புகள்

குறிப்பாக தமிழ் மக்களது முக்கியமான பொருளாதாரக் கட்டமைப்புக்கள் கல்வி, கலாசார பண்பாட்டு கட்டமைப்புக்களில் திருட்டுத்தனமாக புகுந்து அவற்றை இல்லாது அழிக்கும் முயற்சிகள் இவையெனக் குறிப்பிடலாம்.

நீண்ட காலப் போராட்டம் முள்ளிவாய்க்காலோடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அதன் பின்னர் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு எந்த வகையான நெருக்கடிகளோ குறைபாடுகளோ இல்லையென வெளி உலகுக்கு அரசு வலுக்கட்டாயமாக பரப்புரை செய்து வருகிறது.

**சரியான கால இடைவெளி ஒன்றைப் பேணுவதற்காகவே இந்தச் சிகிச்சை வழங்கப்பட்டது. இது நிரந்தரமானதல்ல என மருத்துவத்துறையைச் சார்ந்த அதிகாரிகள் விளக்கமளிக்கின்றனர்.**

### அத்தியாவசிய நெருக்கடி

ஆனால் அந்தப் பகுதிகளில் இன்றளவும் தமிழ் மக்கள் வாழ்வாதாரக் கட்டமைப்புக்களால் சீர்குலைக்கப்பட்டே இருக்கிறார்கள். இல்லிட வசதியில்லை. சுகாதார மருத்துவ வசதிகள் இல்லை. சுத்தமான குடிநீர் இல்லை. பாதுகாப்பு இல்லை. கருத்து மற்றும் நடமாடுவதற்கான சுதந்திரம் மறுக்கப்படுகிறது.

இவ்வாறு பரவலாக இங்குள்ள தமிழ் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியே வருகின்றனர்.

### சீருடையிலிருந்து சிவிலுக்கு

எல்லாவகையிலும் வடக்கு - கிழக்குப் பகுதியிலிருந்து இராணுவ பிரசன்னம் 'குறைக்கப்பட வேண்டும் என பேசப்பட்டாலும் அது சாத்தியமாகப் போவதில்லை. பதிலாக இராணுவத்தினர் சீருடையிலிருந்து சிவில் உடைக்கு மாற்றப்படும் அபாயத்துக்குள்ளேயே வடக்கு - கிழக்கு மாற்றப்படுகிறது.


குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு சீருடையிலிருந்து சிவிலுக்கு மாறிய சிலரால் இன்றளவும் அச்சுறுத்தல் இருந்தே வருகிறது.

இவ்வாறாக மக்களை நெருக்கடிக்குள்ளும் பயப்பீதியுடனும் வழி நடத்துவதன் மூலமே எதிர்காலத்தில் தமிழ் மக்கள் துணிந்து அரசுக்கு எதிராக இன்னுமொரு புரட்சியை ஏற்படுத்த மாட்டார்கள் என்ற நிலையை ஏற்படுத்த முடியும். இதனையே அரசு சூழ்ச்சிகரமாகச் செய்து வருகிறது.

கண்ணுக்குத் தெரியாத சில இன அழிப்பு நடவடிக்கைகள் இப்போது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பரவ விடப்பட்டுள்ளன.

### பொறுப்பற்ற அதிகாரிகள்

இதற்கு அரச அதிகாரிகளும் பொது நல உத்தியோகத்தர்களும் அவர்களுக்குத் தெரியாமலேயே பயன்படுத்தப்படுகின்றனர்.



கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய மூன்று கிராமங்களில் வசிக்கும் பெண்கள் மீது இப்படியொரு சூழ்ச்சிகரமான தமிழர்களது எண்ணிக்கையைக் குறைக்கும் செயற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஒகஸ்ட் மாதம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிய வருகிறது.

மருத்துவ வசதிகள் அற்ற அந்தக் கிராமங்களில் வேரவில் மாவட்ட மருத்துவமனை நெருக்கடிகளுடன் இயங்கிவருகிறது. மேலதிக சிகிச்சைகளுக்காக முழங்காவில் மருத்துவமனையையோ அல்லது நீண்ட தூரத்துக்கு அப்பாலுள்ள கிளிநொச்சி பொதுமருத்துவ மனையோ தான் இந்த மக்கள் நாடவேண்டியிருக்கிறது.

நடமாடும் சேவையொன்றின் மூலம் இந்தக் கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வழங்குவதற்கு முழங்காவில் மருத்துவமனை கிளிநொச்சி பொதுமருத்துவமனையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டது.

அது "ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளது போஷாக்கை அளவிடுதல், தாய்மார்களுக்கான போஷாக்கை அளவிடுதல்" என்ற வகையில் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட குழு குறித்த கிராமங்களுக்குச் சென்று அங்கு வீடு வீடாகச் சென்று குறித்த தகவலைப் பரப்பி அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளது.

ஆனால் அறிவிக்கப்பட்டபடி சிகிச்சை வழங்கப்படவில்லை. அங்கு வந்தவர்கள் மத்தியில் தாதியர்களும் மருத்துவரும் இணைந்து கட்டாய கருத்தடை சிகிச்சையொன்றை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என பணித்து அவர்களை மிரட்டி அந்த சிகிச்சையை வழங்கியுள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

"இது தற்காலிக சிகிச்சைக்கான ஏற்பாடு என்றும் நீங்கள் இதை ஏற்றுக் கொள்ளாவிடில் உங்கள் கணவன்மாரை அழைத்து இத்த கையதொரு சிகிச்சையை வழங்க வேண்டி வரும்" எனவும் அவர்கள் அந்தப் பெண்களை எச்சரித்திருந்தனர்.

இதனால் அந்த இடத்தில் எதையும் செய்ய முடியாத தாய்மார்கள் அந்தச் சிகிச்சையை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். இது தொடர்பில் அவர்களுக்கு போதிய விளக்கமும் இருக்கவில்லை.

### சமூகநலனோக்காம்

இந்த செயற்பாட்டுக்கு இன்னுமொரு கதை கூறப்படுகிறது. அதில் எத்தகைய உண்மை இருக்கும் என்பதற்கு அப்பால் சட்டத்தின் அடிப்படையில் இவ்வாறானதொரு சிகிச்சை முறையை ஒரு தொகுதி மக்களுக்கு அவர்களின் விருப்பத்துக்கு மாறாக வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

குறித்த கிராமங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்களே வசிக்கின்றனர். இவர்களுக்கு பெரும் பாலும் 5 வயதுக்குட்பட்ட 3 அல்லது 4 குழந்தைகள் இருக்கின்றனர். இதனால் இவர்கள் அந்தக் குழந்தைகளைச் சரிவரப் பராமரித்துக்கொள்ள இயலாதது மட்டுமன்றி தமது குடும்பத்தையும் கொண்டு நடத்த முடியாது நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். எனவே சரியான கால இடைவெளி ஒன்றைப் பேணுவதற்காகவே இந்தச் சிகிச்சை வழங்கப்பட்டது. இது நிரந்தரமானதல்ல. தற்காலிகமானதே என்றும் சமூக நலனோக்கு அடிப்படையில் இந்தச் சிகிச்சை வழங்கப்பட்டது என்றும் மருத்துவத்துறையைச் சார்ந்த இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய சிலர் தெரிவிக்கின்றனர்.

### சட்ட நடவடிக்கை

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலரின் கருத்துப்படி "கட்டாய கருக்கலைப்பு நடைமுறையொன்று இங்கு இல்லை. கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு போன்ற கிராமங்களில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் குழு ஒன்று அமைத்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசாரணையின் பின்னரே என்ன நடந்தது எனத் தெரியவரும்" என்று விளக்க மளிக்கப்படுகிறது.

கிராமத்து மக்களை அழைத்து இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையை மேற்கொண்டமை தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவத்திக்கானுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அதில் "இந்தக் கிராமங்களில் அநேகமானவர்கள் கிறிஸ்தவர்கள். இந்த மக்களுக்கு அவர்களது விருப்பத்துக்கு மாறாக கட்டாய கருத்தடை சிகிச்சை வழங்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்தவரை இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு என்ன நடந்தது என உண்மை வெளிக் கொண்டுவரப்பட வேண்டும்" என அந்த அமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.


இது தவிர இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக இது இருக்கலாம் எனவும் இதுபோன்ற பல்வேறு சம்பவங்கள் வடக்கு-கிழக்கில் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு சந்தேகம் தெரிவித்துள்ளது.

### தமிழ்த் தலைவர்கள் அக்கறை கொள்ள வேண்டும்

கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோரப் பகுதியில் இப்படியொரு சம்பவம் நடைபெற்றது என ஒகஸ்ட் மாத இறுதிப் பகுதிகளில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் அடுத்து வரும் தேர்தலுக்கான விஷமப் பரப்புரையே இது என்று சிலர் கருதினர். அல்லது தேர்தல் பரப்புரைக்காக இவ்வாறு நடைபெற்ற பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருந்தனர். இதனால் அந்தப் பிரச்சினை அப்படியே கிடப்பில் போடப்பட்டது. பெரிதாக எவரும் அது குறித்து பேசிக்கொள்ளவில்லை. எதிர்வரும் காலங்களிலும் இது போன்ற சூழ்ச்சிகரமான இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க தமிழ்தலைவர்கள் அக்கறை கொள்ள வேண்டும். மேடைகளில் பேசி மக்களை உணர்ச்சியூட்டி தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதை நிறுத்தி தமக்கு இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இத்தகைய நெருக்கடிகளை களைய இவர்கள் தலைப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசினோ சர்க்கஸ்




■எம்.ஏ.சுமந்திரன்
(சட்டத்தரணி,
நாடாளுமன்ற உறுப்பினர்)

கொழும்பில் கசினோக்களை திறப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் பற்றிய ஒழுங்குவிதிகளை அங்கீகரிக்கும் தீர்மானத்தை அரசு நிறுத்தி வைக்கத் தீர்மானித்திருப்பது பெரும் ஆறுதல் தருவதாக அமைகிறது. அரசின் முக்கிய பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ம.வி.மு. மற்றும் எதிர்க்கட்சியான ஐ.தே.க ஆகியவற்றின் எதிர்ப்புக்கு மத்தியில், நமது சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் ஒரு பேரழிவாக மாறியிருக்கக்கூடிய செயல் குறித்து மீள் பரிசீலனை செய்வதைத் தவிர, அதிகார பீடத்திற்கு வேறுவழி இருக்கவில்லை. எனினும், ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படாமலிருந்து, பின்னர் எழுந்த குறைந்தளவு எதிர்ப்புடன் நிறைவேற்றப்பட்டுள்ள அரசின் ஏனைய பிரேரணைகள் போலவே இந்தப் பிரேரணையும் எதிர்ப்பின் சூடு தணிந்ததும் மீண்டும் கொண்டுவரப்படாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. கசினோ சர்க்கஸ் (விவகாரம்) தொடரக்கூடும்.

சூதாட்டம் என்பதை சடுதியாக பணம் சம்பாதிப்பதற்கான ஒரு விளையாட்டென விபரிக்கலாம். சிலருக்கு இது விநோதமான விளையாட்டாக இருக்கலாம். எனினும் ஏனையவர்களுக்கு அந்தவினோதம் ஒரு 'பிட்ச்சில்' அல்லது 'டொஸ்ஸில்' வரும் லாபம் அல்லது நட்டம் என்றஆபத்தில் அமைந்திருக்கும். இன்னும் சிலருக்கு அது மிகஎளிதாக ஈட்டக்கூடிய 'விரைவான பணத்தில்' இருக்கும். இவர்களைப் பொறுத்த வரை, அந்த 'விரைவான பணத்தை' இழக்கும் வாய்ப்பும், பெறும் வாய்ப்பும் சம அளவில் இருக்கும். ஆனாலும் இப்பழக்கத்துக்கு அடிமையாகுதல் அதன் தீமையையும் இடரையும் காணவிடாது உங்கள் கண்களை மறைத்து விடும். அதனை நீங்கள் கண்டுதெரிந்து கொள்வதற்கு முன்னர் அதன் வலையில் நீங்கள் சிக்கிக் கொள்வீர்கள். எனவே, புனித பைபிளின் பழமொழிகள் எனும் நூலில் அறிவு நிறைந்த மனிதன் அவசரத்தில் ஈட்டப்படும் ஆதனம் அருகிப்போகும் என்று எமக்கு எச்சரிக்கை விடுக்கிறார். முயற்சியின்றி, சிரமமின்றி வெறுமனே ஈட்டிக்கொள்ளும் பணம் நிலைத்திருப்பதில்லை என்ற ஒரு குறிப்பு இங்கே உண்டு.

சூதாட்டம் எங்களை அதற்கு அடிமையாக்கிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயம் கொள்ளவேண்டாம். எனவே தான் சூதாட்டமும், புகைத்தலும், மது அருந்துதலும் பல மதங்களாலும் சமூகக் கொடுமையின் ஒருவடிவமாக இகழ்ந்துரைக்கபடுகின்றன. சிலர் இவற்றை சகித்துக்கொள்ள முடியாதவைகளாகக் கருதுவர். எனினும், பெரும்பாலானவர்கள் அவர் தம் மதம் எதுவாகவிருப்பினும், மேற்கூறியவற்றுள் எதிலும் அளவுக்கதிகமாக ஈடுபடும் போது அவை தீங்கிழைப்பவை எனக் கருதுகின்றனர்.

தனி மனிதர்கள் தமது தெரிவுகளைத் தாமே மேற்கொள்வதற்கு சுதந்திரமுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதைத் தவிர, தொடர்ச்சியாக புகைப்பிடித்தல், மது அருந்துதல் மற்றும் நீண்டகால சூதாட்டம் ஆகியவற்றை நியாயப்படுத்த எவரும் முயலமாட்டார்கள். எனினும், சிகரட் புகைத்தலும் மதுப்பழக்கமும் ஒருபுறம் இருக்க, விளையாட்டு வலயங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் சூதாட்டத்துக்கு அடிமையாதல் அதிகரிப்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும். உதாரணமாக, சமூக ஆய்வுப் பங்காளர் (கொம்யுனிட்டிரிசேர்ச் பாட்னர்ஸ்) என்ற ஒஹியோவைத் தளமாகக் கொண்ட ஆய்வு நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டு அறிக்கையொன்று.

"சிக்காகோ பல்கலைக்கழகத்தின் தேசிய கருத்தாய்வு நிலையம் (என்.ஓ.ஆர்.சீ. 1999)ஐக்கிய அமெரிக்காவின் வயது வந்தவர்களுள் 1.2% மானோர் ஆயுள் முழுதும் திருத்தவே முடியாத சூதாட்டக் காரர்களாகவும் 1.5% மானோர் வாழ்வுக் கால பிரச்சினையான சூதாட்டக் காராகளாகவும் இருக்கின்றனர். கசினோவுக்கும் அதிகரித்த அளவிலான பலவந்த சூதாட்ட பிரச்சினைகளுக்கும் இடையே ஒரு தொடர்பு இருப்பதாக ஆவணம் வெளிப்படுத்துகிறது. பல தரப்பட்ட ஆய்வுகள் (என்.ஓ.ஆர்.சீ. 1999, வெல்டே எட்எல் 2004, எமே சன் மற்றும் லோண்டகன் 1996, வொல்போக் 1995) ஒரு தனி மனிதரது வீட்டிலிருந்து 50 மைல்களுக்குள் ஒரு கெசினோ அமைந்திருப்பது பிரச்சினையான சூதாட்டம் நிகழக் கூடிய தன்மையை இரட்டிப்பாக்குவதில் தொடர்புபட்டுள்ளது என்று ரத் எட் எல் (2006) ஆய்வு எடுத்துக்காட்டுகிறது. இதனடிப்படையில், கசினோ ஒன்றைத் திறப்பது, ஒரு சமூகத்தில் தற்போது நிலவுகின்ற பிரச்சினையான சூ!! தாட்டத்தினதும் அதன் சமூகத் தாக்கத்தினதும் அளவினை இரு மடங்காக்கக்கூடும் என்று எடுத்தியம்புகிறது. இவ்வாறு கிடைக்கக் கூடியதாக இருப்பது தெரிவுசெய்யும் உரிமை மீது செல்வாக்குச் செலுத்துவதாக அல்லது அதனைத் தடுப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில், தமக்குத் தீங்கிழைக்கும் எதற்கும் தாம் அடிமையாவதற்கு எவரும் நிச்சயம் விரும்பமாட்டார்கள். சூதாட்டம் தீங்குவிளைவிப்பது என்பது மறுக்க முடியாததொன்று. இது குறித்து சீ.ஆர்.பி. அறிக்கைமேலும் கூறுகிறது:

திருத்த முடியாத மற்றும் பிரச்சனையான சூதாட்டக்காரர்கள் ஏனைய சூதாட்டக்காரர்கள் அல்லது சூதாட்டத்தில் ஈடுபடாதவர்களை விட அதிகமாக நலனோம்புகையில் தங்கியிருப்பவர்களாக, வங்குரோத்துநிலையடைந்தவர்களென அறிவிக்கப்பட்டவர்களாக, கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர்களாக மற்றும் உள நல சுகாதாரபராமரிப்பு பெறுபவர்களாக இருக்கும் வாய்ப்பு உள்ளதென்று என்.ஓ.ஆர்.சீ. ஆய்வு கண்டறிந்துள்ளது.

உண்மையில், இந்தத் தீமையை உணர்ந்து தான் சிங்கப்பூர் லீகுவான்யு தலைமையில் இதனைக் கொண்டிருந்த பின்னர், பலதசாப்தங்கள் கசினோவை எதிர்த்ததோடு, இரண்டு அதிநவீன சூதாட்ட விடுதிகளை அனுமதித்ததெனினும் அதன் பின்னர் பிரச்சினையான சூதாட்டங்களின் அதிகரிப்புகாரணமாக இவ் விடுதிகளின் மீதான தனது பிடியை இறுக்கியுள்ளது. கசினோ ஒழுங்கு [illegible] மான ஓர் உயர்ந்த கசினோ பிரவேச வரியையும் கசினோக்களுக்கான பயணங்களின் மீது ஒரு மாதாந்த உச்ச வரம்பையும் குடும்ப உறுப்பினர் ஒருவரிடமிருந்து கிடைக்கப் பெறும் வேண்டுகோளின் பேரில் கசினோ விடுதிகளுக்குச் செல்வதின் மீது தடைகளையும் உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே, சூதாட்டம் தீமையானது என்பதிலும் அதன் தீயவிளைவுகளைக் கட்டுப்படுத்துவது எளிதான காரியமல்ல என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை. எனவே, அதற்கு அடிமையாகாதவர்களின் ஒரு சில மணித்தியால இன்பத்திற்கு இடமளித்தாலும், அதன் கவர்ச்சியை எதிர்த்து நிற்க குறைந்தளவு சக்தி கொண்ட ஏனையவர்களுக்கு அதிகசமூக, குடும்ப மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒரு சட்டத்தை அங்கீகரிப்பதில் நாம் அவசரப்படக் கூடாது.

உலகெங்கும் கசினோவிற்கான நியாயப்படுத்தலானது, அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் பொருளாதாரப் பயன்களாகும். கசினோ விடுதிகள் தொழில் வாய்ப்புகளிலும் வருமானத்திலும் ஒரு அதிகரிப்பைக் கொண்டுவரும் என்பது திண்ணமே. உண்மையில், சிங்கப்பூர் கசினோக்களுக்கான கடுமையான புதியவிதிகள் தொடர்பான 2013 ஜனவரி ரொய்ட்டர் அறிக்கை புதிய சட்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தும் கசினோக்கள் இன்னமும் ஆரோக்கியமான இலாபத்தை உருவாக்குகின்றன என்று எடுத்துக் காட்டுகிறது.

எனினும், சமூக தாக்கங்களை மேவிச் செல்லும் அளவிற்கு அதன் வருமானம் அவ்வளவு அதிகமானது என்பது கேள்விக்குரியதாகும். ஒரு கல்வியியலாளர் பின்வருமாறு கூறினார்,

"கசினோக்கள் சிங்கப்பூருக்கு அதிக தொழில் வாய்ப்புகளையும் கூடிய அளவு பொருளாதார நன்மைகளையும் கொண்டு தான் வந்தன. எனினும் இந்த நன்மைகளின் பின்னாலிருந்த உள் விளைவுகளும் - முறிவடைந்த குடும்பங்களும் மற்றும் அழிந்துபோன வாழ்க்கை மற்றும் அதனுடன் கூடவே வந்த அதிகரித்த சமூக இழப்புகளும் அங்கு இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை யாகும்" என்று தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழலில் அரசின் பதில் என்னவாக இருக்கவேண்டும்? பேரா... டோடன் 'சட்டபூர்வமாக்கப்பட்ட சூதாட்டம்: வருமானமா அல்லது சமூக சீரழிவா?' என்ற தனது நூலில் அரசு மேற்கொள்ளக்கூடிய நான்கு நிலைப்பாடுகளை இனங்காண்கிறார்:

தடை
சகிப்புத் தன்மை
ஒழுங்கு படுத்தல்
கொண்டு நடத்தல்

வடக்குக் கிழக்கில் மட்டுமின்றி இலங்கை முழுவதும் பெரும் சமூக நெருக்கடிகளை ஏற்டுத்திய முப்பது ஆண்டு சிவில் போரிலிருந்து இப்போது தான் இலங்கை தலைதூக்கியுள்ளது. பல ஆண்டுகளாக நிலவிய இனவாதம், வன்முறை, அழிவு மற்றும் உயிரிழப்பு ஆகியவற்றிலிருந்து நாம் இப்போதுதான் மீளத் தொடங்கியுள்ளோம். நல்லிணக்கமே எமது முன்னுரிமை யாகும் அல்லது முன்னுரிமையாக இருக்கவேண்டும். மேலும், ஊழலும் வன்மமும் மலிந்த எமது முறைமையில் சட்டமும் ஒழுங்கும் ஓர் அவசர முக்கிய விடயமாகியுள்ளது.

சேதமுற்ற எமது கடந்த காலத்திலிருந்து மீண்டு வர நாம் தடுமாறிக்கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் மேலும் சமூக கிளர்ச்சியை நாம் ஏற்படுத்தலாமா? யாரைச் சட்டம் பாதுகாக்கவேண்டும்? தமதுசொந்தத் தெரிவுகளை மேற்கொள்வதற்கான பெரும்பான்மையினரின் சுதந்திரத்தை அது பாதுகாக்க வேண்டுமா? அல்லது எமது நலிவான சமூகத்தில் பாதுகாப்பற்றிருக்கும் சிறுபான்மையினரை அது பாது காக்கவேண்டுமா?

சூதாட்டம் தடைசெய்யப்பட வேண்டுமா அல்லது பொருளாதார நன்மைகள் அதன் சமூகத் தீமையை மேவிநிற்குமானால், சட்ட பூர்வமாக்கப்பட்டு ஒழுங்கு படுத்தப்படவேண்டுமா? இவை, கசினோ சர்க்கஸ் மீது அரசு மேற்கொண்டுள்ள ஒத்திவைப்பில் தீவிரமாக பரிசீலிக்கப்பட வேண்டிய கேள்விகளாகும். வெளிநாட்டுத் தரப்பு செல்வந்தர்களின் நன்மைக்காக மக்களால் வேண்டப்படாத சொகுசான கசினோ விடுதிகளை அமைப்பதையோ அல்லது எமது காணியை சூறையாடுவதை வெறுமனே பார்த்துக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் சிசு மரணங்கள்





தட்சா ஜோ.

மருத்துவத் துறையினரை அதிர வைக்கின்றது குடாநாட்டின் சிசு மரண வீதம். சிசுக்களின் மரண வீதம் அதிகரிப்பதற்கு இளவயதுக் கர்ப்பம், மாத்திரைகளின் பயன்பாடு, கலாசார சீரழிவுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றதென்பது பொதுவான கருத்து. குழந்தை பிறந்து ஓர் ஆண்டுக்குள் இறந்தால் அது குழந்தை இறப்பு வீத புள்ளிவிவரத்தில் சேர்க்கப்படும். உயிருடன் பிறக்கும் ஒவ்வொரு 1000 குழந்தைகளில் எத்தனை குழந்தைகள் இறப்பை சந்திக்கின்றன என்பதை குழந்தை இறப்பு வீதம் சுட்டுகின்றது. பிறக்கும்போதே வியாதிகளுடன் பிறத்தல் மற்றும் தொற்று நோய்கள் போன்றவை குழந்தைகள் இறப்புக்கு முக்கிய காரணங்களாக துறை சார்ந்தோரால் கூறப்பட்டு வந்தது.

குழந்தைகள் முதல் ஆண்டு உயிர் வாழ்வதற்கும் நாட்டின் வாழ்க்கைத் தரம் அல்லது சுகாதாரத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அனைத்துலக அளவில் பல காலமாக குழந்தைகள் இறப்பதற்கான முக்கிய காரணமாக வயிற்றுப் போக்கினால் ஏற்படும் நீரிழப்பு இருந்தது. எனினும் விழிப்புணர்வுநடவடிக்கைகளின் காரணமாக அது இன்று இரண்டாம் முக்கிய காரணமாகவும், நுரையீரல் அழற்சி முதல் காரணமாகவும் ஆகியுள்ளது.

குழந்தை இறப்பு வீத கணிப்பீட்டு வரையறைகளில் வேறுபாடுகள் உள்ளன. சில நாடுகள் (மேற்கு நாடுகள் உட்பட) உயிருடன் பிறந்த ஓர் குழந்தையின் இறப்பே இந்தக் கணிப்பில் சேர்க்கப்படுகிறது.

பல சந்தர்ப்பங்களில் 5 வயது ஆவதற்கு முன்னர் சிறுவர் இறப்பது அதிகமாக இருக்கின்றது. ஆகையால், இந்தப் புள்ளி விவரத்தையும் கருத்தில் கொள்வது முக்கியம்.



இந்த நிலைமை குறித்து யாழ். மாவட்ட தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி. திருமகள் சிவசங்கர் இவ்வாறான சீரழிவுக்குக் காரணமான நிலைமைகளைத் தடுக்க சமூக நலன் விரும்பிகள் முன்வர வேண்டும். எவருக்கும் தெரியாத முறையில்இந்தச் சீரழிவு கலாசாரம் மறைமுகமாகநடைபெற்றுவருகின்றது. இளவயதுக் கர்ப்பங்கள், திருமணமாகாமல் கர்ப்பம் தரித்தல் போன்றவை காரணமாகச் சிசுக்களின் மரணம் சம்பவிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன எனக் கூறியதாக செய்தி வெளியாகியுள்ளது.

சிசு மரண வீத நிலைமைகள் தொடர்பாக மருத்துவர் திருமகளை தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முயற்சித்த வேளை தனக்கு அனுமதி அளிக்கப்பட்டால் மட்டுமே தன்னால் தரவுகளை வழங்க முடியும். ஊடகங்கள் தவறான செய்திகளைப் பிரசுரிப்பதால் மருத்துவத் துறையினருக்குப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் அனுமதி கோருமாறு தெரிவித்தார்.

ஊடகங்கள் தமக்கு ஏற்றாற்போல் எழுதிவிட்டுச் சென்றுவிடுவார்கள். ஆனால் அதற்கு பொறுப்பாக பதில் அளிக்கவேண்டியவர்கள் தாங்கள் தான். இப்படியான செயல்களால் மருத்துவர்களின் தொழில் பறிபோன சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சிசு மரண வீதம் என்பது சாதாரண விடயம் அல்ல. தற்போதய சூழலில் முக்கியமான விடயம். எனவே இது தொடர்பிலான தரவுகள் மற்றும் தகவல்களை தன்னாலும் தமது அலுவலகத்தினாலும் வழங்க முடியாதுள்ளது. ஊடகங்கள் மூலம் மருத்துவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்ட சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன என்ற பதிலே கிடைத்தது.


சிசு மரண வீதத்தினைக் குறைப்பதென்பது வெறுமனே மருத்துவத் துறையினரின் பொறுப்பெனக் கூறிவிடமுடியாது. சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும், பொது நிறுவனங்களும் இச்சீரழிவு நிலையைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டியது அவசியம். அச்சந்தரப்பத்தில் சிசு மரண சம்பவங்கள் குறைக்கப்படச் சாத்தியம் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிசுமரண வீதம் அண்மைய மாதங்களில் அதிகரித்தமைக்கான காரணம் என்ன? என்பது பற்றி சுகாதாரப் பிரதி அமைச்சர லலித் திஸாநாயக்க தலைமையில் விசேட ஆய்வு குடாநாட்டில் ஒகஸ்ட் 23 ஆம் திகதி நடைபெற்றது.

இம்மாநாட்டின் போது மகப்பேற்று விடுதி போதுமான வசதிகளுடன் இல்லாமையும் கூட சிசு மரணங்கள் அதிகரிப்புக்கு ஒரு காரணம் என துறை சார்ந்தோர் தெரிவித்ததுடன் தாதியருக்கான வதிவிடம், தாதி யர், மருத்துவ ஊழியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவிவருவதும் ஆரோக்கியமான் நிலையை ஏற்படுத்தவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அந்த மாநாட்டில் வைத்தியசாலைகளில் நிலவும் கட்டடவசதிப் பற்றாக்குறைகள் காரணமாக தொற்று நோய்கள் அதிகரிக்கின்றன. இதனால் சிசு மரண வீதம் அதிகரித்துச் செல்வதுடன், தேசிய ரீதியில் யாழ்ப்பாணத்தில் இம் மரண வீதம் அதிகரித்துச் செல்கின்றது என வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்தளவில் சிசு இறப்பு விகிதம் மொத்தம் 9.47 இறப்பு / 1.000 நேரடி பிறப்பு என்ற ரீதியில் அமைந்துள்ளது. இதில் ஆண்: 10.44 இறப்பு / 1.000 நேரடி



பிறப்பு எனவும் பெண்: 8.45 இறப்பு / 1,000 நேரடி பிறப்பு (2012 மதிப்பீடு) என்றவாறு காணப்படுகின்றது.

சிறுவர் திருமணங்கள் சிசு மரணத்தில் தாக்கம் செலுத்திவரும் நிலையில் இலங்கையில் சிறுவர் திருமணங்கள் அதிகரித்து வருவதாக ஐ.நா.வின் சிறுவர மற்றும் கல்விக்கான நிதியத்தினால் வெளயிடப்பட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

போதிய அறிவின்மை, பொருளாதார நிலைமைகள், தகுந்த பாதுகாப்பின்மை, பெற்றோரின் அலட்சியப் போக்கு, மூட நம்பிக்கைகள் போன்றவற்றால் சிறுவர் திருமணங்கள் அதிகரித்த நிலையில் காணப்படுவதாக ஐ.நா.வின் இலங்கைக்கான பிரதிநிதி ரிஸா ஹொனாசனி தெரிவிக்கின்றார். இவற்றின் மூலமும் சிசு மரண சம்பவங்கள் அதிகரிக்கின்றன.

உலகளாவிய ரீதியில் ஆபிரிக்கா மத்திய மற்றும் தெற்காசிய நாடுகளிலேயே சிறுவர் திருமணங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குறிப்பாக 7 நிமிடங்களுக்கு ஒரு பால்ய விவாகம் என்ற வீதத்தில் நடைபெறுவதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. அத்துடன் இந்நிலைமை இன்னும் 10 வருடங்களில் இரு மடங்காகுமெனவும் ரொய்ட்டர் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்நிலைமையிலே சிசு மரண வீதம் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் தொடர்பாகவும் சிறுவர் திருமணங்கள் நடைபெறுவதற்கான காரணங்கள் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்த சிறந்த புரிந்துணர்வை எட்டும் வகையில் ஐ.நா.வின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் தரம் தழுவிய ஆய்வொன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவென குழுவொன்றை நியமித்திருந்தது.

எமது நாடு ஏனைய துறைகளில் கண்ட அபிவிருத்தியை விட சுகாதாரத் துறையில் முன்னிலை வகிக்கின்றது. குறிப்பாக தாய், சேய் நலன் ஆரோக்கியமானதாக காணப்படுகின்ற அதேநேரம் சிசு மரண வீதமும் குறைவாகுமென்பதை எவராலும் மறுக்க முடியாது. ஆனாலும் அண்மைக்காலமாக சிசு மரண வீதம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்வதற்கு தகுந்த காரணிகளை வைத்திய துறை சார்ந்தோர் முன்வைக்கத்தான் வேண்டும்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க மறுப்புத் தெரிவிக்கும் வைத்தியத் துறையினர் மக்களுக்கு விழிப்புணர்வை எற்படுத்த தவறுகின்றனர் என்றே கூறவேண்டும். குடாநாட்டின் இந்த நிலைமையால் எதிர்கால சந்ததி ஆரோக்கியமாக இருக்குமா? என்பது கேள்விக்குறியே. எனவே இக்குறைப்பாட்டை இனங்கண்டு அதனைத் தீர்க்க மருத்துவ சமூகம் முன்வர வேண்டும்.

சிறுவர் திருமண முறையைத் தவிர்ப்பதன் மூலமாக சிசுக்களின் இறப்புக்களைக் குறைக்க முடியும் என்பதும் வைத்தியத் துறையினரின் பொதுவான கருத்து. எனவே எவ்வளவுக்கு எவ்வளவு சிறுவர் திருமணங்கள் குறைக்கப்படுகின்றதோ அந்த அளவிற்கு சிசு மரண வீதமும் குறைக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே சமூகப் பிரச்சினையாக மாறி வருகின்ற சிசு மரணங்களை முற்றாக நிறுத்துவதற்கு அனைத்து தரப்புகளும் ஒத்துழைக்க வேண்டும். இதன் விளைவு பற்றிய விழிப்பூட்டல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதேசமயம் இளம் பருவத்தினருக்கான இனவிருத்தி, சுகாதார சேவைகள் மற்றும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த சுகாதார அமைச்சுநடவடிக்கைஎடுக்கவேண்டும். அத்துடன் பலவந்தமாக திருமணம் செய்தல் மற்றும் இள வயதுக் கர்ப்பம் போன்றவற்றுடன் தொடர்புடையவர்களுக்கெதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க மகளிர் பாதுகாப்புத் தரப்பினர் முன்வர வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் புறக்கணிப்பு சொல்லும் செய்தி

எம்.ஏ.சுமந்திரன்
நாடாளுமன்ற உறுப்பினர்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கான தினம் நெருங்கி வருகின்றது. அதற்குச் சமாந்திரமாக இது தொடர்பான வாதப் பிரதிவாதங்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன. குறிப்பாக இந்த மாநாட்டில் பங்கேற்க கனடாவின் முதலமைச்சரை அனுப்பாமல் இருக்கும் முடிவை கனடா எடுத்துள்ளமை பெரும் அதிர்வலையை உலக அரங்கில் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக கனேடிய முதலமைச்சர் ஸ்டீஃபன் ஹாபர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழ்க்காணும் விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:-

"2013 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டபோது. அந்த நாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக நிலவி வந்த மோசமான நிலையை சீர் செய்வதற்கும். நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும், பொறுப்புக் கூறல் செயற்பாட்டில் முன்னேற்றம் அடைவதற்கும் இதை ஒரு வாய்ப்பாக இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளும் என கனடா எதிர்பார்த்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது அவ்வாறு நடைபெறவில்லை. போரின் போதும். அதன்பின்பும் மோசமான விதத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டும் சர்வதேசம் ஏற்றுள்ள மானுட விழுமியங்கள் மற்றும் பொறுப்புக் கூறலை புறக்கணித்தும் வரும் இலங்கையின் போக்கை கனடாவால் ஏற்க முடியாது.

மேலும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியமையையும் கனடாவால் ஏற்க முடியவில்லை. அத்துடன் அரசியல் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தல், அவர்களைக் கைது செய்தல், சிறுபான்மை இனத்தவரைத் துன்புறுத்தல், காணாமற்போதல்கள் மற்றும் சட்டத்துக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் கொலைகள் போன்றவையும் கனடாவை கவலை கொள்ளச் செய்துள்ளது. இவைகள் மூலம் பொதுநலவாய நாடுகளின் அடிப்படையான பெறுமானங்களை நிலை நிறுத்தும் விடயத்தில் இலங்கை தோல்வியையே சந்தித்துள்ளமை தெளிவாகின்றது.

இவைகளின் அடிப்படையில், கொழும்பு நகரத்தில் நடைபெறவுள்ள 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கனடாவின் முதலமைச்சர் என்ற கோதாவில் பங்கேற்பதை நான் தவிர்த்துக் கொள்கின்றேன்."




கனடாவின் இந்த நிலைப்பாடு இலங்கை அரசை அதிருப்தி கொள்ளச் செய்துள்ளதுடன் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை அரசியல் மயப்படுத்துவதற்கான ஓர் எத்தனிப்பு என இதை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் சாடியுள்ளார்.

இந்தத் தருணத்தில் இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக சிந்தித்தபடி கனடாவைச் சாடுவதை விடுத்து கனடாவின் இந்த முடிவில் பொதிந்துள்ள யதார்த்தமான விடயத்தின் பக்கம் தன்னுடைய கவனத்தைச் செலுத்துவது பயன் தரும். இலங்கையர் என்ற அடிப்படையில் நம்முடைய மனோபாவம் நமது நாட்டில் நடத்தப்படும் இது போன்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை யார் புறக்கணிக்கின்றார்கள்? யார் புறக்கணிக்கவில்லை? என்பதாக இருக்கக் கூடாது. மாறாக, இது போன்றதொரு புறக்கனிப்பைப் பற்றி ஏனையோர் சிந்திக்கும் விதத்தில் நம் நாட்டின் மனித உரிமைகளின் நிலை இருப்பதை பற்றியே நாம் அதிகம் கவலை கொள்ள வேண்டியுள்ளது.

கனடாவின் இந்த முடிவு பற்றிய விமர்சனங்களைச் செய்து கொண்டிருப்பதற்கே இலங்கை அரசு திட்டம் இடுமெனில், அதற்கு முன் நம் நாட்டின் மனித உரிமைகள் உள்ள மோசமான நிலையைப் பற்றி அக்கறை கொள்ளும் ஒரே நாடு கனடா மட்டும் அல்லவென்ற உண்மையை நம் அரசு முதற்கண் உணர வேண்டும். மாநாட்டில் பங்கேற்பதற்கு பிரிட்டன் முடிவு செய்துள்ள போதிலும், அது மிகுந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் எடுக்கப்பட்டதொரு முடிவு என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். 2011 ஆம் ஆண்டு நத்தார் தினத்தில் இலங்கையில் மர்மமான விதத்தில் படுகொலை செய்யப்பட்ட பிரிட்டிஷ் குடிமகனின் கொலை தொடர்பான விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையைச் சுட்டிக்காட்டி மாநாட்டை பிரிட்டன் புறக்கணிக்க வேண்டும் என எலிசபெத் மகாராணி பலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றார்.

இதேவேளை, இலங்கை விடயத்தில் ஒருவித கோழைத்தனமான, நிலையற்ற போக்கையே பிரிட்டன் கடைப்பிடிப்பதாக பிரிட்டனின் நாடாளுமன்றக் குழுவொன்று குற்றம் சாட்டியுள்ளது. பொதுநலவாய நாடுகள் மாநாட்டை நடத்துவதற்கு முன், அந்த நாட்டில் உள்ள மனித உரிமை தொடர்பான நிலைகளைச் சீர் செய்வதை ஒரு நிபந்தனையாக இலங்கை அரசு இட்டிருக்க வேண்டும் எனவும், இலங்கையில் அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்களின் அடிப்படையில் பிரிட்டன் இதை விடச் சிறந்த. கொள்கைப்பிடிப்பு மிக்கதொரு தீர்மாணத்தை எடுத்திருக்க வேண்டும் எனவும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பிரிட்டன் பங்கேற்பதால், இலங்கையின் தற்போதையை நடவடிக்கைகளை பிரிட்டன் அங்கீகரிப்பதாக இலங்கை பொருள் கொள்ளக் கூடாது என பிரிட்டிஷ் அரசு கூறியுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

மனித உரிமை விடயங்கள், சட்டத்தின் ஆளுகை, நீதித்துறையின் சுயாதீனம்போன்றன தொடர்பான இலங்கை அரசின் போக்கு பற்றித் தான் கவலை கொள்கிறார் என இலங்கைக்கான பிரிட்டனின் உயர் ஆணையர் ஜோன் ரென்கின் சில வாரங்களுக்கு முன் மிகத் தெளிவாகக் கூறியிருந்தார். அத்துடன் இம்முறை பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தனது நாடு முடிவு செய்ததற்கான காரணம் அது உலகில் எங்கு நடைபெறுகின்றது என்பதைவிட பொதுநலவாய கட்டமைப்பின் அந்த நிகழ்வுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற பிரிட்டனின் நிலைப்பாடேயாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த மாநாடு காரணமாக மாநாட்டின் போதும் அதன் பிறகும் இலங்கைமீது விழும்சர்வதேச பார்வையானது, பொதுநலவாய நாடுகளின் முக்கியமானதொரு அம்சமான நல்லாட்சியை இலங்கை செயல் வடிவத்தில் காட்டுவதற்கான அழுத்தத்தை இலங்கைக்கு ஏற்படுத்துவதற்கான ஒரு காரணியாக அமையும் என்றும், மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு ஆகியவை தொடர்பாக காத்திரமான முன்னெடுப்புக்களை இனியாவது இலங்கை மேற்கொள்ள வேண்டும் என்ற செய்தியுடனேயே பிரிட்டனின் முதலமைச்சர் டேவிட் கெமரூன் மாநாட்டில் பங்கேற்க வருகின்றார் என்றும் ரென்கின் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிய உணவு ஆயிரம் ரூபா

## உலகின் செலவாளி நகரம்

அரசியலை எல்லாம் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு இந்தச் செய்தியைக் கேளுங்கள். உலகின் மிக செலவுமிக்க நகரம் எதுவென்று தெரியுமா உங்களுக்கு? நியூயோர்க்? மொஸ்கோ? டோக்கியோ? பாரிஸ்?

இவற்றில் எதுவும் நிச்சயமாக இல்லை. ஆபிரிக்க தேசமான அங்கோலாவின் தலைநகரம் லுவாண்டாவைச் சுட்டிக்காட்டுகின்றன புள்ளிவிவரங்கள். என்ன விசேடம் என்று பார்த்தால் மொஸ்கோவில் நாலாயிரத்தி ஐந்நூறு டொலர் (சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா) மாதாந்த வாடகைக்குக் கிடைக்கக்கூடிய ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்புக்கு இங்கே பத்தாயிரம் டொலர் (சுமார் 10 லட்சம்) கொடுத்தாக வேண்டும்.

ஒரு நாளைக்கு எண்ணாயிரம் ரூபா கொடுத்தால் நம்நாட்டில் ஓரளவு கௌரவமான விடுதி அறை நமக்குக் கிடைத்துவிடும். லுவாண்டாவில் அதற்கு நீங்கள் 6 லட்சம் ரூபாக்கும் மேலதிகமாகக் கொடுத்தாக வேண்டும். ஒரு முழுச் சாப்பாட்டுக்கு நமக்கு நூற்றியம்பது ரூபா செலவாகும் என்றால் அங்கே அதுவே சுமார் ஆயிரம் ரூபா.

சாப்பாடு, போக்குவரத்து, பொழுதுபோக்கு என்று ஆரம்பித்து சகட்டு மேனிக்கு எல்லாவற்றுக்கும் மற்ற ஊர்களின் விலை விவரங்களைவிடக் குறைந்தது ஐந்து மடங்கு லுவாண்டாவில் அதிகம். இதிலேயே இன்னும் கொஞ்சம் பணக்காரத்தனம் தேவையென்றால் இன்னும் எடு, இன்னும் கொடு, அள்ளி வீசு என்பதுதான் அங்கு கொள்கை.

வரவர லுவாண்டா படுபயங்கர பணக்காரர்களின் கூடாரமாக மாறிக்கொண்டே போகிறது. இது எங்கே போய் முடியுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அங்கோலா வாசிகள்.

இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? நாடு நகரம் வளர்ந்தால் நல்லதுதானே? என்றால், இது அப்படியல்ல. ஒரு நகரம் பெரிய அளவில் வளர்ச்சியுறுகிறது என்றால் சகலமான இனங்





களிலும் வளர்ச்சி தெரிந்தாக வேண்டும். அங்கோலா ஒன்றும் அமெரிக்காவை நிகர்த்த தேசமல்ல. ஏழைமைக்குப் பேர் போன ஆபிரிக்க நாடுகளில் இதுவும் ஒன்று. கொஞ்சம் கோப்பி இருக்கிறது. ஆடைகள் தைக்கும் துறையும் சிமெந்து உற்பத்தித் துறையும் ஓரளவு காசு கொடுக்கின்றன. ஏற்றுமதி வருவாய் என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு இல்லை என்றாலும் ஏதோ கொஞ்சம் பெற்றோலிய உற்பத்தியும் இருக்கிறது.

தனது மக்களுக்குக் குடிக்க நல்ல தண்ணீர் கொடுப்பதற்கும் தேவையான அளவுக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கும் அரசு திண்டாடி, தெருப்பொறுக்கிக் கொண்டுதான் இருக்கிறது இன்று வரைக்கும். நாட்டில் பெரும்பாலானவர்கள் ஏழைகள். போதாக்குறைக்கு 2002ஆம் ஆண்டு வரைக்கும் உள்நாட்டுப் போர் வேறு நடந்தது.

பத்தே வருடங்களில் சிலிர்த்துக்கொண்டு எழுந்துவிட்டதாகச் சுட்டிக்காட்ட நாலைந்து உதாரணங்கள் கூடத் தேறாத தேசம்தான். ஆனாலும் அங்கோலாவின் தலைநகரம் தான் உலகின் அதிபயங்கர செலவாளி நகரம். நீங்களும் நானும் சுற்றுலாவுக்காகப் போனால்கூட சொத்து பத்தாது. நிம்மதியாக அமர்ந்து சாப்பிட முடியாது. அந்தளவுக்குச் செலவு.

வளராத தேசங்களின் ஏதோ ஒரு நகரை (25 ஆம் பக்கம் பார்க்க)

WIJITHA GROUP

நாடு முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை

44 வருடங்கள் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் புகழ், பெயர் தாங்கி நுகர்வுப் பொருள் உற்பத்தியிலும் விநியோகத்திலும் ஈடுபட்டு ISO 9001-2008, ISO 22000-2005 தரச் சான்றிதழ்கள் பெற்றிருக்கும் விஜித கூட்டு வர்த்தகக் கம்பனிக்கு பின்வரும் பிரதேசங்கள் உள்ளிட்டு முழு நாட்டிலும் விநியோகஸ்தர்கள் தேவைப்படுகிறார்கள்.

கொழும்பு, கந்தான, மத்துகம, ஹோமாகம, கண்டி, மஹியங்கன, கெக்கிராவ, காலி, எகலியகொட, பஸ்யால, யாழ்ப்பாணம், வவுனியா, கல்முனை

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- குறிப்பிடத்தக்க நடைமுறை மூலதனத்தை முதலிடும் திறன்.
- செல்லுபடியாகும் பிணையொன்றை சமர்ப்பிக்கும் திறன்.
- களஞ்சிய வசதிகள்
- பொருள் போக்குவரத்துக்கான லொறி வண்டி

எமது வர்த்தக வலையமைப்புடன் இணையும் உங்களுக்கு

- கவர்ச்சியான கமிஷன் மற்றும் பயணக் கொடுப்பனவு (RD Allowance)
- பிரதேச விற்பனை முகாமையாளர் மற்றும் விற்பனை நிறைவேற்று உத்தியோகத்தர்களின் மேற்பார்வை மற்றும் விற்பனை பிரதிநிதி ஒருவரின் சேவை
- விற்பனை மேம்பாடு மற்றும் விளம்பர வசதிகள் என்பன கிடைக்கும்.

விபரங்களுடனான உங்கள் விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:
(கடித உறை இடது பக்கத்தில் விநியோகஸ்தர் எனக் குறிப்பிடுக)

Human Resource Manager
Wijitha Group of Companies
No: 160, Main Street, Mawanella.

விசாரணை : தொ.பே: 035 2246174, தலைவர் 0777-371081, மேலாண்மை இயக்குநர்: 0777-810029
பக்ஸ்: 035 2247634 இணையம்: www.wijithagroup.com







வெளிநாட்டிலிருந்து மணிகிராம் சேவை ஊடாக அனுப்பும் பணத்தை கொமர்ஷல் வங்கியில் பெற்றுக் கொள்ளும் உங்களுக்கு LED TV, ஹோம் தியேட்டர் சிஸ்டம், மைக்ரோவேவ் அவண், வோட்டர் பில்டர், கிறைண்டர், ரோஸ்ரர் உட்பட மேலும் பல பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லும் வாய்ப்பு காத்திருக்கிறது. நீங்களும் மணிகிராம் ஊடாக பணத்தை அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் பெற்று, சீட்டிழுப்பில் கலந்து கொண்டு வெற்றியாளராகுங்கள்.

செப்ரெம்பர் 01 முதல் டிசம்பர் 31 வரை மாதாந்தம் பரிசுகள்.

MoneyGram.
COMMERCIAL BANK
+94 114 932 444 / +94 112 353 578
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 27 10 2013 ஞாயிற்றுக்கிழமை

# மாற்றுப் பார்வையில் மனிதமாகும் பெண்ணியம்

- திலகபாமா

பெண்கள் பொது வாக இரண்டாவது பாலினமாக குறைத்து மதிப்பிடப் படுவதும், வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் உடைமைப் பொருளாக ஆக்கப் படுவதும் கண்கூடு. இத்தன்மை ஒட்டு மொத்த சமூகத்தின் நாளைய எதிர்கால வளர்ச்சிக்கு எதிரான ஒன்றாகும். எந்த ஒரு மனிதனும் இன,பால் அடையாளங்களினாலோ அல்லது சாதிய , வர்க்க , மத வேறுபாடுகளினாலோ குறைவாக மதிப்பிடப்படுதல் . ஆதிக்க மனோ நிலைக்கு வித்திடுமொன்றாகிப் போகின்றது. ஆதிக்க மனோ நிலை அடிமைத் தனம் உருவாவதற்கு காரணமுமாகின்றது

அதுவும் நமது கலாசாரத்திற்குள் இருந்தும் நமது வாழ்வியலில் இருந்தும் பெண் எந்தெந்த இடத் தில் எல்லாம் வேதனைக் குள்ளாக் கப்படுகின்றாள் என்பதை இக் கட்டுரை பேசுகின்றது.

**சுயமிழத்தல்**

மனிதன் எனும் ஒட்டு மொத் தத்திற்குள் பெண்ணானவள் தன்னைக் காலம் காலமாக இரண்டறக் கலந்த படியும் தன் சுயத்தை இழந்து ஆணுக்கானவளாக வடிவமைக்கப் பட்ட படியும் இருந்திருக்கின்றாள். அவளுக்கான மனித இருப்பு சமூ கம் கலாசாரம் . பண்பாடு என்னும் பெயரால் மறுக்கப்பட்ட படியே இருக்கின்றது. காலம் காலமாக முன்னோர்களால் சமூக நல்வாழ்வுக்காக வடிவமைக் கப்பட்ட கலாசாரங்களும் . பண்பாடும் மாறுகின்ற காலங்களின் போது அதன் மாறுதல்களை மறந்து மறுத்து காலாவதியாகி வெறும் சடங்குகளாக பலநேரங்களில் கடைப் பிடிக்கப் பட்டு வருகின்றது. வெற்றுச் சடங்குகள் சிந்தனையின் திசையை மாற்றி மேலும் மேலும் பெண்ணை புதிய மாற்றங்களோடு ஒத்திசைந்து போக முடி யாதவளாக உறைய வைத்து விடுகின்றது ஆயிரம் அறிவியல் தொழில் நுட்பங் களின் பின்னரும் சுயாதீனமாக செயல்பட முடியாதவளாக பெண்ணை முடக்கி விடுகின்றது.

பொருளாதாரம், கல்வி, மதம் என பெண்கள் அடிமைப் பட்டதற்கு காரணமாகவும் அதிலிருந்து விடுபட மாற்று வழியில் செல்ல வேண்டியிருப்பதாகவும் பலர் சொல்லிச் செல்கின்றனர். கல்வி பெற்று விட்டால், பொருளாதார வல்லமை பெற்று விட்டால் பெண் விடுதலை பெற்று விடுவாள் என்று எண்ணுகின்றனர். இன்றோ கல்வியறிவு பெற்று பேராசிரியராக வேலை செய்ய நேர்ந்தும் இரட்டைச் சுமையோடு தனக்கென கூட சுய முடிவுகள் எடுக்க முடியாதவர்களாக இருப்பதையும் ஆயிரக் கணக்கில் உழைத்தும் தன் வாழ்க்கை ஆணைச் சார்ந்திருப் பதாய் நம்பி அவனது நேர்மையற்ற வழிமுறைகளைச் சகித்தும் வாழ்கின்றாள் பெண்.அவளது சுயமும், அவளது வாழ்வும் எது என அவள் உணரவிட முடியாத படிக்கு தொட்டிக்குள் வளரும் போன்சாய் செடியாய் வளர்க்கப் பட்டு விட்டு . விருட்சமாய் வளர முடியாத வர்கள் என அறிவிக்கப் படும் போக்கு இன்னமும் நம் சமூகத்தினிடையே பொதுப் புத்தியில் நிலவி வருகின்றது.

**உணர்வுச் சிதைவுகள்**

பெண் எப்பவும் இருபக்கம் அடி வாங்கும் மத்தளமாக ஆகி விடுவதால் தனக்கு நேர்கின்ற உணர்வுச் சிதைவுகளை சாட்சியங்களோடு வைக்க முடியாது போய் விடுகின்றது.உணர்வுச் சிதைவுகளை அவளே உணர்ந்து விட முடியாத படிக்கு வாழ் வியலோடு நமக்கு இச் சமூகம் தந்திருக்கின்றது.

பெண்ணின் குடும்ப வேலைகள் தனிமனித வேலையாக நிறுவப் பட்டு மதிப்பிழக்கப் படுவதும் இதனால் தான். அவளது குடும்பப் பணியையும் இச்சமூகப் பொதுப் பணிக்கான பின் அரங்க வேலை யினில் ஒன்று தான் என்பதை அறிவு ஜீவிகளாலும் ஆண்களாக இருப்ப வர்களாலும், ஆண் வழிச் சிந்தனை யில் ஊறிப் போயிருக்கும் பெண்களாலும் அடையாளம் காணப் பட முடியாமல் போவது ஆச்சரியப்படத்தக்க விசயமில்லை.

**நவீனம் என்ற பெயரில் புனிதங்களை உடைத்தல்**

ஒரு சமூகம் காலம் காலமாக தொடர்ச்சியான தன் தேடலில் வாழ்வுக்கான வழிமுறையை கண்டறிந்து அதை பண்பாடாக தொடர்ந்து வாழ்ந்து வருகின் றது. அதில் மனிதன் மனிதம் குறையா மல் வாழ்வதற்கான புனிதங்கள் புதைந்து கிடந்தும் . அதை உணராது பழமை எனத் தள்ளியும் நவீனம் என்ற பெயரில் மேலைத் தேய வாழ்வியலை , கருத்தியலை முகமூடிகளாக பூட்டிக் கொள்வதும் சமூகத்திற்கே எதிரானது என்றாலும் பெண்ணுக்கு பெருந்தீங்கு செய்வதுவும் உணரப் படவேண்டிய ஒன்றாகும்

**உடல் சார்ந்த அடையாளங்கள்**

உடல் வெறும் பௌதிக வேறுபாடே. உணர்வு என்பது உடலைச் சார்ந்து கட்டமைக்கப் படுதல் இங்கு காலம் காலமாய் நிர்பந்திக்கப் படுகின்றது . வெட்கம்,மென்மை , நளினம் போன்ற உணர்வுகள் பெண் உடல் சார்ந்து நிறுவப் பட்டு விடுகின்றது.

எந்த வேலைக்கு சூழலுக்கு பழக்கப் படுகின்றதோ அதுக்கான உணர்வு களையும் பிரதி பலிப்பதுவே உடல். உடல் ரீதியான வேறு பாடுகள் உணர்வுகளை தீர்மானிப்பதில்லை.

கல்லுடைக்கும் வேலைக்கு பழக்கப்படும் நபர் உறுதியான , முரட்டுத் தனமான வராகவும், கணிணி வேலைக்கு பழக்கப் படுபவர் மிகவும் மென்மையாகவும் இருப்பதை பார்க்க முடிகிறது. பெண் காலம் காலமாக ஒரே மாதிரியான சூழலுக்குள் அவள் பெண் . அவளது உடல் பாதுகாக் கப் பட வேண்டியது என்றும், அவள் கருவறையைக் காரணமிட்டே முடக்கப் படுகின்றது. கற்பு என்ற உணர்வும் அவள் உடல் சார்ந்தே அவளிடம் திணிக்கப் பட்டு இருந்தது

எனவே உடல் சார்ந்த அடையாளங் களை நிராகரித்து அதுவும் ஆண்கள் பார்வையாலேயே காலம் காலமாக வருணிக்கப் பட்ட பெண் உடல் சார்ந்த அடையாளங்களை மறுதலிப்பதுவும் உடல் மட்டுமல்ல பெண் என நிறுவுவதுவும் பெண் மாற்றியமைக்க வேண்டிய முக்கிய பார்வையாகும்

**வாழ்வெது வெற்றியெது**

இதுவரையிலும் பெண் வாழ்வில், ஆணோடு இணைந்து இல்லாத பெண் வாழ்வில் தோற்று விட்டவளாகவும், அவளது வெற்றிகள் ஆண் வாழ்வோடு ஒப்பீட்டு ரீதியில் மதிப்பீடுகள் உருவாக்கப் படுவதும் நம்மிடையே இருக்கின்றது. இருவர் உலகமும் வேறு வேறாக இருக்க ஒப்பீட்டு அடிப்படையிலான மதிப்பீடுகள் பிழையாகப் போய் விடுகின்றன.

இந்த ஒப்பீடுகள் புதுமை விரும்பும் பெண் களையும் ஆணைப் போல இருக்கவே நிர்பந்திக்கின்றன. அவளது இயல்பை உணரச் செய்வதில்லை. அந்த போலிச் செய்தலில் போலிகளும் பிழைகளும் நிகழ்ந்து விடுவதுண்டு.பெண் தன் வாழ்வியல் தேவைகளை முன்னிட்டு புதியதாய் திறமையோடு செயல்படத் துவங்கினாலே முன்னிறுத்தப் படுபவளாய் மாறி விடுவாள்.

**மாற்றுப் பார்வை**

இந்த இடர்ப்பாடுகளின் பின் தான் நமக்கு கேள்வி எழும்புகின்றது பெண் எந்தப் புள்ளியிலிருந்து தன் பயணத்தை தொடங்கி பாதை உண்டாக்கிப் போக வேண்டும். காடு திருத்தி பாதை உருவாக்க வேண்டிய நிர்பந்தம் பெண்ணுக்கு இன்று இருக்கின்றது

இதுவரை இருந்து வந்த சமூக அமைப்புகளின் பார்வைகள் உலக மயமாக்கலில் மாற்றுப் பார்வைக்கு நிர்பந்திக்கின்றன. இன்றைய வாழ்வின் மனிதன் புலம் பெயர்ந்து கொண்டிருக்கின்றான்

வாழ்வை விட்டு தொழிலை விட்டு . தனது மொழி தனது கலாசாராம் என்பதை விட்டு பல் மொழி பல் கலாச்சாரம் என பனவற்றை யோசிக்க தேவை உருவாகியிருக்கின்றது இத்வரை இருந்த கலாசாரங்களை விட்டும் தவிர்க்க முடியாது உலக மயமாக்களை எதிர் கொள்கின்ற நமக்கு இதுவரை இருந்த பொதுப் புத்தியிலிருந்து மாற்றுப் பார்வையை எதிர் கொள்ள வேண்டியிருக்கின்றது

இதுவரை இருந்த குடும்பச் சூழலிலிருந்து வெளி வந்திருக்கின்ற பெண் தன் சுயத்தை முழுதும் உணர்ந் திருக்கின்றாளா?

உணர்வுச் சிதைவுகளை உணர்ந்து விட முடியா படிக்கு வடிவமைக்கப் பட்ட தளைகளிலிருந்து அவள் விடுவிக்கப் பட வேண்டும்

எத்தனையோ நாட்டு விடுதலை சாத்தியமான பின்னும் அதோடு பெண் விடுதலை ஏன் சாத்தியமாக வில்லைஎனும்கேள்வி மிக முக்கிய மான ஒன்றாகும்.

சமூகத்தின் பொதுப் புத்தியிலிருந்து விடுபட்டு பெண் ணின் மனித இருப்பை உணரச் செய்து விடுவது தான் சமூகத்தின் அனைவரும் மகிழ்ச்சியோடிருக்க உதவுவ தாகும்.

பெண் விடுதலை சிந்தனை சாத்திய மாகி விட்டால் பெண் இடம் மட்டு மல்ல. அது ஒட்டு மொத்த சமூகத் திற்கே நீண்ட காலத்தில் தொடர்ச் சியான மகிழ்ச்சி தரக் கூடிய ஒன் றாகும் செயல்தளத்திலும் பெண் செயல்பட வேண்டியிருக்கின்றது. பெண்ணியம் மனிதத்தின் முதல் படி.

*நீ நிறுவப் பார்த்த*
*உன் உலகத்திற்கு*
*நான் இடுகின்ற நடுகல்*
*நாளை அதிசயமாகும்*
*உனதும் எனதுமற்ற*
*பொது உலகில்*



**கல்வியறிவு பெற்று பேராசிரியராக வேலை செய்ய நேர்ந்தும் இரட்டைச் சுமையோடு தனக்கென கூட சுய முடிவுகள் எடுக்க முடியா தவர்களாக இருப்பதையும் ஆயிரக் கணக்கில் உழைத்தும் தன் வாழ்க்கை ஆணைச் சார்ந்திருப் பதாய் நம்பி அவனது நேர்மையற்ற வழிமுறைகளைச் சகித்தும் வாழ் கின்றாள் பெண்.**

## மகிழ்வுடன் இருக்க .....

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்ற காலம் மலையேறி, இன்று எல்லாத் துறையிலும், பெண்கள் ஆட்சி செலுத்தும் காலம் வந்துவிட்டது. இன்று அலுவலகம் என்பது, மற்றொரு வீடாக மாறிபோன சூழ்நிலையில், நாம் நம் தனித்தன்மையுடன் விளங்க வேண்டிய தேவை அவசியமாகின்றது. அந்தத் தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள சில வழிகள்.....

அலுவலகப் பணியில், சூழ்நிலைக்கேற்ப, அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக, உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டியதில்லை.

எதைச் சொல்ல வேண்டுமென்றாலும், வெளிப்படையாகப் பேசுங்கள். அதற்காக, முரட்டுத்தனமாகவோ, மரியாதைக் குறைவாகவோ நடந்து கொள்ளாதீர்கள். இது, உங்கள் மீது வெறுப்பு வளர காரணமாகிவிடும்.

சக மனிதரிடத்தில நம்பிக்கை வைப்பதுடன், தன்னம்பிக்கையுடன் இருங்கள். அதற்காக, ஏமாளியாகவோ, கர்வத்துடனோ இருக்காதீர்கள்.

தொடர்ந்து கடுமையாக உழையுங்கள்: இடைவெளி விட்டு உழைப்பதில், பயனில்லை. ஏதாவது ஒன்றில், விஷேட திறமை மற்றும் பேச்சு, எழுத்து திறமையை வளர்த்துக் கொள்வதுடன், நாட்டில் நடக்கும் தினசரி நிகழ்வுகளையும் அறிந்து வைத்திருங்கள். ஒரு விடயம் பேசும்போது, அதில் தெளிந்த அறிவு இருந்தால் மட்டும் பேசுங்கள். அதைவிட்டு, வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடாதீர்கள். இது, மற்றவர்களின் நகைப்புக்கு இடமளிக்கும்.

ஒரு செயலுக்கு திட்டமிடும் போது, அதன் அடிப்படை விவரங்களை அறிந்து, அதற்கு தகுந்தபடி, திட்டமிடுங்கள். அதே சமயம், எந்த விவரங்களையும் அலட்சியப் படுத்தாதீர்கள். மனதில் ஒரு சித்திரத்தை உருவாக்கி, முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடி எதிர்காலத்தை மறந்து, நீண்ட எதிர்காலத்துக்கு திட்டமிடாதீர்கள்.

வேலையை நேசியுங்கள். அதுவே, முழு திருப்தி அளிக்கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள்தான், பெரிய பள்ளங்களாகின்றன. துணிவுடன், [illegible] கஷ்டங்களைக் கடக்க. அது உங்களுக்கு உதவும்.

அபிஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி.....?

27.10.2013 முதல் 03.11.2013 வரை

தருபவர் - வித்தியா



**மேடம்**- உங்களின் பேச்சு, நேர்மை வசீகரத்துடன் இருப்பினும் இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். அதிக உழைப்பால் தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவை சராசரிக்குக் கொண்டு வரலாம். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பதால் சிறந்த தேர்ச்சி பெறலாம்.



**இடபம்**-கடந்த வாரங்களில் உங்களைக் கண்டுகொள்ளாமல் விலகிய சிலர் விரும்பி அன்பு பாராட்டுவர். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். இல்லறத்துணையின் மனக்குறையைச் சரி செய்வதில் கவனம் கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை உயர்ந்து பணவரவைத்தரும். பணியாளர் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.



**மிதுனம்**- குடும்பத்தேவைகளுக்கு, அளவான பணச்செலவு செய்வதால், பணக் கடன் பெறுவதைத் தவிர்க்கலாம். இல்லறத் துணையின் கருத்துக்கு உரிய மரியாதை தருவது அவசியமாகும். தொழிலில் அளவான மூலதனம், அதிக உழைப்பு என்கிற தாரக மந்திரத்தை பின்பற்றுவது நலம் தரும். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால் படிப்பில் நினைவுத்திறன் வளரும்.



**கடகம்**- சிறு விடயங்களிலும் பதற்றமான மனதுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் சிரமமும் காலவிரயமும் ஏற்படலாம். எதிரியின் மனப்பாங்கு உணர்ந்து விலகுவீர்கள். இல்லறத்துணையின் ஆலோசனை உங்களை புதிய வழியில் செயற்படவைக்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறு தாமதமின்றி சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும்.



**சிங்கம்**- மனதில் புத்துணர்வும் செயல்களில் பரிமளிப்பும் திறனும் உருவாகும். புதிய லட்சியங்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். வாழ்வில் எதிர்மறையாக இருந்த சூழ்நிலை விலகும். வழக்கு விவகாரத்தில் அனுகூலமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து குடும்பப் பெருமையைக் காத்திடுவார். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு வெகுமதி பெறுவர். மாணவர்கள் விளையாட்டுகளில் சாகசத்தைத் தவிர்க்கவேண்டும்.



**கன்னி**-நண்பர்களின் விமர்சனங்களை ஆலோசனையாகக் கருதுவதால் புதிய படிப்பினையும் நன்மைகளும் வந்து சேரும். சிறியளவில் பணக்கடன் பெற சூழ்நிலை உள்ளது. இஷ்டதெய்வ நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். இல்லறத்துணை உதவும் மனப்பாங்குடன் நடந்து கொள்வார். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். மாணவர்கள் ஆசிரியரின் அறிவுரை மதித்து செயற்படுவது நற்பலன் தரும்.



**துலாம்**- உறவினர்களிடம் உங்கள் மீது உருவான அதிருப்தி எண்ணம் மாறும் வகையில் நடந்து கொள்வீர்கள். பேச்சில் நியாய, தர்ம குணம் மிகுந்திருக்கும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். எதிர் மனப்பாங்கு உள்ளவரால் ஏற்படும் தொல்லையை மன உறுதியுடன் முறியடிப்பீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு மூலம் திருப்திகர பணவரவு கிடைக்கும். மாணவர்களுக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



**விருச்சிகம்**- சுய கௌரவத்தைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் செலவுகளில் தாராள குணத்தைப் பின்பற்றுவீர்கள். எவரிடமும் நிதானமாகப் பேசுவது நல்லது. பிறருக்காகப் பணப் பொறுப்பை ஏற்க வேண்டாம். இல்லறத்துணையின் அன்பு, பாசம் மனதில் நெகிழ்வைத் தரும். பணியாளர் நேரம் தவறாமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மாணவர்கள், கூடுதல் பயிற்சி முறையால் தகுந்த தேர்ச்சி பெறுவர்.



**தனுசு** -சிறு பணியும் நேர்த்தியாக அமைந்து அதிக நன்மையை பெற்றுத் தரும். இல்லறத்துணை ஒற்றுமைக் குணத்துடன் குடும்பப் பணியை நிறைவேற்றுவார். தொழிலில் அபிவிருத்தியைச் சிறப்பாகச் செய்வீர்கள். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து நன்மதிப்பு, சலுகைப்பயன் பெறுவர்.



**மகரம்** - எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும். வாழ்வில் சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்கிற ஆர்வம் அதிகரிக்கும். தொழிலில் நன்மை பெற புதிய வாய்ப்பு உருவாகும். அரச பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சலுகைப் பயன் பெற யோகம் உண்டு. மாணவர்கள், படிப்பிலும் விளையாட்டுக்களிலும் உரிய கவனத்துடன் ஈடுபடவேண்டும்.



**கும்பம்**- குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் தருவதால் ஒற்றுமை சீராக அமையும். மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். எதிரியிடம் விலகுவதால் நேரம், நற்பெயரை பாதுகாக்கலாம். இல்லறத் துணையின் செயற்பாடுகளில் உருவாகும்குளறுபடியை குறை சொல்ல வேண்டாம். இயந்திரத் தொழிற்சாலைப் பணியாளர், பாதுகாப்பு நடைமுறையைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்



**மீனம்**- மன உறுதியுடன் செயற்பட்டு வாழ்வில் சில மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள். அலைச்சல் தரும் என்று நினைக்கிற பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. முன்னோர் செய்த புண்ணியத்தின் பயன் மறைபொருளாக நின்று உதவும். எதிரி வியந்து விலகும் புதிய சூழ்நிலை உரு வாகும். இல்லறத் துணையின் எண்ணங்களை மதித்து நடப்பீர்கள். மாணவர்கள் நினைவுத்திறன் வளர்ந்து படிப்பில் சாதனை இலக்கை எளிதாக அடைவர்.

# முதுகையும் கவனியுங்கள்

முகத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை பெரும்பாலானோர் முதுகுப் பகுதிக்கு கொடுக்க மறுத்துவிடுகின்றனர். அதனால் முதுகுப்பகுதியில் பருக்களும் சின்னச்சின்ன கட்டிகளும் ஏற்படுகின்றன. ஒரே இடத்தில் அமர்ந்து பணிபுரிபவர்கள் தங்களின் முதுகுப் பகுதியும் முதுகெலும்பும் பாதிக்கப்படுவதை உணர்வதில்லை. பின்னர் முதுகுவலியால் நிமிரக்கூட முடியாத அளவுக்கு அவதிக்குள்ளாகின்றனர். முதுகைப் பாதுகாக்க நிபுணர்கள் கூறும் அறிவுரைகளை பின்பற்றுங்களேன். இன்றைக்கு கணினி இன்றி வாழ்க்கை இல்லை என்றாகிவிட்டது. பெரும்பாலோனோர் கணினி முன்பு அமர்ந்து வேலை பார்த்து வருகின்றனர். கணினியில் மணிக்கணக்காக அமர்ந்து பணிபுரி பவர்களுக்கு கண்டிப்பாக முதுகு பாதிக்கப்படும். எனவே உங்கள் கணினி உங்கள் உயரத்துக்கு சரியாக அமைவது மிக முக்கியம். நீங்கள் உட்காா்ந்து பணி புரியப்போகும் நாற்காலி சரியான உயரமும் நல்ல வசதியுடையதாக உள்ளதா என்று சரிபார்த்து அமர்வது உங்களின் முதுகுக்கு பாதுகாப்பைத் தரும். மிக நீண்ட நேரம் தொடர்ந்து கணினி முன் அமர்வதைத் தவிர்க்கலாம். இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை எழுந்து தண்ணீர் குடிக்க இடம் பெயருங்கள். எழுந்து நடப்பதால் உங்கள் இரத்த ஓட்டம் புதுப்பிக்கப்படும். இது உங்கள் முதுகெலும்புகளை அழுத்தத்தில் இருந்து சிறிது நேரம் மீட்டு எடுக்கும். உங்கள் முதுகெலும்பு முடிந்த வரை நேர்கோட்டில் செங்குத்தாக இருப்பது நன்மை தரும். ஆனால் இதனை எம்மால் செய்ய முடியாது. இதற்காகத் தான் நாற்காலிகள் இதனைக் கருத்தில் கொண்டு நவீன வடிமைப்புடன் வருகின்றன. அதற்காகப் பிரத்தியேகமாக வடிமைத்த நாற்காலிகளை வாங்கிப் பயன்படுத்துங்கள். முடிந்த வரை முதுகைக் காப்பாற்றுங்கள். முதுகுப் பகுதியை சிறிது வலப்புறம், இடப்புறம் திருப்பி வளைத்து சிறிய உடற்பயற்சி செய்து விட்டு மீண்டும் அமரலாம். நாற்காலியில் உங்கள் முதுகைத் தாங்கும் பகுதி சரியான உயரத்துடனும் மிருதுவாகவும் இருக்க வேண்டும். உங்கள் கால் பாதம் எப்போதும் தரையைத் தொடும்படியான உயரம் உள்ள நாற்காலிகளை உபயோகிப்பது மிக நல்லது. படுத்து கொண்டு மிக நீண்ட நேரம் facebook, orkut, blogging. வலம் வருவதை முற்றிலும் தவிருங்கள். கணினியை வேலைப் பளுவால் உற்று நோக்க ஆரம்பித்து விடுகிறோம். மிக விரைவாக இதனைத் தவிருங்கள். முடிந்த வரை உங்கள் கண்களை 45 நிமிடங்களுக்கு ஒரு முறை இடது வலது புறம் திரும்பி பார்வைக் கோட்டை அகலப்படுத்தி விட்டு மீண்டும் கணினியைப் பார்க்கலாம்.








## உள்ளி- மிளகு குழம்பு

**தேவையான பொருள்கள்**

தோல் உரித்த பூண்டுப் பல்-10
மிளகு - 20
உளுத்தம் பருப்பு-ஒரு கரண்டி
துவரம்பருப்புஒரு-தேக்கரண்டி
காய்ந்த மிளகாய்-4
கறிவேப்பிலை - ஒரு கைபிடி
புளி- ஒரு பெரிய நெல்லிக்காய் அளவு
கடுகு- ஒரு தேக்கரண்டி
எண்ணெய் - 6 தேக்கரண்டி
உப்பு-தேவையான அளவு

**செய்முறை**

1. பூண்டுப் பல்லை சிறிது எண்ணெயில் இலேசாக வதக்கி, வேக வைக்கவும்.
2. சட்டியில் எண்ணெய் ஊற்றி உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை, துவரம்பருப்பு, காய்ந்த மிளகாய், மிளகு சேர்த்து வறுத்து, புளி சேர்த்து மிக்ஸியில் இலேசாக அரைக்கவும்.
3. சட்டியில் கடுகு தாளித்து, அரைத்த விழுது, வேக வைத்த பூண்டு, உப்பு சேர்த்துக் கலந்து கொதிக்க விட்டு இறக்கவும்.

*குறிப்பு*

*பூண்டு வாயுத்தொல்லையை நீக்கும். மிளகு ரத்த சுத்திகாிப்புக்கு உதவும்*

## முருங்கைக்கீரை வறுவல்

**தேவையா பொருள்கள்**

முருங்கைக்கீரை (துருவியது)- 2 கைப்பிடி அளவு.
பாசிப்பருப்பு- ஒரு கப்
தேங்காய் துருவல்- 6 கரண்டி
கடுகு - அரைக் கரண்டி
காய்ந்த மிளகாய் ஒன்று
எண்ணெய்-தேவையான அளவு
உப்பு தேவையான அளவு


**செய்முறை**

1.முருங்கைக்கீரையையும் பாசிப்பருப்பையும் சேர்த்து உப்பு போட்டு வேக விட்டு தண்ணீரை நன்கு வடிகட்டவும்.

2. சட்டியில் எண்ணெய் விட்டு கடுகு, காய்ந்த மிளகாய் தாளித்து, முருங்கைக்கீரையைப் போட்டு, தேங்காய் துருவல் சேர்த்துக் கிளறி இறக்கவும்.

*குறிப்பு*

*முருங்கைக்கீரையில் இணையற்ற இரும்புச் சத்து உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவுக்கு 100 வயது






அசை போட ஒரு விடயம் 97

## சாதனை படைத்த மங்கம்மாவும் சந்திரலேகாவும்

ரம்யன்

ஆரம்பகால தமிழ் சினிமாவைப்பற்றி பேசும் போது கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் - மருதம் சோடியைப் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. பொதுவில் பழைய புகழ் மிக்க நடிகர்களான தியாகராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா, எம்.கே.ராதா போன்றவர்கள் நடித்திருந்த புராண மற்றும் "ராஜா ராணி" கதைப் படங்களில் என்.எஸ்.கே.மதுரம் ஜோடியையும் காணாமல் இருக்க முடியாது.

ரஞ்சன்-வசுந்தராதேவி நடித்து வெளிவந்திருந்த மங்கம்மா சபதம் படத்தில் என்.எஸ்.கே.மதுரம் ஜோடியின் நகைச்சுவை பகுதி இரசிகர்களை வெகுவாக மகிழ்வித்தவையாகும்.

வேலையின்றி வீட்டில் சோம்பேறியாக இருக்கும் என்.எஸ்.கே.தெருவித்தைக்காரனிடம் சேர்ந்து கொள்ள செய்யும் குறும்புத்தனம் மட்டுமின்றி பின்னர் தெருவில் வித்தைகள் காட்டுவதெல்லாம் இன்றும் நினைவிலிருப்பவை. புளிமூட்டை ராமசாமியும் என்.எஸ்.கேயும் ஏட்டிக்குப் போட்டியாக பாடும் பாட்டொன்று எல்லார் வாய்களிலும் முணுமுணுக்க வைத்தது.

பேமானி பயலே சும்மா கெடடா
ஆகா அம்பிட்டுக்கா இப்ப சோடா?
ஆருன்னு நெனைச்சு
பார்க்கிறே முழுச்சி
அதுக்கெல்லாம் பயப்படமாட்டேன்
அடிச்சாதான் நீ ஆம்பளை சிங்கம்
அறைஞ்சா கொப்பன் காது ஙொய் ஙொய்.

இப்படி போகும் அந்த பாட்டு.

இந்தப் படத்தில் தான் பிற்காலத்தில் பிரபலமாக விளங்கிய நாட்டிய தாரகை வைஜந்திமாலாவின் தாயார் வசுந்தராதேவி ரஞ்சனுக்கு இணை பெண் சோடியாக நடித்திருந்தார். ஒரு கட்டத்தில் அவர்.

அய்யய்யையைய சொல்ல வெட்கமாகுதே.
அய்யா மேலே ஆசையாகுதே....

என்ற பாடலைப் பாடி நடித்திருந்தார். இந்தப் பாடலுக்குரிய மெட்டானது ஆங்கில இசை அமைப்பாளருடையது என்பதாக படத் தயாரிப்பாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருந்ததாகவும் செய்தி வந்தது. மங்கம்மா சபதம் என்பது ஒரு பாட்டி கதையை மையமாகக் கொண்டது.

விளையாட்டுப் போக்கான ஒரு நாட்டின் அரசன், ஒரு தினம் ஊர்வலம் சென்றபோது களத்துமேட்டில் ஓர் இளம் பெண்ணைச் சந்திக்கிறான். துடுக்குத்தனமான அந்தப் பெண்ணுடன் உரையாடிய போது இருவருக்கும் இடையில் பேச்சு முற்றி அரசன் அவளை திருமணம் முடித்து வாழாவெட்டியாக வைத்திருக்கப்போவதாக சவால் விடுக்கிறான். அவளோ அவ்வாறு அரசன் தன் அதிகாரத்தின் மீது தன்னை மணமுடித்து வாழா வெட்டியாக வைத்திருக்க முயன்றால் அவனுக்கே ஒரு மகளைப் பெற்றெடுத்து வளர்த்து அவன் கையில் கசையைக் கொடுத்து அரசனைத் தண்டிக்காமல் விடப் போவதில்லை என்று சவால் விடுகிறாள்.

இது தான் மங்கம்மா சபதம். அரசன் தான் சொன்னபடி மங்கம்மாவை மணம் முடிப்பதும், அவளை தனி அறையில் பூட்டி வைத்து உலக தொடர்பே இல்லாமல் செய் வதும், அவளும் தன்னை சந்திக்க வரும் தந்தையின் மூலம் தான் சிறையிருக்கும் அறைக்கு வெளியில் இருந்து இரகசிய சுரங்க பாதை அமைப்பித்து அதன் மூலம் இரகசியமாக வெளியில் வந்து நடனக்காரியாக மீண்டும் சென்று அரசனை மயக்கி அவன் மூலம் ஓர் ஆண் மகவைப் பெற்று வளர்த்து மகனைக் கொண்டே அரசனை தண்டிக்க முயல்வதும் சுவாரஷ்யமான அம்சங்கள்.

வசுந்தராதேவி வேறும் பல படங்களில் நடித்திருந்தார். இரும்புத் திரையில் இவர் தாயாகவும் அவர் மகள் வைஜயந்திமாலாவே படத்திலும் மகளாக நடித்திருந்தார்கள். ரஞ்சன் மங்கம்மா சபதம் படத்தில் அரசனாகவும் மகனாகவும் இரட்டை வேடத்தில் நடித்திருந்தார். இந்தப் படம் பின்னர் மாத்தளங் என்ற பெயரில் சிங்களத்திலும் எடுக்கப்பட்டு இலங்கையில் வெளியிடப்பட்டு வரவேற்பைப் பெற்றது. ஆனால் சிங்களப் படம் தமிழ் நாட்டில் எடுக்கப்பட்டதால் தமிழ் நாட்டு அரசர் காலத்து உடைகளையே சிங்கள நடிகர்களும் அணிந்து நடித்திருந்தார்கள். முக்கிய நடிகர்கள் இலங்கையிலிருந்து சென்று படத்தில் நடித்திருந்தார்கள்.

ரஞ்சன் ஏற்கெனவே ரிஷ்ய கிருங்கர் என்ற படத்தில் நடித்திருந்தார். அப்போது ரமணி என்ற தமது சொந்தப் பெயரையே பயன்படுத்தியிருந்தார். பட்டதாரியாக இருந்தமையால் ரமணி பி.ஏ. என்று டைட்டிலில் போட்டார்கள். பிற் காலத்தில் ராசிக்காக ரஞ்சன் என்று பெயர் மாற்றப்பட்டது. ரிஷ்ய சிருங்கரிலும் அவருடன் வசுந்தராதேவி தான் நடித்திருந்தார்.

ரஞ்சன் பட்டதாரி மட்டுமல்ல, சங்கீதம், நாட்டியம் முதலியவற்றிலும் தேர்ச்சி பெற்றவர் என்பது தகவல். நடிகர்களில் அந்த காலத்திலேயே விமானம் ஓட்டும் உரிமம் பெற்றவராக விளங்கினார் என்றும் கூறக் கேட்டிருக்கிறேன். சந்திரலேகாவில் எம்.கே.ராதாவின் சகோதரனாக சசாங்கன் என்ற பாத்திரத்தில் வில்லன் வேசம். நிமிடத்துக்கு நிமிடம் முகத்தில் உணர்ச்சிகளை பற்றி நடிக்கும் திறன் பெற்றவராக இருந்தார்.

அபூர்வ சகோதரர்கள் என்று எம்.கே.ராதா பாலுமதி நாகேந்திரராவ் முதலியவர்கள் நடித்து வெளிவந்த தமிழ் படம் நிசான் என்ற பெயரில் இந்தியில் எடுக்கப்பட்டபோது தமிழில் ராதா ஏற்றிருந்த அதே பாத்திரத்தில் ரஞ்சன் இரட்டை வேடத்தில் தோன்றி அகில இந்திய புகழ்பெற்றார். பின்னர் இந்தி படங்களிலும் நடித்திருந்தார். இந்தியிலும் பானுமதியே தோன்றினார்.

அபூர்வ சகோதரர்கள் என்ற படம் கோசிக்கன் பிரதர்ஸ் என்ற ஆங்கிலப் படத்தின் கதையைக் கொண்டதாகவே இருந்தது. அந்த மூன்று படங்களையும் நான் பார்த்திருக்கிறேன். நீரும் நெருப்பும் என்று எம்.ஜி.ஆர். நடித்து ஒன்று வந்தது. அதை நான் பார்க்கவில்லை.

உத்தமபுத்திரனும் இரட்டை சகோதரர் தொடர்பான கதைதான். முதலில் பி.யு.சின்னப்பா நடித்து வந்திருந்தது. பிற்காலத்தில் சிவாஜிகணேசன்-பத்மினி நடித்து வந்திருந்தது. இரண்டுமே நன்றாகத்தான் இருந்தன. சந்திரலேகா என்ற ஜெமினியின் படம் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு இந்தியாவிலும் இலங்கை மற்றும் இந்தியர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் பல வாரங்கள், மாதங்கள் என்று ஓடி சாதனை படைத்திருந்தது. அந்தப் படத்தின் கதை ஒரு சரித்திரக் கதைபோல் இருந்தாலும் கற்பனைக் கதைதான். இருந்தாலும் அதில்வரும் காட்சிகள், சம்பவங்கள், ஆட்டங்கள், பாட்டங்கள் ஏன் நடிப்பு [illegible] போல் அமைந்திருக்கும். படம் பார்ப்பதுபோன்ற உணர்வு ஏற்படாது. வசனங்களைக் குறைத்து சம்பவங்களையும் அதற்கேற்ப காட்சிகளையும் புகுத்தியிருந்தார்கள். படத்தில் சேர்க்கப்பட்டிருந்த சர்க்கஸ் காட்சிகளும் கூட கதைக்கு பொருத்தமாக இருந்தது. சந்திரலேகா காட்டுவாசிகள் மத்தியில் தங்கியிருப்பதாக வரும் காட்சிகளில் அவர்கள் பேசுகின்ற பாஷை வெறும் கற்பனை பாஷைதானாம். ஜெமினி கதைப் பிரிவினரால் உருவாக்கப்பட்டது. காட்டு வாசிகள் பாடி ஆடுவதாக ஒரு பாட்டு வருகிறது. அதுவும் ஒரு கற்பனை மொழியில் தான் பாடப்படுகிறது. அந்தக் காட்டு வாசிகளின் நடனப் பெண்களில் முதன்மை பெண்ணாக வருபவர். வி.என். ஜானகி-எம்.ஜி.ஆரின் பிற்காலத்து மனைவி. நாட்டியக் குதிரை ஆட்டம் ஒன்று வருகிறது. குதிரை வேசத்தில் இருவர் ஆடுவார்கள். அந்தக் குதிரையை ஆட வைப்பவராக சுந்தரி பாய் ஆடி நடித்திருப்பார். இந்த சுந்தரி பாய் பல படங்களில் குணச்சித்திரப் பாகங்களில் நடித்து புகழ்பெற்றவர். ஔயாரில் கொத்தமங்கலம் சுப்புவின் அடங்காப்பிடாரி மனைவியாக நடிக்கிறார். உண்மை வாழ்க்கையிலும் சுப்புவின் மனைவிதான் அவர்.

சந்திரலேகாவில் பிரம்மாண்டமானதொரு முரசு நாட்டியம் வருகிறது. நூற்றுக்கணக்கான அகன்ற பெரிய முரசுகளின் மீது நின்று நூற்றுக்கணக்கான நாட்டியக்காரர்கள் ஆடுவதை படமாக்கியிருக்கிறார்கள். இந்த நடனக்காரர்களில் ஒருவராக யாழ்ப்பாணத்து கலைஞர் ஒருவரும் இடம் பெற்றதாக தகவல் உண்டு. அதில் வரும் அண்ணன்-தம்பி (ராதா-ரஞ்சன்) வாள் சண்டையும் கூட மிக அற்புதமாக படமாக்கப்பட்டிருந்தது.

சந்திரலேகாவில் நடித்திருந்த ரி.ஆர். ராஜகுமாரி அற்புதமான சகலதுறை கலைஞர் எம்.கே.டி.பாகவதர், பி.யு. சின்னப்பா போன்ற பழம் பெரும் நடிகர்களோ மட்டுமன்றி பிற்காலத்தின் பெரும் நடிகர்களான சிவாஜி கணேசன் எம்.ஜி.ராமச்சந்திரன் முதலியவர்களோடும் இணைந்து கதாநாயகியாகவே நடித்திருந்தார். திருமணமே செய்து கொள்ளாதிருந்த ராஜகுமாரி அண்மைக் காலத்தில் அமைதியாக மரணமானார். ஹரிச்சந்திராவில் சின்னப்பாவுடன் சந்திரமதியாக நடித்திருந்த கண்ணாம்பா பற்றி இன்னும் சில முக்கிய விடயங்களை எழுதமறந்துவிட்டேன்.

தெலுங்கு மொழி பேசுபவராக இருந்த போதிலும் தமிழ்ப் படங்களில் தமிழ் வசனங்களை நறுக்கு தெறிக்க பேசி புகழ்பெற்றவர் அவர். இளங்கோவன் என்ற எழுத்தாளர் கண்ணகி படத்துக்காக எழுதியிருந்த அழகான. அடுக் குத் தொடர் வசனங்களே கண் ணாம்பாவே ஆச்சரியப்படும் படி யாக பேசி விளாசியிருந்தார். தமிழ்ப் படங்களில் அடுக்குத் தொடர் வசனங்களை புகுத்தியவர் இளங்கோவன்தான். அதனை அச்சொட்டாகப் பேசி புகழ் சேர்த்தவர் கண்ணாம்பா. பிற்காலத்தில் அறிஞர் அண்ணா, மு.கருணாநிதி மற்றும் தி.மு.கழக எழுத்தாளர்களும் சிறப்பாக பயன்படுத்தி புகழ்சேர்த்தார்கள்.

மனோகரா படத்தில் கருணாநிதி எழுதியிருந்த அடுக்குத் தொடர்களை கண்ணாம்பா மிக அநாயசமாக பேசி நடித்திருந்ததைப் பார்க்க முடிந்தது. வசனத்தின் கருத்து மற்றும் உணர்ச்சிகளை சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் உயர்த்தியும் தாழ்த்தியும் பேசும் ஆற்றல் அவரிடம் காணப்பட்டது. அடுக்குத்தொடர் வசனமானது உரையாடலின் இயற்கை தன்மைக்குப்புறம்பானது என்று சிலர் வாதிப்பதுண்டு. கலை என்று வந்தாலே அது கற்பனையென்பதைத் தான் புலப்படுத்தும். எனவே வழங்கப்படும் கதைக்கும் காட்சிக்கும் ஏற்ற முறையில் உரையாடலை வழங்குவது எழுதுபவரின் திறமை. பொதுவில் இரட்டைக் கருத்துள்ள அல்லது அடுக்குத் தொடர் வசனங்கள் பெரும்பாலும் சரித்திர புராண படங்களில் மிக பொருத்தமாக அமைந்து விடுகின்றன. இந்த மரபு மேற்கு நாட்டு படங்களிலும் காணக்கூடியதே.

டென்கொமான்ட் மென்ட் என்ற ஆங்கிலப் படத்தில் யூல்பிரையினர் பல இடங்களில் இவ்வாறான வசனங்களைப் பேசியுள்ளார். பைபிலில் வரும் பத்துக் கட்டளைகளைக் குறிப்பதான தலைப்பைக் கொண்ட இப் படத்தில், அரசனாக வரும் யூல்பிரையினர் தன் அரண்மனையின் கொத்தளத்திலிருந்து தூரத்தில் நகரம் ஒன்றை மோசஸ் கட்டியெழுப்பிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றான். அங்கே மோசஸ் விரும்பி காதலிக்கும் பெண்ணும் நின்றிருக்கிறாள். அரசன் தன் அமைச்சரைப் பார்த்து பின்வருமாறு சொல்வான்.

The city he builds shall bear my name,
The girl he loves shall bear my child.

தமிழ்: அவன் கட்டியெழுப்புகின்ற நகரம் என் பெயரைத் தாங்கி நிற்கும். அவன் காதலிக்கும் பெண்ணான [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்



## பழங்கதையாகிப் போன தமிழர் வாழ்வு

(கடந்த வாரத் தொடர்ச்சி)

இந்தியா சுதந்திரம் பெற்ற புதிதில் மலேசியாவுக்குத் தூதுவராக டாக்டர் சுப்பராயன் நியமிக்கப்பட்டார். அதற்குப் பிறகு எந்தத் தமிழனும் மேற்கண்ட நாடுகளுக்குத் தூதுவர்களாக நியமிக்கப்படவில்லை. அந்த நாடுகளில் உள்ள தமிழர்கள் பிரச்சினைகளைப் பற்றி அறியாத பிற மொழியினர்தான் அந்த நாடுகளுக்குத் தூதுவர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய அலட்சியப் போக்குகளின் விளைவாக வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு நம்மால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை. உலக நாடுகளில் சிதறிக் கிடக்கும் தமிழர்கள் தாயற்ற பிள்ளைகளைப் போலத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டுத் தமிழர்களின் நிலைதான் இப்படியென்றால் வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களின் நிலை இன்னும் இரங்கத்தக்கதாகும். வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்கள் தாயற்ற பிள்ளைகளைப் போலத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான இளம் பெண்களை விபசாரத் தொழிலில் ஈடுபடுத்தவும் சிறுவர்களும், சிறுமிகளும் எடுபிடி வேலைகளுக்கும் குடும்பம் குடும்பமாக கல் உடைப்புப் போன்ற கடினமான வேலைகளுக்கும் தமிழ்நாட்டிலிருந்து குறைந்த கூலிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் இங்கு வாழ முடியாமல் வெளியேறிக் கொண் டிருக்கும் போது வந்தேறிகளாகத் தமிழ்நாட்டுக்கு வந்த மார்வாடி, குஜராத்தி போன்ற பிற மாநிலத்தவர் நமது தொழில் வணிகம் முதலியவற்றில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திச் சுரண்டிக் கொழுக்கிறார்கள்.

தாராளமய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகப் பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தின் பொருளாதார நிலையை ஆக்கிரமித்துள்ளன.

நமது இயற்கை வளங்களும் கனிமங்களும் இடைவிடாது சுரண்டப்படுகின்றன.

மொழித்துறையில் இந்தியும் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் இசைத்துறையில் தெலுங்கும் ஆட்சி செலுத்துகின்றன. தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாகப் பயிற்சி மொழியாக நீதிமன்ற மொழியாத் தமிழ் ஆக முடியவில்லை. தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழுக்கு இடமில்லை.

வழக்கில் இல்லாது செத்து ஒழிந்த வட மொழியைச் செம்மொழியாக்கி அதை வளர்ப்பதற்குக் கோடி கோடியாகக் கொட்டியமும் இந்திய அரசு சீரிளமைத் திறன் குன்றாத உயிர்த் துடிப்புள்ள மொழியாகத் திகழும் தமிழுக்குச் செம்மொழி மதிப்பைப் பெரும் போராட்டத்துக்குப் பிறகே அளிக்க முன் வந்தது.

நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள சேதுக் கால்வாய்த் திட்டம் தென்னக நதிகள் இணைப்புத் திட்டம் மேற்கு நதி நீரைக் கிழக்கே திருப்பும் திட்டம் போன்ற தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றாமல் சாக்குப் போக்குகளைக் கூறி இந்திய அரசு காலம் கடத்தி வருகிறது.



பொருளாதாரத்துறையிலும் அரசியல் துறையிலும் தமிழகம் தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுக்களை நம்மால் கூற முடியும். இந்த வேண்டாத போக்கிலிருந்து விடுபடுவது எப்படி?

சங்க காலத் தமிழர்கள் மேற்கே ரோமாபுரியிலிருந்து கிழக்கே சீனம் வரையில் வணிகத் தொடர்பு கொண்டு உலகின் மிகச் சிறந்த இனமாக செழித்து வாழ்ந்திருக்கிறார்கள். எகிப்தியர், போனீசியர்கள், கிரேக்கர், உரோமர் போன்றோர் உலகப் புகழ் பெற்றிருந்தனர். ஆனால் நாகரிகம் மிக்க மக்களாக வாழ்ந்த அவர்களின் சிறப்பான வரலாறு இன்று பழங்கதையாய்ப் பகற்கனவாய்ப் போய்விட்டது. எஞ்சியிருக்கும் தமிழர்களுக்கும் அந்த நிலை வந்துவிடக் கூடாது.

## விடுதலைப் போரில் தமிழர் பங்கு

இந்திய விடுதலை போராட்டத்தில் தமிழர்கள் செய்த தியாகமும் பங்களிப்பும் வேறு எவருக்கும் குறைந்ததல்ல. 1851 ஆம் ஆண்டில் முதலாம் சுதந்திரப் போராட்டம் என வர்ணிக்கப்படுகிற போராட்டம் தொடங்குவதற்குப் பல ஆண்டுகள் முன்னாலேயே தென்னாட்டில் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் புலித்தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், திப்பு சுல்தான் போன்றவர்கள் வெள்ளையரை எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். 1806 இல் வேலூர் சிப்பாய் புரட்சி நடந்தது.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தின் வ.உ. சிதம்பரனாரும் சுப்ரமணிய சிவாவும் பாரதியும் செய்த தியாகம் அளவிட முடியாததாகும்.

வீரத் தமிழனான செண்பக இராமன் அந்நிய நாட்டில் முதலாவது இந்தியச் சுதந்திர அரசை நிறுவிய வரலாறு மெய்சிலிர்க்கும் வரலாறாகும்.

'ஜெய்ஹிந்த்' என்ற முழக்



புலித்தேவர் சிலை

கத்தை முதன் முதல் எழுப்பியவன் செண்பக இராமன். அவனைப் பின்பற்றி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த இந்திய தேசிய இராணுவத்தில் பெரும்பங்கு வகித்தவர்கள் தமிழர்களே.

1920 களில் ஆசியாவில் மாசேதுங், ஹோசிமின் போன்றோருக்குச் சமகாலத்தில் இந்தியாவில் முதலாவது கம்யூனிஸ்டாகத் திகழ்ந்தவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் ஆவார். மாபெரும் தலைவர் லெனினின் அன்பையும் மதிப்பையும் ஒருங்கே பெற்றவர்.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி எனும் குஜராத்தி வழக்கறிஞரை மகாத்மா காந்தியாக மாற்றம் செய்த பெருமை தென்னாபிரிக்கா வாழ் தமிழரையே சாரும். தில்லையாடிவள்ளியம்மை என்னும் சின்னசிறிய பெண் செய்த உயிர்த் தியாகம் காந்தியடிகளையே மெய் சிலிர்க்க வைத்தது.

மேனாட்டுக் கல்வி கற்றுத் திரும்பிய காந்தியை முழுத்துண்டு உடுத்திய துறவியாக மாற்றிய பெருமையும் தமிழ்நாட்டு மண்ணுக்கே உரியது.

இப்படியெல்லாம் இந்திய நாட்டின் விடுதலைக்காகத் தொண்டும் தியாகமும் புரிந்த தமிழினம் இப்போது துச்சமாக மதிக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.



வீரபாண்டிய கட்டபொம்மன்

மொழித்துறையில் இந்தியும் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் இசைத்துறையில் தெலுங்கும் ஆட்சி செலுத்துகின்றன. தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாகப் பயிற்சி மொழியாக நீதிமன்ற மொழியாத் தமிழ் ஆக முடியவில்லை. தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழுக்கு இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உன்னிப்பாகக் கவனிப்பவர்' தன்மைகள் உங்களிடம் உண்டா? அப்படி இருக்குமானால் ஒரு மனிதனாக உங்களைக் கொள்வது கடினம். எதைப் பற்றியாவது நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள் அல்லது உங்களுக்கென்று ஓர் அபிப்பிராயம் உண்டா என்பதை அறிய மற்றவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

நிலாமகன்





# அனைவரையும் வசீகரிக்க

வலிமைமிக்க, நீடித்து, நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

## 'பாதிக்கப்பட்டவர்' செய்ய வேண்டியவை.

பணியிடம் அல்லது வேறு எந்த இடமாக இருந்தாலும் உங்களது அடுத்த சந்திப்பில், கீழே சொல்லப் பட்டுள்ளபடி செய்யுங்கள்.

1. ஒவ்வொரு நபரும், செய்வதையும் சொல்வதையும் அதிகமான உற்சாகத்தோடு கவனியுங்கள். கேளுங்கள்.

2. பரிதாபத்துக்குரிய நான் குறை கூறுபவர், உன்னிப்பாகக் கவனிப்பவர் என்ற குணங்களையோ அல்லது அவற்றின் அடையாளங்கள் எதையாவது உங்களால் கண்டு பிடிக்க முடிகிறதா?

3. பாதிக்கப்பட்டவர் போல் இருப்பதைக் காட்ட அவர்கள் என்ன செய்கிறார்கள் அல்லது சொல்கிறார்கள்?


4. இந்த நபர்களிடம் மற்றவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? அவர்கள் என்ன செய்கிறார்கள். எப்படி இருக்கிறார்கள்?

5. பாதிக்கப்பட்டவரின் நடவடிக்கை எத்தகைய உணர்ச்சிகளை உங்களிடம் ஏற்படுத்துகிறது. (உ-ம்) அந்த நபரைக் குறித்துப் பரிதாபப் படுகிறீர்களா, வெறுப்படைகிறீர்களா, கோபமடைகிறீர்களா அல்லது இயலாமையால் எரிச்சலடைகிறீர்களா?

10

### 'பாதிக்கப்பட்டவர்' நிலையிலிருந்து 'தேர்ந்தெடுக்கக் கூடியவர்' நிலைக்கு

பாதிக்கப்பட்டவர் என்ற நிலையில் இருப்பது ஒன்றும் மகிழ்ச்சியானதல்ல: உங்களுடைய வசீகரிக்கும் திறமையை அது வெகுவாகப் பாதிக்கும். மேற்கூறிய பாதிப்புக்குள்ளானவரின் தன்மைகள் ஏதாவது உங்களிடம் இருப்பதாக நீங்கள் எண்ணினால் 'பாதிக்கப்பட்டவர்' என்பதிலிருந்து மாறி 'தேர்ந்தெடுக்கக் கூடியவர்' என்ற நிலைக்குச் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது என்பதை உணரவும். அவ்வப்போது நாமெல்லோரும் 'பாதிக்கப்பட்டவர்'களாக இருக்க முடியும். இறந்த காலத்தில் எப்போதோ அதற்கான ஆதாரம் இருக்கலாம்- குடும்பத்தில் பள்ளியில் மற்ற அனுபவங்களில் நிறைவானதல்லாத, விரும்பத்தகாத, கேட்டேயிராத சில வகையில், சில உணர்ச்சிகளை நம்மிடம் விட்டுச் சென்றிருக்கலாம். இத்தகைய உணர்ச்சிகளை நீக்கி விடுவது அல்லது துறந்துவிடுவது என்பது எளிதான ஒன்று அல்ல. அவை ஆழமாக வேரூன்றிய காரணங்கள்; தவிர அவற்றின் விளைவாகப் பாதிப்புக்குள்ளான நடவடிக்கை என்பது அவற்றை மாற்றுவதைக் கடினமாக்குகிறது. ஆனால் எல்லாவற்றுக்கும் முதலடி எடுத்து வைப்பது என்று ஒன்று இருக்கிறது; அது இந்த விஷயத்தில் தேர்ந்தெடுக்கக் கூடியவராக, வசீகரிக்கும் விளைவைச் செயலாக்குவதற்கான வாய்ப்புகளைத் தேடி பெற்று ஆராய்பவராக ஆவது என்பதைக் குறிக்கிறது. உதாரணத்துக்கு நீங்கள் விரும்பிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை என்றால் இப்படிச் செய்யலாமே- மற்றவர்கள் மீது சும்மாவே குற்றம் சாட்டுவது அல்லது நொந்து போவது என்பதற்குப் பதிலாக இந்த முறை மிகக் கடுமையான பின்னூட்டத்தை வரவேற்கலாம். தவிர அடுத்த முறை விடயங்களை வேறு மாதிரியாகச் செய்யத் தொடங்க, நிதானமாக அதைப் பயன்படுத்தலாம்.



அதிகளவு துடிப்பாக உள்ள 'தேர்ந்தெடுக்கக் கூடியவர்' தங்களுடைய கவர்ச்சி விளைவைப் பரிசோதிப்பதற்கான வாய்ப்புகளைத் தேடிப் பெறுவார்கள். (உ-ம்) அப்படிச் செய்வது என்பது அவர்கள் மனத்துக்கு ஒவ்வாததாக இருந்தாலும் தங்கள் படைப்பு அல்லது கருத்துகளை மற்றவர்கள் முன் வைப்பதற்கான வாய்ப்பை விரைந்து கைப்பற்றுவார்கள். வழக்கமாகச் செய்வது போல் விரைவாகத் தன் கருத்துகளை முன் வைப்பதற்கான வாய்ப்பை விரைந்து கைப் பற்றுவார்கள்.வழக்கமாகச் செய்வது போல் விரைவாகத் தன் கருத்துகளை முன்மொழியாமல், மற்றவர்களுடைய கருத்துகள் மற்றும் யோசனைகளைக் கேட்டுக்கொள்வார்கள்.

தேர்ந்தெடுக்கக் கூடியவர் ஆவதற்கான இன்னொரு வழி, கவர்ச்சி விளைவு செயற்படுவதற்கு முழுவதும் புதிதான சூழல்களைத் தோற்றுவிக்கலாம். புதிய திட்டத்தை வடிவமைத்து அங்கு உங்களுடைய இமேஜை மெருகேற்றி உயர்த்திக் கொள்ள லாம், அல்லது ஒரு புதுச் சூழ் நிலையில், அடுத்தவர் உங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்று காத்திருக்காமல் மற்றவர்களுக்கு நீங்கள் யார் என்று தெரியப்படுத்தலாம்.

### முதல் எண்ணப் பதிவு

நம்முடைய தினசரி வாழ்வில் மனதின் அடி ஆழத்தில் உள்ள உண்மையான நபர் யார் என்பதை மற்றவர்கள் காண அனுமதிக்காமல் ஒரு முகமூடியை அணிந்து மறைத்துக் கொள்வதை நம்மில் பலரும் விரும்புகிறோம். சிலநேரங்களில் அது ஒரு பாதிப்புக்குள்ளானவரின் முகமூடி; ஆனால் அது உண்மையற்ற நபரின் உருவத்தை எடுத்துக் கொள்ளும். அதன் மூலம் ஒரு சிக்கலான உலகை எதிர்கொள்ள நம்மை அனுமதிக்கிறது. (உ-ம்) வெளிப்படையாக அப்படி இல்லாத சூழ்நிலையில் 'எல்லாமே கட்டுக்குள் அடங்கி உள்ளது' என்று ஒருவர் வலியுறுத்திக் கூறினால், அவர் முகமூடியை அணிந்திருக்கிறார் என்பதாகும். அதேபோல் 'எப்படி இருக்கிறீர்கள்' என்று கேட்டால் சுரத்தில்லாமல் 'ஓ, நன்றாக' என்று சொல்லக் கூடியவர்கள் உண்டு; அப்போது அவர்கள் அவ்வளவு நன்றாக இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்திருந்தும் கூட.

அதற்குப் பின்னால் நாம் என்ன உணர்கிறோம் என்பதை முகமூடி மறைக்கிறது. தவிர, நிறைவாக இல்லாத நம்முடைய தன்மை, தகவல் பரிமாற்ற இலக்கைப் பற்றி உறுதியாக இல்லாதது ஆகியவற்றை, அடுத்தவர்கள் நிஜமாகப் பார்த்து விடுவார்களோ என்ற நம்முடைய பயத்தையும் அது மறைக்கிறது. உங்கள் கவர்ச்சியின் விளைவை உயர்த்திக் கொள்ளும் இந்தப் பயணத்தில் உங்களுடைய குறிப்பிட்ட முகமூடி எப்படி இருக்கிறது. அதற்குப் பின்னால் என்ன உள்ளது என்பதை நீங்கள் ஆராய்வது அவசியமாகிறது. முகமூடிக்குப் பின்னாலுள்ள செயற்பாட்டை கண்டறிய முயற்சிசெய்யுங்கள்.

நாம் என்ன உணர்கிறோம் என்பதை முகமூடி மறைக்கிறது. தவிர, நிறைவாக இல்லாத நம்முடைய தன்மை, தகவல் பரிமாற்ற இலக்கைப் பற்றி உறுதியாக இல்லாதது ஆகிய வற்றை, அடுத்தவர்கள் நிஜமாகப் பார்த்து விடுவார்களோ என்ற நம்முடைய பயத்தையும் அது மறைக்கிறது.

# கடவுள்

சிறுவயதில் படிப்போ சைவவினாவிடை சிவனே ஒருவரென்றார். பின்னரோ கூறினர் கணபதியாம் , முருகனாம் , வீரபத்திரராம் வைரவராம். பின்னுங் கூறினர். ஐயப்பன், அனுமன் என்றே. இன்னுங் கூறினர் விட்டுணு, பிரமா என்றே. அதிகம் கூறினர் பார்வதி, லக்சுமி, சரஸ்வதி , காளி, பத்திரகாளி என்றே தான் பலரையும் அரிதான் சிவனென்றனர். பின்னே சிவனே அரியென்றனர். முன்னே கணபதியாம். பின்னே சிவனென்றனர். மாமனாம் மச்சானாம். தாயாம் தந்தையாம். ஐயகோ! கடவுள்கள் எத்தனையோ? தலையோ வெடிக்கிறதே. மூளைதான் குழம்பியே- என்னும் இருக்கோ பிள்ளைகளோ? சிவனுக்குத்தான் யாரறிவார். சொல்லப்பா சிவனே தலைவலி போகவேதான் பிறக்கவில்லையோ சிவனுக்குப் பேரர்கள்! ஆசையாய் இருக்குதையா, பார்க்கவேதான் காணலாமோ அடுத்த யுகத்தில் ஐயா! காட்டிடுவீரே கலியுகத்தில் [illegible] சருக்கு கைலையை காட்டி[illegible]!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி 27.10.2013



# துயிலும் இல்லங்களின் விளக்கேற்றுவதற்கான காத்திருப்பு

தமிழ்ச்செல்வன்



மாவீரர் துயிலும் இல்லங்களின் மகிமை கடந்த நான்கு வருடங்களாக மறக்கப்பட்டிருந்து. இராணுவத் துப்பாக்கி முனையில் அவ்வாறானதொரு தற்காலிக மறதி உருவாகியிருந்தது; அல்லது உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆழ்மனதில் மாவீரர்களுக்கான தீபங்கள் ஒளிர்ந்து கொண்டேயிருந்தன. அதன் பிரதிபலிப்பையே மாகாண சபைத் தேர்தலில் பார்த்தோம்.

மாவீரர் துயிலும் இல்லங்கள் மீள அமைக்கப்படும் என்ற தேர்தல் உறுதிமொழி மிகவும் கவர்ச்சிகரமானதாக மாறியிருக்கின்றது. தெற்கில் சர்ச்சைக்குரிய கவர்ச்சியாகவும், வடக்கில் எழுச்சிமிகு கவர்ச்சியாகவும் அவதாரம் எடுத்திருக்கின்றது.

வடக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி கொண்ட பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரிடம் செய்தியாளர்களால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது நேரடியாக ஆம், இல்லை என்று பதிலளிப்பதைத் தவிர்த்த தலைவர்கள், மக்களின் விருப்புக்கு மாறாக நடக்க மாட்டோம் என்று அங்கு சத்தியம் செய்தனர்.

இந்த நிலையில், வட மாகாண சபை அமைக்கப்பட்டதிலிருந்து அந்தக் கதை பற்றிய கதையாடல்கள் கனதி இழந்துபோய் இருந்தன. தேர்தலுக்குப் பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைப்பது பற்றிய எந்த அறிக்கைகளும், மேடை முழக்கங்களும் வெளியாகவில்லை. இதன் எதிரொலியாகத் திடீரென இரண்டு பிரதேச சபைகள் இந்த விடயத்தைத் தீர்மானமாகக் கொண்டு வந்து நிறைவேற்றின. அதற்காகத் தீர்மானத்தை முன்மொழிந்த உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டார் என்பது வேறுவிடயம்.

தமிழ் தேசியத்தையும், கடந்த 3 தசாபதகால ஆயுதப் போராட்டத்தையும் நேசிக்கும் மக்களும், அதனைப் பிரதிபலிக்கும் அரசியல் தலைமைகளும் மாவீரர் துயிலுமில்லங்களை நிராகரிக்க மாட்டார்கள். அது அவர்களின் கனவிலும், நினைவிலும் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். அதற்கு ஆதாரமாக நம் மத்தியில் இருக்கும் கதைகள் நீண்ட ஆயுள் பெற்றவை. மறந்து, மண்ணள்ளிப் போட்டுவிட்டு, கடந்து போக முடியாதவை.

## குரல்-1

நான் தற்போது மன்னாரில் போரில் உறவுகளை இழந்த சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து படித்துக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய அப்பா மீளிணைக்கப்பட்ட போராளியாக இயக்கத்திற்கு சென்று இராணுத்தின் கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். எனக்கு அப்போது பன்னிரண்டு வயது. எனக்கு பின்னால் இரண்டு தம்பிமார். எங்கள் மூன்று பேரையும் அம்மா மிகவும் கஸ்டத்தின் மத்தியில் வளர்த்தார். ஆனாலும் மாத்தளனில் வைத்து தம்பிக்கு கஞ்சி வாங்க போன அம்மா திரும்பி வரவில்லை. நான் தேடிப் போகும் போது அம்மா இரத்த வெள்ளத்தில் கிடந்தார். பின்னர் இரண்டு தம்பிகளையும் பாதுகாக்க பெரும்பாடு பட்டேன். தற்போது என் தம்பியாக்களோடு இந்த விடுதியிலே தங்கியிருக்கின்றேன்.

வன்னிக்கு எங்களின் காணியைப் பார்க்கப் போகும் போதெல்லாம் என்னுடைய அம்மா, அப்பாவின் நினைவுதான் வரும். என்னுடைய அப்பாவை புதைத்த இடத்திற்கு அருகில் இரண்டு தென்னைகள் நின்றன.

ஆனால் தற்போது அந்த மரம் வேரோடு பிடுங்கப்பட்டு அந்த இடத்தில் சிங்களத்தினால் எழுதப்பட்ட வாசகம் ஒன்று தொங்கவிடப்பட்டிருக்கின்றது. அதைப் பார்க்கும் போதெல்லாம் பெரிதாக அழவேண்டும் போல் இருக்கின்றது. என்னுடைய அப்பாவின் இறந்த தினத்தைக்கூட நிம்மதியாக கொண்டாட முடியாமல் இருக்கிறது.

## குரல்-2

என்னுடைய கணவர் இந்திய இராணுவத்தால் கொலை செய்யப்பட்டார். அவரின் இறப்பின் பின்னர் என் இரு பிள்ளைகளையும் ஒவ்வொரு கோயில் திருவிழாக்களிலும் கச்சான் விற்றே வளர்த்தேன். சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் பசிக்காக பிச்சை கூட எடுத்திருக்கின்றேன். இருந்தும் 2000ஆம் ஆண்டு என்னுடைய மூத்த மகன் இயக்கத்தில் போய்ச் சேர்ந்தான். அதே வருடத்தில் முகமாலை சண்டையில் அவன் வீரச்சாவு. அவனது உடல் விசுவமடு துயிலுமில்லத்தில் புதைக்கப்பட்டது. பின்னர் இரண்டாவது மகனுக்குத் திருமணம் செய்து வைத்தேன். அவனுக்கு ஒரு பிள்ளையும் பிறந்தது. ஆனாலும் அந்தக்கால கட்டத்தில் கட்டாயமாக வீட்டுக்கு ஒருவர் எல்லைப் பாதுகாப்பிற்கு செல்ல வேண்டியிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்திலே அவனையும் பறி கொடுத்தேன். தற்போது என்னுடைய மருமகளுடன் சேர்ந்திருக்கின்றேன். என்னுடைய மகன்களின் நினைவு வரும் போதெல்லாம் அழுவேன். கடந்த வருடம் மாவீரர் தினத்தன்று வீட்டுக்கு முன்னால் தீபம் ஏற்றினேன். அதனை இராணுவத்தினர் பிடுங்கி எறிந்து எச்சரித்து விட்டுச் சென்றார்கள். எங்களுடைய பிள்ளைகளைக்கூட நிம்மதியாய் வழிபட முடியாமல் இருக்கின்றேன்.

## குரல்-3

1983 கலவரத்திற்கு பின்னர் பாதுகாப்பிற்காக வன்னியை நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. அங்கே திருமணமாகி சில வருடங்களுக்கு பின்னர் மூன்று பிள்ளைகளின் தந்தையும் ஆனேன். என் மனைவி இராணுவத்தின் உலங்குவானூர்தித் தாக்குதலில் என் கண்முன்னே இறந்துவிட்டாள். பின்னர் போரின் வேகமும் [illegible] வருடத்திற்குப் பின்னர் 'ஜெயசிக்குரு' சண்டையில் அவன் வீரச்சாவு. அவனின் கல்லறை முள்ளியவளை துயிலுமில்லத்தில் இருக்கின்றது.

பின் வந்த காலத்தில் என்னுடைய இரண்டாவது மகளும் போராடப் போனாள். அவள் போய் சேரும் போது 'ஜெயசிக்குரு' சண்டை உச்சத்தை பெற்றிருந்தது. நான் அவளை என்னோடு சேர்ப்பதற்கு எடுத்த முயற்சி எல்லாமே தோல்வியிலேயே முடிந்தது. சேர்ந்து மூன்று மாதங்களில் மகளும் என்னை விட்டுச் சென்று விட்டாள். பெட்டிகூட திறக்கப்படாத நிலையில் முள்ளியவளை துயிலுமில்லத்தில் அடக்கம் செய்தார்கள். அதன் பின்னர் என்னுடைய கடைசி மகனை பாதுகாக்கத் தொடங்கினேன். ஆனால் அதுவும் முடியவில்லை. இறுதிப் போரில் அவனையும் இழந்தேன். தற்போது தனிமையாக அலைகிறேன். ஒவ்வொரு வருடமும் மாவீரர் தினம் வரும்போதெல்லாம் என்னுடைய பிள்ளைகள் நினைவாகவே இருக்கின்றது. என் பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தில் பெரிய கட்டடங்கள் வளர்ந்திருக்கின்றன. அந்த வீதியால் செல்லும் போதெல்லாம் நான் திரும்பிப் பார்ப்பேன். என் பிள்ளைகளை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்வேன். இன்னும் சில காலத்தின் பின்னர் அந்தப் பக்கம் திரும்பி பார்ப்பதும்கூடத் தடை செய்யப்படலாம்.

இப்படிப் பலரது ஏக்கங்கள் தங்கள் பிள்ளைகள், உறவுகளுடன் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. போருக்குப் பின்னர் எதுவும் செய்ய முடியாது என்ற நிலையில் தம் [illegible]களை, உறவுகளை நினைந்து அழுதிட முடியா ஏக்கத்தை நெஞ்சுக்குள்ளேயே புதைத்து விட்டவர்களின் உணர்வு [illegible] தேர்தல் வாக்குறுதிகள் [illegible] கண்ணீர் சிந்த வைத [illegible] இப்போது அவர்களுக்கு உ[illegible]யான ஒரு தீர்வு கிடைக்[illegible] என்ற ஏக்கத்துடன் காத்திரு[illegible] ஆரம்பித்திருக்கிறார்கள். அவ[illegible]களின் நம்பிக்கையை காப்பாற்ற வேண்டிய கடமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்ற[illegible] என்பதை அதன் தலைவர்க[illegible] கவனத்தில் கொள்ள வேண்[illegible] அவர்கள் மொழியில் [illegible] இதுவும்கூட நல்லிணக்கத்[illegible]கான அடியெடுப்புத் தான் [illegible]பதை அவர்கள் தங்கள் சக சிங்கள அரசியல்வாதிகளுக்குப் புரிய வைக்க வேண்டும்.

> தமிழ் தேசியத்தையும், கடந்த 3 தசாப்தகால ஆயுதப் போராட்டத்தையும் நேசிக்கும் மக்களும், அதனைப் பிரதிபலிக்கும் அரசியல் தலைமைகளும் மாவீரர் துயிலுமில்லங்களை நிராகரிக்க மாட்டார்கள். அது அவர்களின் கனவிலும், நினைவிலும் பிர காசித்துக் கொண்டேயிருக்கும். அதற்கு ஆதாரமாக நம் மத்தியில் இருக்கும் கதைகள் நீண்ட ஆயுள் பெற்றவை. மறந்து, மண் ணள்ளிப் போட்டுவிட்டு, கடந்து போக முடியாதவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஞாநி

# பெரு நாசத்தை நோக்கி

# இன்னும் சில நாள்கள்...



புகுஷிமா, ஜப்பானின் கொன்ஷூ தீவு அருகே இருக்கும் அணு உலை. 2011 மார்ச் 11 அன்று ஏற்பட்ட 9 ரிச்டர் அளவு நிலநடுக் கம் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழிப் பேரலை அழிவு களால் இந்த அணு உலை மோசமாகச் சேதமடைந்தது.



உலகின் மிகமிக ஆபத்தான அணு உலை மீட்பு நடவடிக்கை இன்னும் சில நாள்களில் ஜப்பானில் ஆரம்பமாக இருக்கின்றது. உலக அணுசக்தி வரலாற்றிலேயே இதுவரை செய்யப்படாத ஒரு மீட்புப் பணி இது. ஜப்பானில் சிதைந்து கிடக்கும் ஃபுகுஷிமா அணு உலையில் இது ஆரம்பிக்கப்படும். இது தோற்றால், அமெரிக்கா வீசிய அணு குண்டுகளால் ஹிரோஷிமாவில் ஏற்பட்ட அழிவுகளையும்விட ரஷ்யாவின் செர்னோபில் அணு உலை விபத்தால் ஏற்பட்ட நாசங்களையும்விடப் பெரும் நாசம் உலகில் ஏற்படும். எனினும் இங்கு தோற்கும் வாய்ப்பே அதிகம் என்பதுதான் நாம் கவலைப்பட வேண்டிய விஷயம்.

புகுஷிமா, ஜப்பானின் கொன்ஷூ தீவு அருகே இருக்கும் அணு உலை. 2011 மார்ச் 11 அன்று ஏற்பட்ட 9 ரிச்டர் அளவு நிலநடுக்கம் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழிப் பேரலை அழிவுகளால் இந்த அணு உலை மோசமாகச் சேதமடைந்தது. பாதிக்கப்படுவதற்கு 14 நாள்கள் முன்பாகத்தான் இந்த அணு உலைகளில் ஒன்றை ஜப்பானிய அரசு மூடியிருந்தது. இந்த வளாகத்தில் மொத்தம் 6 உலைகள் உள்ளன.

### அபாயக் குச்சிகள்

ஃபுகுஷிமாவில் இருக்கும் அணு உலை வளாகத்தில் நான்காம் உலையில் இருக்கும் எரிபொருள் குச்சிகள்தான் இப்போதைய பிரச்சினை. எல்லா உலைகளின் பாதுகாப்புக் கவசங்களும் விபத்தில் முற்றாகச் சிதைந்துவிட்டன. எரிபொருள் குச்சிகள் இருக்கும் பகுதிக்கு மேற்கூரையே இப்போது இல்லை. கட்டடமே நொறுங்கி விழுந்துகொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது. அதனுள்ளே நீர்த் தொட்டியில் குச்சிகள் உள்ளன. குச்சிகளின் கடும் வெப்பத்தையும் கதிரியக்கத்தையும் குளிர்விக்க வேண்டிய நீரே கொதிநிலையில் இருக்கிறது. நீரை விட்டு வெளியே குச்சிகள் வந்தால், காற்றில் பட்டதும் உடனே தீப்பிடிக்கக் கூடியவை. பெரும் கதிர்வீச்சை சீனா முதல் மேற்கு அமெரிக்கா வரை பரப்பக் கூடியவை. இந்தக் கதிர்வீச்சின் அளவு ஹிரோஷிமா அணுகுண்டு வெடிப்பில் இருந்த கதிர்வீச்சைப் போல 14 ஆயிரம் மடங்கு அதிகம் இருக்கும்.

எரிகுச்சிகளை உலையிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து இன்னொரு பத்திரமான நீர்த் தொட்டியில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால், கட்டடம் சிதைந்து இப்போதுள்ள தொட்டியிலிருந்து குச்சிகள் வெளிப் பட்டால், 14 ஆயிரம் ஹிரோஷிமாக்கள் நடந்தே தீரும். எரிகுச்சிகளை வெளியே எடுப்பது இன்னொரு தொட்டியில் வைப்பது எல்லாமே நீருக்குள்ளேயே நடக்க வேண்டும். காற்றுவெளியில் குச்சிகள் வந்தால் உடனே பெரும் தீ விபத்தும் கதிரியக்கமும் நடக்கும். ஒவ்வொரு குச்சியும் 30 கிலோ எடை உள்ளது. 15 அடி நீளம் உடையது. மொத்தம் 1,331 குச்சிகள் இருக்கின்றன. எரிபொருள் குச்சியை அணு உலைக்குள் பொருத்துவது, எடுப்பது எல்லாம் சாதாரண சமயத்தில் கணினி உதவியுடன் இயந்திரங்களால் துல்லியமாகச் செய்யப்படும் வேலைகள். ஆனால், இப்போது எல்லாமே சிதைந்து கிடக்கும் நிலையில், இதை மனிதர்கள் நேரடியாக ஒரு சில கருவிகள் உதவியுடன்தான் செய்தாக வேண்டும். குச்சிகள் எதுவும் தீப்பெட்டியிலிருந்து தீக்குச்சியை உருவுவதுபோல நேராக இல்லை. எல்லாம் விபத்தில் வளைந்தும் உடைந்தும் முறுக்கிக்கொண்டும் கிடக்கின்றன.

### யார் செய்வது?

இந்தப் பிரமாண்டமான, ஆபத்தான வேலையை நவம்பரில் யார் செய்யப் போகிறார்கள்? உலையின் உரிமையாளரான, தனியார் நிறுவனமான டெப்கோ தானே செய்யப்போவதாகச் சொல்கிறது. இதுவரை ஃபுகுஷிமா அணு உலை விபத்துக்குப் பின் உலையிலிருந்து கதிரியக்கம் பரவாமல் தடுக்கும் வேலையை வேறு யாரிடமும் ஒப்படைக்காமல் டெப்கோ தானே செய்துவருகிறது. ஜப்பான் அரசு பணம் மட்டும் கொடுத்தால் போதும் என்கிறது. பணமும் அள்ளி வழங்கப்படுகிறது. ஆனால், டெப்கோவால் இதுவரை எந்தப் பாதுகாப்புப் பணியையும் முழுமையாகச் செய்ய முடியவில்லை. ஏற்கெனவே, இதே உலை வளாகத்தில் இன்னொரு பகுதியில் கதிரியக்கம் உள்ள நீர், ஒரு பகுதியிலிருந்து கசிந்து இன்னொரு பகுதிக்குச் செல்வதை டெப்கோ எத்தனை முயன்றும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஒரு பக்கம், அரசிடம் கோடிக் கணக்கில் பண உதவி பெற்றுக்கொள்ளும் டெப்கோ, இன்னொரு பக்கம் ஆள்குறைப்பையும் சம்பள வெட்டையும் செய்துகொண்டிருக்கிறது. 2011 விபத்துக்குப் பிறகு, தொழிலாளர் சம்பளத்தில் 20 சதவீதம் வெட்டப்பட்டது.

இரண்டு வருடங்களில் 1,800 தொழிலா ளர்கள் வேலை இழந்தனர். தொடர்ந்து பணியாற்றுவோரில் 1,973 பேருக்கு தைராய்டு கதிர்வீச்சின் விளைவாகப் புற்று நோய் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நவம்பர் சவாலை டெப்கோவாலோ ஜப்பானாலோ தனியே சந்திக்க இயலாது என்ற கவலையை அமெரிக்க அரசியல்வாதிகள் தம் நாட்டு நாடாளுமன்றத்தில் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

உலகில் எல்லா நாடுகளிலும் இருக்கும் அணு விஞ்ஞானிகள் இணைந்து ஃபுகுஷிமாவில் இடர் தடுப்புப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கை ஐ.நா. சபை முன்பு வைக்கப்பட்டிருக்கிறது.


### ஊழலின் விளையாட்டு

ஃபுகுஷிமா விபத்து இயற்கைப் பேரழிவால் மட்டும் நடந்தது அல்ல. உலை வடிவமைப்பு சரியில்லை என்று பல வருடம் முன்னரே பொறியாளர்கள் எச்சரித்ததை டெப்கோவும் அரசும் மதிக்கவில்லை. விபத்துக்குப் பின் நடந்த ஜப்பானிய அரசின் விசாரணையில் இந்த விபத்து மோசமான உலை வடிவமைப்பினாலும், அரசு அதிகாரிகளுக்கும் டெப்கோவுக்கும் இடையே இருந்த கள்ளப் பேரங்களினாலும், மனிதத் தவறுகளாலும் நடந்த விபத்து என்றே கூறப்பட்டது. விபத்துக்குப் பின்னர் மூன்று உலைகளின் மேற்கவசம் எல்லாம் நொறுங்கிவிட்டமை தெரிந்திருந்தும், அடுத்த இரண்டரை வருடங்களுக்கு அதை மறைத்து டெப்கோ பொய் சொல்லிக்கொண்டிருந்தது.

இந்த மாதம் 9ஆம் திகதியன்றுகூட, கதிரியக்க நீர்த் தொட்டியில் நடந்த தவறினால், ஆறு தொழிலாளர்கள் கதிரியக்க நீரில் முக்குளித்து கதிர்வீச்சுக்கு ஆளானார்கள். இந்த ஒரு விபத்திலேயே 10 தொன் கதிரியக்க நீர் வெளியே கொட்டிவிட்டதாக அதிகாரபூர்வமாகவே ஒப்புக் கொள்ளப்பட்டது. இது தவிர, தினசரி 300 தொன் கதிரியக்க நீர், ஓடைகள் வழியே கடலில் கலப்பதாக டெப்கோ ஒப்புக்கொண்டிருக்கிறது. அவசர அவசரமாகக் கட்டப்பட்ட ஆயிரம் கதிரியக்க நீர்த் தொட்டிகளிலும் கசிவுகள் இருந்து கொண்டே இருக்கின்றன.

நவம்பரில் மேற்கொள்ள வேண்டிய பெரும் ஆபத்தான பணி மொத்தப் பணிகளில் ஒரு துளிதான். இந்த அணு உலை வளாகத்தை முற்றிலுமாகச் செயலிழக்கச் செய்ய 40 ஆண்டுகளும் 11 பில்லியன் டொலர்களும் தேவை. உலை வளாகத்தில் கசிந்திருக்கும் புளூட்டோனியம் தனிப் பிரச்சினை. உலக அணுசக்தி வரலாற்றில் இதுவரை புளூட்டோனியக் கசிவுகள் சில அவுன்ஸ் கணக்கில் மட்டுமே இருந்திருக்கின்றன. ஆனால், ஃபுகுஷிமாவில் தொன் கணக்கில் புளூட்டோனியக் கசிவு ஏற்பட்டிருக்கிறது.

இன்று அணு உலை விபத்து என்பது ஒரு குறிப்பிட்ட நிறுவனம் அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது குறிப்பிட்ட நாடு சம்பந்தப்பட்ட விஷயம் மட்டும் அல்ல; அது எல்லை கடந்த பயங்கரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
27.10.2013

# பில்  கேட்ஸ்

## உலக பணக்காரன் உருவான கதை




ஏறக்குறைய அமெரிக்கா முழுவதும் மைக்ரோசொஃப்டின் "மும்மூர்த்திகள்" வெற்றிக் கொடியை நாட்டியிருந்தனர்.

அலுவலகங்களும், நிறுவனங்களும், கணினிகளும் அமெரிக்காவில் மட்டும்தான் இருக்கின்றனவா? அவை அகிலம் முழுவதும் இருக்கிறதல்லவா? அப்படி இருக்கும் போது மைக்ரோசொஃப்டின் வியாபாரம் அமெரிக்காவோடு நின்று விடுமா என்ன?

மைக்ரோசொஃப்ட் உருவாக்கிய ஒவ்வொரு மென்பொருளின் வெற்றிக்குப் பின்னாலும், கோடிக்கணக்கான டொலர்கள் இலாபமாகக் குவிந்தன. அதைத் தொடர்ந்து மைக்ரோசொஃப்டுக்கு வேலைகள் குவிவதும், அதற்காகக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுவதும் தொடர்கதையானது.

அமெரிக்கச் சந்தையில் பில்லியன்களாகக் குவித்த பில்கேட்ஸ், தமது மென்பொருள்களை வெளிநாட்டுச் சந்தைகளிலும் விற்க விருப்பப்பட்டார். ஏற்கெனவே பில்கேட்ஸ் மற்றும் மைக்ரோசொஃப்டின் பெருமை வெளிநாடுகளின் காதுகளுக்கும் எட்டியிருந்தது.

குறிப்பாக மைக்ரோசொஃப்ட் தயாரித்த 'மல்டி பிளான்' என்கிற மென்பொருள் ஜப்பான், பிரெஞ்சு, இத்தாலி, ஜேர்மனி, ஸ்பானிஷ் போன்ற மொழிகளிலும் இயங்குமாறு மாற்றியமைக்கப்பட்டு ஐரோப்பிய சந்தைகளுக்கு அனுப்பப்பட்டது.

மைக்ரோசொஃப்டிலிருந்து "பாப் ஒரியர்" தலைமையில் இங்கிலாந்துக்குச் சென்ற விற்பனைக் குழு மிகப்பெரும் வெற்றியடைந்தது. மைக்ரோசொஃப்டின் தயாரிப்புகளுக்கு அங்கே பெரிய அளவில் வரவேற்புக் கிடைத்தது.

### வெளிநாடுகளில் வெற்றிக் கொடி

மைக்ரோசொஃப்டின் பிரான்ஸ் தலைவரான "பெர்னார்ட் வெர்னஸ்" இரவெல்லாம் பயணம் செய்து, விடிந்ததும் எதிர்ப்படுகிற நகரில் கடை விரித்து மென்பொருள் விற்பனையில் ஈடுபடுவார்.

இரவு வந்ததும் கடையைச் சுருட்டிக் கொண்டு அடுத்த நகரத்தைக் குறி வைத்துச் செல்வார். இப்படியாக பிரான்ஸின் மூலை மூடுக்கெல்லாம் மைக்ரோசொஃப்டின் மென்பொருள்கள் விற்பனையாயின. அதே சமயத்தில் பிரான்ஸில் புகழ் பெற்றிருந்த 'விக்டர் கணினிகளில் இயங்குவதற்கேற்ற மென்பொருள்களும் மைக்ரோசொஃப்டால் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டன.

ஜேர்மனியிலும் மைக்ரோசொஃப்டின் மல்டி பிளான் விற்பனை உச்ச நிலையை எட்டியது. ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகளிலும் மைக்ரோசொஃப்ட் தனக்கென்று ஒரு சந்தையைப் பிடித்துக் கொண்டது. ஐரோப்பா முழுவதிலும் மைக்ரோசொஃப்ட் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியது.




அமெரிக்கச் சந்தையில் பில்லியன்களாகக் குவித்த பில்கேட்ஸ், தமது மென்பொருள்களை வெளிநாட்டுச் சந்தைகளிலும் விற்க விருப்பப்பட்டார். ஏற்கெனவே பில்கேட்ஸ் மற்றும் மைக்ரோசொஃப்டின் பெருமை வெளிநாடுகளின் காதுகளுக்கும் எட்டியிருந்தது.

அழகிய பாண்டியன்

---

# ரோபோக்களுக்கு மூளை உருவாக்கிய இந்திய வம்சாவளி விஞ்ஞானி

[illegible]



கற்றுக் கொண்டு, செயல்படும் திறனைப் பெறும் வகையில் இந்த மூளை வடிவமைக்கப்பட்டுள்ளது.

[illegible]





பேராசிரியர் ஜெகநாதன் சாரங்கபாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தையிட்டி
அ. இராசதுரை



# ஆண்டியும் அரசனாகி...

அந்தப் பிரசித்தி பெற்ற. விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவத்துக்கு இன்னும்.... பதினைந்தே பதினைந்து நாள்களிருக்கத்தக்கதாய்.... ஆண்டி : என்னும் நாமத்தையுடைய அந்த ஆண்டிப் பயலானவன்.... அந்தக் கோயில் தேர் முட்டியில் போய் ஒரு மகாராஜனாய்க் குடிகுந்திக்கொண்டான்....!?

....இந்த நிகழ்வானது. அந்தக் கோயில் வட்டாரத்துக்கே ஒரு பெரும் அதிரடி மாதிரியாய்.... அந்தக் கோயில் நிர்வாகத் தினரையே கொண்டெழுப்பி விடுகின்றது. "இந்த ஆண்டிப் பரதேசியை ....இந்தத் தேர் முட்டியிலை ஏற. இந்தப் பிள்ளையார் ஏன்... விட்டார்....? இப்பவே யானையாய் வந்து உந்தக் கஞ்சல் குப்பைப் பயலை உழக்கியெறிய வேணும்...?" கோயில் நிர்வாகத்தின் தலைவரான மந்திரி முழக்கியெறிந்தார்.

"அறுவானாலை. இந்தக் கோயிலின்ர புனிதத் தன்மையே.... [illegible]வுனாய்ப் போச்சுது...? எனி அடுத்த பிராயச்சித்த கும்பாபிஷேகமொண்டு செய்தாத்தான் சரி..." செயலாளர் பொன்னம்பலப் பெருமான்... பொங்கல் பானையாய் பொங்கிச் சரித்தார்...?!

"இழுத்தெறி இந்த வடுவாவை .. என்னும் பெட்டைச் செங்கரியன் மாதிரி நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது...?? நாளைக்கு பிள்ளையார் தேரிலை ஏற வாற மட்டைக்கு.... ஆரை.... இவனையா தேரிலை வைச்சிழுக்கிறது..?"

பொருளாளரான கந்தப்பநாயனார்.... தேரிலன்றைக்குப் பிள்ளையாரின் தேரடியில் அடித்துச் சிதற வைக்கும் சிதறு தேங்காய்க் குவியலாய் சிதறிப் பறந்தார்.....??

"....பிள்ளையாற்றை. திருவிழா தொடங்குறதுக்கிடேலையே.. உந்தாண்டி. உதாலை விலகிடுவன்.. உந்த உதுகளேன் எல்லாஞ் சேந்து மண்டத்தலைக் காகங்கள் கணக்காய் சும்மா கத்தித் துலைக்குதுகள்....? இந்தப் பிள்ளையார் தான் விரும்பி ஆண்டியை கூப்பிட்டவராக்கும்....!"

நிர்வாகக் கொமிற்றியின் ஒரு முக்கிய உறுப்பினரான விக்கினன். தனக்குச் சரியென்று பட்டுவிட்ட நியாயத்தை தனக்குள்ளே.... பேசிப்பறைந்து அதனை... ஆண்டியடி மோதகமாய் சித்தி புத்தி சமேத சித்திவிநாயகனின் பாதார விந்தங்களில் வைத்தும் விடுகின்றார்.....!

".....நமக்கு.... ஆண்டியும் சரி..அரசனும் சரி.. எல்லோருக்கும் அருளிச் செல்வேன்....! இந்த..... ஆண்டியானவன்...... என்னிலை... வைத்திருந்த ஒரு பக்தி வெறி காரணமாகத்தான்...... வெளிநாட்டிலை பெரிய குபேரனாயிருக்கும். மகனுக்கு. "விநாயக புத்திரன்" என்னும் நாமத்தை சூடிக் கொண்டதையெல்லாம் நாமறிவோம்....!! ஆண்டியும்.... அரசனாக.... அருளிச் செல்வோம்....!!!"

இப்படியெல்லாம் திருவாய் மலர்ந்தருளுவது போல். எல்லோர் பதில்களுக்கும் அதி மேலான பதிலாய் பிரணவப் பொருளாய் ஓங்காரமூர்த்தி மூலஸ்தானத்தில் ஒளிவீசிக் கொண்டிருந்தார்....!!

"....எனி.... எந்த மந்திரி வந்தாலென்ன.. எந்த. ஜனாதிபதி வந்தாலென்ன.. இந்தத் தேர் முட்டியாலை என்னைக் கீழை இறக்கேலாது...?" இந்தக் கோயிலடியின்.... மகா பரபரப்பை.... கோலாகலமாய்..... அவதானித்துக் கொண்டிருந்த இந்த ஆண்டி.... இப்படியொரு.... பிள்ளையார் பிடித்து வைத்து தனக்குத் தெரிந்தமட்டுச் சினிமாப் பாடல் வரிகளைக் கம்பீரமாய் பாடவும் தொடங்கினான்.

....போனால் போகட்டும் போடா ..... இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா.. .....யாரை எங்கே வைப்பதென்று யாருக்கும் புரியேலே.... அட அண்டங் காக்கைகளுக்கும் குருவிகளுக்கும் பேதம் புரியலை..

.....யாரை நம்பி நான் பொறந்தேன் போங்கடா போங்க.... காலம் வெல்லும் வென்றபின்னே வாங்கடா வாங்க..

அந்தக் கோயில் வட்டாரத்தையே.... ஒரு திருவிழா கலக்கு கலக்கித் தள்ளியே விடுகின்றான்....! அந்தச் சூட்டோடு சூடாய்..... தேர்முட்டியைச் சுற்றி ஒரு கூட்டமே கூடிப் பரபரக்கத் தொடங்கியும் விடுகின்றது....

".....சவுந்தரராஜனும். பிச்சை வாங்க வேணுமென்டுதான் சொல்ல வேணும்....?" ஆண்டியின் தெரிந்த மட்டுச் சினிமாப் பாடலுக்கு. இப்படியாய் ஒருவர் விமர்சனம் சொன்னார். "நானுமேதோ.....



கழுதைகத்தி... என்றவாராய் இன்னொருவர்..... நாகேஸ் பகிடி விட... அதற்கெவரும். சிரிக்கின்றார்களோ.... என்று நான்கு பக்கமும் தான் பார்த்துவிட்டு முகம் சுருங்கிப் போகின்ற நேரமாய்.... ஆண்டி மீண்டும் உன் மத்தம் கொண்டு. பாடிய அதே சினிமா பாட்டு வரிகளை தனக்குச் சாப்பாட்டுப் பார்சல்கள் தினசரி தரும் கோயிலோடு அண்டியிருக்குமந்த மினிக் காம்பின் அரைப்பனையளவு சென்றியிலிருக்கும் ஆமிக்காரர்களுக்கும் கேட்கக் கூடியதாய் முழக்கியெறிகின்றான்.....

தங்களுக்கு அடிபோடத்தானிந்த.... ஆண்டியின்.... சினிமாப்பாட்டுக்கு காவடியாட்ட மென்றெல்லாம்.... தங்களுக்குள். அண்டஸ்ற்றாண்டிங் பண்ணிக் கொண்ட அந்த துருதுருத்தக் கூட்டம். பக்கத்தில் ஆமிக்காம்ப் என்றதைக் கூட கிஞ்சுற்றும்.... மயின்ற் பண்ணாமல் கூவா குளங்கரை போடத் தொடங்கி. "ஆண்டி.. 'எதையோ' தட்டினால் பறப்பது சாம்ப"லென்றும்... "தேர்முட்டியா... கள்ளுமுட்டியா.... உனக்கு வேணும்...?" என்றெல்லாம்..... கத்திக் குளறி. அந்தக் கோயில் வட்டாரத்தையே படுகிலுசைகேடு கெடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.....??

......தங்களுடைய ஆமியில். வெளிநாடு போகின்ற வரைக்கும் ஒரு ஆமிச் செல்வாக்குப் பெற்ற 'தரம் 1 கோப்ரலாய்' பதவி வகித்த

**"இந்த ஆண்டிப் பரதேசியை ....இந்தத் தேர் முட்டி யிலை ஏற. இந்தப் பிள்ளையார் ஏன்... விட்டார்....? இப்பவே யானையாய் வந்து உந்தக் கஞ்சல் குப்பைப் பயலை உழக்கி யெறிய வேணும்...?"**

அந்தப் பேமஸ் விநாயகபுத்திரனின் அப்பாதான்.... இந்த ஆண்டி.. என்கின்ற பார்வையை சேஞ்ச் பண்ணாமல் ஒரு இராணுவ முத்திரையாய் தங்களில் குத்தி வைத்துக் கொண்டிருந்த மினி காம்பிலுமுள்ளவர்கள் அவனுக்கு இந்தத் தேர் முட்டியில் வந்தேறி விட்ட நாளிலிருந்து..... ஆமி சாப்பாட்டுப் பார்சல்களை தவறாது ஒரு ஆமி ஹெல்பாய் கையளிக்கும் சாப்பாட்டு காட்சிகள்.......

அடுத்த இனத்தவன்..மதத்தவன் கையென்றாலும் மனதில் எந்தச் சூதுவாதுமில்லாமல் மனப்பூர்வமாய் துப்புரவாய் ஒரு மகேஸ்வர பூசைக் காட்சிகளாகவே ஏற்றம் பெற்றும் விடுகின்றன....!!

ஆண்டி குடிகொண்ட. தேர்முட்டி தொடர்பான இழுப்புப் பறிப்புக் களோடும்.... பல்பாட்டு விமர்சன மூதலிப்புகளோடும்.... பிள்ளையார் பெருமானின். கொடியேற்றத் திருநாளும். ஓகோவென்று வந்தே விடுகின்றது..!

".....ஆன்ரி..மாத்தாயோ... பார்சலாய் ....கணதெய்யோ துன்னா..உதயட்டக்காம" தேர்முட்டிப் படியேறி. சென்றியிலுள்ள ஒரு ஆமிக்காரன் தங்கள் பாஷையில் இப்படியாகச் சொல்லி காலையாகாரத்தைக் கையளித்துவிட்டு தொங்காரப் பாய்ச்சலில். ஓடிப் போகின்றான்...! உண்மையில் , அவன் சொல்லித்தந்தவிதமாய், பிள்ளையாரே (கணதெய்யோ) தந்துவிட்டதாகவே, எண்ணிக்கொண்டு ஆண்டி, ஒரு பிடி பிடிக்கின்றான்...!! இந்த. இவர்கள், ஆண்டிக்குப் போடும் சாப்பாடு, ஆண்டிக்கு எது தேவையோ... அதுவேயாகி அவனுடைய, வயிற்றுக் கடிப்பை தனது பண்ணிவிடும்போது..

மற்றப்பக்கத்தால்.... ஆண்டியை இது. எப்ப கலைக்கலாமென்ற. மனப்பசியோடிருக்கும் கோயில் காரரைப் போட்டு, ஆச்சிப் பூச்சியாட்டிக் கொண்டுதானிருக்கின்றது...?? தங்களிடம் தின சரியாய் சாப்பாடு வாங்கிச் சாப்பிடும்.... இந்த ஆண்டியானவன்.... என்றைக்குமே.... இந்தத் தேர் முட்டியை விட்டுப் போகாது, தங்களுக்குமொரு. பன்பலாய்... இருந்து கொள்ளவும் தான் வேண்டுமென்றெல்லாம்..

அடுத்த சமயத்தவர்களான அந்த மினிக்காம்ப் சீருடையினர் ஓவர், ஓவராய்ச்.... சிந்திக்கப் போனாலும் தான்.... இதற்கெல்லாம் யாரால் காவலிருக்க முடியும்.??

" ....இந்த.... ஆண்டியை விடவும், எத்தனையோ, மாண்டிகளும், தோண்டிகளும்... கோயில்களிலே கொள்ளையடிக்கும் கசாடுகளும் இந்த மேன்மைகொள், சைவத்துக் குள்ளே... ஊத்தை உருட்டிகளாய், மறைஞ்சிருக்கும் போது, இந்த, ஆண்டிப் பயலொரு எங்களுக்குச் சாத்தும், மேன்மையான ஒரு

**".....நமக்கு.... ஆண்டியும் சரி..அரசனும் சரி.. எல்லோருக்கும், அருளிச் செய்வேன்....! இந்த..... ஆண்டியானவன்...... என்னிலை... வைத்திருந்த ஒரு பக்தி வெறி காரணமாகத் தான்...... வெளிநாட்டிலை பெரிய குபேரனாயிருக்கும். மகனுக்கு. "விநாயக புத்திரன்" என்னும் நாமத்தை சூடிக் கொண்டதையெல்லாம் நாமறிவோம்....!! ஆண்டியும்.... அரசனாக.... அருளிச் செல்வோம்....!!!"**

பட்டுத் துண்டல்லோ...!!" இப்படி ஒரு யதார்த்தத்தையே... அருளிச் செய்துவிட்டாற் போல இந்தப் பெருமை வாய்ந்த பிள்ளையார் பெருமான் தமது பேமஸ் தொந்தியோடும் மாம்பழப் பெருமையோடும்..... உள்வீதியுலா வந்து கொண்டிருந்தார்....!!

மகேஸ்வர பூசையின் ஓட்ட பாட்டங்கள்.... மந்திரியார் தலைமையில் சக்கைபோடு போடத் தொடங்கிவிடுகின்றன....? இந்த மகத்தான மகேஸ்வேர பூசையினால் இந்தப் புனிதமான மகேஸ்வர பூசையினால். இந்தத் தேர்முட்டியைக் கப்ஷர். பண்ணி வைத்திருக்குமிந்த. ஆண்டிக்கொரு. மரண அடி போட்டுக் காட்டவே வேண்டுமென்று கோயில் மாண்டிகளும்.... தோண்டிகளும் தங்களுடைய கோயில் கொள்ளை நிகர் கசாட்டுத் தன ஐடியாவில் எந்த லீக்கும்.... விழுந்து விடாமல் இன்னும் இறுக்கிறுக்கென்று இறுக்கியும், கொண்டார்கள்....??

....ஆண்டி பார்த்திருக்க..... பெரிய அண்டா பேசினில்... கனம் மந்திரியார். அடியார்கள் சாப்பிட முந்தியாக மினிக்காம்ப் மகேஸ்வர பூசையை துடிக்கப் பதைக்க காவிப் போகின்றார்.... படுகெச்சிதமாய் ...?

திடீரட்டியனவாய். திரைப்படங்களில் வருமொரு த்திறிலான கிளைமாக்ஸ் காட்சி போல்... ஒரு CAP வாகனத்தின் வருகை!?? .....அப்பாவைக் கூட்டிப் போகவென்று அவசர வருகை தந்துவிட்ட தங்கள் மதிப்புக்குரிய மாஜி தமிழ்த் தோழனான விநாயகபுத்திரனை.... கட்டித் தழுவி கைலாகு கொடுத்து. கோலாகலமாய் வரவேற்றுக் கொண்ட அந்த மினிக் காம்பின் கப்டன்.... தங்களுக்கென்று பாடுபட்டுக் காவிக் கொண்டு வந்துவிட்ட இந்த 'மகேஸ்வர பூசையை" ஆண்டியின் வாகனத்துக்குள் வைக்கும்படியாக ஓர் அதிகார தோரணையில் மிடுக்காகப் பணித்ததும்.. மந்திரியார் ..மந்தியாகியே போனார்..?? ....பெரும் மாதவம் பெற்று மறுபிறவியெடுத்துவிட்ட அந்தளவு கொள்ளக் கொடுக்கவான மகேஸ்வர பூசையோடும், ஓர் அரசனாய்... ஆண்டி.... தேரில், போகின்றான்...!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.10.2013

# பிரபாகரன் பற்றிய மர்மக் கேள்விக்கு விடை தரும் திரைப்படம்



ப.தில்லைநாதன்

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தனிப் பெரும் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கையை திரைப்படமாக எடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார், இயக்குனர் வா.கௌதமன். இவர் ஏற்கனவே சந்தனக் கடத்தல் வீரப்பனின் வாழ்க்கை வரலாற்றையும் தொலைக்காட்சித் தொடராக எடுத்தவர். வீரப்பன் பற்றிய பல நியாயங்களையும் அவனைக் கடத்தல்காரனாக்கிய அரச இயந்திரத்தின் பலவீனங்களையும் பயங்கரவாதங்களையும் நீதியோடு சொல்லியது அந்தப் படம்.

"தலைவர் பிரபாகரனின் வரலாற்றைப் படமாக்கும் திட்டம் தோன்றியபோது, கடந்த 10 ஆண்டுகளாக இது சார்ந்து ஈடுபட்ட களப்பணிகள்தான் நினைவுக்கு வந்தன. களத்தில் நின்ற போராளிகள், ஈழத்திற்கு போய்விட்டுத் திரும்பிய தமிழகக் கவிஞர்கள், தலைவர்கள், முகாம்களில் வசிக்கிற ஈழத் தமிழர்கள் இப்படி எல்லோரையும் நேரில் சந்தித்து சேகரித்த நிறையச் செய்திகளும், கருத்துகளும், விவாதங்களும் கண்முன் விரிந்தன.

அந்த அனுபவங்கள்தான் இப்படி ஒரு படைப்பை எடுக்கும் சூழலை உருவாக்கியது" என்றபடியே பேசத் தொடங்குகிறார்.



இயக்குநர் கௌதமன்

**கிட்டத்தட்ட 30 ஆண்டுகால போராட்ட நிகழ்வுகளைப் படமாக்க, இந்த 10 ஆண்டு கால அனுபவம் மட்டும்போதும் என்று நினைக்கிறீர்களா?**

நெடுமாறன் எழுதிய பிரபாகரன் - தமிழர் எழுச்சி வடிவம் நூல், ஈழம் தொடர்பான பல தகவல்களை உள்ளடக்கியது. இது கிட்டத்தட்ட 1,400 பக்கங்கள் கொண்டது. ஈழத் தமிழர்களுக்கு எதிரான சூழ்ச்சிகளை, உலக நாடுகளின் வஞ்சத்தை, எதிரிகள் போட்ட திட்டத்தை இப்படி பல விடயங்களை உள்ளடக்கிய நூல். இதெல்லாம்தான் என் படைப்பிற்கான கூடுதல் களப்பணி. இன்னமும் இந்த கள ஆய்வு முடியவில்லை. தொடரும்.

**பிரபாகரனை சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்கு அமைந்திருக்கிறதா?**

எனது 'சந்தனக்காடு' தொடரை, கவிஞர் புதுவை இரத்தினதுரை மூலம் கேள்விப்பட்டு பிரபாகரன், பார்த்திருக்கிறார். சீமான் சந்திக்க சென்றபோது, "ஆட்டோ சங்கர் தொடர் எடுத்த கௌதமனா அவர்?" என்றும் நலம் விசாரித்திருக்கிறார். இதற்கு பிறகு, 'சந்தனக் காடு' தொடரின் 36 மணி நேர பதிவையும் அவருக்கு அனுப்பினேன். தொடரைப் பார்த்தவர், வீரப்பன் மேல் என்ன நம்பிக்கை வைத்திருக்கிறோமோ, அதை அழகாகப் பதிவு செய்திருக்கிறார். அவரை ஈழ மண்ணுக்கு வரவழைத்து நம் வரலாற்றை எடுக்கச் சொல்ல வேண்டும் எனச் சொன்னார் என அறிந்தேன். இதைக் கேள்விப்பட்டபோது, அந்த வார்த்தையை என் வாழ்க்கையில் கிடைத்த பெரும் மகிழ்ச்சியாக எண்ணினேன்.

அந்தச் சமயத்தில்தான் அங்கு செல்வதாகக் கடிதம் எழுதினேன். அப்போது மீண்டும் போர் தொடங்கியிருந்த நேரம். இங்கு வந்து ஏதாவது ஒன்று நடந்தால்.... இழப்பு உங்கள் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, எங்களுக்கும்தான் என்றார்கள். அதனால் போக முடியவில்லை.

**பிரபாகரன் மீது நிறைய எதிர்மறை வாதங்களும் முன்வைக்கப்படுகிறதே? அதை எப்படி படைப்பில் கொண்டு வருவீர்கள்?**

எதிர்மறை கருத்துக்களுக்குப் பதில் சொல்லும் வேலைகளை எல்லாம் என்னுடைய இந்தப் படைப்பு உக்கிரமாகச் சொல்லும். நடந்த சம்பவங்களை இந்தப் படைப்பில் நடுநிலையாகத் துளியும் சொல்ல மாட்டேன். எந்த ஒரு விஷயத்திலும் உண்மை இல்லையேல் பொய் பக்கம்தான் சாய வேண்டும். உண்மையின் பக்கம்தான் நான் இருக்கப் போகிறேன். சமரசம் என் கிற பெயருக்கு இந்தப் படைப்பில் இடமில்லை!

**தணிக்கைத்துறையை எப்படி எதிர்கொள்வீர்கள் ?**

இதே தணிக்கைத் துறை சட்டம், இதே தணிக்கை அண்மையில் வந்த 'மெட்ராஸ் கஃபே' படத்தையும் விட்டுச்சே. அதே படத்துல பிரபாகரனையும் காட்டினார். எல்லாத்துக்கும்மேல தமிழர்கள் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. பெரும் நம்பிக்கை உண்டு!

**படத்தில் பிரபாகரனின் குடும்பம் பற்றி..?**

கதையில் அவரது குடும்ப வாழ்க்கையை அழகாக கோர்க்கப் போகிறோம். மதிவதனியின் காதல். அந்த அற்புதமான குடும்பத்தை. அந்த வாழ்க்கையை தோளோடு தோள் நின்று பகிர்ந்துகொண்ட பெண் அவர். அந்தநிகழ்வில் இந்த உலகம் இன்னும் முழுமையாக அறிந்திராத விடயங்கள் நிறைய இருக்கு. அதைக் கண்டிப்பாகப் படைப்பில் இணைப்போம்.

**பிரபாகரனின் வாழ்க்கை வரலாறு என்று நீங்கள் சொல்லும் இந்த திரைப் படைப்பு எங்கு தொடங்கி, எதில் முடியும்?**

பிரபாகரன் பார்வதி அம்மாவின் வயிற்றில் கருவாக இருக்கும்போது தொடங்குறேன். கடைசியாக முள்ளிவாய்க்கால் பகுதியில் தன் மக்களோட மக்களாக நின்று போரை எப்படி எதிர்கொண்டார். அறத்தோடு நின்று சண்டை போட்ட அந்த வியூகத்தின் முடிவாக, அவர் எடுத்த முடிவு என்ன என்பது வரைக்கும் இந்த படைப்பு சொல்லும்.

**பிரபாகரன் கதாபாத்திரத்தில் நடிக்கப்போவது யார்?**

பிரபாகரன் மீது உணர்வும், தனி கம்பீரமும் கொண்ட ஒரு தமிழனைத்தான் அவர் கதாபாத்திரத்தில் நடிக்க வைக்கத் திட்டம். அதற்கான தேர்வு வேலைகளில் தான் இப்போது இருக்கிறோம்.

**தலைமுறை நாவலை 'மகிழ்ச்சி' என்ற பெயரில் படமாக எடுத்தபோது, அந்த படம் பல விமர்சனங்களுக்கு உள்ளானது. இந்த படைப்பில் அதை தவிர்க்க, எந்த வகையில் முயன்றுள்ளீர்கள்?**

ஒவ்வொரு படைப்பை கையாளும்போதும் விமர்சனம் இருக்கத்தான் செய்யும். விமர்சனத்தை எதிர்கொள்ளும் படைப்புத்தான் நல்ல படைப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதுதான் ஒரு படைப்பாளியுடைய வேலை. இந்தப் படைப்பை எடுக்கும்போது முன்னைய விமர்சனங்களை எல்லாம் வைத்து கவனமாகச் செய்ய முயற்சிப்பேன். நிச்சயம் சரியான படைப்பா இது அமையும்.

**பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா?**

அவர் இருக்கிறாரா? இல்லையா என்பதை இந்த படைப்பு உண்மையான இடத்தில் நின்று சொல்லும். அதை உக்கிரமாகவே சொல்லும். இந்த உலகம் எதிர்பார்க்கிற எத்தனையோ, மர்மமான கேள்விகளுக்கு இந்தப் படம் விளக்கமும் தரும்.

## மழை பொழியணும் அப்பனே!

நிலவானம் கறுக்கலையே
நிலமகளும் குளிரலையே
வானவில்லைக் காணலையே
வான் மழையும் பெய்யலையே

கரிசல் காட்டு நிலத்திலெல்லாம்
காளையில் ஆடலையே
விரிசல் வீழ்ந்து நிலங்களெல்லாம்
வெடிச்சுப் பாழும் ஆயிடுச்சே

உயிரைக் காக்கும் உழவனவன்
உணவைத் தருவான் எல்லோர்க்கும்
உயிரப் பிடிச்சு வைக்கணும்னா
உடனே மழையும் பெய்யணுமே

நீர்நிலைகள் வரண்டனவே
நீண்ட ஆறும் உறங்கிடுதே
ஏர்பிடித்து உழுவதற்கு
[illegible] தோணலையே

தரிசு நிலம் ஆயிடுமே
தரையில் மழை விழுமா[illegible]
அரிசி விலை ஏறிடுமே
அடுத்த போகம் விளைக்கலைன்னா

பயிர் விளைய வைச்சிக்கன்னா
[illegible]
[illegible] நாம்
அப்பனே மழையைப் பொழிந்திடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக் கல்வி

ஒரு நகரத்தில் கல்வியில் ஆர்வம் மிக்க இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் கடும் முயற்சியெடுத்து பல துறைகள் சார்ந்த கல்வியைக் கற்று முடித்தான். இளை ஞனுக்குத் திருப்தி ஏற்பட வில்லை. இதுவரை கற் றதை விட உயர்வான கல்வியைப் பெற வேண் டும் என எண்ணினான்.



நல்ல ஆசிரியர் எங்கு கிடைப்பார் என அவன் தேடியபோது "எங்கள் ஊரில் அறிவு நிரம்பிய பெரியவர் ஒருவர் இருக் கிறார். தன் முன்னோர் கள் செய்து வந்த கொல் லன் தொழிலை அவர் செய்து கொண்டே தம்மை நாடிவரும் மாணவர்களுக்கு கல்விப் பயிற்சியளிக்கிறார்" என ஒருவர் தெரிவித்தார். இளைஞன் அந்த ஊருக்குச் சென்றான். கொல்லன் பட்டறைத் தொழில் செய்து கொண்டே கல்வி கற்பிக்கும் பெரியவரின் இல்லத்தை அடைந்து அவரை வணங் கினான். "இளைஞனே உனக்கு என்ன வேண்டும்?" என பெரியவர் விசாரித்தார். இளைஞன் இதுவரை தான் கற்ற கல்வி பற்றி விளக்கம் அளித்து "இதற்கு மேற்பட்ட கல்வியைத் தங்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆவலில் வந்திருக்கிறேன்" என்றான். பெரியவர் இளைஞனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார்.

பிறகு உலைத் துருத்தி இருக்குமிடத்தைக் காண்பித்து "இதை இயக்கிக் கொண்டிரு" என்று கூறினார். இளைஞன் மறுமொழி சொல்லாமல் தீயை கணப்புடன் வைத்திருக்க உதவும் துருத்தியை இயக்கத் தொடங்கினான். பெரியவரோ வழக்கமான பட்டறைத் தொழிலை கவனத்தோடு செய்து கொண்டிருந்தார். இப்படியே இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன.

ஒருநாள் பெரியவர் இளைஞனை நோக்கி "தம்பி உன் கல்விப் பயிற்சி முடிந்து விட்டது. பயிற்சியில் நன்றாகத் தேறி விட்டாய். இனி நீ புறப்படலாம்" என்றார். அவருடைய சொல்லைக் கேட்டு ஆச்சரியமடைந்த இளைஞன் " ஐயா எனக்கு இதுவரை தாங்கள் எந்தக் கல்வியையும் கற்றுத் தரவில்லையே? இப்போது எனது கல்விப் பயிற்சியே முடிந்து விட்டது என்று கூறுகிறீர்களே?" என்று கேட்டான்.

பெரியவர் சிரித்துக் கொண்டே "தம்பி ஏட்டுக் கல்வியாக நீ இதுவரை கல்வியைக் கற்றிருக்கிறாய். ஆனால் வாழ்க்கைக் கல்வி எதையும் கற்றுக் கொள்ளவில்லை. உல கத்தில் தலையான கல்வி பொறுமைதான். பொறுமையாக இருந்து வாழ்க்கை நடத்தும் யாருமே தோற்க மாட்டார்கள். நான் உனக்குப் பொறுமைக் கல்வியைக் கற்றுத் தந் திருக்கிறேன். இந்தப் பொறுமை உன் வாழ்க்கையை மேம்படுத்த முற்றுமுழுதாக உதவும்" என்றார்.

த.கேமிஷா, தரம்-7,
ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி.

# அன்னை

அன்னையின் அன்புக்கு வயதே
கிடையாது- ஸ்பெயின்
குழந்தை அழாவிட்டால் தாய்க்கு
ஒன்றும் புரியாது- ரஷ்யா
அரசாளும் மன்னனும் அன்னைக்கு
மகனே - இந்தியா
தாயின் இதயம் குழந்தையின்
பள்ளிக்கூடம் - ஆபிரிக்கா
அன்பின் உறைவிடம் அன்னை -
ஆபிரிக்கா



சி.கஜானி, தரம்-9டி,
கிளி/ இந்துக் கல்லூரி.

# பற்களைச் சுத்தம் செய்யும் பறவை!

ப்ளோவர் என்று ஒரு சிறு பறவை. இது முதலைகளுடைய பற்களைச் சுத்தம் செய்யும் வைத்தியராகப் பணியாற்றுகிறது. முதலை பலவிதமான பிராணிகளையும் சாப்பிடக்கூடியது. இதனால் இரையின் எச்சங்கள் அதன் கோரமான பற்களுக்கிடையே சிக்கிக் கொண்டிருக்கும். முதலை சாதுவாக வாயைத் திறந்து வைத்துக் கொண்டிருக்க இப் பறவை அதன் வாய்க்குள் சென்று அமர்ந்து ஒவ்வொரு பல்லாகச் சுத்தம் செய்யத் தொடங்கும். பல் இடுக்குகளில் சிக்கிக் கொண்டிருக்கும் இறைச்சியைக் கொத்தி எடுக்கும். முதலை அசந்து வாயை மூடினால் பறவையின் உயிர் போய்விடும். ஆனால் முதலை அப்படிச் செய்வதில்லை. தன் பற்கள் சுத்தப்படுவதற்காகப் பொறுமையாகக் காத்திருக்கிறது. அதே நேரத்தில் பறவைக்கும் தாராளமான இரை கிடைத்து விடுகிறது.



# சிந்திக்கச் சில

♠ பனிக்கட்டி ஏன் நீரில் மிதக்கிறது? மதுசாரத்தில் (Aleohol) ஏன் அமிழ்கிறது?
நீரிலும் பார்க்க பனிக்கட்டி அடர்த்தி குறை வானது. அதனால் நீரில் மிதக்கிறது. மதுசாரத்திலும் பார்க்கப் பனிக்கட்டி அடர்த்தி கூடியது. அதனால் அமிழ்கிறது.

♠ குளிர்ந்த நீர் உள்ள கிளாசின் (Glass) வெளிப்புறத்தில் ஏன் நீர்த் துளிகள் படிகின்றன?
கிளாசைச் சூழ்ந்துள்ள வளி கிளாசில் உள்ள குளிர் நீரால் குளிர்கிறது. அதனால் வளியில் உள்ள நீராவி ஒடுங்கி நீர்த்துளிகள் படிகின்றன.

♠ மண் குடங்களில் உள்ள நீர் ஏன் குளிர்ச்சியாக இருக்கின்றது?
ஆவியாதலைப் பொறுத்தே நீரின் குளிர்ச்சி அமைகிறது. மண்குடங்களிலுள்ள நுண்துளைகள் நீரை இலகுவில் ஆவியாக்கி விடுகின்றன. அதனால் மண்குடங்களிலுள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கிறது.

♠ வௌவால்களின் ஒலியைக் கேட்டிருக்கிறீர்களா?
கேட்டிருக்கவே மாட்டீர்கள்; ஏன் என்றால் இவற்றின் ஒலி எமக்குக் கேட்பதில்லை?
ஒரு வினாடிக்கு 20 -20.000 அதிர்வுகளைக் கொண்ட ஒலியையே எம்மால் கேட்க முடியும்.
வௌவாலின் ஒலி 30.000-70.000 அதிர்வுகளைக் கொண்டது. எனவே அவற்றின் ஒலியை எம்மால் கேட்க முடியாது.

♠ இடியோசை கேட்கும் முன்னரே மின்னலைப் பார்க்கிறோம் ஏன்?
ஒளியின் வேகம், ஒலியின் வேகத்தைவிட அதிகமானதாகும்.

♠ கடல் நீர் ஏன் உவர்க்கிறது?
நதிகள் தரையிலுள்ள கனியங்களைக் கரைத்துக் கொண்டு வந்து கடலுடன் சேர்கின்றன. அப்படிச் சேர்க்கப்படும் கனியங்கள் ஆவியாகுவதில்லை.

ர.பரிஷித். தரம்-6ஏ,
யாழ். இந்துக் கல்லூரி.

சிலந்தி ஒன்று கூடு கட்டும்
செயலைப் பாரடா! - எச்சில்
கலந்து மென்மை வலையைப் பின்னும்
கலையைப் பாரடா!
எட்டுக் கால்கள் விரித்து வைக்கும்
அழகைப் பாரடா! - காற்று
முட்டி மோதி வலையைக் குலைக்கும்
மகிமை பாரடா!




மீண்டும் மீண்டும் முயற்சி செய்யும்
மனதைப் பாரடா! - அந்தத்
தீண்டும் காற்றை எதிர்த்துக் கூட்டின்
பின்னல் பாரடா!
தோற்றுப் போன காற்றும் கூட
திணறல் பாரடா! - சிலந்தி
ஆற்றல், முயற்சி, தொடரும் எண்ணம்
அறிந்து கொள்ளடா!
தோற்ப தென்பது நீயும் நாளை
வெல்லத் தானடா! - அதனை
ஏற்றுக் கொண்டு மனதைத் திண்மை
ஆக்கிக் கொள்ளடா!

## விடை தெரியுமா ? 234

### உங்களுக்கும் பரிசுகள்

1. கண்கள் கட்டப்பட்டுக் கையில் தராசு வைத்திருக்கும் பெண் உணர்த்தும் குறியீடு என்ன?
2. 11 நாடுகளை எல்லையாகக் கொண்ட நாடு எது?
3. தனக்கெனத் தாய் மொழி இல்லாத நாடு எது?
4. ஐம்பது நட்சத்திரங்களைக் கொண்ட தேசியக் கொடி எந்த நாட்டினுடையது?
5. இலங்கையில் கண்ணாடித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

**விடைகள் 231**

1. ஜப்பான்
2. இத்தோனேசியா
3. புளூட்டோ
4. இளையதம்பி நரசிம்மன்
5 வெற்றி ஆரம்பம்


சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 02.11.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நால்களாக வழங்கப்படும்.

**வெற்றி பெற்றவர் விவரம் (230)**

♥ச.சங்கீர்தன், யாழ்.இந்து மகளிர் கல்லூரி



இ.வேணுஜன் , தரம்-3ஏ,
யா/ அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.




சி.சிறிஜனனி , தரம்-3ஏ,
யா/ தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை



ர.பரிஷித் , தரம்-6ஏ,
யா/ இந்துக் கல்லூரி



சி.துஷானி , தரம்-2ஏ,
யா/"அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை



வி.லோகினி , தரம்-12,
யா/ புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் மிக மோசமான படங்களையே விமர்சித்து மண்டை சூடேறிப்போனதால் இந்த வாரம் நல்ல ஹிந்திப் படத்தை, ஒரு மாற்றத்துக்காகக் கொஞ்சம் பார்க்கலாம்.

இறந்துபோன வழக்கறிஞர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை எதிர்த்து, அவர் சார்புள்ள நியாயங்கள் ஒரு தனி மனிதனால் மக்களின் முன்வைக்கப்படுகிறது. என்ன வித்தியாசம்? தடம் என்னவோ நீதிமன்றம் அல்ல... திரையரங்கம். இங்கே நியாயங்களை எடுத்து உரைப்பவர் வழக்கறிஞர் அல்லர்... ஒரு படைப்பாளி, ஒரு நேர்மையான இயக்குநர். இறந்த மனிதர், கதையின் மைந்தன் ஷாஹித்.

விதை துளிர்விட்டு தளிர்விட்டுதான் ஆலமரமாகிறது. உயிருக்கு தப்பி ஓடி, தீவிரவாதிகளிடம் சேர்ந்து, பின் அங்கு நடக்கும் கொடுமைகளைக் கண்டு அஞ்சி ஓடி, வீட்டுக்குத் திரும்பும் ஷாஹித், சொந்த தேசத்தில் தீவிரவாதியாய் முத்திரை இடப்படுகிறான். சிறைக்குள் சட்டம் பயிலும் ஷாஹித், தான் வெளிவந்த பிறகு சமூகத்தில் நிகழ்த்தும் மாற்றங்கள்தான் இந்தப் படத்தின் ஒட்டு மொத்தக் கதையும்.

மறுக்கப்படுகின்ற நீதியும், தாமதிக்கப்படுகிற நியாயமும்தான் சமுதாயத்தில் நடக்கும் இழிபாடுகளுக்கு காரணம் என்பது பொதுவாக விழும் குற்றச்சாட்டு அல்லது சிலரின் கூற்று. ஆனால் "எனக்கு மறுக்கப்பட்ட நீதி தான் நீதியின் தேவையை உணர்த்தியது. நான் சந்தித்த கொடுமைகள் தான் பிறரின் வலியை உணர வைத்தது" என்க் கூறுகிறது ஷாஹித். தீவிரவாதிகளாக சித்திரிக்கப்பட்ட அப்பாவி மனிதர்களை மீட்ட வழக்கறிஞர் ஷாஹித்தின் வாழ்க்கைதான் இந்தப் படம்.



# ஷாஹித்

## மொழியே வேண்டாம் பார்க்க வேண்டிய படம்



தனி மனிதனோ அல்லது குழுவோ செய்யும் செயலுக்கு, ஒரு சமூகத்தின் மீது சேறு வீசப்படுவதை ஷாஹித் முரண் ஏதுமின்றி எடுத்துரைக்கின்றது.

படம் தொடங்கிய சில நிமிடங்களிலே மும்பையில் நடந்த மதக் கலவரம், சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே ஓடிவரும் நாயகன், திடீரென அவன் அருகே ஓடிவரும் மனிதன், அவன் உடல் முழுதும் தீ, எங்கும் கும்பல் கும்பலாக மனிதர்கள் கொல்லப்படுகின்றனர்... என்று காட்சிகள் அசுர வேகத்தில் பாய்கின்றன.

உயிருக்கு பயந்து ஓடும் நாயகன், வீட்டிற்குள் புக முயற்சிக்கிறான். எங்கே இவன் வருகையில் வேறு சிலர் புகுந்து மற்ற மூன்று பிள்ளைகளைக் கொன்று விடுவார்களோ என்ற அச்சத்தில் இவனது தாயே கதவைத் திறக்க மறுக்கிறாள்.

இந்த வன்முறைக் களத்தில் ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி கிடையாது. மாறாக மனிதர்களின் இரைச்சல். உயிர் போகும் வலியில் உருவாகும் சத்தம், கத்தி, கட்டைகளின் கீச்சிடல்கள் கேட்கின்றன.

இந்தக் கலவர காட்சியின் நீளம் வெறும் ஐந்து முதல் ஆறு நிமிடங்கள்தான் இருக்கும். இயக்குநர் நினைத்திருந்தால் இவற்றை பதினைந்து நிமிடங்களுக்கு ஓடவிட்டு, மக்களின் கழிவிரக்கத்தைக் கிளறி விட்டிருக்கலாம். ஆனால் இயக்குநரின் நோக்கம் அதுவல்ல. கதையின் முதல் பக்கங்கள்தான் அந்த நிகழ்வுகள் என்பதை தெளிவாக உணர்த்தியுள்ளார் இயக்குனர். வர்த்தகத்துக்காக எவ்வித கலப்படமும் இங்கே நடைபெறவில்லை.

படத்தின் முக்கிய விடயம் கதாநாயகன் ராஜ்குமார் யாதவ். ஒரு நடிப்புப் பள்ளியில் படித்த முன்னணி மாணவன் போல்தான் இவரின் நடிப்புத் தோன்றியது. கதாபாத்திரங்களுக்கு அமைக்கப்பட்ட வட்டாரம், பாத்திரங்களின் வடிவமைப்பு அனைத்தும் அத்தனை அழகானவை.

இது பொழுதுபோக்குப் படம், இது கலைப் படம் என்ற பேதங்களை சமீபத்தில் வெளிவந்த 'ஷிப் ஒஃப் தீசஸ்', 'லஞ்ச் பாக்ஸ்' முதலிய படங்கள் உடைத்தெறிந்து கொண்டிருக்க... அவற்றோடு கைக்கோர்க்கும் ஆயுதமாக இப்போது ஷாஹித் அமைந்துள்ளது.

தெளிவான நடை, நேர்த்தியான நடிப்பு, சுத்தியால் ஆணியடிப்பது போல் நறுக் நறுக் என அமைந்துள்ள நெத்தியடி வசனங்கள் ஷாஹித்தை தவறவிடக் கூடாத முக்கிய படமாய் மாற்றுகின்றன.

**இங்கே இவன் வருகையில் வேறு சிலர் புகுந்து மற்ற மூன்று பிள்ளைகளைக் கொன்று விடுவார்களோ என்ற அச்சத்தில் இவனது தாயே கதவைத் திறக்க மறுக்கிறார்.**



## 5,300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவரின் சந்ததி கண்டுபிடிப்பு





5,300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒருவரின் சந்ததியினர் 19 பேர் தற்போது ஆஸ்திரியா நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

1991இல் இத்தாலி நாட்டின் டைரோல் மலைப் பகுதியில் பனியில் உறைந்த சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. ஆய்வில் அது 5,300 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவரின் உடல் எனத் தெரியவந்தது.

அதிலிருந்து அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்கள் குறித்து தொன்மையான [illegible] நடத்தப்பட்டன. [illegible] அந்த [illegible] ஒட்சி பனிமனிதன் எனவும் பெயரிட்டனர்.

ஆய்வுகளின் ஒரு பகுதியாக பனி மனிதனின் முழு மரபணுத் தகவலும் சேகரிக்கப்பட்டது. அந்த தகவல்கள் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டன.

அதில், ஓட்சியின் மரபணுவில் ஒரு சடுதி மாற்றம் இருந்ததாக தெரியவந்தது. இத்தகைய மாற்றங்கள் சில குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள தட்பவெப்பம் உள்ளிட்ட சூழல்களால் அங்கு வசிப்பவர்களிடம் உருவாகின்றன. அதனால் அவை பண்டைய மக்களின் இடப்பெயர்சிகள் குறித்து ஆய்வு செய்வதற்கு பயன்படுகின்றன. அதன் அடிப்படையில் ஆஸ்திரியா நாட்டின், டைரோல் பகுதியில், 3,700 பேரின் மரபணுக்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதில், 19 பேருக்கு ஒட்சியின் மரபணு சடுதி மாற்றம் இருந்ததாக தெரியவந்தது. ஆய்வாளர்களின் கணிப்புப்படி, அவர்கள் ஓட்சியின் சந்த[illegible]லது சொந்தக்காரா[illegible]க இருக்க வேண்டும்.

இதே ஆய்வை இத்தாலியில் உள்ள டைரோல் பகுதியிலும் மேற்கொள்ள முடிவாகி உள்ளது.

இதுவரை நடந்த ஆய்வுகளில் ஒட்சி பனி மனிதன் பற்றி ஆய்வாளர்கள் எடுத்துள்ள முடிவுகள்...

மலைகளில் சுற்றித்திரியும் வேடுவர் அல்லது ஆடு மேய்ப்பவர். 45 வயதில், கொடூரமான முறையில் தாக்கப்பட்டு காலமானார்.

வயிற்றில், 30 வகையான பூக்களின் மகரந்தங்கள் இருந்ததால், வசந்த பருவத்தில் இறந்திருக்கலாம்.

தாமிரத்தால் ஆன கோடரி வைத்திருந்தார்.

கண்கள் பழுப்பு நிறத்தில் இருந்தன.

பித்தப் பையில் 3 கற்கள் இருந்தன.

கடைசியாக சாப்பிட்டது, காட்டு வகை கோதுமை கஞ்சி, இறைச்சி மற்றும் சில காய்கறிகள்.

உடலில் 50 இடங்களில், மரக்கறியை வைத்து, பச்சை குத்தியிருந்தார். இவை வலி நிவாரணத்துக்காகச் செய்யப்பட்டு இருக்கலாம்.

ஆய்வுகள் தொடர்கின்றன. அதிலிருந்து இன்னும் பல உண்மைகள் தெரியவரும் என்று எதிர்பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுசிலுப்பு வேண்டாம் ஐயா! பலகாரமே தேவை ஐயா!

தனித் தமிழீழம் தான் எங்கள்
தமிழருக்குத் தீர்வு என்று
தந்தை சொன்ன வார்த்தையுடன் இதுவே
வில்லங்கமான காரியம் என்பதையும்
நெஞ்சிற் கொண்டு
தமிழீழம் அமைத்துவிட்டேன்
தடுப்பது யாரென்று
மாண்ட தலைவனின் முடிவையும்
மனத்திலெண்ணி
அடுத்து வருபவற்றை
அமைதியாய் நிதானித்து
முடிவெடுக்கும் ஓர் நிலை
இன்று எம் தமிழருக்குண்டு
இவ்விரு தலைவரின் ஏக்கம்
தமிழர் இதயத்தில்
இருப்பதாற்றான் பெருந்தொகை
வாக்களித்து
பெருமையாய் அனுப்பினர் என்பது
இப் பூமிக்கே தெரியுமன்றோ
ஆளுகின்ற ஓர் அரசியல் யாப்பினுள்ளே
அமைந்ததே இந்தத் தேர்வு
என்பது எங்கள் சட்டத்
தலைவனும் அறிந்ததன்றோ
யதார்த்தத்தை உணராது வெறும்
உணர்வுகளைக்கொட்டியதாற்றான்
மாண்டனர் எங்கள் வீரர்
மனதினிற் கொள்வீர் ஐயா
எத்தனை நாடு சேர்ந்து
அளித்தது அவரை என்று
புத்திஜீவிகளின் புலம்பலும் உண்டு அன்றோ
இப்படி இவையிருக்க
வோட்டுக்கள் போட்டுவிட்டோம்
அங்குநீர் ஏன் சென்றீர் இங்கு
உம் அரசை ஆளும்
என்று சிலர் கர்ச்சிப்பது
ஏட்டுக்குப் பொருந்தலாம்
எங்கள் நாட்டுக்கு ஆகாதன்றோ
தலைவனின் எச்சம் ஒன்றும்
தரணியில் இருக்கக்
கூடாது என்று அந்தத் தனிப்பெரும்
மாளிகையும் தரைமட்டமான செய்தி
தலைகளுக்கு ஏறவில்லை போலும்
கிடைத்த வாய்ப்பு என்று துடித்திடாது
இங்கே ஒற்றுமையாக எங்கள் முத்தெனும்
இலங்கைத் தீவுள்
அண்ணனும் தம்பியுமாக எங்கள்
சிங்களச் சகோதரமும்
தமிழரும் வாழ்கிறார்கள் என்று
எங்கும் சொல்லும் ஓர் எதிர்காலம்
அமைக்கும் வண்ணம்
அவர்களும் மாறி நாங்களும் மாறும் காலம்
நன்றாக அமைய நாங்கள் எல்லோரும்
பொறுமை பேணி
அயலாரும் ஒத்துழைக்க ஓர் அரிய
காலம் வரும் அதற்கு இக்கதிரை தேவை
சிலுசிலுப்பு அல்ல பலகாரமே




## சொற்சிலம்பம் - போட்டி இல: 289



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. ஓர் ஆசிரியப்பா வகை
4. வாழைப்பழ ரகம்
6. பூ
7. பாதுகாப்புக்கு அமைப்பது
8. புடைவையுடன் அணிவது
10. காரம் பெரிது
12. அரசர்கள் நாடுகளை ஆண்ட காலத்தில் குறுநில மன்னர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட திறை
14. உப உணவு
15. வெளிச்சம்
16. பிழை அல்ல
17. ஓர் அற்பப் பிராணி
18. சிலப்பதிகாரப் பாத்திரம்
20. மரம் விட்டு மரம் தாவுவது
22. ஒரு தாளக் குறிப்பு
23. பகுபத உறுப்பில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. வானோர்
2. காமநுகர்ச்சி
3. இனம்
4. தலையில் கெண்டி வைத்து ஆடும் ஆட்டவகை
5. தாவரத்தின் முன் நாண்
9. கைவினை (ம் பொருள்)
11. ஒரு பிசாசு
13. வாய்த் தொகுதியின் அங்கம்
14. சாய்தல்
15. சீராய் நடப்பது
16. இறப்பின் பின் அமைதி இங்கே
17. குதிரை
19. நெஞ்சுக்கும் முதுகுக்கும் இடைப்பட்ட பகுதி
21. பாய்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 287 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) விமரிசை (4) சந்தி (6) சாண் (7) வடம் (8) கடிதம் (10) பகு (12) குளம்பு (14) அபசாரம் (16) திகட்டல் (17) சதி (18) கண்டல் (19) அகர (20) திடம் (21) சகலன்.

### மேலிருந்து கீழ்

(1) விசாகம் (2) மண்டி (3) சைவம் (4) சம்பளம் (5) திரை (9) தம்பட்டம் (11) கும் (12) குரல் (13) புத்திரன் (14) அகண்ட (15) சாடல் (16) திகதி (17) சகல (19) அக

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/ பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 289**
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (06.11.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.289இல்வெற்றி பெறுவோர்களது விபரம் 10.11.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 287 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
அ.ஸ்ரீதரன்,
மகாத்மா வீதி, ஐயனார் கோவிலடி,
நெல்லியடி, கரவெட்டி.

**2 ஆம் பரிசு**
திருமதி அ.சச்சிதானந்தன்,
இல.289- 3 ஆம் ஒழுங்கை,
திருநாவற்குளம், வவுனியா.

**3 ஆம் பரிசு**
வி.நிக்சன்,
சாந்தி நிலையம், அரச முதியோர்
இல்லம், கைதடி.

**4 ஆம் பரிசு**
இந்துமதி திரவியநாயகம்,
மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

**5 ஆம் பரிசு**
வாகினி கிருபாகரன்,
இல.6. சேர்.பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

த.சிவபாதம்,
தும்பளை மேற்கு, பருத்தித்துறை.

பொன்.துரைராசா,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

சி.யாழினி,
மெமோறியல் ஆங்கில பாடசாலை,
மானிப்பாய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்களை பதிவுகள் மீட்டுத் தருமா?

தி.அமுதன்



காணமற் போனவர்கள். இவர்கள் அடிக்கடி எங்களது நினைவுகளிலிருந்தும் காணாமற் போய்க் கொண்டிருக்கின்றனர். காலச் சுழற்சிகளின் போராட்டக் காலத்தில் ஏராளமானோர் காணாமற்போயிருந்தனர். இருப்பினும் காணாமற் போனவர்கள் என்று உரைக்கும் பதத்துக்கு இலங்கையில் கொடுக்கப்படும் வரை விலக்கணம், இறுதிக் கட்டப் போரில் சரணடைந்து காணமாற் போனவர்கள். அவர்கள் மட்டுமே தற்போது எங்கள் நினைவுகளிலிருந்து காணமாற் போகாமல் இருக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது, தமிழ் மக்கள் பெருமளவில் காணாமற் போனார்கள். இவர்கள் தொடர்பில் சரியான கணக்கெடுப்புக்கள் எதுவும் அதிகாரத் தரப்பினால் முன்னெடுக்கப்படவில்லை.

இதன் பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இந்திய இராணுவம் தமிழர் தாயகப் பகுதியில் வந்திறங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்திய இராணுவத்திற்கும் ஏற்பட்ட மோதல் காலத்தில், பல தமிழர்கள் காணாமற் போயினர். அவர்களில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணமற் போனவர்களும் உள்ளனர். கால ஓட்டத்தில் இவர்களும் எங்களிடமிருந்து காணாமற் போய் விட்டனர்.

இவை யாவும் 1990 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் நிகழ்ந்தேறியவை.

இதன் பின்பு முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை 1995 ஆம் ஆண்டு யாழ். குடநாட்டில் இடம் பெற்றது. இந்த இடப் பெயர்வின் போதும் பலர் காணாமற் போயினர். இவர்கள் வலிந்து கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போகவில்லை. ஆதலால் இவர்களின் காணாமற் போதலுக்கு கனதி இல்லாது போய் விட்டது.

காணாமற் போதல்களின் நீட்சி குடாநாட் டுக்கு மக்கள் மீள் வருகையின் பின்னரும் தொடர்ந்தது. 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலப் பகுதியில் குறிப்பாக 1996, 1997 ஆம் ஆண்டு களில் காணாமற் போனவர்கள் பட்டியல் இருக்கத் தான் செய்கின்றது.

இந்தக் காணாமற் போதல்களில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள், யுவதிகள் இதன் போது காணாமற்போயிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சந்தேகம் சிறிது தோன்றி னாலோ அல்லது கைது செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் தோன்றினாலோ, யாரையும் எதுவும் செய்யலாம் என்ற அதிகாரம் இராணுவத்திற்கு இருந்தது.

இதன் பலனாக பலர் காணாமற் போனவர்கள் பெயர்ப்பட்டியலில் இணைந்து கொண்டனர். ஆனாலும் இந்தப் பட்டியல்கள் நீளமானதாக இருந்தாலும், கிருஷாந்தி என்ற ஒற்றை மாணவியின் காணாமற் போதலின் தேடலுடன் இதுவும் நின்று கொள்கின்றது.

இந்த மாணவியின் காணாமற் போதலும், இவரது குடும்பத்தின் காணாமற் போதலும் பல கேள்விகளை அதிகார தரப்பை நோக்கி எழுப்பியிருந்தது. இதனால் நோண்டப்பட்ட விசாரணைகளின் விளைவாக முதன் முதலில் காணாமற் போனவர்களுக்கான பதில்கள் வழங்கப்பட்டன.

காணாமற் போனவர்கள் செம்மணிப் புதை குழிக்குள் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது நீதிமன்றம் வரையில் வந்தது. அந்தக் காலத்தில் காணாமற் போனவர்கள் எல்லோரும் இதற்குள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற எடுகோளுடன் அந்த விசாரணைகளின் நீட்சியுடன் அந்தக் காணாமற் போதல்களும் முடிவுக்கு வந்தன.

அடுத்த கட்ட வலிந்து காணாமல் போதல் செய்தல்கள் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்றது. இந்தக் காலத்து காணாமற் போதல்கள் பரந்து பட்டளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. யாழ். மாவட்டத்தில் இராணுவ ஊடரங்கு பிறப்பிக்கப்பட்ட இரவு நேரத்தில் வெள்ளை வான்களில் பலர் கடத்தப்பட்டனர். சுட்டுக் கொல்லப்பட முடியாதவர்கள், அதிகாரத் தரப்புகளாலும், ஒட்டுக் குழுக்களாலும் கடத்தப்பட்டனர்.

இந்தக் கடத்தல்கள் தனித்து யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்க, தலைநகர் கொழும்பிலும் அதியுயர் பாதுகாப்பு பகுதியில் வைத்தும் தமிழர்கள் கடத்தப்பட்டனர். இவர்களில் ஒரு சிலர் கப்பம் பெறுவதற்காக கடத்தப்பட்டிருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் கடத்தப்பட்டவர்களோ அல்லது கொழும்பில் கடத்தப்பட்டவர்கள் தொடர்பிலோ இதுவரையில் எதுவும் தெரிய வரவேயில்லை. இந்தக் கடத்தல்களினால் காணாமற் போனவர்களின் பெயர்ப் பட்டியல் நீண்டதுதான் மிச்சம். முதன் முறையாக இந்தக் காணர்மற் போதல்கள், அரச ஆணைக்குழுவான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புத்தகத்தாள்களில் எழுதப்பட்டுள்ளன.

இதற்குப் பின்னர் இடம்பெற்ற காணாமற் போதல்கள் என்பது, படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது தெரியாததே. இந்தக் காணாமற் போதலே எம் நினைவுகளிலும், அடிக்கடி வருகின்ற அறிக்கைகள், பேச்சுக்களிலும் இருக்கின்றது. இறுதியாக இடம்பெற்ற காணாமற் போதல் இதுவென்பதாலும் இன்னமும் எங்கள் நினைவுகளில் இருக்கின்றது.

இந்த இறுதிக் கட்டக் காணாமற் போதல்கள் என்பது, ஆயுதப் போராட்டத்தின் முடிவில் இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள், தளபதிகள் எனப் பலரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டிருந்தனர். இவர்களைப் பதிவு செய்து இராணுவத்தினர் ஏற்றிருந்தனர். ஆனால் தற்போது இவரகள் தங்களிடம் இல்லை என்றும், அப்படி யாரையும் கையேற்கவில்லை என்றும் அதிகாரத் தரப்பு மறுத்துரைக்கின்றது. இறுதிக் கட்டப் போர் தொடர்பில் சர்வதேச விசாரணையை எதிர்நோக்கியிருந்த இலங்கை, அதிலிருந்து தப்புவதற்காகாக அவசர அவசரமாக நல்லிணக்க ஆணைக் குழுவை அமைத்தது. அந்தக் குழுவின் சாட்சியப் பதிவுகளின் பெரும்பான்மையானவை காணாமற் போனவர்கள் தொடர்பானதே. அதிலும் இறுதிக் கட்டத்தில் சரணடைந்து காணாமற் போனவர்கள் பற்றியே அதிகம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இந்தப் பதிவுகள் தவிர்க்க முடியாதவை. இதன் விளைவால் தனது பரிந்துரைகளில் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற் போனோர் தொடர்பில் விசேட நடவடிக்கை - விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

இதேவேளை இலங்கையில் காணாமற் போனவர்கள் என்று யாருமில்லையெனவும், அப்படி யாராவது காணாமற் போயிருந்தால் அதற்கு ஐ.சி.ஆர்.சி மற்றும் இந்தியாவே பொறுப்பு என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதற்கு ஒரு படி மேலே போய், ஜனாதிபதி மஹிந்தவால் சிறைக்கு அனுப்பப்பட்ட சரத் பொன்சேகா, இறுதிக் கட்டப் போரில் சரணடைந்து காணாமற் போனவர்கள் என்று எவருமேயில்லை. அவ்வாறு இப்போது கோருபவர்கள் அரசின் நட்டஈட்டைப் பெறுவதற்காகவே அவ்வாறு செய்வதாகத் தெரிவித்திருந்தார்.

இவை ஒரு புறம் இருக்க, நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் 2011 ஆம் ஆண்டின் இறுதிக் கால [illegible] வெளிவந்திருந்தது. இதுவரையில் [illegible] தொடர்பிலான பரிந்துரையை கணக்கிலெடுக்காத அரசு அதனை தற்போது தான் கையெடுத்திருக்கின்றது.

இவ்வாறு மக்களை நோகடிக்கும் அதிகாரத் தரப்பின் அறிக்கைகள் வெளிவந்த நிலையில், காணாமற் போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழு அமைக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையில் வடக்கு - கிழக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பில் மாத்திரம் ஆராயவுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஊடாக காணாமற் போனவர்கள் தொடர்பிலான பிரச்சினைக்குத் தீர்வு ஒரு போதும் கிட்டாது என்று தெரிவிக்கிறார் திருமதி அனந்தி சசிதரன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினரான இவர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரான எழிலனின் மனைவி. இறுதிப் போரின் போது தனது கணவரையும், இராணுவத்தினரிடம் கையளித்து இன்னமும் தேடிக் கொண்டிருப்பவர்களில் அவரும் ஒருவர்.

அனந்தியின் கூற்றை ஆமோதிக்கின்றார், காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன். இலங்கை அரசு தனது அழுத்தத்திலிருந்து தப்பிப்பதற்காகவே இந்த ஆணைக்குழுவை அமைத்துள்ளது. இதனூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று துளியும் எதிரபார்க்க முடியாது.

இதுவரையில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுக்களினால் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. குறிப்பாக 1989 ஆம் ஆண்டுகளில் காணாமற் போனவர்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகள் கூட இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில் இந்த ஆணைக்குழுவும் வெறும் கண்துடைப்பு நாடகமே என்று சுந்தரம் மகேந்திரம் கடுமையாக விமர்சனம் செய்கின்றார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு பதிவுகளைச் செய்வதற்கு மக்கள் முன்வரவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் சலிப்புடன் இருப்பதாகத் தெரிவிக்கின்றார், மன்னார் பிரஜைகள் குழுவின் செயலர் சிந்தாத்துரை.

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு மக்கள் தங்கள் பதிவுகளை நிச்சயம் அனுப்ப வேண்டும் என்பதற்காக, வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர் மன்னார் பிரஜைகள் குழுவினர். முதலில் தாங்கள் பதிவுகளைத் திரட்டி அதனை ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அனுப்பத் தீரமானித்திருக்கின்றார்கள்.

இதற்கான பதிவு நடவடிக்கைகள் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பதிவுக்கு வருகின்ற மக்கள் சலிப்படைந்தவர்களாக இருப்பதாகக் குறிப்பிடும் சிந்தாத்துரை, காணாமற் போனோரின் உறவுகள் சலிப்படைவதில் நியாயம் இருப்பதையும் ஏற்றுக் கொள்கின்றார். எத்தனையோ ஆணைக்குழுக்கள் மற்றும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் முன்பாக என்று பல இடங்களில் சொல்லியும் தங்களுக்கான தீர்வு கிட்டவில்லை என்ற ஆதங்கத்தில் இருப்பதை அவர் ஒத்துக் கொள்கின்றார்.

இருந்தும் தமது பிரஜைகள் குழுவின் தலைவராக அருட் தந்தை மற்றும் ஆயர் ஆகியோர் இருப்பதால் அவர்கள் மீது நம்பிக்கை வைத்து பதிவு செய்ய காணாமற் போனோரின் உறவுகள் வருகின்றனர் என்கிறார்.

> காணமற் போனவர்கள் தொடர் பில் யாரிடமும் சரியான தகவல்கள் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எழுத்து மூல ஆவணமாக எத்தனை பேர் காணமற் போயுள் ளனர் என்ற தகவலையாவது, அறிய முடியும். அதுவும் அரச பதிவுகள், இத்தனை ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர் என்பதற்கு நாம் பதிவுகள் செய்வது கட்டாயம்

ஜனாதிபதியின் இந்த ஆணைக்குழுவினால் தீர்வு கிடைக்காவிட்டாலும், இறுதித் தடவையாக இந்த ஆணைக்குழுவில் மக்கள் கட்டாயம் தங்கள் பதிவுகளைச் செய்ய வேண்டும் என்கிறார், அனந்தி. காணமற் போனவர்கள் தொடர்பில் யாரிடமும் சரியான தகவல்கள் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எழுத்து மூல ஆவணமாக எத்தனை பேர் காணாமற் போயுள்ளனர் என்ற தகவலையாவது, அறிய முடியும். அதுவும் அரச பதிவுகள், இத்தனை ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர் என்பதற்கு நாம் பதிவுகள் செய்வது கட்டாயம் என்று கூறுகிறார். எனவே மக்கள் சலிப்புக்களை பொருட்படுத்தாது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தை ஆதரிக்கும் சுந்தரம் மகேந்திரன், காணாமற் போனவர்களே இல்லை என்று சொல்லிய அரசின் கருத்தை பொய்யாக்க வேண்டும் என்றால் அரசின் ஆணைக்குழுவில் இத்தனை ஆயிரம் பேர் காணாமற் போயிருக்கின்றார்கள் என்ற பதிவு வந்தாக வேண்டும்.

நாம் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதிவு செய்வதன் ஊடாக, இவர்களது விசாரணைகள் திருப்தியில்லை என்றால் சர்வதேச விசாரணைகள் கோருவதற்கும், காணாமற் போன ஆயிரக் கணக் கானோரின் உறவுகள் பதிவு செய்வது அவசியம் என்று குறிப்பிடுகின்றார்.

இதேவேளை இலங்கைக்குப் பயணம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் காணாமற் போனோர் விடயத்தில் இலங்கை அரசுடன் கிடுகுப் பிடியுடனே நடந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அவரைச் சந்தித்த காணாமற் போனவர்களின் உறவுகள், நான் என்ர கையால பிள்ளையை ஆமியிட்ட குடுத்தனான். இப்ப அப்பிடி ஒருத்தரும் இல்லை எண்டு சொல்லுறாங்கள். அப்ப அவங்கள் எங்க? அவங்களைக் கொண்டிட்டாங்கள் என்ரு இவங்களை நீங்கள் கொலைகாரன் எண்டு சொல்லி தண்டனை கொடுக்க வேண்டும்" என்று கோரினர். இதன் பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்த, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் காணமற் போனோர் தொடர்பில் நீதியான விசாரணை தேவை என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசு சர்வதேச அழுத்ததிலிருந்து தப்புவதற்காக காணாமற் போனோர் விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்வதாக பாசாங்கு காட்டினாலும், சர்வதேசம் விடுவதாக இல்லை. எனவே சர்வதேசத்தின் அழுத்தத்தை அதிகரிக்க, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சரியான விபரங்களை பாதிக்கப்பட்ட மக்கள் வழங்க வேண்டும் அதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதிவு நடவடிக்கையில் பங்கேற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிய உணவு ஆயிரம் ரூபா

எடுத்துக்கொண்டு. திட்டமிட்டு அதன் வாழ்க்கைத் தரத்தை மிக உயர்த்திக் காட்டுவதன்மூலம் பெரும் வர்த்தக முதலைகள் பல தகிடுதத்தக் காரியங்களைச் சாதிக்க இயலும். கண்ணுக்குத் தெரியாமல் இதில் சில அரசுகளும் சம்மந்தப்படும். அதெல்லாம் பெரும் பணக் கணக்கு. ஒன்றுமே இல்லாது போனாலும் சுற்றுலா வருமானத்தை நம்பவே முடியாத அளவுக்கு உயர்த்திக்கொள்ளும் மாயம். இதனை நாகரிகக் கொள்ளை என்பார்கள். ஆனால் இதனால் துன்பங்கள் என்னவோ உள்ளூர்வாசிகளுக்குத்தான்.


நியூயோர்க். மொஸ்கோ. ரோக்கியோ என்பவற்றைவிட அங்கோலாவின் தலைநகர் லுவாண்டாவைப் பெரும் பணக்கார நகரமாக முன்வைப்பதன் அரசியல், பொருளாதார சூழ்ச்சி நோக்கங்கள் காலப்போக்கில் அந்த தேசத்தை இன்னும் வறுமையின் கோரப்பிடியில்தான் இழுத்துச் சேர்க்கும் என்கிறார்கள் வல்லுநர்கள். இப்போதைக்கு உலகின் அதி உன்னத சாராய வகை மாதிரிகளை மொத்தமாக ருசிக்க விரும்பும் பெரும் பணக்காரர்கள் கண்ணை மூடிக் கொண்டு லுவாண்டாவுக்குப் போகலாம். எங்குமே கிடைக்காது என்று சொல்லப்படுவதெல்லாம்கூட அங்கே கிடைக்கும். போகிறபோது ஆளுக்கு ஒரு கானில் தண்ணீர் எடுத்துச் சென்று அந்த ஊர் மக்களுக்கு தட்சணையாகக் கொடுக்க முடிந்தால் போகிற வழிக்குப் புண்ணியமாகப் போகும்.

அங்கோலாவில் சாராயத்துக்குப் பஞ்சமில்லை. குடிதண்ணீர்தான் பெரும்பாடு.

DPMC

otto spare parts

நீடித்த பாவனை தரம்
சிறப்பான பலம்...



otto

முச்சக்கர வண்டி மற்றும்
மோட்டார் சைக்கிள்களுக்கான
Friction free கியர், கிளச்,
எக்சலேட்டர் மற்றும் பிரேக்

கேபில்ஸ்

எங்களினால் இலங்கையிலேயே
உற்பத்தி செய்யப்பட்டு
விநியோகிக்கப்படும்
உயர்தரத்திலான கேபில்ஸ்.




- சிறப்பான செயற்பாடு
- தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ள முடியும்
- நீண்ட காலம் நிலைத்திடும், கறல் பிடிக்காதது
- உயர் தரத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது
- வசதியான விலை
- நாடளாவிய உதிரிப்பாக விற்பனையகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்

இலங்கை உற்பத்தி

ரூ. 40/- லிருந்து

உற்பத்தி மற்றும் விநியோகம்

DPA டேவிட் பீரிஸ் ஓட்டோ மொபைல் லிமிட்டட்
Company Reg. No: PB30
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை

# "ஆஹா அற்புதம்"
## என வியக்கவைத்த நாடகம்



பிரபா கந்தசாமி ஐயர்

தாயைத் தொலைத்த பிள்ளைகளாக அரசியல் தலைமை இல்லாது தள்ளாடும் மக்கள் கூட்டத்தை மேடையில் தோற்றுவித்து மனதை உணர்வுகளால் பிசைய ஒரு நாடகத்தால் முடிந்திருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 28. 09.2013 அன்று நடைபெற்ற இளையோர் நாடக விழா- 2013 இந்த வாய்ப்பை பார்வையாளர்களுக்குத் தந்தது. அதில் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் ஒன்று 'வெப்பக் குடுவை'.

கலையனுபவம் ஒரு பார்வையாளனின் கண்ணில், அவனது பார்வையில் "அட! இதை இப்படியும் பார்க்கலாம்; இதுக்கு இப்படியும் அர்த்தம் செய்யலாம்" என்ற வியத்தலிலேயே தங்கியுள்ளது என்பர். அந்த அனுபவத்தை 'வெப்பக் குடுவை' அச்சொட்டாகத் தந்தது.

அரங்கப் பொருள்களின் பாவனை, அவற்றை நடிகர்கள் கையாண்டவிதம், வேட உடைகளின் பல்வகைமையைப் பேணிய அதேநேரம் - வேடமாற்றத்துக்கான நேரம் மற்றும் பொருளாதாரம் என்பவற்றில் சிக்கனத்தைக் கையாண்ட விதம், ஒலி, ஒளி, இசை என அனைத்துமே "ஆஹா அற்புதம்!" என வியக்க வைத்தன.

உத்திமையக் கரு என்பவற்றின் அடிப்படையில் 90களில் நாடகம் பார்த்த அதே உணர்வை இந்த நாடகம் ஏற்படுத்தியது. நாடக அரங்கக் கல்லூரியின் சமூகமாற்றத்துக்கான அரங்கின் தொடர்ச்சியாகவே இந்த நாடகத்தை மேடையேற்றிய செயல் திறன் அரங்க இயக்கத்தின் பணிகளை அளவிடுவது தவிர்க்க இயலாததாகின்றது.

'வெப்பக்குடுவை' குறியீட்டு வடிவில் அமைந்த நாடகம். காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த தென்கிழக்காசிய நாடுகள் அனைத்தினதும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமையைப் பிரதிபலிக்கின்ற ஒரு சிறந்த படைப்பு.

தாயைத் தொலைத்த மக்களாக அரசியல் தலைமை இல்லாது அவலப்படும் தமிழர்களின் நிலை அதில் வெளிப்படுத்தப்படுகின்றது. அதாவது அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான உறவாகச் சித்திரிக்கப்படுகிறது. இது மன்னராட்சியின் எச்சசொச்சமாகப் பார்க்கப்படக்கூடியது என்ற போதும், அத்தகைய எதிர்பார்ப்புப் பொய்த்துப் போகும்போது அது ஆண்டாள் அடிமை முறையாக உணரப்படுவதை நாடகம் வெகுதுல்லியமாக வெளிக் கொணர்கின்றது. அடிப்படைத்தேவைகளுக்குக்கூட அரசைச் சார்ந்து வாழும் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலை இத்தகைய தலைமைத்துவத்தின் நிலைபேற்றுக்கு உதவுகின்றது என்பதை நாடகத்தின் நெறியாளர் தே. தேவானந்த் வெகு அழகாக வெளிக்கொணர்கிறார்.

நாடக முடிவில் நீதி நிலைநாட்டப்படும் விதம் மன்னராட்சி மட்டுமே ஆட்சியாக இங்கெல்லாம் ஆழப் பதிந்து போய்விட்டமையைச் சுட்டிக்காட்டுகின்றது. அதாவது இன்றும் கூட தன் தாயை தாமே அறிந்து கொள்ளும் திறனைப் பிள்ளைகள் பெற்றுவிடவில்லை. நீதிஅறிவுபூர்வமாக உணர்வை அடிப்படையாகக் கொண்ட தந்திரோபாயமாக வெளிக்காட்டப்பட்டாலும் தாய், பிள்ளைகள் மீது கொண்ட உணர்வு மட்டும் பரிசீலிக்கப்பட்டதே தவிர, பிள்ளைகள் தாய் மீது கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்தவில்லை. அதாவது தலைமைக்கான தெரிவு பொது அபிப்பிராயத்தில் தங்கியுள்ளதே தவிர பொது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாக இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த நாடகங்களை மேடையேற்றும்போது ஒரு கலையைக் கலையாகவும் கலைஞனைக் கலைஞனாகவும் பார்க்கப்படுவதற்கு பதில் அவனது கருத்துச் சுதந்திரம் மதிக்கப்படுவதற்கு பதில் அலைக்கழிக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது. ஒரு நாடகம் போடுவதற்குக்கூட அரசியல்வாதியின் அனுமதி வேண்டப்படும் நிலை இந்த நாட்டின் அவலம். அரச்சியல்வாதிகளுக்கும் கலைஞனுக்கும் இடையேயுள்ள இடைத் தரகர்கள், அவர்களது கூழைக் கும்பிடுபோடும் தன்மை; மதிப்பு என்ற போர்வையில் மக்களிலிருந்து மக்கள் தலைமையை வேறுபடுத்தும் இத்தகைய மூன்றாவது சக்திகளின் வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. இந்த நிலையை மாற்ற இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்ற எண்ணத்தைத் தவிர்க்க முடியாது. இது 'வெப்பக் குடுவை'யில் அக்கினிப் பெருமூச்சாக வெளிப்பட்டது.

ஜனநாயகம் சோசலிஷம், மக்களாட்சி என்ற சொற்பதங்கள் உண்மையில் உணரப்பட வேண்டுமானால் மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து இத்தகைய மூன்றாவது சக்திகளை வலுவிழக்கச் செய்யவேண்டும். அதாவது மக்கள் தங்கி வாழும் மனோபாவத்திலிருந்து விடுபட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கவும் ஆட்சியாளர் அதிகாரம் என்பதிலிருந்து இறங்கி மக்களோடு மக்களாக அவர்களது கூட்டான செயல்களுக்கு ஊக்கம் அளித்து வழிநடத்தவல்ல வளவாளராகவும் மாறவேண்டிய தேவையை இளையோர் நாடகவிழா 2013 வெளிக் கொணர்ந்துள்ளது.

சமூகமாற்றத்துக்கான சக்தியாக உருவெடுக்கும் இத்தகைய இளைஞர்களை வலுப்படுத்தும் விதமாக அவர்களைத் தொழில்முறைக் கலைஞர்களாக வலுவூட்டாமல் போனோமானால் நாடகம் வாழ்வைப் பிரதிபலிப்பதற்குப் பதில் வாழ்வே நாடகமாகிவிடும் அவலம் நேர்ந்து விடலாம்.

இந்த நாடகங்களினை நாட்டின் பலபாகங்களில் மேடையேற்றவும் அதன் பின்னரான விமர்சன நிகழ்வுகளை நடத்துவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை உள்ளூராட்சி மன்றங்களும் பிரதேச செயலர் பிரிவு கலை, கலாசார மன்றங்களும் கலாசாரத் திணைக்களமும் செய்ய வேண்டும்.





# கனடாவின் புறக்கணிப்பு....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்ற விடயம் இந்தியாவிற்கும் ஒரு பெரும் பிரச்சினையாகவே இந்த நிமிடம் வரை இருந்து வருகின்றது. மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையின் போக்கை கண்டிக்கும் விதத்தில் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற உள்நாட்டு அழுத்தம் இந்தியாவில் அதிகரித்த வண்ணமே உள்ளது. இறுதியாக கிடைத்த செய்திப் படி இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் என்றே தெரிகின்றது.

உலகின் முக்கிய பல நாடுகளில் ஏற்பட்டு வரும் இந்த குழப்பமான சூழலை அவதானிக்கும்போது இலங்கையின் மனித உரிமை மீறல்கள் உட்பட்ட ஏனைய விடயங்களாவன பொதுநலவாய நாடுகள் மாநாடுடன் மட்டும் தொடர்பான அல்லது அதனுடன் முடிந்து போகும் ஒரு பிரச்சினை அல்ல என்பது தெளிவாகின்றது. சில வாரங்களுக்கு முன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் உயர் ஆணையர் நவநீதம்பிள்ளை ஒரு பிரகடனத்தில், 2014 மார்ச் மாதத்துக்கு முன் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பான விசாரணை களில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையாத பட்சத்தில் சர்வதேச விசாரணை ஒன்றை சந்திக்க இலங்கை அரசு தயாராக வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இப்பிரகடனமானது, ஐ.நா. சபை இலங்கைக்கு எதிராக இரு தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை இலங்கை பொருட்படுத்தாமல் அசட்டையாக இருக்கும் பின்னணியிலேயே விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன்போது ஐ.நா. சபை புதிதாக எதையும் இலங்கைக்குக் கூறவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைத்த கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் வைத்த பரிந்துரைகளை செயற்படுத்துமாறே ஐ.நா. இலங்கை அரசை வலியுறுத்தியது.

ஒரு நாடு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்தளவு உள்நாட்டு வெளிநாட்டு விமர்சனங்களுக்கு இலக்காகி இருக்கும் போதே பொதுநலவாய நாடுகள் மாநாடு போன்றதொரு முக்கிய நிகழ்வுக்கு தலைமை தாங்கும் வாய்ப்பு அதற்கு வழங்கப் பட்டிருக்கும் அசாதாரண நிலை பற்றி உலக நாடுகள் பொதுவாக துளைக்குற்று மயங்காடு மிகுந்த அவதானிப்புடனேயே அதனைக் கண்காணித்து வருகின்றன. இலங்கைக்கு இந்த வாய்ப்பை வழங்க வேண்டாம் என பொதுநலவாய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுக்கு மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்தே வருகின்றது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் பணிப்பாளர் ப்ரேட் எடம்ஸ் பொதுக் போர் குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ள ஒரு நாட்டுக்கு பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் தலைமைத்துவம் வழங்கப்பட்டுள்ளமை பெரும் முறைகேடான ஒரு நடவ[illegible] தன்னுடைய குற்றச் செயல்களுக்கு மனம் வருந்தாத ஒரு அரசிட்கு இந்த வாய்ப்பை அளித்திருப்பது நயவஞ்சகத்தின் உச்சமாகும் என்று சாடியுள்ளார். மாநாட்டை யார் புறக்கணிக்கிறார்கள் அல்லது பங்கேற்பார்கள் என்பது இலங்கையரான நமக்கு ஒரு பெரும் பிரச்சினை அல்ல. அது தொடர்பான தீர்மானங்கள் அந்தந்த நாடுகளின் உரிமையாவதோடு அதை நாம் மதிக்க வேண்டும். பிரிட்டனின் கூற்றுப்படி தான் இந்த மாநாட்டில் பங்கேற்பதை இலங்கையின் செயற்பாடுகளுக்கான அங்கீகாரமாக இலங்கை அரசு கொள்ளக்கூடாது என்பது தெளிவாகின்றது. மேலும் பிரிட்டன் இதில் பங்கேற்பதன் மூலம் வேறு சில விடயங்களை இலக்கு வைத்திருக்கவும் இடமுண்டு. அதாவது மாநாட்டை புறக்கணிக்காமல் அதில் பங்கேற்று, அந்த பங்கேற்பின் உரிமை ஊடாக மனித உரிமை மற்றும் ஏனைய விடயங்களுக்காக அதிக அழுத்தத்தை இலங்கைக்கு கொடுக்க பிரிட்டன் எண்ணியிருக்கலாம்.

இதேவேளை, இலங்கையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில் மாநாட்டை புறக்கணிக்கும் கனடாவின் முடிவும் போற்றத்தக்கதே. கனடாவின் இந்த நடவடிக்கையை இலங்கைக்கு எதிராக அந்நாடு மேற்கொள்ளும் ஓர் அரசியல் தாக்குதலாக இலங்கை அர்த்தம் செய்வது விவேகமாகாது. கனடாவின் இந்த நடவடிக்கையானது அந்த நாடு உலகில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக மேற்கொண்டு வரும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளின் ஓர் அங்கம் மாத்திரமே. கனடாவின் இதுபோன்ற நடவடிக்கைகளை உலக நாடுகள் என்றும் போற்றியும் பாராட்டியும் வந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

உலகில் மனித உரிமையை நிலைநாட்டும் விடயத்தில் கனடாவின் பங்களிப்பு மிகவும் பிரசித்தம் பெற்றதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பிரிவாக இன்று செயற்பட்டு வரும் சர்வதேச சமாதானப் படை கனடாவின் ஒரு முன்மொழிதலேயாகும். அதேபோன்று கறுப்பர்களுக்கு வேற்றுமை காட்டும் தென்னாபிரிக்காவின் போக்கை கண்டித்து 1980 ஆண்டில் அந்த நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற யோசனையையும் கனடாவே ஐ.நா. சபையில் முன்வைத்தது. 1996 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து பர்மாவிற்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடைகளை கொண்டு வரும் விடயத்திலும் கனடாவே முன்னின்று செயற்பட்டது. அதைத் தொடர்ந்து 2007 ஆண்டில் பெலாரஸ்ஸில் பெரும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றபோதும், சிரிய அரசு தன்னுடைய சொந்த மக்களுக்கு எதிராகவே கொடுமைகளை கட்டவிழ்த்த போதும், ஈரானின் கடந்த பத்தாண்டு கால தெளிவற்ற மனித உரிமை கோட்பாடுகளின் போதும் அந்த நாடுகளுக்கு எதிராக ஐ.நா நடவடிக்கைகளை எடுக்க ஊக்குவிக்கும் விடயத்தில் கனடாவே முன்னின்றது. அது மட்டுமின்றி சர்வதேச குற்றச் செயல் நீதிமன்றக் கோட்பாட்டையும் கனடாவே முன்மொழிந்ததோடு அது உருவாக்கப்பட்ட பின் அதன் முதல் தலைவராக சில காலம் பணியாற்றிய நீதியரசர் பிலிபேகர்ம் ஒரு கனேடியரே.

இந்தளவு சர்வதேச நன்மதிப்பை பெற்றுள்ள கனடா போன்றதொரு ஒப்பற்ற தேசம் நம் நாட்டில் நடைபெற இருக்கும் ஒரு சர்வதேச வைபவத்தில் பங்கேற்க மறுத்துள்ளமையைத்தான் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அது பொருட்படுத்த வேண்டிய விடயமே அல்ல என்று ஒதுக்கித் தள்ளியுள்ளார். உண்மையில் இது ஒரு விவேகமான, செல்லுபடியாகக் கூடிய நிலைப்பாடு அல்ல. மனித உரிமை பாதுகாப்பு தொடர்பாக கனடாவின் அர்ப்பணிப்புகளை இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா உட்பட்ட பல உலக நாடுகள் வானளவு மெச்சும்போது பேராசிரியர் பீரிஸ் கனடாவைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு முன் இரு முறை சிந்தித்துப் பார்த்திருக்கலாம்.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பான விடயம் இவ்வாறு சர்ச்சைக்குரியதாக இருக்கும் நிலையில் தென்னாபிரிக்கக் குடியரசும் இது பற்றி நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவை எடுப்பதே பொருத்தமாகும். தன்னுடைய நாட்டு மக்களில் ஒரு சாராருக்கு அநீதிகளை இழைத்த வண்ணம் தென்னாபிரிக்கா அழிவின் பாதையில் நடை போட்டுக் கொண்டிருந்தபோது உரிய தருணத்தில் ஐக்கிய நாடுகள் சபை பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்ததன் பயனாக தென்னாபிரிக்கா சுதாரித்துக் கொண்டு தன்னை திருத்திக் கொண்டது. அதன் வெளிப்பாடாக இன்று அந்த நாடு நல்லிணக்கம், சமூக ஒற்றுமை, சகவாழ்வு, அபிவிருத்தி போன்ற அம்சங்களில் ஒரு சிறந்த முன்மாதிரியாக உலகில் திகழ்கின்றது.

நிலைமை அவ்வாறிருக்க தன்னுடைய கடந்த காலத்தை மறந்து விட்டது போல தென்னாபிரிக்கா நடந்து கொள்ளாமல் தன்னுடைய கடந்த காலத்துடன் இலங்கையின் நிகழ்காலத்தை ஒப்பிட்ட வண்ணம், பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக நல்லதொரு முடிவை அந்த நாடு எடுக்க வேண்டும். இதேவேளை, இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகச் சர்வதேசம் குறை கூறும் போதெல்லாம், குறுகிய அரசியல் இலாபம் கருதி அதை வெளிநாட்டுச் சதி அது, இது என்றெல்லாம் கூறியபடி அதற்கு அரசியல் முலாம் பூசுவதற்கு முயற்சிப்பதை இலங்கை அரசு இனியேனும் விட்டுவிட வேண்டும். இலங்கைக்கு எதிரான கடந்த கால ஐ.நா. தீர்மானங்கள் முதல், தற்போதைய பொதுநலவாய மாநாடு தொடர்பாக இன்று ஏற்பட்டுள்ள சர்ச்சைக்குரிய நிலை வரை பல்வேறுபட்ட விதங்களில் இலங்கைக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுத்து வந்தாலும் அவை அனைத்திலும் பொதிந்துள்ள செய்தி ஒன்றேயாகும். மேலும் இந்த அழுத்தங்களின் தீவிரமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் அரசு உணர வேண்டும். காதுகளில் விரல்களை வைப்பதனால் கோஷங்கள் குறைந்து விடும், மறைந்து விடும் என எண்ணுவது விவேகமாகாது. மாறாக, அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்குத் தீர்வுகளைக் காண்பதன் மூலமே கோஷங்களையும் எதிர்ப்புக்களையும் வெற்றி கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சீன- இந்திய எல்லை பதற்றம் நீங்கியது

ரெங்கன்

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடை யில் எல்லை பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி ஆசியாவில் உள்ள பல நாடுகளுக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தருகின்ற விடயமாகக் கருதப்படுகின்றது.

ஆசியாவின் மிகப் பெரிய பூதங்களாகக் கருதப்படும் இவ்விரு நாடுகளுக்கு மிடையில் அமைதி நிலவுவதும் அவை ஒன்றை ஒன்று நட்புடன் அணுகுவதும் பிராந்தியத்தின் அமைதிக்கு மட்டுமன்றி நாடுகளின் வளர்ச்சிக்கும் உதவுவதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

இரு நாடுகளுக்குமிடையில் அண்மைக் காலமாக எல்லைப் பகுதியில் உருவாகியிருந்த முறுகல் நிலை விரிவடைந்து பெரும் போராக வெடித்துவிடக் கூடாது என்பதில் இரு நாட்டுத் தலைவர்கள் மட்டுமன்றி மக்களும் கவலை கொண்டிருந்தார்கள். பல கோணங்களில் முன்னேற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவை இரண்டுக்குமிடையில் பெரிய அளவில் சண்டையொன்று ஏற்படுமானால் இரு நாடுகளின் வளர்ச்சித் திட்டங்கள் மோசமாகப் பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க பொருளாதார ரீதியில் மிக பரிதாபகரமான நிலையில் இருந்து



மன்மோகன் சிங்கின் பீஜிங் விஜயம் வெற்றி

எழுந்து கொண்டிருக்கும் அந்நாடுகளின் அடிநிலை பொதுமக்களை மேலும் அதல பாதாளத்தில் தள்ளிவிடும். கோடிக்கணக்கான அம்மக்களின் மீள் எழுச்சிக்கு மீண்டும் பல காலம் புது முயற்சிகளில் அந்த நாட்டு அரசுகள் இறங்கவேண்டியிருக்கும். இந்த விடயத்தை இருநாட்டுத் தலைவர்களும் நன்கு ஆராய்ந்து சில முடிவுகளை எடுத்திருப்பது வரவேற்க வேண்டிய விடயம்.

இரு நாடுகளுக்குமிடையிலான முறுகு நிலைக்கு ஒரு முடிவு கட்டும் விதத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த வாரம் சீனத் தலைநகருக்குச் சென்று சீனத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்தினார். அதன் விளைவாக இரு நாடுகளுக்குமிடையில் கடந்த புதன்கிழமை எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

### சீனத் தலைவரின் கருத்து

இந்த ஒப்பந்தத்தை அடுத்து சீனப் பிரதமர் லிகெபியாங் கருத்துத் தெரிவிக்கையில் எமது எல்லைப் பகுதியில் அமைதி, சாந்தம் மற்றும் ஸ்திரநிலைமையைப் பாதுகாக்க இது உதவும் என்று கூறினார். இரண்டு தரப்பு இராணுவங்களுக்குமிடையிலும் மேன்மையான தொடர்புகளைப் பேணுவதற்கும் உதவும் என்று கருதப்படுகின்றது. அதற்கான சரத்துக்களும் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவிருக்கின்றன. 1962 ஆம் ஆண்டு சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் எல்லை தொடர்பாகக் குறுகிய கால போர் ஒன்று நடைபெற்று ஓய்ந்தது. என்றாலும் இரு தரப்புக்குமிடையில் எல்லைப் பிரதேசக் கோடு சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. கடந்த ஏப்ரலில் சீனப்படைகள் 20 கிலோமீற்றர் (12 மைல் தூரம்) இந்தியப் பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாக இந்திய தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஏற்பட்ட முறுகுநிலை மூன்று வாரங்களின் பின் தீர்வு காணப்பட்டு ஊடுருவிய இரு தரப்புப் படைகளும் தத்தம் பிரதேசங்களுக்குள் திரும்பிச் சென்றுவிட்டன.

மன்மோகன்சிங் சீனாவுக்குப் பயணம் செய்ததன் மூலம் எல்லைப் பகுதிகளில் பயங்கரவாதிகளின் செயற்பாடுகளுக்கு ஒரு முடிவு கட்டவும் இருதரப்பும் இணக்கத்துக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது. இதுபற்றிச் சீனப் பிரதமர் லி கூறுகையில்,

தென்மேற்குச் சீனாவில் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சிகளை இரண்டு நாடுகளும் நடத்தவிருப்பதாகவும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இரு தரப்பு ஒத்துழைப்புக்கள் பலப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். முஸ்லிம்களின் உயிகூர்ஸ் பிரிவினருக்கு தாயகமான சின்சியாங் பிராந்தியத்தில் கடந்த காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களுக்கு பயங்கரவாதிகளே காரணமாக இருந்துள்ளனர் என்பது சீன அரசின் கருத்து. இந்தக் குழுக்கள் பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வந்து நடவடிக்கைகளில் இறங்கினார்கள் என்று சீனா முன்பு கருதியது.

இரு நாடுகளுக்குமிடையில் ஊடறுத்துப் பாயும் ஆறுகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் போன்றவற்றில் ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்துவதற்கென தனிப்பட்ட முறையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் இரு நாடுகளும் செய்து கொண்டுள்ளன. இந்த வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் 9 ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான மிகப் பெரிய வர்த்தக பங்காளியாக இப்போது சீனாவே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை

# சிரியாவின் அமெரிக்க எதிர்ப்பு நிலையில் மாற்றம்?





ஈரானிய அரசும் அதிகாரிகளும் இதுகாலவரை அமெரிக்காவுக்கு எதிராகக் கடைப்பிடித்து வந்துள்ள எதிர்ப்பு மற்றும் பகைமைப் போக்கை முற்றாக மாற்றி அமைத்துக் கொள்ள அந்த நாடு இப்போது முயன்று வருவதை விமர்சகர்கள் அவதானித்து வருகிறார்கள்.

ஐ.நா.வின் 68 ஆவது மாநாட்டில் ஈரானிய புதிய அதிபர் ரோஹானி நிகழ்த்திய மென்மைப் போக்கான உரைக்குப் பின்னர் சர்வதேசத்துடனான அந்த நாட்டின் செயற்பாடுகள் இணக்கப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்தது. அதன் அடிப்படையில் ஈரானிய அணு சக்தி கொள்கை தொடர்பாகச் சர்வதேசத்துடனான பேச்சுக்களும் புதிய கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமையில்தான் ஈரான் இதுவரை கூறிவந்துள்ள அமெரிக்காவுக்கு மரணம் என்ற சுலோகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதாக அதிபர் ரோஹானி அறிவித்துள்ளார்.

ஈரானிய புதிய அதிபராக ஹசன் ரோஹானி பதவி ஏற்றதையடுத்து அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுடன் நேடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியமை அவர் ஒரு சீர்திருத்தவாதியாக ஈரானில் உருவாகியிருக்கிறார் என்று உலக நாடுகள் கருதலாகின.


அமெரிக்காவுக்குச் சாவு என்ற சுலோகம் 1974 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கத் தூதரகம் கைப்பற்றப் பட்ட காலத்திலிருந்து கோஷிக்கப் பட்டு வந்துள்ளது. குறிப்பாகப் பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை தொழுகைகளின்போது தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் கோஷிக்கப் பட்டு வந்தது.

இந்த கோஷமானது இனிமேலும் அவசியமில்லை. அதனால் நாடு முன்னேற்றமடைவது தடைப்பட்டு வருகிறது என்று ரோஸாணியின் அரசியல் குருவும் முன்னாள் அதிபருமான அக்பா ஹஷெமி ராப்சஞ்சானி தெரிவித்துள்ளார். இந்த சுலோகம் வெள்ளிக்கிழமை தொழுகைகளின்போது கோஷிக்கப் படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு நிகழ்ச்சியில் ராப்ஸ் சஞ்ஸானி உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது எதிர்த் தரப்பினர் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிக் கொண்டு அடிக்கடி குறுக்கீடு செய்தார்கள். அதற்குப் பதிலளித்த அவர் ரோஸாணியின் எதிரிகள் நாட்டின் முன்னேற்றத்தைப் பின்னடைய செய்து கொண்டிருக்கிறார்கள் என்று திருப்பி அடித்தார். தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகர்களைக் கொண்ட கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய ராப்ஸ்ட் சஞ்ஸாணி, உலக நாள்களுடன் உறவுகளை வைத்துக் கொள்ளத் தீவிரவாதிகள் எம்மை அனுமதிப் பார்களானால் நாட்டின் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டு விடும் என்றார்.

# கடவுளும் இன்று சிறைக் கைதியே

போப்பாண்டவர்



உலகில் இன்று கடவுளும் ஒரு சிறைக்கைதியாகவே இருக்கிறார் என்று பாப்பாண்டவர் பிரான்சிஸ் கூறியிருக்கிறார். மனிதர்களின் இன்றைய ஆணவப் போக்கைக் கண்டித்து கருத்து வெளியிட்ட போப்பாண்டவர், இதனால் கடவுளும் சிறைக் கைதியாக நேர்ந்துள்ளது என்றார்.

எமது ஆணவம், எமது செயல்முறைகள் இவைகள் மூலம் நாம் மேற்கொள்ளும் அநீதிகள், சிறு மீன்களைத் தண்டித்துப் பெரிய மீன்கள் தப்பிச் செல்லவிடுவது ; இவைகளில் அவரும் சிறையில் இருக்கிறார்.

கடவுள் சிறையில் இருக்கிறார், சிறையின் ஒவ்வொரு அறையிலும் காணப்படுகிறார் என்றார். வத்திக்கானில் சிறை அதிகாரிகள் கூட்டமொன்றில் போப்பாண்டவர் உரை நிகழ்த்தினார். நீதித்துறையில் சீர்திருத்தங்கள் வரவேண்டும் என்றும் பாப்பரசர் தெரிவித்தார். சிறைக் கைதிகளின் வாழ்க்கை முறைகளில் அதிக கவனம் செலுத்துபவராக போப்பாண்டவர் பிரான்சிஸ் இருந்து வருகிறார். போப்பாண்டவராகப் நியமனம் பெற்றவுடன் அவர் மேற்கொண்ட முதல் நடவடிக்கைகளில் ஒன்று ரோமிலுள்ள சிறுவர் சிறைக் கைதிகளின் கால்களில் தொட்டு அவர்களை ஆசீர்வதித்தமையாகும். ஈஸ்டர் நிகழ்வுகளின் ஒரு சடங்காக இது இடம்பெற்றிருந்தது.

# இந்திய - பாக். எல்லையில் தொடர்கிறது பதற்றம்

சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் பட்டுள்ள அதேவேளை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான காஷ்மீர் எல்லையில் பதற்றம் அதிகரித்திருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

காஷ்மீர் எல்லையில் இரு தரப்புப் படைகளுக்குமிடையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் இந்திய வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் ஆறுபேர் காயமடைந்ததாகவும் இந்திய தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில் இடம்பெற்ற மோதல்களில் இதுமிக மோசமான சம்பவம் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதத்திலிருந்து எல்லையிலுள்ள 50 நிலைகள் மீது பாகிஸ்தானியர் சிறு ஆயுதங்களால் தாக்கி வருவதாக இந்திய எல்லைக் காவல் படையினர் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தானிலிருந்து பயங்கரவாதிகள் ஊடுருவி இந்தியாவுக்குள் பிரவேசிப்பதற்கு உதவுவதற்காகவே பாகிஸ்தான் படைகள் இந்தத் தாக்குதல்களை நடத்தி வருவதாகச் சந்தேகம் எழுந்துள்ளது என்று புதுடில்லியிலுள்ள எல்லைப் பாதுகாப்புப் படைகளின் செயற்பாட்டுப் பிரிவுத் தலைவர் ராஜு கிருஷ்ணா என்பவர் தெரிவித்துள்ளார். தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சிக்குத் தகுந்த பதிலடி கொடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். என்றாலும் மோதல்கள் தீவிரமடைந்து வருவது கவலையைத் தருவதாக அதிகாரிகள் கூறினர். அண்மையில் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசிய இந்திய - பாகிஸ்தான் பிரதமர்கள் இருதரப்புக்குமிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முயலப் போவதாக அறிவித்திருந்தினர்.





TVS

TVS 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி

ரூ. 32,000 வரையில் விலைத் தள்ளுபடி



~~ரூ. 333,900/-~~ ரூ. 322,900/- (வரிகள் உள்ளடங்கலாக)
~~ரூ. 299,900/-~~ ரூ. 289,900/- (வரிகள் உள்ளடங்கலாக)
~~ரூ. 282,900/-~~ ரூ. 269,900/- (வரிகள் உள்ளடங்கலாக)
~~ரூ. 269,900/-~~ ரூ. 259,900/- (வரிகள் உள்ளடங்கலாக)
~~ரூ. 231,900/-~~ ரூ. 199,900/- (வரிகள் உள்ளடங்கலாக)

* நிபந்தனைகளுக்குட்பட்டது

TVS லங்கா (தனியார்) நிறுவனம்
இல.38, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை. டெலி 0114 605200 பக்ஸ் 0114 614909

விரையுங்கள்...
இவ்விலைத் தள்ளுபடி ஒக்ரோபர் 31 வரை மட்டுமே.

கொழும்பு - நிமலேந்திரன் 0777266756, கம்பஹா - திலின 0779872916 களுத்துறை ... யாழ்ப்பாணம் - ரொஹான் 0777782739, திருகோணமலை - கரன் 0773799891, பொலன்னறுவை - ஹர்ஷ 0773497641
அம்பாறை, மட்டக்களப்பு - பிரஷாந்தன் 0773688538, கண்டி - பஸ்நாயக்க ... அனுராதபுரம் ... குருணாகல் - சஞ்சீவ 0777283093, ஹம்பந்தொட்ட - ரங்கநாத் 0777283095 பதுளை - ரங்கநாத் 0777283095
காலி - ஷக்தி 0772085345, மாத்தறை - நிஷாந்த 0777387252, நுவரெலியா - சத்துரங்க 0776166342, இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய - தில்ருக் 0777554839, புத்தளம் - அமில 0777389060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை ஆட்டிப்படைக்கும் உச்சி மாநாடு

கந்தவனம் கோணேஸ்வரன்

பொதுநலவாயத்தின் 23 ஆவது அரசதலைவர்கள் மாநாட்டை எதிர் வரும் நவம்பர் நடுப்பகுதியில் நடத்துவதற்குத் தேவையான ஆயத்தங்களை இலங்கை அரசு உற்சாகமாகச் செய்து வருகின்ற போதிலும், அம்மாநாட்டுக்கு வருகைதரும் நாடுகள் குறித்துத் தனது அவதானிப்புகளை மேலும் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது.

பொதுநலவாய அரசதலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் உலகத்தின் பார்வையைத் தன்மீது திருப்புவதற்கும், அதன்மூலம் வர்த்தக நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் எல்லா நாடுகளையும் போலவே இலங்கை யும் முயன்று வருகின்ற அதேவேளையில் சம்பிரதாய பூர்வமாகப் பொதுநலவாயத் தின் தலைமைப் பொறுப்பை இலங்கைத் தலைவர் பெற்றுக்கொள்வதன் மூலம் தற்போது இலங்கை அரசுக்கும் ஜனாதிப திக்கும் எதிராக எழுந்துவரும் உலகநாடு களின் அழுத்தங்களைக் குறைத்து விட லாம் எனவும் அது நம்புகிறது.

## கறைகளைத் துடைக்கும் கருவி

53 நாடுகளைக்கொண்ட ஓர் அணி யின் தலைமைப் பொறுப்பை இரண்டு ஆண்டுகளுக்கு ஏற்றுக்கொள்வதென்பது ஒரு சாதாரண வியமல்ல. இலங்கை ஜனாதிபதிக்கு உலக அரங்கில் மிகப்பெரும் பலத்தையும் பிரபலத்தையும் தருகின்ற ஒன்று அது. இப்பதவியைப் பெற்றுக்கொள் ளும் ஒருவர் அரசியல் ரீதியாக சில செயற்பாடுகளை முன்னெடுத்து தன்னை மேலும் உயர்த்திக்கொள்ளவோ அல்லது தன்மீதுள்ள கறைகளை இல்லாமல் செய்யவோ வாய்ப்பிருக்கிறது. இலங்கை ஜனாதிபதியைப் பொறுத்தமட்டில் தன் மீதும் தனது அரசின் மீதும் உலக நாடுகளால் சுமத்தப்படும் பழியைத் துடைத்துக் கொள்வதற்கான ஒரு கருவியாக இப்பதவியைப் பயன்படுத்த முடியும்.

## மாநாட்டு எதிர்ப்பு இலங்கை அச்சம்

ஆனால், இந்த எண்ணத்தில் மண் விழுந்து விடுமோ என்ற அச்சம்தான் இலங்கையை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. உள்நாட்டிலும் அரசுக்கு எதிரான பரப்புரைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக்கட்சியும், மூன்றாவது பலமான அணியென்று தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும் பொன்சேகா கட்சியும் பொதுநலவாய நிகழ்வை நேரடியாகவே எதிர்க்கின்றன. ஜனநாயகம் இல்லாத ஒரு நாட்டில் ஏன் இந்தக் கூத்து என்று கேள்வி எழுப்புகின்றன. குடும்ப ஆட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளா இவை என்றும் கேட்கின்றன.

எதிர்க்கட்சிகள் பலமிழந்து போயுள்ளன: இவற்றின் எதிர்ப்பையிட்டு அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று அரசு சமாதானம் சொல்லிக்கொள்ளலாம். எனினும், எதிர்க்கட்சிகள் பலமிழந்து போவதற்கு அவற்றின் பலவீனமான நடவடிக்கைகளையோ அரசின் சிறப்பான காய் நகர்த்தல்களையோ காரணமாகக் கூறமுடியாது. இலங்கையைப் பொறுத்தவரையில் எவர் ஜனாதிபதியாக இருக்கிறாரோ, அவர் சார்ந்த கட்சியே தொடர்ந்தும் வெற்றிகளைக் குவிக்கும் வகையில் அரசமைப்பிலேயே வழிவகுக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்ந்த ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவாரேயானால் எதிர்வரும் கால்நூற்றாண்டுக்கு சுதந்திரக்கட்சியால் தலையெடுக்க முடியாமல் போய்விடும் என்பது தான் உண்மை.

## தமிழர்களின் எதிர்பார்ப்பு

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில், அரசதலைவர்கள் மாநாட்டின் மூலம் தங்கள் பிரச்சினையை முக்கியத்துவப்படுத்துவதனூடாக ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வழிகோல முடியாதா என்ற எதிர்பார்ப்பே நிறைந்து காணப்படுகிறது. பொதுநலவாய மாநாடு இலங்கையில் இடம்பெறக்கூடாது என்பது தமிழர்களின் நோக்கமல்ல. இந்த மாநாட்டினூடாகத் தமிழர் வதை படலத்துக்கு ஒரு முடிவு கிட்டாதா என்றுதான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு என்னென்ன வழிவகைகளைக் கையாள முடியுமோ அவற்றை உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் ஜனநாயக வழிகளுக்குட்பட்டுத் தீவிரமாகச் செய்து வருகிறார்கள்.

## ரணில், பொன்சேகா எதிர்ப்பு

ஐக்கியதேசியக் கட்சியும், சரத்பொன் சேகாவின் கட்சியும், பொதுநலவாய மாநாடு இலங்கையில் இடம்பெறுவதை விரும்பவில்லை. மத்திய ஆட்சியைத் தான் பிடிக்க முடியவில்லை: மாகாண ஆட்சியையோ உள்ளூராட்சி ஆட்சியை யோ தாங்கள் கைப்பற்ற முடியாத வகையில் அரசின் ஜனநாயக உத்திகள் முட்டுக்கட்டை போடுகின்றனவே என்ற கவலை அவர்களுக்கு. ஆனால் 1978 தொடக்கம் 1994 வரையிலான காலப்பகுதியில் இதே ஜனநாயக உத்திகள் மூலம்தான் தாங்கள் வல்லாட்சி நடத்தி வந்ததை ஐக்கிய தேசியக் கட்சி மறந்து விடக்கூடாது.

தமிழர்களின் ஆதங்கம் அரசால் புறந்தள்ள முடியாதது. இது ஓர் இனத்தின் எழுச்சி: ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் விழிப்புணர்வு: இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு நிகழ்ந்த கொடுமைகளால் துவண்டு போன ஓர் இனத்தின் மூச்சு: பட்டறிவின் வழி நின்று எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானம்: பல உயிரிழப்புகளுக்கூடாக நடந்து வந்த பாதை.

## தமிழர் பின்னால் உலகம் மாநாட்டை கனடா பகிஷ்கரிப்பு

தமிழர்களின் ஆதங்கமும் கோரிக்கைக ளும் நியாயமானவை என்பதால்தான் இன்று உலகம் அவர்கள் பின் நிற்கிறது. இலங்கை அரசின் சக்தியையும் இராஜ தந்திரங்களையும் மீறிப் புலம்பெயர்ந்த தமிழர்களால் மேற்குலக நாடுகளில் செயல்பட முடிகிறது. இலங்கை அரசுக்கு எதிரான நியா யபூர்வமான அபிப்பிராயத்தை உருவாக்க முடிகிறது.

கனடா இம்மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்திருந்தது. இலங்கை மனித உரிமை மீறல்கள் நிறைந்த நாடு: தமிழர்களைத் தொடர்ந்தும் அடக்கியாள முனைகின்ற நாடு என்பவற்றைதாம் மாநாட்டில் கலந்துகொள்ளாமைக்கான காரணங்களாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை வெளியுறவுத்துறை எவ்வளவோ முயன்றும் கனடாவின் நிலைப்பாட்டில் ஒரு சிறிய அசைவைத்தானும் ஏற்படுத்த முடியாது போய்விட்டது. கடைசியில் அரச தலைவர் மேல் தனது கோபத்தைக் கொட்டித் தீர்ப்பதைத் தவிர இலங்கைக்கு வேறுவழி இருக்கவில்லை.

பிரிட்டன் பிரதமர்கூட பல எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் பொதுநலவாய அரசதலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள முடிவெடுத்திருக்கிறார். இப்போதும்கூட அவரை இலங்கை செல்லவிடாது தடுப்பதற்கான அரசியற் செயற்பாடுகள் அங்கே முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் பிரிட்டன் பிரதமரின் முடிவுகூட இலங்கைக்கு மகிழ்ச்சியானதாக இருக்கவில்லை. அதற்குக் காரணம், "பொதுநலவாய மேடையை, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங்களை அம்பலத்துக்குக் கொண்டுவருவதற்கான இடமாகப் பயன்படுத்தப் போகிறேன்" என்று அவர் சொன்னதுதான்.

> பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்குமானால் அதனால் வரும் விளைவுகளை இந்தியா அனுபவிக்கவேண்டி வரும் என்றும் இந்தியா உலக அரங்கிலிருந்து தனிமைப்பட்டுவிடுமாம்

## பிரிட்டன் பிரதமரும் அதிரடி

அதற்கான மேடையல்ல இது. பிரிட்டன் பிரதமரின் எண்ணம் பிழையானது. பொதுநலவாயத்தின் நோக்கத்தைத் திசைதிருப்ப அனுமதிக்க முடியாது என்று இலங்கை சீறிப் பாய்ந்திருக்கிறது. அவ்வாறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பேசப்பட்டால் அதற்குப் பதிலடி கொடுக்க இலங்கையால் முடியும் எனவும் இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது. பொதுநலவாயம் என்பது இலங்கை நினைப்பதுபோல மனித உரிமை மீறல்கள் பற்றிப் பேசப்படக்கூடாத அரங்கமல்ல. பொழுதுபோக்குக்காகக் கூடிக் கலைகின்ற கேளிக்கை நிகழ்வுமல்ல. அது சில அடிப்படை நோக்கங்களை முன்வைத்து தனது செயற்பாடுகளை நகர்த்தி வருகின்றது. ஒரு நாட்டைத் தண்டிக்க அதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பதற்காக, அம்மாநாட்டில் பேசப்படும் விடயங்கள் காற்றோடு கரைந்து போகக்கூடியவை என எதிர்ப்பார்க்க முடி யாது. தனது உறுப்பு நாடுகளுக்கிடையேயான நல்லுறவும் இணக்கப்பாடும், ஒவ்வொரு நாட்டினதும் நல்லாட்சி, சட்டத்துக்கு இசைவான ஆட்சிமுறைமை, உறுதியான ஜனநாயகம், மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு, நேரிய அபிவிருத்தி என்பவற்றை அடிநாதமாகக் கொண்டுதான் பொதுநலவாயம் இயங்குகின்றது. இவைபற்றிய ஆய்வுக்காகவும், முன்னேற்றங்கள் தொடர்பான உறுதிப்பாடுகளுக்காகவுமே அதன் அரசதலைவர்கள் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை இடம்பெறுகிறது.

## இலங்கையிடம் தடுமாற்றம்

இதன்படி பார்த்தால் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தும் மேடையாக இலங்கையில் இடம்பெறவுள்ள பொது நலவாய மாநாட்டைப் பயன்படுத்தப் போகிறோம் என்று பிரிட்டன் பிரதமர் தெரிவித்ததில் எவ்வித முறைகேட்டையோ, தடுமாற்றத்தையோ காண முடியாது. மாறாக இலங்கை விடுத்த எச்சரிக்கையில்தான் தடுமாற்றம் தெரிகிறது. தனது குறைபாடுகள் அரங்கில் முன்வைக்கப்படுமாயின் அதனால் தனக்குப் பாதகமான நிலை நேரலாம் என்ற அச்சம் தெரிகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை நாடுகளின் தலைவர்கள் பொதுநலவாயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழி நடத்துகின்ற போதிலும், பொதுநலவாயத்தின் மதிப்புக்குரிய தலைவராக பிரிட்டன் அரசியே இருந்து வருகிறார். சம்பிரதாயபூர்வமாக, அவர் கலந்துகொள்ளாத நிகழ்வு பூரணமாகாது. இந்தவகையில் இலங்கையில் இடம்பெறப்போகும் மாநாட்டு நிகழ்வுகளிலும் பிரிட்டிஷ் மகாராணியார் கலந்துகொள்ளப்போவதில்லை என்பது ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு. இது இலங்கைக்குச் சம்பிரதாய பூர்வமான பின்னடைவு என்றாலும், மகாராணியாருக்குப் பதிலாக வருகை தரவுள்ளார் என்ற செய்திதான் இலங்கையின் விழுக்காட்டை தூக்கி நிறுத்தியுள்ளது.

## மாநாட்டில் புயல் கிளப்பும் பிரிட்டன் பிரஜையின் கொலை

ஆனால் அதில்கூட இலங்கை மகிழ்ச்சி கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு இலங்கையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட பிரிட்டன் பிரஜையும், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளருமான குராம் ஜய்க் தொடர்பாக இலங்கை அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் பற்றி இளவரசர் சார்ள்ஸ் கேள்வி எழுப்பவுள்ளார் என்ற அறிவிப்பு இலங்கையைப் படாதபாடு படுத்துகிறது. 32 வயதான பிரிட்டன் பிரஜை காடையர்களால் கொல்லப்பட்டதற்கும், அவரோடிருந்த அவரின் நண்பி காடையர் குழுவால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதற்கும் இலங்கை அரசு எவ்வித நடவடிக்கையையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு பிரிட்டிஷ் இளவரசரால் முன்வைக்கப்படவிருக்கிறது.

குற்றம் புரிபவர்கள் தண்டனைக்குட்படாமல் தப்பிக்கும் நடைமுறை, இலங்கையின் மரபாகிப் போய்விட்டதென்ற கடுமையான குற்றச்சாட்டுகள் உலக நாடுகளால் இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்புட்டுவரும் நிலையில், இளவரசரால் எழுப்பப்படவிருக்கும் வினா இலங்கையின் நீதி பரிபாலனத்துக்குப் பாரதூரமான பின்னடைவைக் கொடுக்கவல்லதாக அமையலாம். இந்தக் கொலை தொடர்பான வழக்கையும், 2006 இல் ஐந்து பல்கலைக்கழக மாணவர்கள் திருக்கோண மலைக் கடற்கரையில் வைத்துக் காரணமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கையும் விசாரிக்கத் தொடங்கியிருப்பதன் மூலம் குற்றம் புரிவோர் தண்டனைக்குள்ளாகாமல் தப்பித்துக்கொள்ளும் மரபு இலங்கையில் இல்லை என்று நிறுவலாம் என அரசு நம்புகிறது.

## தமிழகம் கொடுத்த அதிர்ச்சி வைத்தியம்

இலங்கை அரசு தனது வியூகங்களை வகுத்துப் பொதுநலவாய மாநாடு நடத்துவதால் கிடைக்கக்கூடிய பலன்களைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் தமிழ்நாடு இலங்கை அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்திருக்கிறது. இடம்பெற்றுவந்த தொடர் போராட்டங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் செவ்விகள் என்று பரபரப்பாகிக் கொண்டிருந்த தமிழகம் இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய உச்சிமாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளக்கூடாது என்று அதிரடித் தீர்மானம் ஒன்றை சட்ட சபையில் ஏகமனதாக வியாழனன்று நிறைவேற்றியிருக்கிறது.

## மன்மோகன் வரமாட்டார்

இந்தத் தீர்மானத்தின் மூலம் பாரதப் பிரதமர் இலங்கைக்கு வருவாரா, மாட்டாரா என்ற இழுபறிக்கு 'அவர் வரமாட்டார்' என்ற முற்றுப் புள்ளி ஏற்பட்டுள்ளதாகக் கருத இடமுண்டு. தமிழகத்தின் ஒருமனதான தீர்மானத்தை மீறி இலங்கையைச் சந்தோசப்படுத்தும் முயற்சியில் மன்மோகன்சிங் ஒருபோதும் இறங்கப்போவதில்லை என்பது தெளிவு. அவ்வாறு செய்வாரானால் தமிழ்நாட்டிலிருந்து ஆளுங் காங்கிரஸின் செல்வாக்கை அடியோடு அகற்றிவிடும் முயற்சியாகவே அது அமையும் என்பதும் அவர் அறியாததல்ல.

இந்தத் தீர்மானத்தை அடுத்து உடனடியாகவே இலங்கை இந்தியாவின்மேல் தனது வெறுப்பைக் காட்டியிருக்கிறது. சிலநாட்களுக்குமுன் இலங்கை வெளியுறவு அமைச்சர் பீரிஸ் கூறிய அதே வாசகங்களை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் இப்போது மீண்டும் கூறியிருக்கிறார். பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்குமானால் அதனால் வரும் விளைவுகளை இந்தியா அனுபவிக்கவேண்டி வரும் என்றும் இந்தியா உலக அரங்கிலிருந்து தனிமைப்பட்டுவிடும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

## முக்கிய மூன்று நாடுகளால் இலங்கைக்கு தலையிடி

இலங்கையில் இடம்பெறவிருக்கும் பொதுநலவாயமாநாட்டு விடயத்தில் இலங்கைக்கு மூன்று பெரிய நாடுகள் தலையிடியாக அமைந்துள்ளன. ஒன்று கனடா, அது மாநாட்டை முற்றாகவே புறக்கணிக்கிறது. இரண்டு பிரிட்டன், அது மாநாட்டுக்கு வருகைதருகின்ற போதிலும் இலங்கைக்கு எதிரான சிக்கலைக் கிளப்பத் திட்டமிட்டிருக்கிறது. மூன்றாவது இந்தியா, இந்தியப் பிரதமரும் ஏறத்தாழ வரமாட்டார் என்றாகிவிட்டது. இந்த மூன்றும் பலம் பொருந்திய நாடுகள் வரிசையில் உள்ளவை. அரசியல் செல்வாக்கிலும், பொருள் வளத்திலும் உலகில் முன்னிலை பெறுகின்ற நாடுகள் அவற்றின் எதிர்ப்பை எதிர்காலத்தில் இலங்கையால் சமாளிக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்ற நிலையில் இலங்கை உலக நாடுகளுடன் முரண்பட்டு வருவது பாதுகாப்பான எதிர்காலத்துக்கு உகந்ததல்ல. இந்த நாடுகளைப் பகைத்துக் கொண்டு இலங்கைக்கு உதவ எந்த வல்லரசாவது முன்வரலாம் என இலங்கை நினைக்குமானால் அது பகற்கனவாகவே முடியும். இதுதான் அரசியல் யதார்த்தம்.

## குற்றச்சாட்டுகள் தெளிவானவை

இலங்கைமேல் உலக நாடுகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தெளிவானவை. அவற்றைப் பற்றி திரும்பத்திரும்ப பேசிக் கொண்டிருக்கத் தேவையில்லை. இந்தக் குற்றச்சாட்டுகளைக் களையுந்திறன் இலங்கைக்கு நிறையவே இருக்கிறது. இந்தத் திறனில்தான் அதன் எதிர்காலமும் தங்கியிருக்கிறது. ஆனால் அற்ப அரசியல் அவாக்களால் உள் சூழலிலிருந்து வெளியேவர தயக்கம் காட்டுவதுதான் இலங்கையின் மிகப்பெரிய பலவீனம்.

உலகப் பொதுநீதிக்கு அமைவாக இலங்கை அரசும் நடைபோடும் காலம் உருவாகும்வரை, இலங்கை தனது ஒவ்வொரு நகர்விலும் புதுப்புதுச் சிக்கல்களைச் சந்தித்துக் கொண்டேயிருக்கும். இலங்கையை வழிநடத்துவோர் இந்த உண்மையை உணர்ந்து தமது பாதையைச் செப்பனிட்டுக் கொண்டாலன்றி இவற்றிலிருந்து மீளமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வந்தார்கள் கொன்றார்கள்



நிரோஜன்

யாழ்.போதனா மருத்துவமனையில் மருத்துவர்கள் பணியாளர்கள் என 21 பேர் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு 26 வருடங்கள் ஆகிவிட்டன. அது தொடர்பான நினைவஞ்சலியும் அகவணக்கம் செலுத்தும் நிகழ்வும் மருத்துவமனையில் அண்மையில் இடம்பெற்றது. சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் எனப்பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்த காலம். இலங்கை இராணுவத்தினரும் யாழில் துப்பாக்கி முனையில் தமது செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தன அப்போது ஜனாதிபதியாக இருந்தார். இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் படி இந்திய அமைதிப் படை வடபகுதிக்குள் வந்திறங்கிறது. முதலில் அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவத்தினர் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்துவிட்டு தம் அராஜகத்தை அரங்கேற்றத் தொடங்கினர். பொறுத்துப் பார்த்த புலிகள் பொங்கி எழுந்தனர். வெடித்தது பெரும் போர். எங்கும் பிணக்காடு.

யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினர் யாழ். ஒல்லாந்தர் கோட்டையைத் தமது பாதுகாப்பான தங்குமிடமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அங்கிருந்தே நகரப் பகுதி உட்பட பல இடங்களுக்கும் ஷெல் வீச்சு நடத்தினர். இதில் இலங்கைப் படையினர் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. காரணம் இந்திய படையினர் இங்கு நிலைகொண்டமையால் இலங்கைப் படையினர் வவுனியாவுக்குப் பின்வாங்கிச் சென்றிருந்தனர். ஒரு வகையில் தனது எதிரிகளை மோத வைத்து வேடிக்கை பார்த்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன.

யாழ். போதனா வைத்தியசாலைக் கூரையில் வைத்தியசாலை குறியீடு மிகப் பெரிதாகவும் தெளிவாகவும் தீட்டப்பட்டிருந்தது. அதனாலோ என்னவோ வைத்தியசாலை எல்லைக்குள் ஷெல் விழுந்திருக்கவில்லை. மின்சாரம் பெரியளவில் கிடைத்திராத அந்தக் காலத்தில் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாத்திரமே மின்பிறப்பாக்கி மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டது. வைத்தியசாலையில் ஏனைய விடுதிகள் அனைத்தும் குப்பி விளக்கிலும் மெழுகுவர்த்தியிலுமே இரவில் ஒளியைப் பெற்றுக் கொண்டிருந்தன.

ஷெல் வீச்சு உக்கிரமடைந்திருந்ததனால் வைத்தியசாலைக்கு அவசர நோயாளர்கள் தவிர ஏனையோர் செல்ல முற்படவில்லை. தவிர வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்ற சிலர் ஓரளவு குணமடைந்ததும் தமது வீடுகளுக்குச் சென்று விட்டனர். போர்க் காலம் என்பதனால் காயப்படுவோரே அதிகளவில் சிகிச்சை மற்றும் சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அந்த நேரம் யாழ். நகரில் மிகக் குறைந்தளவானோரையே காணமுடிந்தது. ஒரு சில சிறிய கடைகளே திறந்த நிலையில் இருந்தன. ஒரு மாத காலமாக இந்த நிலையே தொடர்ந்து கொண்டிருந்தது.

அன்று 1987 ஒக்ரோபர் 21 ஆம் திகதி. வழமைக்கு மாறாக ஷெல் தாக்குதல்கள் தீவிரமடைந்திருந்தன. வைத்தியசாலையை விட்டு எவரும் வெளியேற முடியவில்லை. யாழ்.கோட்டையிலிருந்த இந்திய இராணுவத்தினர் மெல்ல நகருக்குள் வரத்தொடங்கினர். யாழ். மகாத்மா காந்திவீதி உட்பட பல வீதிகளால் அவர்கள் துப்பாக்கிகளால் சுட்டவண்ணம் முன்னேறிக் கொண்டிருந்தனர். அதனை வைத்தியசாலையில் அப்பொழுது பணியாற்றிய ஒருவர் கண்டுகொண்டதனால் அதனை அங்குள்ள ஏனையவர்களுக்குக் கூறிவிட்டார். அதனால் விழிப்படைந்த பணியாளர்கள் அனைவரும் 24 ஆம் இலக்க பெண்கள் விடுதியில் ஒன்றுசேர்ந்திருந்தனர். அந்த விடுதி இன்றும் அதேயிடத்திலேயே உள்ளது.

அதுவரைவைத்தியசாலைக்குவெளியே கேட்டவண்ணம் இருந்த இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கிச் சத்தங்கள் மதியநேரம் வைத்தியசாலைக்குள்ளும் கேட்கத்தொடங்கின. அந்தச் சத்தம் வைத்தியசாலையில் நின்றிருந்த அனைவரையுமே கிலிகொள்ள வைத்தது. எனினும் "நாங்கள் வைத்தியசாலைப் பணியாளர்கள். எங்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள்" என்று அங்கு நின்ற பெரும்பாலானவர்கள் நம்பினர். அடுத்து வரப்போகும் பேரிழப்பை அவர்கள் அப்போது எதிர் பார்த்

> "நாங்கள் வைத்தியசாலைப் பணியாளர் கள். எங்களை ஒன்றும் செய்ய மாட்டார் கள்" என்று அங்கு நின்ற பெரும்பாலானவர்கள் நம்பினர். அடுத்து வரப் போகும் பேரிழப்பை அவர்கள் அப்போது எதிர் பார்த்திருக்கவில்லை. வைத்தியசாலையினுள் நுழைந்த இந்தியப் படையினர் தமது துப்பாக்கி களிலிருந்து குண்டுகளை வாரி இறைத்துக் கொண்டிருந்தனர்.

திருக்கவில்லை.

வைத்தியசாலையினுள் நுழைந்த இந்தியப் படையினர் தமது துப்பாக்கிகளிலிருந்து குண்டுகளை வாரி இறைத்துக் கொண்டிருந்தனர். கண்ணில் அகப்படுவோர் எல்லோரையும் துப்பாக்கிக் குண்டுகளால் வெற்றுடல்களாகச் சரித்துகொண்டிருந்தனர். அந்த நேரமே குழந்தைகள் சிகிச்சை நிபுணர் ஏ.சிவபாதசுந்தரமும் இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டுக்கு இரையானார். "நான் ஒரு வைத்தியர்" என்று கூறியவண்ணம் தனது கைகளை உயர்த்திய படி நின்றார். அதனையும் கவனத்தில் கொள்ளாது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். குழந்தைகள் சிகிச்சை நிபுணர் உட்பட பலர் சுட்டுக் கொல்லப்பட்ட விடயத்தை அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்ற ஒரு சிலர் ஏனையவர்களுக்குக் கூறினர். அதனால் வைத்தியர்கள், பணியாளர்கள், நோயாளர்கள் என அனைவரும் வெளியே செல்லாது முட்டுக்காலில் கையை உயர்த்தியவாறு இருந்தனர். அங்கு சென்ற இராணுவத்தினர் அவர்கள் வைத்தியசாலைப் பணியாளர்கள் என்பதனை நம்புவதற்குத் தயாராக இருக்கவில்லை போலும். அரைமணி நேரத்துக்கும் மேலாக துப்பாக்கி முனையிலேயே விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். தாம் வைத்தியசாலைப் பணியாளர் என்பதனை உறுதிப்படுத்துவதில் அவர்கள் பாடு பெரும்பாடாகிவிட்டது. ஏனெனில் அங்கு நின்றிருந்தவர்கள் சீக்கிய இராணுவத்தினர். பணியாளர்கள் ஆங்கிலத்தில் பதிலளிப்பது கூட அவர்களுக்கு புரியவில்லை.

பின்னர் பணியாளர்கள் அனைவரும் பிரசவ விடுதியினுள் கொண்டு செல்லப்பட்டு மறுநாள் காலை வரை அந்த இடத்தைவிட்டு வெளியேறக் கூடாது என்றும் வெளியேறினால் உயிருக்கு உத்தரவாதமில்லை என்றும் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்தப் பிரசவ விடுதியும் இன்றும் அதே இடத்திலேயே இயங்கி வருகிறது.

"இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அனைவரினதும் உடலங்களும் மறுநாள் வைத்தியசாலையில் தற்போது பிரேத அறை உள்ள இடத்துக்கு முன்பாக குவித்து பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டது. அவ்வாறு கொளுத்துவதனைப் பார்க்க பணியாளர்களுக்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர். அதன்போதே 21 பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை வெளியே தெரியவந்தது" என்கிறார் அப்போது மருத்துவ மாணவராக இருந்து தற்போது நிபுணராக உள்ள எஸ்.நிமலன்.

மருத்து நிபுணர் ஏ.சிவபாதசுந்தரம் உட்பட மருத்துவர் எஸ்.பரிமேலழகர், மருத்துவர் எம்.சி.கணேசரட்ணம் மற்றும் க.செல்வராசா, வை.சண்முகலிங்கம், மு.துரைராஜா, க.சிவராஜா, க.கிருஸ்ராஜா, கோ.உருத்திரன், க.சிவலோகநாதன், திருமதி பி.வடிவேலு, இரா.மங்கையர்க்கரசி, மு.லீலாதேவி, க.வேதாரணியம், இரா.சுப்பிரமணியம், சி.ஜெகநாதன், இரா.இரத்தினராஜா, பொ.வரதராஜா, எஸ்.மார்க்கண்டு, இரா.சுகுமார், க.ஜோன்பீற்றர் போன்ற தாதியர்களும், பணியாளர்களும் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

அந்தக் காலப்பகுதியில் மருத்துவர்களான ஜெயரட்ணம் ரவிராஜ் உட்பட மற்றும் பல வைத்தியர்கள், தாதியர்கள் பணியாற்றினர். யாழ். போதனா படுகொலைச் சம்பவங்கள் நிகழ்ந்த காலத்தில் பணியாற்றிய பலர் இன்றும் போதனாவில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு வாரத்தின் பின்னே நிலைமை ஓரளவு சீரடைந்தது. காலப்போக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த இந்திய இராணுவத்தினரும் சிகிச்சைக்காக போதனாவுக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்களுக்கும் மருத்துவர்கள் சத்திர சிகிச்சை செய்திருந்தனர். அன்று கொல்லப்பட்டவர்களுக்கான அஞ்சலி, அகவணக்க நிகழ்வு போதனாவில் இன்றும் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் இங்கு "வெவ்வேறு இடங்களில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலையே தொடர்கிறது. அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும்" என்று அகவணக்க நிகழ்வில் உரையாற்றியவர்கள் வலியுறுத்தியிருந்தனர். என்ன செய்ய? இறந்தவர்களை நினைக்கக் கூட இலங்கையில் உரிமையில்லையே?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழுத்தங்கள் ஆட்டத்தை பாதிக்குமா?

**அவர் தனது இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் பெரிதாகச் சாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படுத்தப்படுகின்றது. அவற்றை எல்லாம் தாண்டி அவர் சாதிப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.**

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு. இதுதான் தற்போது கிரிக்கெட் உலகின் முக்கிய செய்தி. சச்சின் தனது 200ஆவது டெஸ்ட் ஆட்டத்துடன் ஓய்வு பெறுவதாக அறிவித்தாலும் அன்றிலிருந்து இன்றுவரை ஆளாளுக்கு அவரைப் பாராட்டுவதும், தனது இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் அதைச் சாதிக்க வேண்டும், இதைச் சாதிக்க வேண்டும் என்று அறிக்கை விடுவதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

சச்சின் சிறந்த கிரிக்கெட் வீரர். அவரைப் போன்ற இன்னொரு கிரிக்கெட் வீரரை இனி மைதானத்தில் காண்பது அரிது. அது உண்மைதான். ஆனால் சச்சின் இறுதி டெஸ்ட் ஆட்டத்தை ஆடவுள்ள நிலையில் ஆளாளுக்கு ஏற்படுத்துகின்ற எதிர்பார்ப்புகள் அவரின் ஆட்டத்தில் அழுத்தத்தை வழங்கக்கூடும் என்பதே உண்மை.

சச்சினின் ஆட இருக்கும் இறுதி டெஸ்ட் ஆட்டம் மிக முக்கியமானது. அதில் அவர் சாதிக்க வேண்டும் என்பது உண்மை. அதற்கு அவர் எந்த அழுத்தங்களும் இன்றி. சாதனையை அவர் நிச்சயம் சாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவுமின்றி ஆடுவதே முக்கியம்.

தற்போது சச்சினைப் பற்றி ஒவ்வொருவரும் கூறும் கருத்துக்களும், அவர் இதைச் சாதிக்க வேண்டும், அதைச் சாதிக்க வேண்டும் என்று கிளப்பும் எதிர்பார்ப்புகளும் சச்சினுக்கு தேவையற்ற அழுத்தங்களையும், எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்துமே தவிர அவரின் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்கான களத்தை ஏற்படுத்தித் தராது.

இவ்வாறான அழுத்தங்களுக்கு மத்தியில் விளையாடும்போது சச்சின் சோபிக்கத் தவறியதை அவரின் கடந்தகால ஆட்டங்கள் மூலம் கண்டுகொள்ளலாம். அதற்கு ஓர் உதாரணமாக சச்சினின் 100 ஆவது சதத்தைக் குறிப்பிடலாம். சச்சினுக்கு சதம் ஓர் பெரிய பிரச்சினையாக அமையாத போதும், அவர் மீது திணிக்கப்பட்ட எதிர்பார்ப்புகள் அந்த சதத்தைப் பின்தள்ளின என்பதே உண்மை.

தற்போதும் அந்த நிலையே காணப்படுகின்றது. சச்சின் மீது அளவுக்கதிமான எதிர்பார்ப்புகள் திணிக்கப்படுகின்றன.

அவர் தனது இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் பெரிதாகச் சாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படுத்தப்படுகின்றது. அவற்றை எல்லாம் தாண்டி அவர் சாதிப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இவற்றையெல்லாம் புறந்தள்ளி. அந்தச் சாதனை நாயகன் தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதனைகளுடன் விடைபெற வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமுமாகும்.

# இலங்கை அணியின் பயிற்சியாளர் யார்?



இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெறவுள்ளன. பெரும்பாலும் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்த தலைவர் கிரெக் செப்பல் பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

## சர்ச்சைக்குரிய செப்பல்

சர்ச்சைகளுக்குச் சொந்தக்காரான செப்பல் இந்திய அணியின் பயிற்சியாளராக 2005ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை பணியாற்றியிருந்தார். இவரது பயிற்சியில் இந்திய அணி 2007 ஆம் ஆண்டு உலக கிண்ண தொடரில் முதல் சுற்றுடன் வெளியேறியது.

அதுமட்டுமல்லாது இந்திய அணியில் மாற்றங்களை ஏற்படுத்தி விமர்சனங்களையும் எதிர்கொண்டிருந்தார். அப்போது இந்திய அணிக்குத் தலைமை தாங்கிய சௌரவ் கங்குலி, அணித் தலைமைக்குத் தகுதியற்றவர் என்று கூறி. ராகுல் டிராவிட்டை அணித் தலைவராக்கினார்.

இவரது பயிற்சியின்போது தாம் பல அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்று இந்திய அணியின் முன்னணி வீரர்கள் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்திருந்தனர்.

## இலங்கை அணி


இலங்கை அணியைப் பொறுத்தவரையில் அண்மைக்காலமாக நிலையற்ற தன்மையுள்ள அணியாகக் காணப்படுகின்றது. அணியின் இளம் வீரர்கள் தொடர்களில் நிலையான ஆட்டங்களை வெளிப்படுத்தத் தவறி வருகின்றனர். அணியின் மூத்த வீரர்களான குமார் சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்ஷான் ஆகியோரே நம்பிக்கையளிக்கக் கூடிய வகையில் காணப்படுகின்றனர். அவர்களில் டில்ஷான் தனது டெஸ்ட் ஓய்வை அண்மையில் அறிவித்துள்ளார்.



இந்தநிலையில் இலங்கை அணியின் பயிற்சியாளர் மாற்றம் அந்த அணிக்கு ஓர் தடுமாற்றமாகவே இருக்கும். அதிலும் சர்ச்சைகளின் நாயகனாகக் கருதப்படும் கிரெக் செப்பல் போன்றோர் பயிற்றுவிப்பாளராகும் பட்சத்தில் இலங்கை அணி வீரர்கள் அதை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார் என்பது கேள்விக்குறியே.

## அணித் தேர்வாளர்

இந்த மாற்றம் ஓர் சிக்கலான நிலையில் ஏற்பட்டுள்ளது. இலங்கை அணியில் மாற்றங்கள் ஏற்படுத்தி அணியைக் கட்டியெழுப்பும் சமயம் பயிற்சியாளரை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. புதிதாக வரவுள்ள பயிற்சியாளர் தொடக்கப் புள்ளியில் இருந்து ஆரம்பிப்பதை நான் விரும்பவில்லை. கிரஹம் ஃபோர்ட் விட்டுச் செல்லும் புள்ளியில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்- என்று தெரிவித்துள்ளார். இலங்கை அணியின் பிரதம அணித் தேர்வாளர் சனத் ஜயசூரியா. பொறுத்திருந்து பார்ப்போம்.



# கட்டுப்படுத்துங்கள் இனவெறியை

ரஷ்யாவில் இனவெறியைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் 2018ஆம் ஆண்டு அங்கு நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்துப் போட்டியை புறக்கணிப்போம் என்று ஐவரி கோஸ்ட் நாட்டைச் சேர்ந்த யாயா டூரி எச்சரித்துள்ளார்.

யாயா டூரி ஐவரி கோஸ்ட் தேசிய அணி மற்றும் மான்செஸ்டர் சிட்டி கிளப் அணிக்காகவும் விளையாடி வருகிறார்.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடர் கடந்த புதன்கிழமை ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்றது.

அந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி அணியும், ரஷ்யாவின் சி.எஸ்.கே.ஏ. அணியும் மோதின. இந்த ஆட்டத்தின் போது ரஷ்ய ரசிகர்கள் இனவெறியைத் தூண்டும் விதமாக கோஷம் எழுப்பியதாக யாயா டூரி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த ஆட்டத்தைத் தொடர்ந்து இது குறித்து கருத்து தெரிவித்திருந்த யாயா, ரஷியாவில் இனவெறி நீடித்தால் 2018ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ணக் உதைபந்துத் தொடரை கருப்பின வீரர்கள் புறக்கணிப்போம் என்று எச்சரித்திருந்தார்.

எனினும் யாயாவின் குற்றச்சாட்டை ரஷியாவின் சி.எஸ்.கே.ஏ. அணி மறுத்தது. இது குறித்து ஒழுங்கு நடவடிக்கை விசாரணை வரும் 30ஆம் திகதி நடைபெற உள்ள விசாரணையில், யாயாவின் குற்றச்சாட்டு உண்மை என நிரூபிக்கப்பட்டால் உதைந்தாட்ட மைதானத்தை சி.எஸ்.கே.ஏ. அணி மூடும் நிலை ஏற்படும்.

அதேவேளை, ஐவரி கோஸ்ட் நாட்டைச் சேர்ந்த டெம்பியா. சி.எஸ்.கே.ஏ. கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். இது குறித்து அவர் கூறுகையில் "சிஎஸ்கேஏ அணிக்கு ஆதரவாகத் தான் ரசிகர்கள் குரல் எழுப்பினர். யாயா கூறியது போன்று இனவெறியைத் தூண்டும் விதமாக ரசிகர்கள் கோஷம் எழுப்பவில்லை.

இந்தப் பிரச்னையை யாயா பெரிதுபடுத்துகிறார் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுக்கோப்பு தனியே தமது அமைப்புக்கு மாத்திரமின்றி தமிழி னத்துக்கும் இருக்க வேண்டும் என்று புலிகள் எண்ணினர். ஏனெனில் குற் றங்கள் அற்ற தேசமே அவர் களின் கனவாக இருந்தது.

# நாமும் நமக்கோர் நலியாப் 'பொலிஸ்' உடையோம்

ஒளரீஷ்

பொலிஸ் அதிகாரம் எமக்கு வேண்டும். அதை சட்டப் படி நாங்கள் பெற்றுக் கொள்வோம்" என்று மாகாண சபையின் முதல் அமர்விலேயே சொல்லி இருக்கிறார் வடக்கு முதல்வர். ஆனால் "விழிப் புக்குழுக்களை ஊர் தோறும் அமைக் கும் அதிகாரம் மட்டுமே வடக்கு முதல் வருக்கு உண்டு" என்று திருவாய் மலர்ந்துள்ளார் இலங்கையின் பாதுகாப்புச் செயலர்.

தமிழர்களுக்கு பொலிஸ் அதிகாரத் தைக் கொடுத்தால் அவர்கள் அத னையே காலப்போக்கில் தம்முடைய இராணுவமாக மாற்றி நாட்டைக் கூறுபோட்டு விடுவார்கள் என்பதே பெரும் பாலான சிங்கள மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கிறது. "தமிழர்களுக்கு எதற்குப் பொலிஸ்? மத்திய அரசின் பொலிஸ் அங்கு நிலைகொண்டிருக்கையில் அவர்கள் ஏன் அந்த அதிகாரத்தை கேட்கிறார் கள்? ஏன் நாங்களும் தான் மாகாண சபையில் ஆட்சி செய்கிறோம். ஆனால் ஒருபோதும் பொலிஸ் அதிகாரம் எங் களுக்குத் தேவைப்பட்டதில்லையே. இங்கென்ன சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து பாதாளக் குழுக்களா எங் களை ஆட்சி செய்கின்றன?" என்றெல் லாம் சிங்கள மக்கள் கேட்கக்கூடும். நாட்டில் வடக்குத் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாணங்களிலும் அரச தரப்பே ஆட்சி செய்கிறது. எனவே அந்த மாகாண அரசுகள் தன்னிச்சையாக எந்த முடிவையும் எடுப்பதில்லை. மஹிந்த அரசு எதைச் சொல்கிறதோ அதை அப்படியே நிறைவேற்றும் பொம்மைகளாக அந்த அரசுகள் செயற் படுகின்றன. பொலிஸார் கூட மத்திய அரசின் ஏவல் அடிமைகளாகவே ஒவ் வொரு மாகாணத்திலும் இருக்கிறார் கள். மத்திய அரசையும் மாகாண அர சையும் ஒரே கட்சியே நிர்வகிப்பதால் இந்த அரசுகளுக்கும் இடையே ஒரு போதும் முரண்பாடு வந்ததில்லை. அப்படி வந்தாலும் கூட மத்திய அரசு சொன்னதற்கே அடிபணிய வேண்டி யது மாகாண சபைகளின் மரபாக இருந்தது. இல்லாவிட்டால் மாகாண சபையை நிர்வகிக்கும் அரசியல்வாதி கள் காலப்போக்கில் 'காத்துக்குறைப்பு' செய்யப்பட்டு செல்லாக்காசாக்கப் பட்டு விடுவார்கள். இந்தப் பயத்தில் மத்திய அரசு எள்ளென்று சொல்ல முதலே மாகாண அரசுகள் எண் ணெயாக நின்றன.

இதைவிட இலங்கையின் பொலிஸ் துறை நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதை விடவும் அதிகாரத்தரப் பின் வீட்டுப் பணிகளை செய்வதி லேயே அதிக அக்கறை காட்டுகிறது. ஊழலும் லஞ்சமும் பொலிஸ் துறை யோடு ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந் தைகளாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. வெளியில் இருக்கும் குற்றவாளிகளை விடவும் பொலிஸ் திணைக்களத்தில்தான் அதி பயங்கர குற்றவாளிகள் ஒளிந்திருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட் டும் அளவுக்கு பொலிஸ் திணைக் களத்தில் குற்றங்கள் மலிந்துபோய் கிடக்கின்றன. பொலிஸ் உயர் அதிகாரி கள் பலர் சிறைக்குச் செல்வதும் சர்வ சாதாரணமான விடயமாக மாறிவிட்டது. தமிழர் தரப்பு பொலிஸ் அதிகாரம் பற்றிய கனவுகளில் மிதந்து கொண்டி ருப்பதற்கு காரணம் உண்மையில் இலங்கை பொலிஸ் அல்ல. ஏனெனில் ஒரு காலத்தில் 'நாமும் நமக்கோர் நலியாப் பொலிஸ் உடையவர்களாக' இருந்தவர்கள் தான். அந்தப் பொலிஸ் துறை பற்றிய மதிப்பும் பிரமிப்பும்தான் மாகாண சபைக்கு பொலிஸ் அதிகா ரம் வேண்டுமென்ற அவாவை உரத்த குரலில் தமிழ் மக்களை சொல்ல வைத்தது.

★★★

விடுதலைப்புலிகளின் காலத்தில் கிட்டத்தட்ட 18 வருடங்களாக நமக் கான பொலிஸ் ஒன்று இருந்தது. அதன் பெயர் தமிழீழக் காவல்துறை. வெளிர் நீல மேலங்கியும் கருநீல நீளக் காற்சட்டையுடனும் இந்தக் காவல்துறையினர் மக்களின் சேவைக் காக விடுதலைப் புலிகளால் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உரு வாக்கப்பட்டனர். அந்த வருடம் நவம் பர் 9 ஆம் திகதி காவல்துறை பற்றிய பிரகடனத்தை புலிகளின் தலைவர் பிரபாகரன் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்க அதே மாதம் 18 ஆம் திகதி காவல்துறையின் முதலா வது அணி பயிற்சியை முடித்துக் கொண்டு மக்கள் சேவைக்காக வெளியே வந்தது.

பேரினத்தின் அடக்கு முறையை எதிர்த்து தமிழ் இளைஞர்கள் ஆயு தக் குழுக்களாக மாறிய காலத்தில் அவர்களை வேட்டையாடுவதில் இராணுவத்தோடு இணைந்து பொலிஸாரும் செயற்பட்டு வந்தனர். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர் கள் மாத்திரமின்றி அப்பாவிகளை யும் கொன்று குவித்ததில் பொலி ஸாருக்கும் பெரும் பங்கிருந்ததாக இன்னமும் பாதிக்கப்பட்ட மக்கள் சொல்லிக் கொள்கிறார்கள். அரசின் ஏவற்பேய்களாக மாறியிருந்த பொலி ஸார்தான் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டை குழப்பியதோடு அதன் போது ஏற்பட்ட உயிர்க் கொலைகளுக்கும் பிரதான காரணிகள். எப்போதும் தமிழ் மக்களை தங்களுடைய இரைகளைப் போலவே கொலைவெறியோடு பொலிஸார் நோக்கியதால் பொலிஸ் என்றாலே தமிழ் மக்களுக்கு ஒவ் வாமை ஏற்பட்டுவிடும். குறிப்பாக, காக்கி உடை என்றாலே அடிவயிறு கலங்க ஓட்டம் எடுக்கும் அளவுக்கு அது கொடுமையின் குறியீடாக மாறிப்போயிருந்தது.

போராடப் புறப்பட்ட புதிதில் தமிழ் இளைஞர்களின் ஆயுதக் குழுக்கள் ஒவ்வொன்றும் தமக்கான தனித் தனிக் கொள்கைகளோடு தமிழீழம் என்ற இறுதி இலட்சியத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு போராளிக் குழுவும் ஆயுதப் போராட்டத்தின் மீதே குறியாக இருந்ததால் தமக்கிடையேயான ஒழுங்கு பேணல் குறித்து அக்கறை காட்டத் தவறின. இதனால் ஒரு சிலர் முறைதவறி நடக்க முற்பட்டதால் அந்தப் பழியெல்லாம் குறித்த நபர் கள் சார்ந்த போராளிக் குழு மீதே வீழ்ந்தது. இதனால், போராளிகள் ஒரு பயங்கர குற்றவாளிகள் போல தமிழ் மக்களாலேயே நோக்கப்படும் அபாய நிலை எழுந்தது. இந்த நிலையில்தான் மிக இறுக்கமான கட்டுப்பாடுகள் கொண்ட அமைப் பாக விடுதலைப் புலிகள் தோற்றம் பெற்றனர். மற்றைய ஆயுதக் குழுக்களை விடவும் புலிகள் இலகு வாக மக்கள் மனதில் இடம்பிடித்த மைக்கு அவர்களின் சுயகட்டுப்பாடே முக்கிய காரணியாக இருந்தது. மது அருந்துதல், புகைப்பிடித்தல், பாலியல் தவறுகள், ஏனைய குற்றங்கள் எது செய்தாலும் தண்டனைகள் மிகக் கடுமையாக இருந்ததால் புலி உறுப்பினர்கள் குற்றங்கள் எதிலும் ஈடுபடாதவர்களாக இருந்தனர். இதனால் நாளடைவில் 'பெடியள்' என்று உரிமையோடு அழைக்கும் அள வுக்கு தமிழ் மக்களின் செல்லப் பிள் ளைகளாக புலிகள் மாறியிருந்தனர். இந்தக் கட்டுக்கோப்பு தனியே தமது அமைப்புக்கு மாத்திரமின்றி தமிழி னத்துக்கும் இருக்க வேண்டும் என்று புலிகள் எண்ணினர். ஏனெ னில் குற்றங்கள் அற்ற தேசமே அவர் களின் கனவாக இருந்தது. ஆகவே தான் தமிழினத்துக்கென தனியான ஒரு பொலிஸை உருவாக்கினார்கள். தமிழீழ காவல்துறை என்ற பெயரோடு பிறப்பெடுத்த தமிழரின் பொலிஸ் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் குறுகிய காலத்துக்குள்ளேயே பெரு வெற்றியைக் கண்டிருந்தது. இலங் கைப் பொலிஸாரைக் கண்டு பயந் தோடிய தமிழ் மக்கள் காவல்துறையை நெருங்கி பழகுவதற்கு முக்கிய காரணம் சீருடைதான்.

காக்கி என்றாலே கலக்கத்தை உண்டு பண்ணும் என்பதால்தான் எல்லோர் மனதிலும் ஒருவித பிடிப்பை ஏற்படுத் தக்கூடிய நீல வர்ண சீருடைகளை புலிகள் காவல்துறைக்கு தேர்ந்தெ டுத்திருந்தார்கள்.

18 வருட கால ஆயுள் கொண்ட இந்தக் காவல்துறையினர் சந்தர்ப்பத்திலும் லஞ்சம் வாங்கியதாகவோ ஊழல் களில் ஈடுபட்டதாகவோ எந்தெவாரு பதிவும் இல்லை. அந்தளவுக்கு சுத்த மான கைகளை உடையவர்களாக, மக்கள் சேவை ஒன்றை மட்டுமே நோக்காக் கொண்டவர்களாக தமிழ ரின் காவல்துறையினர் இருந்தார்கள். சமாதான காலத்தில் ஏ-9 பாதை மீண்டும் திறந்துகொண்ட போது வடக்குக்கு சுற்றுலாவாக வந்த சிங்களப் பயணிகள் காவல்துறை யினரின் செயற்பாட்டைப் பார்த்து வியந்துபோனார்கள். குற்றம் நிகழ்ந்த இடத்துக்கு அடுத்த கணமே விரைந்து செல்லுதல், பாரபட்சம் பாராமை, நவீன தொழில் நுட்ப பயன்பாடு, பிரச் சினைகளுக்கு உடன டித் தீர்வு என தமிழரின் காவல் துறையின் செயற் பாடுகளால் கவரப்பட்ட தென்னிலங்கைப் பய ணிகள், தமது வருகை களின் போது காவல் துறையினரோடு புகைப் படம் எடுக்கவும் முண் டியடித்திருந்தனர்.

பொதுவாகவே பொலிஸ் நிலையத்துக்கு சென்றால் அங்குள்ள உத்தியோகத்தர்களின் ஆணவம் பூசப்பட்ட வார்த்தைகள் பாதிக்கப்பட்டோரை இன்னமும் நோக டிக்கவோ அல்லது கலங்க டிக்கவோ செய்யும். இந்த விடயத்திலும் காவல் துறை வேறொரு அணுகுமுறையையே கைக்கொண்டது. காவல் நிலை யத்துக்கு வருவோரை-அவர்கள் குற்றவாளிகளாகவோ அல்லது சந்தேகநபர்களாகவோ இருந்தா லும் கூட- "ஐயா", "அம்மா", "அண்ணா" "அக்கா" என்ற மரியாதைச் சொற் களாலேயே விளித்தார்கள். இது மக்களுக்கும் காவல்துறைக்கும் இடை யிலான உறவாடலை இன்னமும் அதிகப்படுத்தியது.

இடப்பெயர்வுக் காலங்களில் சன நெரிசலைக் கட்டுப்படுத்துதல், போக் குவரத்துக்களை ஒழுங்குபடுத்துல், மக்களின் பொருள்களை பத்திரமாக கொண்டுசென்று சேர்ப்பித்தல், காயப்பட்டோரை வைத்தியசாலைக ளுக்கு கொண்டு செல்லல் போன்ற மக்கள் சேவையிலும் காவல்துறை ஈடுபடுத்தப்பட்டது. அத்தோடு மிகப் பெரிய சமர்க்காலங்களின் போது காவல்துறையின் சில படையணி கள் துணைக் குழுக்களாகவும் சில சமயங்களில் சமராடும் அணியாக வும் செயற்பட்டிருந்தன. மக்களின் விடிவுக்கான பயணத்தில் சட்டம் ஒழுங்கு என்பன நிலைநாட்டப்படு தல் முக்கியமானது என்ற புலிகளின் தலைவரின் கனவை காவல்துறை நனவாக்கியது. அதனால்தான் 2009 மே 19 வரை புலிகளின் பிரதேசங் களில் கொலை, கொள்ளை பற்றிய அச்ச மின்றி எவரும் எந்த நேரத்தி லும் எங் கும் நடமாடக்கூடிய சூழல் நிலவியது. எந்தவொரு காவல்துறை உறுப்பின ரும் லஞ்சம் வாங்கியதில்லை, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய் ததில்லை, தனிப்பட்ட காரியங்களுக் காக காவல்துறையின் பெயரைப் பயன்படுத்தியதில்லை, பாலியல் குற்றங்களில் சிக்கியதில்லை, மக் களை ஒருமையில் பேசியதில்லை என்று வழமையாகவே பொலிஸ் துறையில் இருக்கும் பல விடயங் களில் காவல்துறை இன்மைகளைக் கொண்டிருந்தது. அதிகாரத்தின் ஏவல் நாயாக இல்லாமல் மக்களின் நண்பனாக எப்படி ஒரு பொலிஸ் அமைப்பு இயங்க வேண்டும் என்பதற்கு எங்களின் காவல்துறை ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. உலகின் அதிஉன்னதமான பொலிஸ் பிரிவொன்றை உருவாக்கி செயற் படுத்தி தலைநிமிர்ந்து நின்ற நாம் இப்போது ஊழலின் கூடாரமான இலங்கை பொலிஸின் மாகாண அதிகாரத்தை இறைஞ்சி நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். ஆனா லும் அதிகாரங்கள் கிடைக்கப்பெற்று நமக்கான பொலிஸ் ஒன்று மீண்டும் உருவாகும் போது குனிந்த தலை கள் நிமிரலாம்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உதயன்

# அங்காடி

## விளம்பர சிறப்பிதழ்

## 27.10.2013

எங்கள் விளம்பரங்கள் உங்கள் முன்னேற்றம்

விளம்பர தொடர்புகளுக்கு:

**07 6603 6604**


யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள ....

TILKO
JAFFNA CITY HOTEL

★ திருமண மண்டபம் (A/C, non A/C)
அதிநவீன வசதிகளுடன் கூடிய விசாலமான திருமண மண்டபம்
★ Restaurant
குறைந்த செலவில் மனம் நிறைந்த உணவு மற்றும் சிற்றுண்டிகளை உண்டு மகிழவும்
பிறந்தநாள் மற்றும் விசேட நிகழ்வுகளைக் கொண்டாடவும்.

70/6, K.K.S.ROAD, JAFFNA. 021 720 0707, 021 222 5969,



METHU'S சிறுவர்களுக்கான சகல விதமான பொருள்களும் எம்மிடம் பெற்றுகொள்ளலாம்.
Kids 'N' Baby Care



195, Navalar Road, Jaffna.



L கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4353



Annai Naga Food City
175, K.K.S.Road, Jaffna.
தீபாவளி தினத்தை முன்னிட்டு
கவர்ச்சிகரமான விலைக்கழிவுகளுடன்
10% - 15% வரை
Open time : 8.00 a.m. - 10.00 p.m.





American
மொத்தமாகவும் சில்லறையாகவும்
தற்போது புதிய முகவரியில்:
587, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7277



கணினி விற்பனையில்
நம்பிக்கையான நிறுவனம்
Nothern PC Park
021 222 0369, 021 222 2050



German Language Academy

யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் ஜேர்மன், சுவிஸ், Deutsch மொழிகள் ஆசிரியர் Mr. S. Koneswaran அவர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஜேர்மன் தூதரகத்தினால் (30.09.2013) அன்று நடத்தப்பட்ட பரீட்சையில் எமது நிறுவனத்தினூடாகத் தோற்றிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

(உங்கள் பணத்தையும், நேரத்தையும் விரயமாக்காமல் சரியான தெரிவின் மூலம் உங்கள் இலக்கை அடைந்து கொள்ளுங்கள்)



சித்தியடைந்த மாணவர்கள்



ஜேர்மன் தூதரக பரீட்சை நடத்தும் முகாமையாளர்களுடன் எமது நிறுவன ஆசிரியர் S. கோணேஸ்வரன்

அவதானிப்பு: எமது நிறுவனதில் ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் மட்டுமே கற்பிக்கப்படுகின்றது. தொடர்பு கொண்ட பின் நேரில் வரவும்

யாழ் மாணவர்களுக்கு:
GERMAN LANGUAGE ACADEMY
No:23, Palali Road, Jaffna.
077 970 7322

வவுனியா மாணவர்களுக்கு:
N SOFT ACADEMY
No-20, Vairavar Kovil Road,
Vairavapuliyankulam. 077 9707322

CERTIFICATE வழங்குகளைச் செய்து தரப்படும்.



இத்தாலி மொழி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
வேக் பொமிற், இத்தாலியில் வசிக்க இருப்போர், மற்றும் திருமணமாகி செல்வோர் அனைவருக்கும் இத்தாலி மொழி கற்பிக்கப்படுகிறது
(விசேட இரவு வகுப்புக்களும் உண்டு)
தொடர்புக்கு - 0771327818



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Used Laptop for Sale

Dell D600 Laptop
Intel P4 1.4 GHz
40 GB HardDisk
1 GB RAM, DVD, Wifi
Contact: 0774 656 974

This Size (6cm x 2.9cm)
is available for Advertising
@
Rs. 400/- + VAT(Rs 48/-)
Contact: 07 6603 6604

## HP i3 LAPTOP
மலிவு விற்பனை

56,500/=மட்டுமே

2 வருட உத்தரவாதம்

FREE - HEAD PHONE / 8 GB PEN DRIVE

ST. ANTONY 'S
187, KKS ROAD, JAFFNA TWON
021-222-4865/ 0750698608

## Web Designing

நியாயமான கட்டணத்தில் தரமான இணையத்தளங்களை வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள
Speed IT Net
www.speeditnet.com (C/13249) (5.6)

## ஜேர்மன் வகுப்பு

மானிப்பாயில் ஜேர்மன் Class நடைபெறுகின்றது. ஜேர்மன், சுவிஸ் செல்வோர் எம்பசியால் நடத்தப்படும் பரீட்சைக்கான டொச் (Doutsch) மொழி வகுப்பு புதிய பிரிவு ஆரம்பம்.
இடம்: மானிப்பாய் சந்தி, தொடர்பு: 077 270 7121 (C/13249)(5.6)

ஞாயிறு உதயன் அங்காடியில் உங்கள் விளம்பரங்கள் பிரசுரமாக புதன்கிழமைக்கு முன்னதாக உங்கள் விளம்பரங்களை ஒப்படையுங்கள்.

## பொருளியல்↔கணக்கீடு பிரத்தியேக வகுப்புக்கள்

A/L, CBF&DBF, AAT
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்
தொடர்பு:
078 841 5908
078 741 3017 (C/13267)(5.6)

## German Swiss வகுப்புக்கள்

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. Exam இற்கு ஏற்றவாறு.
Gothe Institute 10, Palaly Road, Jaffna. தொடர்பு: 077 160 4823
ஆரியகுளத்திற்கு அருகில் (32846)(5.6)

24 Hr Services
Rubber Stamps
Self Ink
Best Print
#357,Kasthuriyar Rd, Jaffna. 021 567 6722

## வேலைவாய்ப்பு

Creative ஆற்றல் உள்ள கலை ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்களுக்கு பகுதி நேர வேலைவாய்ப்பு
தொடர்பு: 077 775 0318 (C/113265)(5.6)

## Van for Hire

உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட பயணங்கள், சுற்றுலா போன்ற வற்றுக்கு குளிரூட்டப்பட்ட van வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 844 8000 (C/13251)(5.6)

## கமலக்கண்ணன் திருமண சேவை

இல,435/3, கோயில் வீதி, நல்லூர்.
தொடர்பு: 077 607 0862 (C/13212)(5.6.3)

Best Print
No Extra Charges
Mug Printing
#357,Kasthuriyar Rd, Jaffna. 021 567 6722

## விற்பனைக்கு

வேலைப்பாடுள்ள தொட்டில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 967 2435 (C/ 132847)(5.6)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன்செப்பேட் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 511 3457 (C/ 13266)(5.6)

This Size (18cm x 2.9cm) is available for Advertising
@ Rs. 1500/- + VAT(Rs 180/-)
Contact: 07 6603 6604

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தினூடாக வரன் தேடல்

support@realmatrimony.com

Real Matrimony.com

Build heaven for you


AUSTRALIYA வில் ACCOUNTANT ஆக பணிபுரியும், 1978 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 011 438 0900

GERMANY யில் ENGINEER ஆக பணிபுரியும்,1975 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0114343796

UK யில் ENGINEER ஆக பணிபுரியும், 1972 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0114380900

SRILANKA வில் DOCTOR ஆக பணிபுரியும், 1985 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0114343796

UK யில் CUSTOM OFFICER ஆக பணிபுரியும், 1983 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0114380900

AUSTRALIYA வில் DOCTOR ஆக பணிபுரியும்,1988 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0114343796

AUSTRALIYA வில் ENGINEER ஆக பணிபுரியும், 1982 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0114346128

SRILANKA வில் DOCTOR ஆக பணிபுரியும், 1977 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0114346130

CANADA வில் BANK OFFICER ஆக பணிபுரியும், 1986 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0114344229

NEW ZEALAND இல் PHARMA-CHIST ஆக பணிபுரியும், 1984 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0114346130

SRILANKA இல் ACCOUNTANT ஆக பணிபுரியும், 1989 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0114346128

SRILANKA வில் DENTAL SURGENT ஆக பணிபுரியும், 1984 இல் பிறந்த மண மகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0114344229

FRANCE இல் MANAGER ஆக பணிபுரியும்,1978 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0214923739

AUSTRALIYA வில் QUANTITY-SERVEYOR ஆக பணி புரியும், 1981 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0214923864

AUSTRALIYA வில் IT PROF-ESSIONAL ஆக பணிபுரியும், 1984 இல் பிறந்த மண மகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0214923739

SRILANKA B.Sc in IT, 1990 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0214923864

SRILANKA MEDICAL STUDENT, 1987 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0214923739

SRILANKA வில் AUDITOR (CIMA QUALIFIED) பணிபுரியும், 1988 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 0214923864

**இலகுவாக எங்களுடன் பதிய**

உங்கள் பெயர் பிறந்த திகதி பதிந்து எங்களுக்கு SMS அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய Mobile : 076 6035799

மேலதிக தகவலுக்கு : 011 438 5428

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Find a Property

* பருத்தித்துறை, நெல்லியடி, முடக்கட்டுச் சந்தியில் வீதியின் அருகில் 3.5 பரப்பளவில் உள்ள காணி உடன் விற்பனைக்குண்டு. சகல வசதிகளையும் அருகில் கொண்டது.
தொடர்பு: 077 844 8666

* யாழ்ப்பாணம், கோயில் வீதியில் நல்லூர் கோயிலுக்கு அருகில் 1.5 பரப்பளவில் காணி உடன் விற்பனைக்குண்டு. யாழ் நகர மத்தியில் கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 844 8666

* கொழும்பு, வெள்ளவத்தையில் நாள், கிழமை அடிப்படையில் குறுகிய காலத்திற்கு இரண்டு, மூன்று அறைகள் (A/C) சகல தளபாட வசதிகளுடன் வீடுகள் வாடகைக்குள்ளன. வெளிநாட்டினர், திருமண வைபவத்திற்கு வருபவருக்கு உகந்தது.
தொடர்பு: 077 806 8605

* கொழும்பு, தெகிவளையில் 12.5 பேர்ஜ் காணி விற்பனைக்குண்டு. காலி வீதிக்கு அருக் கில் 56 அடி முகப்பு அகலம் கொண்ட சதுரக் காணி.
தொடர்பு: 077 806 8605

* வெள்ளவத்தையில் விவேகானந்தா வீதியில் 1700 சதுர அடி கொண்ட மூன்று விசால அறை கொண்ட நவீன ரக வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 799 9503

* இலங்கையில் எப்பாகத்திலும் காணி வாங்க விற்க வாடகைக்கு
findaproperty.lk, 077 806 8605

Find a Property



## வீடு காணி விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு

தென்மராட்சிப் பகுதி எழுதுமட்டு வாழ் கோவிற்பற்று மிருசுவில் இறை செம்பாடு காணி நிலப்பரப்பு 20 விற்பனைக்கு
தொடர்பு: 077 460 5329 (32844) (5.6)

### காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட் டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400 (32842) (6.4)

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் கே.கே.எஸ். வீதிக்கு மிக அருகில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 005 9152, 077 269 8929 (C/13244) (45.6)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தியில் ஒரு பரப்புக் காணி, கிணறு, சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 307 5330 (32838) (5.6)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் (சென் திரேசாக் கல்லூரிக்கு அருகில்) 04 பரப்பு வெற்றுக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. (உறுதிக்காணி)
தொடர்பு: 077 160 4059 (கி/13209) (6.6.3)

### காணி விற்பனைக்கு

ஆடியபாதம் வீதி, வாலையம்மன் கோயிலுக்கு முன்பாக காலிங்கராஜன் குள வீதியில் (கல்வியங்காடு சந்தைக்கு அருகில்) அழகான அமைதியான சூழலில் 4 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு ஒரு பரப்பு 650000/=
T.P:- 075 5958285, 077 284 0184 (32843)(5.6)




### விற்பனைக்கு

இரண்டு (2) Photostat Machine விற்பனைக்குண்டு.
C.MAHESAN, 384, Navalar Road, லிங்கம் பேக்கரி முன்பாக, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். (32845) (5.6)

### Heat Press Machine

தொப்பி, T-Shirt போன்றவற்றில் Colour Print செய்யக்கூடிய Heat Press Machine விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 405 0936 (C/13257) (5.6)

### விற்பனைக்கு

* நல்ல நிலையில் சிவப்பு நிற CD 200 (ROADMASTER) மோட்டார் சைக்கிளும்,
* பெண் ஆசிரியை ஒருவரின் பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள Super Cup 90 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 706 9696 (32832) (6.3.4)

### விற்பனைக்கு

சில மாதங்கள் மட்டுமே பாவித்த உணவு விடுதியின் பொருள்கள் உடன் விற்பனைக்கு
தொடர்பு: 077 306 8855 (32839) (5.6)

### விற்பனைக்கு

Dimo TATA ACE BATTA FULL BODY TRUCK விற்பனைக்கு
தொடர்பு: (32833) (5.6.3)
071 444 3925 /021 222 7389

### கார் விற்பனைக்கு

KF-xxxx தொடரிலக்கம் Nissian FB 15, (2003 Model) கார் விற்பனைக்கு. T.P 0773 82 55 88

**This Size (12cm x 2.9cm) is available for Advertising**
**@**
**Rs. 1000/- + VAT(Rs 120/-)**
**Contact: 07 6603 6604**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**FRENCH LANGUAGE CENTER**
**CENTER FOR FRENCE**

பிரெஞ்சு மொழியை சிறப்பாகக் கற்க உத்தரவாதமளிக்கின்றோம்.
இல.23,பலாலி வீதி,ஆரியகுளம்,
(அப்பலோ வைத்தியசாலைக்கு முன்பாக)
தொடர்பு: 077 978 9456 (C/13137) (5.6.3)

**Soft View Computer Center**
கணினி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்
102, Main Street, (A9) Jaffna. E.C Colin
T.P : 021 222 4885, 077 905 3545
(இரவு நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன)

**English Classes**

English Classes are conducted by an experienced M.A.graduate. (SPA/0102) (5.6.3)
*Contact Number:075 540 9288*

**பிரத்தியேக வகுப்புக்கள்**
கணக்கியல் (A/L) கணிதம், வர்த்தகமும் கணக்கியலும்
இளவாலைப் பிரதேசத்தில்
தொடர்பு: 077 160 4059 (SPA/0101) (5.6.3)

* Organ,Guitar, புல்லாங்குழல் வகுப்புகள்
* சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு. (32834) (5.6.3)

**கரவீணா இசை மன்றம்,**
4,செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே.: 077 703 1293



**கல்வி**
கணினி, சிங்களம், ஆங்கிலம்



-அடிப்படையிலிருந்து
-15 வருட அனுபவ ஆசிரியர்
-6 மாத காலம் 3000/= மட்டுமே
-9.00A.M -6.00P.M வரை
-A.KMOORTHY(பட்டதாரிஆசிரியர்),KOLIN
-நிறுவனம் 14 வருட பூர்த்தி
-அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

**SKY COMPUTER (PVT) Ltd.**
89, கண்டி வீதி,
யாழ் கச்சேரி அருகில்
021 222 1417 (சி/13207) (4.6.3)

**பிரத்தியேக வகுப்பு**
O/L Grade -10 மாணவர்களுக்கு (Maths) கணிதபாடம் English medium இல் கற்பித்து கொடுக்கப்படும்.(Only Jaffna)
O/L மாண வர்களுக்கு Revision செய்யப் படும்.
தொடர்பு: 077 575 4612 (32841) (5.6)

**New Maths Center**
2014 தரம் 5 புலமைப் பரிசில் வகுப்புக்கள்
ஆரம்பம் 27.10.2013
மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை பின் வீதி,
மானிப்பாய். (C/13257) (5.6)

**COLLEGE OF IELTS**
# IELTS

* INDIVIDUAL TRAINING
* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE

This is not a conventional IELTS class where you dopapers and Teacher GivesAnswer key But it is an Innovative Training Program Which has helped my Students to Touch bands 8 & 8.5

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, Navalar Road, jaffna
(பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel 0755435089 0778803887

**ஆங்கில இலக்கண வகுப்பு**
(Grammar - Personal Classes)
(கொக்குவில் பகுதியில்)
தொடர்பு:
(32811) (12.3.6) 071 712 4037

**New Maths Center**
2014 தரம் 5 புலமைப் பரிசில் வகுப்புக்கள்
ஆரம்பம் 27.10.2013
மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை வீதி,
மானிப்பாய். (C/13257) (5.6)

This Size (12cm x 6cm) is available for Advertising @
**Rs. 2500/-**
+ VAT(Rs 300/-)
Contact: 07 6603 6604

## BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

# IELTS
## இத்தாலி மொழி
## SPOKEN ENGLISH

## U.K செல்வோருக்கான A1,B1
புதிய பிரிவுகள் ஆரம்பம்



23,பலாலி வீதி 0771327818 *181, பிரதான வீதி, நெல்லியடி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

வவுனியாவில் உள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலைகள் மற்றும் சமையல் வேலைக்கு உதவி செய்ய பணிப்பெண் தேவை. (வவுனியாவை அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 758 5913 (C/13246) (5.6)

## தேவை

★காசாளர் (பெண்கள்)
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
Annai Naga Food City
175,K.K.S. Road, Jaffna. (சி/13236) (5.6)
T.P.: 021 739 0194, 077 477 3484

## கார்கள் வாடகைக்கு

N16, FB15, Swift (Box model), Swift (Beettlle model) Wagon கார்கள் நீண்ட கால வாடகைக்கு உண்டு. Company Executives விரும்பத்தக்கது.
தொடர்பு:
077 005 9152, 077 269 8929 (C/13244) (45.6)

## தேவை

லண்டனில் 72 வயதான ஆரோக்கியமான ஒருவரைக் கவனிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட (பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத) தாதி விரும்பத்தக்கது. விண்ணப்பங் களைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும். (32806)(5.6.3)

தவம் 68, Burges Road East Ham London, E6, 2BH, England

## தவறிவிட்டது


அருளப்பு தேவகுமாரன் என்பவருடைய தே.அ. அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன 21.10.2013 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கும் ஆனைக் கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட
(32833) (43.6.3) இல. தொடர்பு கொள்ளவும் 021 221 3389

## இறுதிக் கிரியைகள் அந்தியேட்டிக் கிரியைகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: ஆஸ்பத்திரி வீதி, உணாப்பிலவு, முல்லைத்தீவு.
பிரதேச செயலகத்துக்கு அருகில்
021 568 3789 072 616 4025 (32805) (5.6.3)

## சுதர்சனம் பாக் சென்ரர்
### Sutharashanam Bag Center

பாடசாலைப் புத்தகப் பை மற்றும் சூட்கேஸ்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




No.12, Grand Bazaar Road, Jaffna. T.P: 077 132 4319
இல.12, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## ஏசியன் தளபாடம் மற்றும் வெளிநாட்டு பார்சல் சேவை

வீடு மற்றும் அலுவலகத்துக்குரிய அனைத்து தளபாடப் பொருள்களும் மற்றும் வெளிநாடுகளுக்கான பார்சல் (3day)மற்றும் Jaffna ⟷ Colombo பார்சல் சேவை
இல.133, மின்சார நிலைய வீதி (பஸ்நிலையம் அருகில்) யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7892, 077 358 3879


## சிறி விநாயகர் பென்சி ஹவுஸ்



பித்தளை, அலுமினிய, லக்ஸ்மி விளக்குகள், பிளாஸ்ரிக் பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம்.
No: 245, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

## மலிவு! மலிவு ! மலிவு!

வீடு மற்றும் அலுவலகத்துக்குரிய அனைத்துத் தளபாடப் பொருள்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



இல.230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 358 3879, 077 831 4201

## கஜசங்கவி சென்ரர் & பிறிண்டேர்ஸ்

எம்மிடம் சகலவிதமான திருமண அழைப்பிதழ்கள், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், கேக் பெட்டிகள், அன்பளிப்புப் பொருள்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 237, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7885, 077 603 1071

## இலத்திரனியல் உதிரிப் பாகங்கள்

நியாயமான விலையில் பெற இன்றே நாடுங்கள்.
Sony T.V. யாழ்.நகர் விநியோகஸ்தர்களான
V.K.Rasaratnam, 1-C, Stanly Road, Jaffna. (C13256)(5.6)

## கல்சியம் நீக்கி

Go-Clean முதல்தரமான கல்சியம் நீக்கி தற்போது பச்சைப் போத்தலில் அறிமுகமாகிறது. உங்கள் வீட்டு டைல்களில் படிந்திருக்கும் கல்சியம் கறைகளை இலகுவாகப் போக்கக் கேட்டு வாங்குங்கள் பச்சைப் போத்தலை.



1 l 210/=
500 ml 140/=
போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்.
தொடர்புக்கு:
077 914 2010 (32817)(10.6.3)

## ட்ரேன்ட் செரமிக்

உங்கள் வீடுகளுக்கும் அலுவலகத்துக்கும் தேவையான மாபிள்கள் மற்றும் கொமட் செற் குளியலறை சாதனங்களை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள் / விரையுங்கள்



424, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
077 458 4659, 021 492 3757

This Size (6cm x 2.9cm)
is available for Advertising
@
Rs. 400/- + VAT(Rs 48/-)
Contact: 07 6603 6604

## நீங்களும் அறிவிப்பாளராகலாம்!

சர்வதேச இணைய வானொலி வாரணம்FM இன் ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணத்தில் அடுத்த பிரிவு ஆரம்பம்!

தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின் ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சி நெறியில் இணைவதற்கு...

1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் விசேடசித்தியுடன் உயர்தரம் பல்கலைக்கழக அனுமதிக்கான பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

இவற்றுடன் இணைந்த சுயவிபரக்கோவையை 10.11.2013இக்கு முன் எமது அலுவலக முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

- சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர்களால் விரிவுரைகள்.
- ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர் களப்பயிற்சியும் கல்விச்சுற்றுலாவும்
- இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
- பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

www.varanamfm24.com

வாரணம்FM

T.P: 021 221 9822
077 908 6737
Email: varanamfm@yahoo.com

Managing Director
Varanam FM
52, Hospital Road, Jaffna.

## தீபாவளியினை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

27.10.2013 - 03.11.2013 வரை
K K J Work Shop & Sales Center
வீட்டு அலுமாரிகள், கணினி மேசைகள், மெத்தைகள், ரீவி ஸ்ரான்ட்டுகள், றெசிங் ரேபிள்கள், பிளாஸ்ரிக் கதிரைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
தொ.பே.: 077 903 7203
இல.391, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல.11, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (C/13239)(5.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Anna Jeevakaram

அன்னா உற்பத்தி பொருள்கள் யாவும் அன்னா சுப்பர் மார்க்கற், அன்னா விற்பனை நிலையங்கள் மற்றும் நாடெங்கிலும் உள்ள விற்பனை முகவர் நிலையங்களில் தரமாகவும் மலிவான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஜீவாகாரம் அன்னா

K.K.S. றோட், இணுவில்.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அன்னா விற்பனை நிலையம்
நல்லூர் பின் வீதி, நல்லூர்.

---

LINGAM லிங்கம்

# லிங்கன் கிறீம் ஹவுஸ்



கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். நல்லூர் பின் வீதி, நல்லூர்.

---

கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்

# பட்டாபி படமாடம்



அலுமினியம் பிற்றிங் மற்றும் அனைத்து அளவிலான படம் பிறேம் போடுதல் மற்றும் பல சேவைகளை எம்மிடம் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7821,
இல. 225, 227, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4351.

---

# All Out Pest Control Service

உங்கள் வீட்டில் கறையான் தொல்லையில் இருந்து விடுபட உங்கள் தெரிவு

All Out Pest Control

அழையுங்கள் 077 151 5897

140/12, 4th Cross Street,Jaffna
email: Rubakanth82@gmail.com

---

# BTEC HND in...

- Computing & Systems Development
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Biomedical Science
- Law
- Psychology

www.bcas.lk

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910
077 710 2131

---

## ஆசிரியர் தேவை

ஆண்டு 10 படிக்கும் மாணவனுக்கு தமிழ், வரலாறு, சுகாதாரம், இந்து சமயம், சமூகக் கல்வி, புவியியல் ஆகிய பாடங்கள் கற்பிக்க ஆசிரியர் தேவை. தொடர்பு: 075 507 0556

குறிப்பு: மாலை 6 மணிக்கு மேல் தொடர்பு கொள்ளவும்.

---

## பணிப்பெண் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியிலுள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 868 9788 (C/ 132848) (5.6)

---

# ஆச்சி பூட் சென்டர்

AACHE FOOD CENTRE

சமையற் கலையில் நிபுணத்துவம் பெற்றவர்களால் யாழ் முறைப்படி

சைவம் மற்றும் அசைவம்
வீட்டுக்கு வீடு இலவச விநியோகம்
(யாழ்.மாநகரசபை எல்லைக்குள்)

திருமணம்,பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் சூடான சுவையான உணவு விநியோகிக்கப்படும்.

Aache Hot Food

தயாரிப்பு:
Aache Hot Food
Kaithady East, Kaithady
021 205 7455

இல.117, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2092, 077 329 4341

---

# சலோன் ஆயிஷா
# Salon Aysha

Makeup, Threading, Facial (All types)

- விசேட சலுகை: அனைத்து வகை பேசியலுக்கும் கழிவு வழங்கப்படும்.
- விசேட ஒரு நாள் வகுப்பு ஆரம்பம் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

116, கோப்பாய் வீதி, உரும்பிராய்.

59, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

---

## அறை வாடகைக்குத் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்யும் ஆண் ஒருவருக்கு அறை ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 344 2357 (C/13264) (5.6)

---

## அறைவாடகைக்கு

நிறுவனம் ஒன்றில் வேலை செய்யும் இருவருக்கு அறை ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 331 3981 (C/13263) (5.6)

---

# SINGER Plus

# மெகா சேல் !

தீபாவளியை முன்னிட்டு சிங்கர் பிளஸ் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை சகல வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கும் 60% வரை விசேட விலைக்கழிவுகள்

இடம்: SINGER Plus காட்சி அறை
இல,1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சிறிநதியா கட்டடம்)

காலம்: 25.10.2013 தொடக்கம் 10.11.2013 வரை
காலை: 9.00 மணி - மாலை 7.30 மணி

விநியோகம் இலவசம்

தொ.பே: 021 222 5408

கையிருப்பு உள்ள வரை மட்டும்

---

## காணி விற்பனைக்கு

ஆடியபாதம் வீதி, வாலையம்மன் கோயிலுக்கு முன்பாக காலிங்கராஜன் குள வீதியில் (கல்வியங்காடு சந்தைக்கு அருகில்) அழகான அமைதியான சூழலில் 4 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

ஒரு பரப்பு 650000/= (32843)(5.6)

T.P:- 075 5958285, 077 284 0184

---

This Size (6cm x 6cm) is available for Advertising @ Rs. 1000/- + VAT(Rs 120/-)

Contact: 07 6603 6604

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(Permit No: Ecd/ Int/ Aut/ Mc/ 164)

# சாரங்கா
## நாணயமாற்று சேவை

Sharanga Money Exchange (Pvt) LTD.

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6972

நவீன அழகிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

## சாரங்கா நகைமாடம்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 6972, Fax.No: 222 8869

இணை நிறுவனம்:

## சாரங்கன் நகையகம்

இல.1, புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையில் 15 வருடங்களை கடந்து
- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் பொதிகள் சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்
- உங்கள் வீடுகளிலிருந்தவாறே பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்.

சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும், இணைந்தசேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

1 ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

---

## தீபாவளி சிறப்புத் தள்ளுபடி

CCTV Camera

SPECIAL OFFER!

4 Camera System

only 39500/=

27.10.2013 தொடக்கம் 16.11.2013 வரை

| | |
|---|---|
| 700 TVL CMOS NIGHT VISION CAMERA | X 4 |
| 4 CH NET WORK DVR VGA , TV OUT | X 1 |
| SEAGATE 500 GB HARD DISK | X 1 |
| 50 M COAXIAL 50MPOWER CABLE | X 1 |
| 12V 1A POWER PACK | X 4 |
| BNC CONNECTORS | X 8 |

**TOTALLY FREE WITH THIS PACKAGE**

INTERNET SETTING AND MOBILE VIEW SETTING

ONE YEAR WARRANTY TP 0212222676

அல்டி எலக்ரோனிக்ஸ்
இல,15,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

---

# இதோ வெள்ளவத்தையில்!

# PPT & TRAVELS TOURS

SriLankan Airlines

27.10.2013 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு
மிகப் பிரமாண்டமான முறையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

- **P.P.T Airticketing Service**
  உள்நாடு /வெளிநாட்டு பிரயாணசீட்டுக்கள் மிகக் குறைந்த விலையில்.
- **Bus Booking**
  யாழ்ப்பாணம், பருத்தித்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை.
- **Parcel Service**
  உள்நாட்டு வெளிநாட்டு பார்சல் சேவை.



தொடர்புகளுக்கு:

**#296 A1, GALLE ROAD, WELLAWATTA.**

**011 2364999, 011 4375793, 077 3866250, 076 6036204**

C/13249(10.6.3)

---

## mybook.lk

10% to 20% Discount on books

Call Now: 0777696903

---



## ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான ஊர்க் கோழிக் குஞ்சுகள் (கிறி ராஜ்) ஒருநாள் குஞ்சுகள், ஒருமாதக் குஞ்சுகள், இரண்டு மாத விறாத்துக் குஞ்சுகள், முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 755 6244

(32836)(5.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org